KURIKULUM STANDARD SEKOLAH MENENGAH

# தமிழ்மொழி

# BAHASA TAMIL

படிவம்
TINGKATAN
3

ஆசிரியர்கள் / **PENULIS**


கோபாலன் முத்தையா / GOPALAN MUTIHAH
செல்வஜோதி இராமலிங்கம் / SELVAJOTHI RAMALINGAM
சரவணன் இராமச்சந்திரன் / SARAVANAN RAMACHANDRAN
தமிழன்பன் சண்முகம் / THAMILANBAN SHANMUGAM


பதிப்பாசிரியர்கள் / **EDITOR**


நாராயணசாமி குப்புசாமி / NARAYANASAMY KUPPUSAMY
மகேஸ்வரி சண்முகம் / MAGESWARY SHUNMUGAM


வடிவமைப்பாளர் / **PEREKA BENTUK**


குலேந்திரன் குழந்தைவேல் / KULENDRAN KULANDAVEL


ஓவியர்கள் / **ILUSTRATOR**


எ. எம். பெர்னாண்டோ இக்னேசியஸ் / FERNANDO IGNATIUS MARTIN
சந்திரன் கிருஷ்ணன் / SANDRAN KRISHNAN



உமா பதிப்பகம்
UMA PUBLICATIONS

**UMA PUBLICATIONS**
**2018**

KEMENTERIAN
PENDIDIKAN
MALAYSIA

No Siri Buku : 0078

KPM 2018-978-967-434-256-2-0078
ISBN 978-967-434-256-2

Cetakan Pertama 2018
© Kementerian Pendidikan Malaysia

Hak Cipta Terpelihara. Mana-nana bahan dalam buku ini tidak dibenarkan diterbitkan semula, disimpan dalam cara yang boleh dipergunakan lagi, ataupun dipindahkan dalam sebarang bentuk atau cara, baik dengan cara bahan elektronik, mekanik, penggambaran semula mahupun dengan cara perakaman tanpa kebenaran terlebih dahulu daripada Pengarah Pelajaran Malaysia, Kementerian Pendidikan Malaysia. Perundingan tertakluk kepada perkiraan royalti atau honorarium.

Diterbitkan untuk Kementerian Pendidikan Malaysia oleh:
UMA PUBLICATIONS
85, Jalan Perhentian, Sentul,
51100 Kuala Lumpur,
Malaysia.
Tel : 03-40411617
Faks : 03-40440441
e-mel : umapublications@gmail.com

Reka Letak dan Atur Huruf :
UMA PUBLICATIONS
Muka taip teks : Unicode
Saiz taip teks : 14 poin

Dicetak Oleh :
Percetakan Advanco Sdn.Bhd. (45169-K),
No.19, 21 & 23, Jalan Segambut Selatan,
51200 Kuala Lumpur,
Malaysia.

## PENGHARGAAN

Penerbitan buku teks ini melibatkan kerjasama banyak pihak. Sekalung penghargaan dan terima kasih ditujukan kepada semua pihak yang terlibat:

* Jawatankuasa Penambahbaikan Pruf Muka Surat, Bahagian Buku Teks, Kementerian Pendidikan Malaysia.
* Jawatankuasa Penyemakan Pembetulan Pruf Muka Surat, Bahagian Buku Teks, Kementerian Pendidikan Malaysia.
* Jawatankuasa Penyemakan Naskhah Sedia Kamera, Bahagian Buku Teks, Kementerian Pendidikan Malaysia.
* Pegawai Bahagian Buku Teks, Kementerian Pendidikan Malaysia.
* Panel Readers, Fakulti Bahasa dan Linguistik, Universiti Malaya.
* SMK Sungai Kapar Indah, Kapar, Klang.
* SMK Methodist, Telok Datok, Banting, Selangor.

Ribuan terima kasih juga diucapkan kepada pihak yang telah memberi sumbangan dalam menjayakan penerbitan buku teks ini. Pelbagai inisiatif telah diambil oleh pihak penerbit untuk mengesan semua pemilik hak cipta bahan dalam buku teks ini. Walau bagaimanapun, pihak penerbit mengalu-alukan jasa baik pihak berkenaan untuk membenarkan kami menerbit semula bahan itu. Diharapkan maklumat pihak berkenan dapat kami peroleh supaya dapat merakamkan ucapan penghargaan dalam edisi yang akan datang.

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| | முன்னுரை | iv |
| | மொழிக் கூறுகளுக்கான படச் சின்னங்கள் | v |
| | சிந்தனை வரைபடம் | vi |
| | தொகுதிப் படர்ச்சி | vii |
| 1 | போக்குவரத்துத் துறை | 1 |
| 2 | வரலாற்றுத் தடங்கள் | 12 |
| 3 | இயற்கையும் மாந்தனும் | 23 |
| 4 | தொழிற்கல்வியின் மேன்மை | 34 |
| 5 | கலையும் பண்பாடும் | 45 |
| 6 | இலக்கியப் பயனும் சுவையும் | 56 |
| 7 | மனித வாழ்வில் பாதுகாப்பு | 67 |
| 8 | தகவல் யுகம் | 77 |
| 9 | வரலாற்றை மீட்டெடுப்போம் | 88 |
| 10 | மொழியே நமது விழி | 98 |
| 11 | சுற்றுச்சூழலும் தூய்மையும் | 107 |
| 12 | வாழும் கலை | 116 |
| 13 | தொழில்நுட்பம் | 127 |
| 14 | விளையாட்டு உலகம் | 137 |
| 15 | சமூக வாழ்வில் சுமூக வாழ்வு | 147 |
| 16 | அறிவார்ந்த பயனீடு | 158 |
| 17 | வணிக உலகம் | 170 |
| 18 | பண்பாடும் உணவும் | 181 |
| 19 | மலேசிய வரலாற்றுத் தோற்றங்கள் | 193 |
| 20 | அறிவியல் உலகம் | 207 |
| 21 | நவீன வளர்ச்சி | 219 |


தொகுதிகள்

# முன்னுரை

இடைநிலைப் பள்ளிகளில் தமிழ்மொழியைப் பயில்வோர் நனி சிறந்த மாணவர்களாக மிளிர வேண்டும் என்பது இந்நூல் ஆசிரியர்களின் நோக்கமாகும். இதற்கேற்ப, கற்பவர்களின் ஆளுமையும் மொழி ஆளுமையும் வளரும் வண்ணம் இப்பாடநூல் உருவாக்கப்பட்டுள்ளது.

இப்பாடநூல், நாட்டின் கல்விச் செல்நெறிக்கு ஏற்ப, 21 ஆம் நூற்றாண்டுக் கல்வியியல் கூறுகளைப் பின்புலமாகக் கொண்டுள்ளது. குறிப்பாக, உயர்நிலைச் சிந்தனைகள், ஆக்கச் சிந்தனைகள், தொடர்புறவுக் கூறுகள், நாடிக் கற்றல், கூடிக் கற்றல், முனைந்து கற்றல் போன்ற பல கூறுகள் இந்நூலில் கையாளப்பட்டுள்ளன.

மொழிப் பாடத்திற்கு உரிய பாடநூல் என்பதனால், பயிற்றியல் தூண்டல்கள் மட்டுமன்றி, மொழியியல் தூண்டல்களும் வழங்கப்பட்டுள்ளன. இலக்கணம், இலக்கியம், தமிழ் மரபு, பண்பாடு போன்றவை இந்நூலில் இடம்பெற்றுள்ளன. அதே வேளையில், தற்கால அறிவியல், தொழில்நுட்பம், சமூகம் சார்ந்த கூறுகளும் பாடப் பொருள்களாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

மாணவர்கள் தமிழ்மொழியின் தொன்மை, இனிமை, எளிமை போன்றவற்றை உய்த்துணரும் வேளையில், பொது அறிவையும் நன்னெறிப் பண்புகளையும் உள்வாங்கிக்கொள்ளும் வாய்ப்புகளை இந்நூலில் இடம்பெற்றுள்ள கற்றல் நடவடிக்கைகள் நல்கும்.

நிகர்நிலைக் கற்றலில் ஈடுபடுதல், இணையத் தளத்தைப் பயன்படுத்துதல், ஜாப்பரைப் பயன்படுத்துதல், காணொளிகளைப் பயன்படுத்துதல் போன்ற சிறப்புக் கூறுகளும் இணைக்கப்பட்டுள்ளன.

இவற்றை ஆசிரியர்கள் நன்கு பயன்படுத்தித் தரமான தமிழ்மொழியைக் கற்பிப்பர் என்பதே எங்களின் எதிர்பார்ப்பாகும். இறுதியாக, இவ்வாய்ப்பினை நல்கிய கல்வி அமைச்சுக்கு எங்களின் நன்றி உரித்தாகுக.

நன்றி.
நூலாசிரியர்கள்

# மொழிக்கூறுகளுக்கான படச்சின்னங்கள்

கேட்டல் பேச்சு

இலக்கணம்

வாசிப்பு

கவனத்தில் கொள்க

எழுத்து

செய்யுளும் மொழியணியும்

i-THINK சிந்தனை வரைபடம்

உயர்நிலைச் சிந்தனை

குறைநீக்கல்

வளப்படுத்துதல்

செவிமடுத்திடுக

QR நோக்குக் குறியீடு

பாடம் தொடர்புடைய தேடு பொருளை விரைவில் தேடிட இந்நோக்குக் குறியீட்டைப் பயன்படுத்தவும்.

Download on the App Store | GET IT ON Google Play


AR நோக்குக் குறியீடு

ஜாப்பர் (Zappar) எனும் செயலியைப் பதிவிறக்கம் செய்து இந்நோக்குக் குறியீட்டைப் பயன்படுத்தவும்.

Download on the App Store | GET IT ON Google Play


# சிந்தனை வரைபடம்

1




**வட்ட வரைபடம்**
(சூழலுக்கு ஏற்ப வரையறுத்தல்)

2




**குமிழி வரைபடம்**
(சொல் சொற்றொடர்களைக் கொண்டு விவரித்தல்)

3




**பல்நிலை நிரலொழுங்கு வரைபடம்**
(காரணங்களையும் விளைவுகளையும் ஆராய்தல்)

4




**இரட்டிப்புக் குமிழி வரைபடம்**
(ஒற்றுமை வேற்றுமைகளை அறிதல்)

5




**இணைப்பு வரைபடம்**
(முழுமைப் பொருளையும் பகுதியையும் பகுப்பாய்வு செய்தல்)

6




**நிரலொழுங்கு வரைபடம்**
(கருத்துகளை நிரல்படுத்துதல்)

7



**மர வரைபடம்**
(வகைப்படுத்துதல்; குழுமப்படுத்துதல்)

8



**பால வரைபடம்**
(ஒற்றுமையைக் காணுதல்)

# தொகுதிப் படர்ச்சி

| கருப்பொருள் | தலைப்பு | கற்றல் தரம் | மொழியணி/ இலக்கணம் | சிந்தனை வரைபடம் | உயர்நிலைச் சிந்தனைத்திறன் |
|---|---|---|---|---|---|
| **தொகுதி 1** **போக்குவரத்துத் துறை** | 1. தொன்மையும் வளர்ச்சியும்<br>2. தானியங்கி மகிழுந்து<br>3. பொதுப் போக்குவரத்து<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.1.3<br>2.1.6<br>3.2.5<br>4.1.3 | இரட்டைக்கிளவி | | |
| **தொகுதி 2** **வரலாற்றுத் தடங்கள்** | 1. இரசனைமிகு மலேசியா<br>2. மலேசியத் தங்கச் சுரங்கம்<br>3. மலேசியத் தமிழர் தடம்<br>4. இலக்கணம் | 1.2.3<br>2.3.7<br>3.3.3<br>5.1.3 | போலி | குமிழி வரைபடம் | பாடம் 2<br>இடுபணி 1<br>இடுபணி 2 |
| **தொகுதி 3** **இயற்கையும் மாந்தனும்** | 1. மறவா இயற்கை<br>2. ஆறு காட்டும் நெறி<br>3. சதுப்புநிலக் காடுகள்<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.2.4<br>2.2.4<br>3.3.4<br>4.2.3 | திருக்குறள் | மர வரைபடம்<br>குமிழி வரைபடம் | பாடம் 2<br>இடுபணி 1<br>இடுபணி 2 |
| **தொகுதி 4** **தொழிற்கல்வியின் மேன்மை** | 1. தொழில் திறன் பேறு<br>2. தேவை தொழிற்கல்வி<br>3. சாதனைச் சுவடு<br>4. இலக்கணம் | 1.3.5<br>2.2.5<br>3.4.17<br>5.2.5 | உடன்பாட்டுவினை<br>எதிர்மறைவினை | | |
| **தொகுதி 5** **கலையும் பண்பாடும்** | 1. மலேசியத் தமிழ்க்கலை<br>2. ஏறு தழுவுதல்<br>3. மலேசியக் கலையுலகம்<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.3.6<br>2.3.8<br>3.4.19<br>4.6.3 | மரபுத்தொடர் | | பாடம் 2<br>இடுபணி 1<br>குறைநீக்கல் வளப்படுத்துதல் |

| கருப்பொருள் | தலைப்பு | கற்றல் தரம் | மொழியணி/ இலக்கணம் | சிந்தனை வரைபடம் | உயர்நிலைச் சிந்தனைத்திறன் |
|---|---|---|---|---|---|
| **தொகுதி 6**<br>**இலக்கியப் பயனும் சுவையும்** | 1. இலக்கியமும் நாமும்<br>2. அழகியின் அழகு<br>3. இலக்கியமும் பயனாக்கமும்<br>4. இலக்கணம் | 1.4.5<br>2.1.7<br>3.4.20<br>5.4.4 | வலிமிகுதல் | இணைப்பு வரைபடம்<br>மர வரைபடம் | |
| **தொகுதி 7**<br>**மனித வாழ்வில் பாதுகாப்பு** | 1. வீட்டுப் பாதுகாப்பு<br>2. பணியிடப் பாதுகாப்பு<br>3. வசிப்பிடப் பாதுகாப்பு<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.5.3<br>2.2.4<br>3.4.16<br>4.3.3 | திருவருட்பா | மர வரைபடம் | |
| **தொகுதி 8**<br>**தகவல் யுகம்** | 1. தமிழில் தகவல் தொழில்நுட்பம்<br>2. அருகலை நகரம்<br>3. எங்கும் தகவல் தொழில்நுட்பம்<br>4. இலக்கணம் | 1.2.4<br>2.3.9<br>3.4.18<br>5.3.5 | விகாரப் புணர்ச்சி: திரிதல் | | பாடம் 2<br>இடுபணி 2 |
| **தொகுதி 9**<br>**வரலாற்றை மீட்டெடுப்போம்** | 1. பூஜாங் பள்ளத்தாக்கு<br>2. சரவாக் மாநிலத்தில் தமிழர்கள்<br>3. வரலாற்றுக் கழகம்<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.5.3<br>2.3.7<br>3.4.15<br>4.2.3 | திருக்குறள் | மர வரைபடம் | பாடம் 2<br>இடுபணி 2<br>வளப்படுத்துதல் |
| **தொகுதி 10**<br>**மொழியே நமது விழி** | 1. தமிழ்க் கல்வி<br>2. மொழிப்பற்று<br>3. பேச்சுக்கலை<br>4. இலக்கணம் | 1.1.3<br>2.1.7<br>3.3.3<br>5.3.5 | விகாரப் புணர்ச்சி: திரிதல் | இரட்டிப்புக் குமிழி வரைபடம் | |

| கருப்பொருள் | தலைப்பு | கற்றல் தரம் | மொழியணி/ இலக்கணம் | சிந்தனை வரைபடம் | உயர்நிலைச் சிந்தனைத்திறன் |
|---|---|---|---|---|---|
| **தொகுதி 11**<br>**சுற்றுச்சூழலும் தூய்மையும்** | 1. மண் மாசுபடுதல்<br>2. மாந்தர் வினை<br>3. கழிவுநீர் மறுசுழற்சி<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.2.3<br>2.1.6<br>3.3.4<br>4.3.3 | அறநெறிச் சாரம் | | |
| **தொகுதி 12**<br>**வாழும் கலை** | 1. கலைத் தொண்டு<br>2. தமிழரின் ஓவியக்கலை<br>3. வெற்றிக்கொரு பாராட்டு<br>4. இலக்கணம் | 1.3.5<br>2.3.8<br>3.4.17<br>5.3.6 | விகாரப் புணர்ச்சி: கெடுதல் | குமிழி வரைபடம்<br>மர வரைபடம் | பாடம் 2<br>இடுபணி 1<br>குறைநீக்கல் |
| **தொகுதி 13**<br>**தொழில்நுட்பம்** | 1. தொழில்நுட்ப விளைவுகள்<br>2. தகவல் தொழில்நுட்ப உலகம்<br>3. சமூக வலைத்தளங்கள்<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.3.6<br>2.3.9<br>3.4.19<br>4.4.3 | இணைமொழி | | பாடம் 2<br>இடுபணி 1<br>இடுபணி 3<br>குறைநீக்கல் |
| **தொகுதி 14**<br>**விளையாட்டு உலகம்** | 1. விளையாட்டு வீரர்களும் சாதனைகளும்<br>2. விளையாட்டுச் சுற்றுலா<br>3. வருவாய் ஈட்டும் விளையாட்டு<br>4. இலக்கணம் | 1.4.5<br>2.2.5<br>3.4.18<br>5.3.4 | விகாரப் புணர்ச்சி: தோன்றல் | மர வரைபடம் | |
| **தொகுதி 15**<br>**சமூக வாழ்வில் சுமூக வாழ்வு** | 1. குடும்ப வாழ்வு<br>2. இதயம் பேசுகிறேன்<br>3. விளைவுகள் அறிவோம்<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.1.3<br>2.2.4<br>3.4.20<br>4.5.3 | உவமைத் தொடர் | மர வரைபடம்<br>இணைப்பு வரைபடம் | |

| கருப்பொருள் | தலைப்பு | கற்றல் தரம் | மொழியணி/ இலக்கணம் | சிந்தனை வரைபடம் | உயர்நிலைச் சிந்தனைத்திறன் |
|---|---|---|---|---|---|
| **தொகுதி 16**<br>**அறிவார்ந்த பயனீடு** | 1. அறிந்து பயன்கொள்<br>2. மின்னியல் வணிகம்<br>3. பயனீட்டாளரின் உரிமைகள்<br>4. இலக்கணம் | 1.2.3<br>2.2.5<br>3.2.5<br>5.5.5 | வலிமிகா இடங்கள் | | |
| **தொகுதி 17**<br>**வணிக உலகம்** | 1. வணிகம் பலவகை<br>2. வணிகத்தில் வெற்றி<br>3. வணிக வாய்ப்புகள்<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.2.4<br>2.1.7<br>3.3.3<br>4.2.3 | திருக்குறள் | | |
| **தொகுதி 18**<br>**பண்பாடும் உணவும்** | 1. பாரம்பரிய உணவு முறை<br>2. மலேசியர்களின் உணவுப் பண்பாடு<br>3. அலுவல் கடிதம்<br>4. இலக்கணம் | 1.3.6<br>2.3.8<br>3.4.16<br>5.5.6 | வினா எழுத்துகள் | நிரலொழுங்கு வரைபடம் | பாடம் 2<br>இடுபணி 2 |
| **தொகுதி 19**<br>**மலேசிய வரலாற்றுத் தோற்றங்கள்** | 1. வழிபாட்டுத்தலங்கள்: பல்லின அடையாளங்கள்<br>2. வரலாற்றில் ஓங்கி நிற்கும் கட்டடங்கள்<br>3. வரலாற்றுக் கண்காட்சி<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.3.6<br>2.3.7<br>3.4.15<br>4.7.3 | பழமொழிகள் | இணைப்பு வரைபடம் | பாடம் 2<br>இடுபணி 1 |
| **தொகுதி 20**<br>**அறிவியல் உலகம்** | 1. அறிவியல் கண்டுபிடிப்புகளும் விளைவுகளும்<br>2. அறிவியல் பாதை<br>3. அறிவியல் முன்னேற்றம்<br>4. இலக்கணம் | 1.4.5<br>2.1.6<br>3.4.19<br>5.5.5 | வலிமிகா இடங்கள் | | |
| **தொகுதி 21**<br>**நவீன வளர்ச்சி** | 1. தகவல் தொழில்நுட்பச் சேவைகள்<br>2. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி<br>3. வணிகத்தில் தொழில் நுட்பம்<br>4. செய்யுளும் மொழியணியும் | 1.5.3<br>2.3.9<br>3.4.18<br>4.7.3 | பழமொழிகள் | | பாடம் 2<br>இடுபணி 3 |

# தொகுதி 1 போக்குவரத்துத் துறை

## பாடம் 1 தொன்மையும் வளர்ச்சியும்

செவிமடுத்திடுக

படங்களை உற்று நோக்கி ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் கலந்துரையாடிச் செவிமடுத்திடுக.

| அன்றும் | இன்றும் |
|---|---|



சாலை



நெடுஞ்சாலை



தொடர்வண்டி



இலகுத் தொடர்வண்டி



பேருந்து



அதிநவீன பேருந்து

1.1.3 செவிமடுத்தவற்றிலுள்ள கருத்துகளை ஒப்பிட்டுத் தொகுத்துக் கூறுவர்.

## இடுபணி 1

**நோக்குக் குறியீட்டைப் பயன்படுத்தி, செவிமடுத்திடுக; தொகுத்துக் கூறுக.**

அன்று நம் நாட்டுச் சாலைகளும் தொடர்வண்டிச் சேவையும் பெரிய அளவில் மக்களுக்கு உதவியாகவோ நன்மையளிப்பதாகவோ இல்லையெனக் கூறலாம். ஆங்கிலேய ஆட்சிக் காலமென்பதால், ஆங்கிலேயர்களால் நிறுவப்பட்ட சாலைகளும் தொடர்வண்டிச் சேவையும் அவர்களின் பொருளியல் வளர்ச்சியை மையமாகக் கொண்டே உருவாக்கப்பட்டிருந்தன. பெரும்பாலான சாலைகள் முக்கியப் பொருளியல் நகரங்களை ஒட்டியே அமைக்கப்பட்டன. தொடர்வண்டிச் சேவை உற்பத்தி மையங்களான ரப்பர் தோட்டப் பகுதிகளிலிருந்தும் ஈயச்சுரங்கங்களிலிருந்தும் துறைமுகங்களை நோக்கியே அமைக்கப்பட்டிருந்தன. இத்தகைய சேவைகள் பொதுமக்களில் ஒரு பகுதியினருக்கே நன்மை பயப்பதாக அமைந்திருந்தன என்றே கூறலாம். சாலைகளும் பெரும்பாலும் அவ்வாறே அமைந்திருந்தன.

இன்று சாலை வசதிகளிலும் இரயில் போக்குவரத்துச் சேவைகளிலும் மிகப் பெரிய மாறுதல்களும் வளர்ச்சியும் ஏற்படலாயின. அமைக்கப்பட்ட சாலைகளும் தொடர்வண்டிச் சேவையும் மக்களின் நலத்தையும் மக்களுக்கான வசதியையும் முன்னிறுத்தியே உருவாக்கப்பட்டன எனத் துணிந்து கூறலாம். முக்கிய நகரங்களை மட்டுமே ஒட்டியிருந்த சாலைகள் சிறு பட்டணங்களுக்கும் கிராமங்களுக்கும் விரிவாக்கப்பட்டன. இதனால், அனைத்து மக்களும் தரமான போக்குவரத்துச் சேவையைப் பெற முடிந்தது. சாலைவழிப் பொதுபோக்குவரத்துச் சேவைகளும் தொடர்வண்டிச் சேவைகளும் பெருமளவில் விரிவாக்கப்பட்டு, இன்று மலேசிய மக்களின் முக்கியப் போக்குவரத்தாகப் பயன்பட்டு வருகின்றன. இவை மலேசியர்களின் வாழ்க்கைத் தரத்தில் மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளன.

## இடுபணி 2

**செவிமடுத்த கருத்துகளை ஒப்பிட்டுத் தொகுத்துக் கூறுக.**

## இடுபணி 3

**குறிப்புகளின் அடிப்படையில் சாலைப் போக்குவரத்திலும் தொடர்வண்டிப் போக்குவரத்திலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களை ஒப்பிட்டுக் குழுவில் கலந்துரையாடுக.**

### கவனத்தில் கொள்க

- கருப்பொருளைக் குறிக்கும் முதன்மை வாக்கியத்தில் தொடங்குதல்.
- ஒற்றுமை வேற்றுமைகளை ஒப்பிட்டுத் தொகுத்துக் கூறுதல்.
- மாற்றத்தால் விளைந்த நன்மைகளைக் கூறுதல்.
- முடிப்பு – சொந்தக் கருத்தைக் கூறுதல்.

### வளப்படுத்துதல்

**பொதுப் போக்குவரத்துப் பயன்பாட்டால் ஏற்படும் விளைவுகள் தொடர்பான கருத்துகளை ஒப்பிட்டுத் தொகுத்துக் கூறுக.**

குறைநீக்கல்

**உரையாடலைச் செவிமடுத்து இருவரின் கருத்துகளையும் ஒப்பிட்டுத் தொகுத்துக் கூறுக.**

செவிமடுத்திடுக

தொகுதி 1



**மலர்:** வணக்கம் அரசி. நலமா?

**அரசி:** வணக்கம் மலர். நலமே விழைகிறேன். நீ எப்படி இருக்கிறாய்? நீண்ட நாளாகிவிட்டதே. என்ன காரணமாக அழைக்கிறாய்?

**மலர்:** நான் நலமாகவே இருக்கிறேன். நகர்புறப் போக்குவரத்திற்கும் புறநகர்ப் போக்குவரத்திற்கும் இடையே உள்ள வளர்ச்சியையும் வேறுபாடுகளையும் குறித்து, திரட்டேடு ஒன்றனைச் செய்ய ஆசிரியர் பணித்துள்ளார். அதன் விபரங்களை அறியவே தொடர்பு கொண்டேன்.

**அரசி:** நகர்புறப் போக்குவரத்துத்துறை மிகப் பெரிய வளர்ச்சியைக் கண்டுள்ளது. இங்கே, தரைப் போக்குவரத்திலிருந்து வான்போக்குவரத்து வரை உள்ளன. இங்குள்ள சாலைகள் நெடுஞ்சாலைகளாகவும் மேம்பாலச் சாலைகளாகவும் அடுக்குச் சாலைகளாகவும் இருக்கின்றன. தொடர்வண்டிச் சேவையும் பல்கிப் பெருகிவிட்டது. இலகுத் தொடர்வண்டி தொடங்கி, 'மொனோ இரயில்', விரைவுத் தொடர்வண்டி எனப் பெரும் வளர்ச்சி கண்டுவிட்டது.

**மலர்:** அம்மாடியோ! இத்துணை வளர்ச்சியா? உனக்குத்தான் தெரியுமே, என் வட்டாரம் கிராமப் பகுதி. இங்குப் பேருந்துச் சேவை மட்டுமே உள்ளது. முன்னர் ஒருமுறை நீ இங்கு வந்திருந்தபோது இருந்ததைவிடச் சற்று வளர்ச்சி அடைந்துள்ளது. போக்குவரத்துத் துறையில் பெரும் வளர்ச்சி இல்லை என்றாலும், இங்கே சாலை நெரிசல் என்பது இல்லை என்பதே எங்களுக்கு மகிழ்ச்சியான தகவல் அரசி!

**அரசி:** வேறு தகவல்கள் வேண்டுமென்றால் புலனம்வழி அனுப்புகிறேன் மலர், அம்மா அழைக்கின்றார். நான் விடைபெற்றுக் கொள்கிறேன். நன்றி.

**மலர்:** சரி அரசி, தகவல்களைத் தவறாமல் அனுப்பி வை. மிக்க நன்றி. விடைபெறுகிறேன், வணக்கம்.

## பாடம் 2 தானியங்கி மகிழுந்து


**செய்தியைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப உரக்க வாசித்திடுக.**

மக்கள் குரல் —— நாளிதழ்ச் செய்தி —— பக்கம் 25

# மின்னாற்றலால் இயங்கும் தானியங்கி மகிழுந்து

பிப்ரவரி 6 - அடுத்த பத்து ஆண்டுகளில் ஓட்டுநர் துணை இல்லாமல் மின்சக்தியைக் கொண்டு இயங்கும் மகிழுந்துகள் சாதாரண மகிழுந்துகளின் விலையிலேயே கிடைக்கும் சாத்தியம் இருப்பதாக ஆஸ்திரேலிய கர்டின் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். ஓட்டுநர் இல்லாமல் இயங்கும் தானியங்கி மகிழுந்துகளுக்காக மலிவு விலை தொழில்நுட்பத்தையும் அவர்கள் வடிவமைத்து வருகின்றனர். ஆனால், இந்த மலிவு விலை தொழில்நுட்பத்தை மேம்படுத்தி அறிமுகம் செய்வதற்கு இன்னும் பத்து ஆண்டுகள் பிடிக்கலாம் என்று அவர்கள் கூறியுள்ளனர்.

இந்த நிலையில், கூகுள் நிறுவனம் தானியங்கி மகிழுந்தின் வடிவத்தை அறிமுகம் செய்துவிட்டது. தற்போது தீவிர சோதனைகளில் இருக்கும் இந்த மகிழுந்தை அமெரிக்காவிலுள்ள கலிஃபோர்னியா, நெவடா ஆகிய மாநிலங்கள் மட்டுமே அங்கீகரித்துள்ளன.



எனவே, இதனைச் சாதாரண சாலைகளில் பயன்படுத்த இன்னும் சில ஆண்டுகள் ஆகலாம் என்று கணிக்கப்படுகின்றது. இம்மகிழுந்து நடைமுறைக்கு வந்தால் எப்படி இருக்கும் என்பது குறித்துப் பின்வரும் கருத்துகளைப் பலர் தெரிவித்துள்ளனர்.

மின்னாற்றலால் இயங்கும் மகிழுந்து என்பதால் சுற்றுச்சூழலுக்குத் தீங்கு இழைக்காது. இதனை ஒருமுறை முழுமையாக மின்னூட்டம் செய்தால் 160 கிலோ மீட்டர் தூரம் வரை பயணிக்க முடியும். இதனால், மகிழுந்து வழியில் நின்றுவிடுமோ என்று அச்சப்பட வேண்டியதில்லை.

ஓட்டுநர் இன்றிப் பயணிக்கும் இந்த மகிழுந்தில் எவரும் பயணம் செய்யலாம். திறன்பேசி மூலம் கட்டளையிட்டால், செல்ல வேண்டிய இடத்திற்குப் பாதுகாப்பாகக் கொண்டு சேர்த்துவிடும். ஓட்டுநரையும் குடும்பத்தினர் உதவியையும் தேடிக் கொண்டிருக்காமல் குறித்த நேரத்திற்குச் செல்ல நினைப்பவர்களுக்குச் சிறப்பான தெரிவாகும்.

இந்த மகிழுந்தில் ஆக்சிலேட்டர், பிரேக் பெடல்கள், ஸ்டீயரிங் ஆகியன இருக்கா. முடுக்குதல், முடக்குதல் பட்டன் மூலம் எந்திரத்தை முடுக்கியும் முடக்கியும் செல்ல முடியும்.

2.1.6 செய்தியைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

இந்த மகிழுந்தில் செயற்கைக்கோள் தடங்காட்டி முறைமை உள்ளது. இது, தொலைக்கண்டுணர்வி எனப்படும் ராடார், உணர்திறநிழற்படக் கருவி (கேமரா சென்சார்) முதலியவற்றுடன் இணைந்து செயல்படுவதால், சாலையின் ஓரத்தில் பயணத்தை நிறுத்திப் பயணியைப் பாதுகாப்பாக இறக்கிவிடும். மேலும், பாதசாரிகள், அருகில் வரும் வாகனங்கள், அறிவிப்புகள், சாலையில் இருக்கும் எச்சரிக்கைப் பலகைகள் போன்றவற்றைக் கண்டுணர்ந்து, அவற்றுக்கு ஏற்றவாறு செல்லும். சுமார் 600 அடி தூரத்திற்கு, அதாவது இரண்டு காற்பந்து மைதானங்கள் சுற்றளவுக்கு இதனால் கண்டுணர முடியும்.

தொகுதி 1

**இடுபணி 1**

**செய்தியைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்திடுக.**

வணக்கம். தொடர்மழையின் காரணமாகக் கிழக்குக்கரை மாநிலங்களான கிளந்தான், திரெங்கானு, பகாங்கில் வெள்ள நிலைமை மோசமடைந்துள்ளதெனத் தேசியப் பேரிடர் நிருவாகக் கழகம் (நட்மா) தெரிவித்துள்ளது. இதனால், போக்குவரத்துகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே, கிழக்குக்கரை மாநிலங்களுக்குப் பயணிப்போர் வெள்ள நிலவரங்களை அறிந்து கொண்டு தங்கள் பயணங்களை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

காணொளி

**இடுபணி 2**

**உச்சரித்துப் பழகுக. காணொளியை வழிகாட்டியாகக் கொள்க.**

**இடுபணி 3**

**செய்தியைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்திடுக.**

வணக்கம் நேயர்களே! உலகக் கிண்ணத் தேர்வாட்டத்திற்குத் தகுதி பெற்றிருக்கும் மலேசிய அணி இன்று தனது வைரியான தென் கொரியாவைத் தன் உள்ளரங்கில் சந்தித்து விளையாடவுள்ளது. புக்கிட் ஜாலில் அரங்கம் மலேசிய இரசிகர்களால் நிறைந்து காணப்படுகிறது. இதுவரை ஆடிய ஆட்டங்கள் நான்கில் இரண்டு வெற்றியும் ஒரு சமநிலையும் ஒரு தோல்வியையும் சந்தித்துள்ள நம் அணி நான்கு வெற்றிகளைப் பதிவு செய்துள்ள தென்கொரியாவுடன் பலப்பரீட்சைகாண உள்ளது. தென் கொரியாவை வீழ்த்தி அடுத்த சுற்றுக்குத் தகுதி பெறுமா? இல்லையா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஆட்டம் இன்னும் சில நிமிடங்களில் தொடங்கவுள்ளது. ஒரு விளம்பர இடைவெளிக்குப் பிறகு மீண்டும் உங்களைச் சந்திக்கிறேன்.

## வளப்படுத்துதல்

**செய்தியைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்திடுக.**

இது தமிழரின் வான்வழிப் பயண அறிவு பற்றிய செய்தித் துணுக்கு. நம் இலக்கியங்கள் விமானங்களைப் பல்வேறு வடிவில் குறிப்பிடுகின்றன. கண்ணகி, கோவலனுடன் வான ஊர்தியில் சென்றதாகச் சிலப்பதிகாரமும், சீதையை இராவணன் புட்பக விமானத்தில் தூக்கிச் சென்றதாகக் கம்பராமாயணமும் குறிப்பிடுகின்றன. இன்னும் வேறு சிலவற்றிலும் விமானச் செய்தி வருவதைக் காணலாம். மேலும், "வலவன் ஏவா வானவூர்தி" என்று பழம்பெரும் இலக்கியத் தொகுப்பான புறநானூற்றுப் பாடல் ஒன்று கூறுகின்றது. வானூர்தி ஓட்டுகிறவனைத் தமிழில் 'வலவன்' என அழைத்தனர். சீவகசிந்தாமணியில் "மயிற்பொறி விமானத்தின்" எனும் கூற்று இடம் பெற்றுள்ளது. இதன்வழி தமிழர் வான்வழிப் பயணம் நெடுங்காலமாக இருந்துள்ளமை அறியமுடிகிறது.

## குறைநீக்கல்

**உரையாடலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்திடுக.**

கூத்தன்: கேள்விகளை நீ கேட்கிறாயா அல்லது நான் கேட்கட்டுமா?
தருமி: (அதிர்ச்சியுடன்) நீ கேட்காதே நான் கேக்குறேன் (கேட்கிறேன்). எனக்குக் கேட்கத்தான் தெரியும்.
கூத்தன்: கேளும்.
தருமி: சற்றுப் பொறும்.
கூத்தன்: கேளும். (சற்று அழுத்தமாக)
தருமி: பிரிக்க முடியாதது என்னவோ?
கூத்தன்: தமிழும் சுவையும்.
தருமி: பிரியக்கூடாதது...?
கூத்தன்: எதுகையும் மோனையும்.
தருமி: சேர்ந்தே இருப்பது...?
கூத்தன்: வறுமையும் புலமையும்.
தருமி: ம்ம்ம். க்கும்... க்கும்... (திகைத்தல் மற்றும் அதை இருமலாக மாற்றம்) சேராது இருப்பது...?
கூத்தன்: அறிவும் பணமும்.
தருமி: சொல்லக்கூடாதது...?
கூத்தன்: பெண்ணிடம் ரகசியம்.
தருமி: சொல்லக்கூடியது...?
கூத்தன்: உண்மையின் தத்துவம்.
தருமி: பார்க்கக்கூடாதது...?
கூத்தன்: பசியும் பஞ்சமும்.
தருமி: பார்த்து இரசிப்பது...?
கூத்தன்: கலையும் அழகும்.
தருமி: கலையில் சிறந்தது...?
கூத்தன்: இயல் இசை நாடகம்.
தருமி: நாடகம் என்பது...?
கூத்தன்: நடிப்பும் பாட்டும்.
தருமி: பாட்டுக்கு...?
கூத்தன்: நாரதன்.
தருமி: வீணைக்கு...?
கூத்தன்: வாணி.
தருமி: அழகுக்கு...?
கூத்தன்: முருகன்.
தருமி: சொல்லுக்கு...?
கூத்தன்: அகத்தியன்.
தருமி: வில்லுக்கு...?
கூத்தன்: விஜயன்.
தருமி: ஆசைக்கு...?
கூத்தன்: நீ.
தருமி: அறிவுக்கு...?
கூத்தன்: நான்!



# பாடம் 3 பொதுப் போக்குவரத்து

**'சாலை நெரிசலைத் தவிர்ப்பதால் விளையும் நன்மைகள்' எனும் தலைப்பில் உருவாக்கப்பட்டுள்ள பத்தியை வாசித்து அறிக. பத்தியின் அமைப்பை இணையராக ஆராய்ந்து கூறுக.**

**முதன்மைக் கருத்து**

**சாலை நெரிசலைத் தவிர்ப்பதால் பல நன்மைகளை அடையலாம்.**

**துணைக் கருத்தும் விளக்கமும்**

- வாகனங்கள் குறையும்.
- நேரத்தோடு இலக்கை அடையலாம்.
- மனவுளைச்சலைப் போக்கலாம்.
- பயணத்தை மகிழ்வூட்டுவதாக அமைத்திடலாம்.



**எ.கா:**

சாலையில் வாகனங்களின் எண்ணிக்கையைக் குறைப்பதால் சாலை நெரிசலை மிக எளிதில் தடுத்து விடலாம். இதனால், நமக்குப் பல நன்மைகள் விளைகின்றன. நாம் குறித்த நேரத்தில் நம் இலக்கை அடையலாம். மேலும், சாலை நெரிசலில் சிக்கி மனவுளைச்சலுக்கு ஆளாக வேண்டியதில்லை. சொல்லப்போனால், நமது பயணம் மிகவும் மகிழ்வூட்டுவதாக அமையும்.

**இடுபணி 1**

**வரைபடத்திலுள்ள கருத்துகளைப் பத்தியில் தொகுத்து எழுதுக.**

**பொதுப் போக்குவரத்தை ஊக்குவிக்கும் வழிகள்**

- சேவைகளை அதிகரித்தல்
- விரைவான சேவையை வழங்குதல்
- பயணிகளுக்கு ஏற்ற வசதிகளை வழங்குதல்
- பரிந்துரைக்கப்பட்ட அட்டவணைப்படி புறப்பாடு இருத்தல்

**கவனத்தில் கொள்க**

**பத்தி அமைப்பு**

- முதன்மைக் கருத்து – முதன்மை வாக்கியமாக அமைதல்.
- துணைக் கருத்துகளைத் துணை வாக்கியங்களில் எழுதுதல்.
- ஒரு பத்தி ஒரே கருத்தில் அமைதல்.

3.2.5 கருத்துகளைத் தொகுத்துப் பத்தியில் எழுதுவர்.

## இடுபணி 2

**கருத்துகளைத் தொகுத்துப் பத்தியில் எழுதுக.**

| முதன்மைக் கருத்து | துணைக் கருத்தும் விளக்கமும் |
| --- | --- |
| வான் போக்குவரத்தால் ஏற்படும் நன்மைகள். | • விரைந்து செல்லவும் திரும்பவும் உதவும்.<br>• ஆபத்து அவசரத்திற்கு ஏற்றதாகும்.<br>• வட்டாரப் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும். |




## இடுபணி 3

**பின்வரும் கருத்துகளைத் தொகுத்துப் பத்தியில் எழுதுக.**

**முதன்மைக் கருத்து:** வாகன நெரிசலைத் தவிர்ப்பதால் ஏற்படும் நன்மைகள்.

- தூய்மைக்கேட்டைக் குறைக்கலாம்.
- குறைவான வாகனங்கள் – குறைவாகப் புகை வெளியேறும்.
- காற்றுத் தூய்மைக்கேட்டைக் குறைக்க வழிவகுக்கும்.
- எ.கா: கார்பன் மோனோக்சிடா காற்று – அதிக ஆபத்தை ஏற்படுத்தும்.
- தூய்மைக்கேடு குறைவு – நலமான வாழ்வு ஏற்படும்.

## வளப்படுத்துதல்

**வாக்கியத்தில் உள்ள கருத்துகளைத் தொகுத்துப் பத்தியில் எழுதுக.**

- மூளை சோர்வடையும்போது தூக்கம், சோம்பல், மறதி, காலம் தாழ்த்துதல் ஆகிய நால்வகை நோய்கள் மனிதனைத் தாக்கும் என வள்ளுவப் பெருந்தகை கூறுகிறார்.
- உடலுக்கு மருந்து உணவு; மூளைக்கு மருந்து படிப்பு.
- வாழ்க்கை வளப்பம், முன்னேற்றம் பெற வாசிப்பு அவசியம்.

## குறைநீக்கல்

**கருத்துகளைத் தொகுத்து ஒரு பத்தியில் எழுதுக.**

**கருத்து:** வெளியிடப் பயணங்கள் குடும்ப உறவை மேம்படுத்துகின்றன.

- மனம் விட்டுப் பேசுதல்
- மனவுளைச்சலின்றிப் பயணித்தல்
- சேர்ந்து உணவுண்ணல்
- நல்லுறவு மேம்படல்



செவிமடுத்திடுக

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## இரட்டைக்கிளவிகளை வாசித்து அறிக.

சிலுசிலு – குளிர்ச்சித்தன்மை
பரபர – அவசர அவசரமாகச் செய்தல்
துருதுரு – எப்பொழுதும் துடிப்பாகச் செயல்படுதல்
தளதள – பயிர் செழிப்பாகக் காணப்படும் நிலை

சலசல சலசல இரட்டைக்கிளவி
தகதக தகதக இரட்டைக்கிளவி
உண்டல்லோ தமிழில் உண்டல்லோ
பிரித்து வைத்தல் நியாயமில்லை
பிரித்துப் பார்த்தால் பொருளுமில்லை
இரண்டல்லோ இரண்டும் ஒன்றல்லோ
**- கவிஞர் வைரமுத்து**

‘கண்ணோடு காண்பதெல்லாம்’ எனும் கவிஞர் வைரமுத்துவின் பாடலை நீங்கள் செவிமடுத்திருக்கலாம். இப்பாடலில் சலசல, தகதக முதலிய சொற்றொடர் பயன்பாட்டைக் கவனியுங்கள். சலசல என்பது தமிழ்மொழியில் பன்னெடுங்காலமாகப் பயன்படுத்தப்படும் மொழியணியாகும். இது சரளமான நீரோட்டத்தை உணர்த்துகின்றது. ஒரு வாக்கியத்தில் ஒரு சொல் தனித்து வருகையில் பொருள் தராமல், இரட்டையாய் அடுக்கி வரும் பொழுது பொருள் தரும். இவ்வகைச் சொற்றொடர்தான் இரட்டைக்கிளவி எனப்படும்.

### கவனத்தில் கொள்க

- இரட்டை = இரண்டாக வருவது
- கிளவி = சொல்
- இரட்டைக்கிளவி = சேர்ந்து வரும் சொற்கள் எனப் பொருள்படும்.
- இரட்டைக்கிளவி சேர்ந்து வரும்போது மட்டுமே பொருள் தரும்.


சூழல் 1




4.1.3 மூன்றாம் படிவத்திற்கான இரட்டைக்கிளவிகளைச் சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர்.


சூழல் 2
என்ன செல்வன், பரபரவென ஓடுகிறாய்? நான் கூப்பிடுவதுகூட உன் காதில் விழவில்லையா?
மன்னிக்க வேண்டும் தாத்தா. இரவு நீண்ட நேரம் கண்விழித்துப் படித்ததால் தாமதமாக எழுந்துவிட்டேன். அதனால்தான் காற்பந்துப் பயிற்சிக்குத் தாமதமாகிவிட்டது.


சூழல் 3
முல்லை, தம்பி எங்கே? அவனைப் பத்திரமாகப் பார்த்துக் கொள். அவன் அங்குமிங்கும் துருதுருவென ஓடிக்கொண்டிருப்பான்.
கவலை வேண்டாம் அம்மா. அவன் என்னுடன்தான் விளையாடிக் கொண்டிருக்கிறான். நான் அவனைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்வேன்.


சூழல் 4
1 அப்பா! இங்கே வாருங்களேன். சீக்கிரம் அப்பா.
2 என்ன யாழினி அத்துணை அவசரம்? இதோ வந்துவிட்டேன்.
3 இங்கே பாருங்கள் அப்பா. நான் நட்ட தக்காளிச் செடி தளதளவெனச் செழிப்பாக வளர்ந்திருக்கின்றது.

**இடுபணி 1**

**உரையாடல்களில் இரட்டைக்கிளவிகளின் சரியான பயன்பாட்டை அறிந்து கூறுக.**

**இடுபணி 2**

**இரட்டைக்கிளவிகளுக்கு ஏற்ற பொருளை இணைத்திடுக.**

| | |
|---|---|
| சிலுசிலு | அவசர அவசரமாகச் செய்தல் |
| துருதுரு | குளிர்ச்சித் தன்மை |
| தளதள | எப்பொழுதும் துடிப்பாகச் செயல்படுதல் |
| பரபர | பயிர் செழிப்பாகக் காணப்படும் நிலை |

**இடுபணி 3**

**மேற்கண்ட இரட்டைக்கிளவிகளைப் பொருள் விளங்க வாக்கியத்தில் அமைத்திடுக.**

**வளப்படுத்துதல்**

**மேற்கண்ட இரட்டைக்கிளவிகளுக்கு ஏற்ற சூழலை அமைத்திடுக.**

**குறைநீக்கல்**

**கோடிட்ட இடத்தைச் சரியான இரட்டைக்கிளவிகளைக் கொண்டு நிறைவு செய்க.**

1. கேமரன் மலையில் __________ என வீசிய மென்குளிர்க் காற்று உடலைச் சிலிர்க்கச் செய்தது.
2. தாமதமாக எழுந்த செந்தில் __________ எனக் காலைக்கடன்களை முடித்துப் பள்ளிக்கு ஓடினான்.
3. __________ என அங்குமிங்கும் ஓடியாடிக் கொண்டிருக்கும் குழந்தைகளைக் கவனமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்.
4. நன்கு நீரூற்றி உரமிட்ட மல்லிகைச் செடிகள் __________ எனச் செழிப்பாக வளர்ந்திருந்தன.



# தொகுதி 2 வரலாற்றுத் தடங்கள்

## பாடம் 1 இரசனைமிகு மலேசியா

படங்களை உற்றுநோக்கி விளக்கம் பெறக் கேள்விகள் கேட்டிடுக.




ஆஃபமோசா கோட்டை
மலாக்கா



நாட்டின் பழைமையான காவல் நிலையம்
பகாங்



பூஜாங் பள்ளத்தாக்கு
கெடா



கெல்லீஸ் கோட்டையகம்
பேராக்

1.2.3 விளக்கம் பெறக் கேள்விகள் கேட்பர்.

## இடுபணி 1

**தைப்பிங் பட்டணத்தில் வரலாற்றுச் சுவடுகள் பற்றிய விளக்கங்கள் பெற ஏற்ற வினாக்களைக் குழுவில் வினவிடுக. வரைபடத்திலுள்ள கருச்சொற்களை வழிகாட்டியாகக் கொள்க.**

**தைப்பிங் பட்டணம்**
- அமைவிடம்
- சேவைகள்
- சிறப்புகள்
- அடையாளங்கள்

## இடுபணி 2

**நண்பர்களுடன் குழுவில் கலந்துரையாடி, மேலும் விளக்கங்கள் பெற வினவுக.**

## இடுபணி 3

**உமது வட்டாரத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஓர் இடத்தைக் கண்டறிந்து விளக்கங்களைப் பெறக் கேள்விகள் கேட்டிடுக.**

### வளப்படுத்துதல்

**படத்தைப் பார்த்து விளக்கம் பெறக் கேள்விகள் கேட்டிடுக.**




### குறைநீக்கல்

**படம் தொடர்பான விளக்கம் பெற ஐந்து கேள்விகள் கேட்டிடுக.**



தொகுதி 2

பாடம் 2 **மலேசியத் தங்கச் சுரங்கம்**

**உரைநடைப் பகுதியை மௌனமாக வாசித்து முக்கியக் கருத்துகளைக் குறித்திடுக.**

மலேசிய நகர்களுள் பல சிறப்புக் காரணங்களுக்காக வரலாற்றில் குறிப்பிடத் தக்கனவாக உள்ளன. எடுத்துக்காட்டிற்கு, பகாங்கிலுள்ள ரவூப் நகரம் தங்கச் சுரங்கத்திற்குப் புகழ்பெற்ற இடமாகும். இந்நகரத்தில் 1880ஆம் ஆண்டுகளிலிருந்து தங்கம் வெட்டி எடுக்கப்படுகின்றது.

பகாங் மாநிலத்தின் மிகப் பழமையான நகரங்களுள் ரவூப் நகரமும் ஒன்றாகும். இந்நகரம் கோலாலம்பூரில் இருந்து சுமார் நூற்றுப் பத்து கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது.

ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தின்போது, இங்குத் தங்கம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அதனைத் தோண்டி எடுக்கும் பொருட்டு, 1889இல் 'ரவூப் ஆஸ்திரேலியத் தங்கச் சுரங்கம்' எனும் நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது.

அப்போது, சுற்று வட்டாரங்களில் வாழ்ந்த மக்களுள் பலர், ரவூப் தங்கச் சுரங்கத்தில் வேலை செய்வதற்குப் படையெடுத்தனர். இஃது அங்குள்ள மக்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கியதோடு மட்டுமல்லாமல், அவர்களின் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படச் செய்தது. எனவே, இது மலேசிய வரலாற்றில் சிறப்புமிக்க ஒரு தங்கச் சுரங்கக் குடியேற்றப் பகுதியாக உருவெடுத்தது. இன்றும் அந்தப் புகழ் நிலைத்து நிற்கின்றது.



எனினும், 1961ஆம் ஆண்டில் தங்கம் தோண்டுவது நிறுத்தப்பட்டது. இருப்பினும், அண்மைய காலங்களில் உலகளாவிய நிலையில் தங்கத்தின் விலையேற்றத்தால், அந்தச் சுரங்கத்தை மீட்டெடுழுச்சி செய்வதற்கு முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

ரவூப் தங்கச் சுரங்கத்தில் தங்கத்தைத் தோண்டி எடுப்பதற்கு, சுழல் தண்டு முறையைப்

2.3.7 வரலாறு தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.



பயன்படுத்தினார்கள். அம்பைப் போன்ற சுழல் தண்டைப் பூமிக்குள் செலுத்தி மண்ணைத் தோண்டி எடுத்து, அதில் இருந்து தங்கத்தைப் பிரித்து எடுத்தார்கள்.

ரவூப்பில் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டதற்கு ஒரு வரலாற்றுப் பின்னணியும் உண்டு. முன்பு ஒரு காலத்தில், அங்கு வாழ்ந்த மக்கள் தட்டுகளைப் பயன்படுத்தி மணலைத் தோண்டியுள்ளனர். அவ்வாறு தோண்டும்போது, ஒரு பிடி தங்கம் கிடைத்ததாகச் சொல்லப்படுகிறது. ஜே.ஏ.ரிச்சர்ட்சன் என்பவர், இதனைத் தம் ஆய்வு நூலில் குறிப்பிட்டுள்ளார்.

அதுமட்டுமன்றி, கிராமத்துக் கதை ஒன்றும் உண்டு. ஒரு முதியவரும் அவருடைய இரு மகன்களும் ஒவ்வொரு முறையும் மணலைத் தோண்டும்போது, ஒரு கைப்பிடி தங்கம் கிடைத்ததாக அந்தக் கிராமத்துக் கதையில் சொல்லப்படுகின்றது.

'மெரவூப்' (meraup) எனும் மலாய்ச் சொல்லிலிருந்து ரவூப் (Raub) எனும் சொல் உருவானதாகக் கூறப்படுகின்றது. 'மெரவூப் ' என்றால் தோண்டுதல் என்று பொருள். தங்கச் சுரங்கத் தொழில் துறையினால் ரவூப் பட்டணமும் மாவட்டமும் பெயர் பெற்று விளங்குகின்றன.



**இடுபணி 1**


**கருத்துணர் கேள்விகளுக்கு விடை எழுதுக.**

1. ரவூப் நகரம் எங்கு அமைந்துள்ளது?
2. தங்கச் சுரங்கத்தால் ரவூப் நகரம் பெற்ற மாற்றங்கள் யாவை?
3. ரவூப் எனும் பெயர் எப்படி வந்தது?
4. தங்கத்தைத் தோண்டிய நிறுவனம் 1961 இல் தங்கம் தோண்டுவதை ஏன் நிறுத்தியது என நீங்கள் கருதுகின்றீர்கள்?
5. தங்கச் சுரங்கத் தொழில் விரிவடைந்தால் ரவூப் நகரம் எத்தகைய நன்மைகளைப் பெறும்?
6. ஒரு நாட்டில் ஏன் சில இடங்கள் மட்டும் சிறப்பைப் பெறுகின்றன?

இடுபணி 2

**உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்கு விடை எழுதுக.**

## கல்வெட்டுகளும் தமிழும்



இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்ட இலட்சம் கல்வெட்டுகளில், 60,000 கல்வெட்டுகள் தமிழ்க் கல்வெட்டுகள் என்று தஞ்சைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் இராசவேலு பெருமிதத்தோடு கூறினார்.

வெளிநாட்டில் பிறந்து வாழும் தமிழர்கள் தமிழ்நாட்டிற்கு என்றாவது வர நேர்ந்தால் தங்கள் முன்னோர்கள் வாழ்ந்த ஊரைக் காண விழைவார்கள். இஃது அவர்களின் வரலாற்று நாட்டத்தைக் காட்டுகிறது. அதேபோல் நாம் நம் இனத்தவர்களின் வரலாற்றையும் அவர்கள் வாழ்ந்த இடம், வாழ்ந்த முறை, பெற்றிருந்த அறிவு, பயன்படுத்திய கருவிகள், அவர்களின் நாகரிகம், பண்பாடு முதலியவற்றைத் தெரிந்து கொள்வது என்பது இயல்பான மாந்த இனத்தின் உந்துதலான உணர்வு என மேலும் அவர் விளக்கினார்.

“வரலாறு அறியாத இனம் அழிந்துவிடும்” என்பது வரலாற்று அறிஞர்களின் முடிவான முடிவு. தமிழ்மொழியின் தொன்மையை விளக்கவல்ல அகழ்வாய்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருவது ஓரளவு ஆறுதலளிப்பதாகக் கூறினார். கிடைத்துள்ள ஓரளவு இலக்கியங்களும் தொல்லியல் ஆய்வுகளும் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் பிறநாட்டு நல்லறிஞர் ஆய்வுகளும் தமிழின் பெருமையையும் தமிழ் நாகரிகத்தின் சிறப்பையும் நன்கு வெளிப்படுத்துகின்றன என்றும் தெரிவித்தார். இலக்கிய ஆய்வுகளை மட்டுமே வைத்துத் தமிழர் வரலாற்றை அறுதியிட்டுக் கூறவியலாது. மாறாக, அகழ்வாராய்ச்சி வழி கிடைக்கப்பெற்ற கல்வெட்டுகள் நமது தொன்மையை உலகுக்கு உணர்த்தும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை எனவும் தெரிவித்தார்.

1. வெளிநாடுகளில் வாழ்கின்ற தமிழர்களின் வரலாற்று நாட்டத்தை எவ்வாறு அறியலாம்?
2. ‘மாந்த இனத்தின் உந்துதலான உணர்வுகள்’ என்பவை யாவை?
3. தமிழ் நாகரிகத்தின் சிறப்பை எவ்வாறு அறியலாமென விளக்குக.
4. ஓர் இனத்தின் வரலாறு ஏன் முக்கியமானதாகக் கூறப்படுகிறது?
5. ‘வரலாறு அறியாத இனம் அழிந்துவிடும்’ எனும் கூற்றை ஏற்கின்றீரா? ஏன்?

இடுபணி 3

**உரைநடைப் பகுதியை வாசித்து, கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளித்திடுக.**

கி.பி.1012ஆம் ஆண்டு சோழப் பேரரசை ஆட்சி புரிந்தவர் இராஜேந்திர சோழனாவார். இவர் தம் தந்தையார் போன்றே மிகப் பெரிய வெற்றி வீரர். இவரைத் 'தமிழ்நாட்டு நெப்போலியன்' எனப் புகழ்ந்து பேசுகின்றது வரலாறு. இவரிடம் சிறந்த கடற்படை இருந்தது. இவர், நிக்கோபார், அந்தமான் முதலிய தீவுகளைப் பிடித்து, பர்மாவுக்குச் சென்று அதையும் வெற்றி கொண்டார். இராஜேந்திர சோழனின் வெற்றிப் பயணம் அத்தோடு முடியவில்லை. பாண்டியநாடு, சேரநாடு, இலங்கை மற்றும் கங்கைக் கரையிலிருந்த சில அரசுகளும் இவர் கைவசமாயின. அவற்றைத் தொடர்ந்து, மலாயா, ஜாவா, சுமத்திரா, இந்தோசீனா முதலியவற்றையும் தமது கொடியின் கீழ்க் கொண்டு வந்தார். கடாரத்தைக் கைப்பற்றினாலும் அந்நாட்டு மன்னனின் பரிதாப நிலையைக் கண்டு அதை அவனுக்கே திருப்பிக் கொடுத்து, அவனையே தொடர்ந்து அரசாளும்படி விட்டுவிட்டார். இவருடைய வழித்தோன்றல்களுள் ஒருவனான நீல உத்தமன் என்ற அரசன்தான் சிங்கப்பூரை முதலில் ஆண்டதாகவும் அவன்தான் அப்பெயரை அத்தீவுக்கு இட்டதாகவும் வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றார்கள்.

- எடுத்தாளப்பட்டது: மலாயா சரித்திரம், சுவாமி சத்தியாநந்தா.

1. இராஜேந்திர சோழன் தென்கிழக்காசிய நாடுகளுக்கு வந்த நோக்கம் யாது?
2. இராஜேந்திர சோழனின் படையெடுப்பு வெற்றி பெற்றதற்கான காரணம் என்ன?
3. இராஜேந்திர சோழன் பண்புநலன்களை விளக்குக.

## வளப்படுத்துதல்

**கருத்துணர் கேள்விகளுக்கு விடை காண்க.**

அங்கோர் வாட் (Angkor Wat) என்பது இந்துக் கோயிலாக இருந்து பின்னர் புத்தர் மதக் கோயிலாக மாறிய ஒரு தொகுதியாகும். இது கம்போடியாவில் அமைந்துள்ளது. 162.6 எக்டர் பரப்பளவில் அமைந்துள்ள இக்கோயில் உலகின் மிகப்பெரிய மத வழிபாட்டுத் தலமாகும். இஃது இரண்டாம் சூரியவர்மன் என்பவரால் 12ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இக்கோயில் கெமர் பாரம்பரியத்தின் உயர்தர கட்டமைப்பைக் கொண்டது. இக்கோயில் கம்போடியா நாட்டின் சின்னமாக அந்நாட்டுக் கொடியில் இடம்பெற்றுள்ளது. அங்கோர் என்பது நகரத்தையும் வாட் என்பது கோயிலையும் குறிக்கும் கெமர் மொழிச் சொற்களாகும்.

1. அங்கோர் வாட் கோயிலின் சிறப்புகளைப் பட்டியலிடுக.
2. அங்கோர் வாட் கோயில் சிறப்புப் பெற்றமைக்கான காரணங்களைக் குழுவில் கலந்துரையாடிக் கூறுக; எழுதுக.

## குறைநீக்கல்

**வரலாற்றுப் பாடத்தைக் கற்பதால் விளையும் நன்மைகளைப் பட்டியலிடுக.**

## பாடம் 3 மலேசியத் தமிழர் தடம்

காணொளி

**நிரலொழுங்கு வரைபடத்திலுள்ள பட நிகழ்வுகளையொட்டி, குழுவில் கலந்துரையாடி விவரங்களைக் குறித்துக் கொள்க.**

**கலந்துரையாடுவதற்கு முன்:**

உலகில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் தமிழர்கள் வாழ்கின்றார்கள். ஆனால், மிகச் சில நாடுகளில் மட்டுமே அவர்களின் எண்ணிக்கை உயர்ந்து இருக்கின்றது. அத்தகைய நாடுகளுள் ஒன்றுதான் மலேசியா. இந்நாட்டின் மேம்பாட்டிற்குத் தமிழர்கள் உழைத்தது மட்டுமல்லாமல் மற்ற இரு பெரிய சமூகங்களுடன் ஒன்றிணைந்து, விடுதலைக்காகவும் பாடுபட்டுள்ளனர்.



கடாரத்தில் இராஜேந்திரச் சோழன் அமைத்த கோயில்.



தோட்டங்களில் பணிபுரிய தமிழர்கள் கப்பலில் அழைத்து வரப்பட்டனர்.



ஜப்பானியர் காலத்தில் இரயில் பாதை அமைக்க இந்தியர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.



மலாயா விடுதலை பெற மலாய், சீன, இந்தியத் தலைவர்களின் பங்களிப்பு.

3.3.3 வரிப்படக்கருவியிலுள்ள விவரங்களைத் தொகுத்து எழுதுவர்.



தொகுதி 2

**இடுபணி 1**

**கலந்துரையாடிக் குறித்துக்கொண்ட விவரங்களைத் தொகுத்து எழுதுக.**

**இடுபணி 2**

**மர வரைபடத்திலுள்ள விவரங்களைத் தொகுத்து எழுதுக.**

i-THINK

**மலேசியாவில் தமிழர்கள்**

**தோட்டத்துறை வளர்ச்சி**
- தொழிலாளர்களால் ரப்பர் தோட்டங்கள் உருவாகின.
- தொழிலாளர் குழந்தைகளுக்காகத் தமிழ்ப் பள்ளிகள் தோன்றின.
- தொழிலாளர்களுக்காகக் கோவில்கள் கட்டப்பட்டன.

**போக்குவரத்து மேம்பாடு**
- சாலை, இரயில் பாதை நிர்மாணிக்கப்பட்டன.
- நகரங்கள் உருவாகின.
- போக்குவரத்து மேம்பட்டது.

**ஆங்கிலக் காலனித்துவம்**
- ஆங்கில முதலீடு பெருகியது.
- ரப்பரை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தனர்.
- ஆங்கிலேயர் இலாபம் ஈட்டினர்.

**இடுபணி 3**

**குமிழி வரைபடத்திலுள்ள விவரங்களுக்கு ஏற்ப உமக்குத் தெரிந்த சுற்றுலாத் தலத்தைப் பற்றித் தொகுத்து எழுதுக.**

i-THINK

**இடம்**
- பின்னணி
- வரலாற்று நிகழ்வு
- பராமரித்தல்
- சிறப்புகள்

**கவனத்தில் கொள்க**

**தொகுத்து எழுதுதல்**
- முதன்மைக் கருத்தை அடையாளம் காணுதல்.
- துணைக் கருத்துகளை அடையாளம் காணுதல்.
- கருத்துகளை விளக்கத்துடன் தொகுத்து எழுதுதல்.

## வளப்படுத்துதல்

**வரிப்படக்கருவியில் உள்ள விவரங்களைத் தொகுத்து எழுதுக.**

**கெல்லீஸ் கோட்டை, பத்து காஜா, பேரா.**

- வில்லியம் கெல்லீஸ் சிமித் (William Kellie Smith) தம் குடும்பத்திற்காகக் கட்டிய கோட்டை.
- 1915ஆம் ஆண்டு பணி தொடங்கியது.
- தமிழ்வாணன் எனும் கட்டடக் கலைஞரின் பங்கு அளப்பரியது.
- எழுபது கட்டடப் பணியாளர்களுடன் செங்கற்கள், பளிங்குக் கற்கள், இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டன.
- கோட்டையையும் கோயிலையும் இணைக்கும் சுரங்கப்பாதை சுற்றுலாத் தலமாகத் திகழ்கின்றது.

## குறைநீக்கல்

**குறிப்புகளைப் பயன்படுத்தி வரிப்படக்கருவியிலுள்ள விவரங்களைத் தொகுத்து எழுதுக.**

**இடம்**

- பின்னணி
- வரலாற்று நிகழ்வு
- சிறப்பு
- பராமரித்தல்

**லங்காவி, கெடா**

- கெடாவின் பொன்கலன் என்றழைக்கப்படுகிறது.
- செம்பழுப்புக் கழுகு – லங்காவி [லங் (ஹெலாங்) + காவி (நிறம்)]
- மசூரி சாபம் – ஏழு தலைமுறை
- 1991ஆம் ஆண்டுக்குப் பிறகு பெரும் வளர்ச்சி – லீமா (LIMA) கண்காட்சி – அனைத்துலகக் கடலியல் வானியல் கண்காட்சி.
- தற்காப்புத்துறை – அதிநவீன தொழில்நுட்பக் கண்காட்சி மையம் – சுற்றுலாத் தலம்.

# பாடம் 4 இலக்கணம்

## போலியை அறிக.

- ஒரு சொல்லில் ஓரிடத்தில் ஓரெழுத்திற்குப் பதிலாக மற்றோர் எழுத்து வந்தாலும் பொருள் மாறாமல் இருப்பின் போலி எனப்படும்.
- போல வருவது போலி. போலி மூன்று வகைப்படும். அவை:- முதற்போலி, இடைப்போலி, கடைப்போலி

| முதற்போலி | இடைப்போலி | கடைப்போலி |
|---|---|---|
| ஒரு சொல்லின் முதலில் இருக்க வேண்டிய எழுத்திற்குப் பதிலாக வேறோர் எழுத்து அமைந்து, அதே பொருளை உணர்த்துமாயின் முதற்போலி எனப்படும். | ஒரு சொல்லின் இடையில் இருக்க வேண்டிய எழுத்திற்குப் பதிலாக வேறோர் எழுத்து அமைந்து, அதே பொருளை உணர்த்துமாயின் இடைப்போலி எனப்படும். | ஒரு சொல்லின் இறுதியில் இருக்க வேண்டிய எழுத்திற்குப் பதிலாக வேறோர் எழுத்து அமைந்து, அதே பொருளை உணர்த்துமாயின் கடைப்போலி எனப்படும். |

மஞ்சு விரட்டுதல் தமிழர் பழம் விளையாட்டுகளுள் ஒன்று. மைஞ்சு விரட்டுதலை ஏறு தழுவுதல் என்றும் குறிப்பிடுவர். 2017ஆம் ஆண்டில் இந்திய அமைச்சரவை இவ்விளையாட்டுக்குத் தடை விதித்தது. தமிழ்நாட்டு அமச்சர்களில் சிலர் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். அறம் சார்ந்த விளையாட்டாகத் தமிழர்கள் இவ்விளையாட்டைப் பார்க்கின்றனர். அறன் நிலைக்கு அப்பாற்பட்டு மிருக வதையாக அரசுத்தரப்பு இதைப் பார்க்கிறது.



### இடுபணி 1

**பத்தியை வாசித்துப் போலி வகைகளை அடையாளம் காண்க.**

### இடுபணி 2

**பின்வரும் சொற்குவியலை ஆராய்ந்து, அவை எவ்வகைப் போலி எனக் குறிப்பிடுக.**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மஞ்சு | - | மைஞ்சு | நாண் | - | ஞாண் | அமைச்சு | - | அமச்சு |
| அறம் | - | அறன் | கலம் | - | கலன் | அகம் | - | அகன் |
| மயல் | - | மையல் | கோவில் | - | கோயில் | நெய்வு | - | நெசவு |

5.1.3 போலி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**இடுபணி 3**

**சொற்குவியலில் மூன்று போலிகளைத் தெரிவு செய்து வாக்கியம் அமைத்திடுக.**

## கவனத்தில் கொள்க

i-THINK

### போலி

#### முதற்போலி

ந கரத்திற்கு ஞ கரம் போலி
எ.கா: நயம் - ஞயம்
நாயிறு - ஞாயிறு
அ கரத்திற்கு ஐ காரம் போலி
எ.கா: மயல் - மையல்
மயன் - மையன்
மஞ்சு - மைஞ்சு
ஐ காரத்திற்கு அய் போலி
எ.கா: ஐயர் - அய்யர்
ஔ காரத்திற்கு அவ் போலி
எ.கா: ஔவை - அவ்வை

#### இடைப்போலி

ய கரத்திற்குச் ச கரம் போலி
எ.கா: நெயவு - நெசவு
ச கரத்திற்கு ய கரம் போலி
எ.கா: குசவன் - குயவன்
அ கரத்திற்கு ஐ காரம் போலி
எ.கா: அமச்சு - அமைச்சு
அரயன் - அரையன்

#### கடைப்போலி

ம கரத்திற்கு ன கரம் போலி
எ.கா: அறம் - அறன்
புறம் - புறன்
ல கரத்திற்கு ள கரம் போலி
எ.கா: மதில் - மதிள்
செதில் - செதிள்
ல கரத்திற்கு ர கரம் போலி
எ.கா: குடல் - குடர்
பந்தல் - பந்தர்
சாம்பல் - சாம்பர்

போலி வகைகளைக் காட்டும் மர வரைபடம்


## வளப்படுத்துதல்

**மூன்று வகை போலிகளை எடுத்துக்காட்டுகளுடன் குறிப்பிடுக.**

## குறைநீக்கல்

**குமிழி வரைபடத்தில் ஏற்ற போலிகளை நிறைவு செய்க.**

i-THINK



# தொகுதி 3 இயற்கையும் மாந்தனும்

## பாடம் 1 மறவா இயற்கை



படங்கள் உணர்த்தும் செய்தியைக் கலந்துரையாடுக.




### இடுபணி 1

படங்களின் அடிப்படையில் ஊகிக்கத் தூண்டும் வகையில் கேள்விகள் கேட்டிடுக.

**தூண்டல் கேள்விகள்**

1. படம் உணர்த்தும் செய்தி யாது?
2. இயற்கை அழிவு மனிதருக்கு எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும்?



1.2.4 ஊகிக்கத் தூண்டும் வகையில் கேள்விகள் கேட்பர்

தொகுதி 3

**இடுபணி 2**

**கவிதையை அடிப்படையாகக் கொண்டு ஊகிக்கத் தூண்டும் வகையில் கேள்விகள் கேட்டிடுக.**

# மரம்


உண்ண கனி
ஒதுங்க நிழல்
உடலுக்கு மருந்து
உணர்வுக்கு விருந்து
அடைய குடில்
அடைக்க கதவு
அழகு வேலி
ஆட தூலி
தடவ தைலம்
தாளிக்க எண்ணெய்
எழுத காகிதம்
எரிக்க விறகு
மரம்தான் மரம்தான் எல்லாம் மரம்தான்!
மறந்தான் மறந்தான் மனிதன் மறந்தான்!

- கவிப்பேரரசு வைரமுத்து

**இடுபணி 3**

**படத்தை உற்றுநோக்கி ஊகிக்கத் தூண்டும் வகையில் கேள்விகள் கேட்டிடுக.**


மரம் குழந்தையை அணைக்காவிடில்...?
குழந்தை செய்ய வேண்டியது...?



இப்பொழுது இவர்களை நாம் காத்தால்தான், எதிர்காலத்தில் நம் தலைமுறையை அவர்கள் காப்பார்கள்.

## வளப்படுத்துதல்

**கேலிச்சித்திரம் உணர்த்த விழையும் செய்திகளை ஊகிக்கத் தூண்டும் வகையில் வினவுக.**




## குறைநீக்கல்

**படத்தைப் பார்த்து ஊகிக்கத் தூண்டும் வகையில் கேள்விகளைக் கேட்டிடுக.**

காரணம் என்ன? ஏன்?
என்னவாகும்? விளைவுகள் யாவை?



தொகுதி 3

# பாடம் 2 ஆறு காட்டும் நெறி

**வாசிக்கும் முன்: வினாக்களுக்கு விடை கூறுக.**

1. ஆற்றைப் பற்றி நீர் அறிந்தவற்றைக் கூறுக.
2. ஒரு நாட்டில் ஆறு இல்லை என்றால் என்னவாகும்?

**வாசிப்புப் பகுதியை மௌனமாக வாசித்திடுக.**

இயற்கை அன்னையின் அருங்கொடைகளுள் ஒன்று ஆறு. மனித வாழ்வோடு அதிகத் தொடர்பு கொண்டது ஆறு. மாந்த நாகரிகங்களே ஆற்றோரங்களில்தாம் தொடங்கின என்பதை அறியும்போது அதன் முக்கியத்துவம் புலப்படும். ஆறு மனிதனுக்குப் புகட்டும் பாடங்கள் பல; வழங்கும் நன்மைகள் பல. மாந்த இனத்திற்குப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்தாம் ஆறு எனலாம். மனிதர்கள் அதன் மாணவர்கள். ஆறு கற்பிக்கும் பாடங்களைக் காண்போம்.

மாந்தன் அறியும் முதற்பாடம் உழைப்பு. வாழ்க்கைச் சக்கரம் சுழல வேண்டுமாயின் சக்கரத்தை ஓட்டுவிக்க வேண்டும். அதற்கு அடித்தளமாய் அமைவதுதான் உழைப்பு. ஆறு எந்நேரமும் ஓடிக் கொண்டேதான் இருக்கும். ஆற்றுக்கென்றும் ஓய்வில்லை; அஃது இயங்காமல் இருப்பதில்லை. இயங்காது இருந்தால் அதன் பெயர் ஆறாக இருக்காது. அறுத்துக்கொண்டு ஓடுவதால்தான் **மாந்தன்** அதற்கு ஆறு எனப் பெயரிட்டான். ஆகையால்தான் கவிஞர் மு.மேத்தா,

“ஓடிக் கொண்டிருப்பதுதான் நதி
உலவிக் கொண்டிருப்பதுதான் காற்று
செயல்பட்டுக் கொண்டிருப்பவன்தான் இளைஞன்”

என்றார். ஆக, மனிதன் எவ்வேளையும் இயங்கிக் கொண்டே இருந்தால்தான் வாழ்க்கையில் முன்னேற்றம் காண முடியும். இதை மாந்தனுக்கு நாடோறும் உணர்த்திக் கொண்டிருப்பது ஆறு. ஆறு கற்றுத் தருகின்ற இரண்டாம் பாடம் தன்னம்பிக்கை! தன்னம்பிக்கை இல்லா மனிதன் வாழ்வில் முன்னேற்றம் அடைவதென்பது குதிரைக்கொம்பே. ஆற்றைப் பாருங்கள்; எத்தனை பெரிய தடைக்கல்லாக இருந்தாலும் அதனை மோதிச் சென்று தன் இலக்கை நோக்கிப் பயணிக்கும். செல்லும் வழி

எங்கெங்கும் பாறைக்கற்கள் தடைக்கற்களாய் வீற்றிருப்பினும் ஆறு தனது ஓட்டத்தை நிறுத்திக் கொள்கிறதா என்ன? இல்லையே! தடையைக் கடந்து இன்னும் முனைப்போடு அல்லவா விரைகின்றது. இதுவன்றோ தன்னம்பிக்கை! கடக்க முடியாப் பாறைகள் என்றால் முட்டி மோதி அழிந்து போவதில்லை ஆறு. மாறாகத் தனியொரு வழி அமைத்துப் பாறையை **அரணாகவும்** தனது கரையாகவும் அல்லவா வைத்துக் கொள்கின்றது.

ஆறு அறிவிக்கும் மூன்றாம் பாடம் குறிக்கோள். குறிக்கோளில்லா ஆறு உலகில் எங்குமில்லை என்றே கூறலாம். ஆறுக்குப் பிறப்புண்டு; இறப்பில்லை; ஆனால் இருப்புண்டு. மலைகளிலிருந்து பிறக்கும் ஆற்றின் குறிக்கோள் கடலைச் சென்று அடைவது. ஆறு எங்குச் சுற்றி ஓடினாலும், எத்துணைப் பள்ளத்தில் வீழ்ந்தாலும், மீண்டெழுந்து ஓடுவது எதற்கு? தனது குறிக்கோளான கடலை அடையவே; கடலோடு கலக்கவே ஆகும். ஆயிரமாயிரம் தடைகள் வரினும் அதனைக் கடந்து கடலை அடையாது ஆறு ஒருபோதும் நின்றதில்லை; பயணத்தைப் பாதியிலேயே முடித்ததில்லை. ஆறு உயிர்கள் என்றால் கடல் இறைமை ஆகும். இதன்வழி ஆறு கற்பிக்கும் பாடம் என்ன? பிறவித் துன்பத்தை நீக்க வேண்டுமாயின் இறைவனடி சேர்தலே வழி. தடைகள் ஆயிரம் வரலாம், அவற்றைக் கடக்க வேண்டுவது மனிதனின் கடமை. கடந்தால்தான் வாழ்வு உய்வு பெறும்.

மாந்தன் பெறுகின்ற நான்காம் பாடம் புதுப்பித்தல். பழம்பெருமை பேசுவதிலும் பழம்பெருமையில் அகமகிழ்வதிலும் ஆற்றுக்கு உடன்பாடில்லை. ஆறு ஒவ்வொரு மணித்துளியிலும் தன்னைப் புதுப்பித்துக் கொள்வதைத் தன் கடமையாகக் கொண்டிருக்கிறது. சென்ற மணித்துளியில் இருந்த ஆறு இந்த மணித்துளியில் இருப்பதில்லை. நேற்று இருந்த ஆற்றுநீர் இன்று இருப்பதில்லை. ஆறு தான் கடந்து வந்த பாதையை மறப்பதுமில்லை. அதற்காக, இன்றைய பொழுதைத் **துறப்பதுமில்லை**. மனிதராகிய நாம் கடந்தகால வரலாற்றில் **திளைத்து**, எதிர்காலச் சிந்தனையில் மூழ்கி, நிகழ்காலச் சிகரங்களை இழக்கின்றோம்! இந்நிலை மாற வேண்டுமாயின் நாம் ஆறு கற்பிக்கும் பாடங்களை உணர வேண்டும்.

இப்படியாக, இன்னும் எத்தனையோ பாடங்களைக் கற்பிக்கக் கரைபுரண்டு ஓடுகிறது ஆறு. கரைபுரண்டோடும் ஆற்றுவெள்ளத்திற்கு அணைபோடக் கற்றான் மனிதன். நதிபாடும் சங்கீதம் கற்றான் மனிதன். நதியுரைக்கும் **மதியுரை** மட்டும் கற்றிலன். அதனால்தான், போற்றிக் காக்க வேண்டிய ஆற்றின் மடியில் குப்பை கூளங்களைக் கொட்டித் தூய்மைக்கேட்டை விளைவிக்கின்றான். மனிதன், மனிதத்தையும் காக்கவில்லை; ஆற்றின் புனிதத்தையும் காக்கவில்லை!

– மூலம்: சரவணன் இராமச்சந்திரன்

தொகுதி 3

2.2.4 வாசிப்புப் பகுதியிலுள்ள முக்கியத் தகவல்களை அடையாளம் கண்டு ஒப்பிடுவர்.

## இடுபணி 1

**வண்ணமிடப்பட்ட சொற்களின் பொருளைச் சூழலுக்கு ஏற்ப எழுதுக.**

## இடுபணி 2

**வாசிப்புப் பகுதியில் உள்ள முக்கியத் தகவல்களை அடையாளங்காண்க.**

## இடுபணி 3

**ஆறு தொடர்பான முக்கியத் தகவல்களை மாந்தனோடு ஒப்பிட்டு வரைபடத்தில் நிறைவு செய்க.**

| ஆறு | | மாந்தன் |
|---|---|---|
| எந்நேரமும் ஓய்வின்றி ஓடிக் கொண்டிருக்கின்றது. | உழைப்பு | வாழ்க்கையில் முன்னேற மனிதன் உழைக்க வேண்டும். |
| | தன்னம்பிக்கை | |
| | குறிக்கோள் | |
| | புதுப்பித்தல் | |
| | பொதுநலம் | |

## வளப்படுத்துதல்

**ஒப்பிட்ட தகவல்களின் அடிப்படையில் கருத்துரைத்திடுக.**

## குறைநீக்கல்

**வாசிப்புப் பகுதியை வாசித்து, பத்தியில் உள்ள முக்கியத் தகவல்களை அடையாளம் கண்டு ஒப்பிட்டு எழுதுக.**

மாந்தன் இயற்கையோடு இணைந்திருந்த காலத்தில் இயற்கை இயல்பாகவும் செழிப்பாகவும் இருந்தது. மாந்தன் இயற்கையைவிட்டுக் கொஞ்சங்கொஞ்சமாய் விலகத் தொடங்கினான்; இயற்கை அழியத் தொடங்கியது. மாந்தன் இயற்கையோடு கொண்டிருந்த உறவில் பிரிவு அதிகரித்ததால் அடர்ந்த காடுகளில் விரிசல் அதிகரித்தது. இயற்கையோடு இயைந்த வாழ்வை மாந்தன் முற்றாகத் தொலைத்தான்; செயற்கையை விரும்பி ஏற்றான்; எல்லாமும் மாறியது; தன்னலம் வேண்டி இயற்கையை அழிக்க முற்பட்டான். காடுகள் அழிந்தன; மலைகள் கரைந்தன; மேடுகள் தகர்ந்தன; பள்ளங்கள் நிறைந்தன; செடிகொடிகள் மறைந்தன; மலர்கள் உதிர்ந்தன; மரங்களும் அற்றுப் போயின. சில சமயங்களில் கடல்களும் கரைகளை இழந்தன. இப்படியாகப் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்தன; இயற்கை மொத்தத்தில் ஏமாற்றம் அடைந்தது. உண்மையில் ஏமாற்றம் இயற்கைக்கு இல்லை, மாந்தனுக்குத்தான் என்பதை மாந்தன் என்று உணரப் போகின்றான்?

# பாடம் 3 சதுப்புநிலக் காடுகள்

**குழுவில் கலந்துரையாடி விளக்கப்படத்திலுள்ள விவரங்களைக் குறித்துக் கொள்க.**




**இடுபணி 1**

**குறிப்பெடுத்துக் கொண்ட விவரங்களைத் தொகுத்து எழுதுக.**

3.3.4 விளக்கப்படத்திலுள்ள விவரங்களைத் தொகுத்து எழுதுவர்.


**கவனத்தில் கொள்க**

- விளக்கப்படத்தின் கரு அடிப்படையில் முதன்மை வாக்கியம்.
- விளக்கப்படம் உணர்த்தும் துணைக்கருத்துகள்.
- முடிவு.

**இடுபணி 2**

**குழுவில் கலந்துரையாடி விளக்கப்பட விவரங்களைத் தொகுத்து எழுதுக.**

இயற்கை வளங்கள், அவற்றால் கிடைக்கக்கூடிய நன்மைகள், அந்நன்மைகளைப் பாதிக்கக்கூடிய காரணிகள் ஆகியன மனிதர்களின் வாழ்விற்கு முக்கியப் பங்காற்றுவதாகக் கருதப்படுகின்றன. இம்மூன்றனுக்கும் ஒரு சமன்நிலை இருக்க வேண்டும் என்பதனை வட்ட வரைபடம் விவரிக்கின்றது.




மூலவளங்கள், நன்மைகள், பாதிக்கக்கூடிய காரணிகள் பற்றிய விவரங்களை விவரிக்கும் வரைபடம்

## இடுபணி 3

**விளக்கப்படத்திலுள்ள விவரங்களைத் தொகுத்து எழுதுக.**





## வளப்படுத்துதல்

**விளக்கப்படம் உணர்த்தும் விவரங்களைத் தொகுத்து எழுதுக.**

### வாழும் சூழல்

- தூய காற்று
- தூய்மையான நீர்
- இயற்கைப் பாதுகாப்பு
- அமைதியான சூழல்
- இயற்கை வனப்பு
- நல்ல அண்டை அயலார்



## குறைநீக்கல்

**மேலே உள்ளவற்றில் எவையேனும் மூன்றனைப் பற்றித் தொகுத்து எழுதுக.**

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

திருக்குறளை வாசித்துக் கருத்தினை விளக்குக.

**திருக்குறள் (அதிகாரம்: கேள்வி)**

இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல் (குறள் 415)

வழுக்கும் சேற்று நிலத்தில் நடப்பார்க்கு ஊன்றுகோல் உதவுவதுபோல வாழ்க்கையில் வழிதவற நேரும்போது ஒழுக்கமுடையவரின் அறிவுரையானது துணை நிற்கும்.

**கருத்து:** வாழ்க்கையில் நெறி தவறும் சூழல் நேரும்போது சான்றோரின் அறிவுரை கைகொடுக்கும்.

**நாட்குறிப்பு:** 19 03 20

**இடம்:** மாமூட் இடைநிலைப்பள்ளி



இந்நிலை எனக்குத் தேவைதானா? சிறைவாசம் இந்த இளம்வயதில் எனக்கு எதற்கு? 15 வயதில் செய்யக்கூடாத தப்புகளும் குற்றங்களும் செய்யத் துணிந்தேன். கூடா நட்பு என்னை எத்துணைத் துன்பத்துள் ஆழ்த்திவிட்டது. நண்பர்களை நொந்து என்ன பயன்? அம்மா அப்பாவுக்கு எவ்வளவு துன்பத்தையும் அவமானத்தையும் ஏற்படுத்திவிட்டேன். நாளிதழ்கள் முதல் பக்கத்தில் என் படத்தோடு செய்தியைத் தாங்கி வந்தனவே! என் தமிழாசிரியர் கூறிய அறிவுரையை மட்டும் கேட்டிருந்தால் இந்நிலை எனக்கு ஏற்பட்டிருக்காதே!

"செழியா, உன் நடவடிக்கைகளில் நிறைய மாற்றம் தெரிகிறது. நீ முன்புபோல் இல்லை. தீயப் பழக்கம் கொண்டோரிடத்து உனக்கு எதற்குப் பழக்கம்? வேண்டாம் செழியா! விட்டுவிடு. அவர்கள் உன்னைவிட வயதில் மூத்தவர்கள். பள்ளிப் படிப்பைப் பாதியிலேயே விட்டவர்கள். எந்நேரமும் புகையும் மதுவுமாகவே திரிகிறார்கள். போதைப் பழக்கமும் உடையவர்களாகத் தெரிகிறார்கள். இந்நட்பு நீடித்தால் நிச்சயம் உன் எதிர்காலம் பாழாகிவிடும். நான் சொல்வதைக் கேள்!" என்று ஆசிரியர் சிவா சொன்னாரே.

4.2.3 மூன்றாம் படிவத்திற்கான திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

எத்துணைப் பொருள் பொதிந்த அறிவுரையை என் தமிழாசிரியர் கூறினார். என் மனம் ஏற்கவில்லையே. செவிடன் காதில் ஊதிய சங்காய்ப் போயிற்றே. காலம் கடந்துவிட்டது. சொல்லும்போதே கேட்டிருக்க வேண்டும். "செழியா, சேற்றுநிலத்தில் நடக்கும்போது ஊன்றுகோல் ஒன்று வேண்டும். அப்போதுதான், விழாமல் சேற்று நிலத்தைக் கடந்து நம் பயணத்தைத் தொடர முடியும். ஊன்றுகோல் இல்லாது போனால் என்னவாகும்? சேற்றில் விழுந்து நம் உடலே சேறாகிப் பாழாகிப் போகுமய்யா. நான் சொல்வதைக் கேள். இன்று நீ நடந்து கொண்டிருக்கும் பாதையும் சேற்று நிலந்தானய்யா. என் அறிவுரையை ஊன்றுகோலாய் ஏற்றுத் திரும்பித் திருந்தி வந்துவிடய்யா!" ஆசிரியர் அறிவுரையை ஏற்காததால் இன்று சிறை என் அறை ஆனது. உங்களுக்கும் நான் ஒன்றனைச் சொல்லிக் கொள்ள விழைகிறேன். உங்களுக்கு அறிவுரை சொல்லும்போது அதைத் தட்டிக் கழித்துவிடாதீர்கள். என் வாழ்வில் நடந்தது உங்கள் வாழ்வில் நடக்க வேண்டாமென்று நீங்கள் விரும்பினால், இந்தத் திருக்குறளை வழித்துணையாகக் கொள்ளுங்கள்!

இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல். (குறள் 415)

**இடுபணி 1**

**திருக்குறளையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறுக.**

**இடுபணி 2**

**திருக்குறளுக்குப் பொருத்தமான சூழலைக் கலந்துரையாடி உருவாக்குக.**

**இடுபணி 3**

**திருக்குறளைப் பொருளறிந்து எழுதுக.**

**வளப்படுத்துதல்**

**திருக்குறளின் பொருளுக்கேற்ற ஓரங்க நாடகம் ஒன்றனை உருவாக்கி நடித்துக் காட்டுக.**

**குறைநீக்கல்**

**குறளடியை நிறைவு செய்து கூறுக.**

இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே

______________________________

**சொல் பொருள்**

| | |
|---|---|
| **இழுக்கல்** | - வழுக்குநிலம்; தவறுதல் |
| **உடை** | - உடைமை |
| **உழி** | - இடம்; பக்கம்; பொழுது |
| **ஊற்றுக்கோல்** | - ஊன்றுகோல் |
| **அற்றே** | - அத்தன்மையது; அதுபோன்றது |
| **ஒழுக்கம்** | - நன்னடத்தை, சீலம் |
| **உடையார்** | - உடையவர்கள் |
| **வாய்ச் சொல்** | - அறிவுரை; நல்லுரை |

# தொகுதி 4 தொழிற்கல்வியின் மேன்மை

## பாடம் 1 தொழில் திறன் பேறு

**தொழிற்கல்வியின் சிறந்த மாணவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரை பாராட்டும் வகையில் பாகமேற்றுப் பாராட்டுரையை ஆற்றிடுக.**

செந்தமிழே, உயிரே, நறுந்தேனே!
செயலினை மூச்சினை உனக்களித்தேனே!
நைந்தாய் எனில் நைந்து போகுமென் வாழ்வு
நன்னிலை உனக்கெனில் அது எனக்குந்தானே!

இன்றைய நிகழ்ச்சியின் ஏற்பாட்டுக் குழுத் தலைவர் தமிழ்த்திரு தமிழ்வாணன் அவர்களே, இப்பாராட்டு விழாவின் நாயகர் மாணவர் தமிழ்க்கனல் அவர்களே, மாமூட் இடைநிலைப் பள்ளி முதல்வர் மதிப்புமிகு திரு. முருகன் அவர்களே, பள்ளியின் துணை முதல்வர்களே, ஆசிரியப் பெருந்தகையினரே, பெற்றோர்களே, மாணவமணிகளே உங்கள் அனைவருக்கும் நனிதமிழ் வணக்கம் உரித்தாகுக. நிகழ்ச்சியினைச் சிறப்பாக வழிநடத்தும் நிகழ்ச்சி நெறியாளருக்கு மனமார்ந்த நன்றிதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவையோரே!

இந்நாள் இனிய நாள். நாம் அனைவரும் மாணவர் தமிழ்க்கனலைப் பாராட்டவும் கொண்டாடவும் இங்கே குழுமியுள்ளோம். இவரைப் பாராட்டிப் பேச எத்தனையோ பேர் இருந்தாலும், அடியேனைப் பேச அழைத்தமைக்கு ஏற்பாட்டுக் குழுவினர்க்கு என் இதயத் தோட்டத்தில் மலர்ந்த நன்றி மலர்களைச் சமர்ப்பிக்கின்றேன்.

முதலாம் ஆண்டு தொடங்கி, படிவம் மூன்று வரை ஒன்றாகப் படித்தவர்கள் நானும் நண்பர் தமிழ்க்கனலும். நட்பின் அடிப்படையில்தான் என்னைப் பேச அழைத்துள்ளனர் ஏற்பாட்டுக் குழுவினர். தமிழ்க்கனலுக்குத் தொழில் திறன் கல்வியில் மிகுந்த ஆர்வமும் ஈடுபாடும் தொடக்கக்கல்வி முதலே




1.3.5 பாராட்டுரை ஆற்றுவர்.

இருந்து வந்ததை நானறிவேன். ஏட்டுக் கல்வியைக் காட்டிலும் தொழிற்கல்வியில் அதிக ஈடுபாடு கொண்டவர் தமிழ்க்கனல். அதன் விளைவே படிவம் நான்கைத் தொழில் திறன் பள்ளியில் தொடங்கினார். இன்று, தேசிய அளவில் தொழில் திறன் பள்ளியின் சிறந்த மாணவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். மேலும், அரசு உதவிநிதியுடன் ஜெர்மனி நாட்டில் மேற்படிப்பைத் தொடரப் போகின்றார் என்ற மகிழ்ச்சியான தகவலையும் உங்களோடு பகிர்ந்துகொள்வதில் மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றேன்.

அன்பு நண்பர்களே!

அனைவராலும் ஏட்டுக் கல்வியில் சிறந்து விளங்கிட முடியாது. அதனால்தான் அரசாங்கம் பல்வகைக் கல்வித் திட்டத்தை முன்னெடுத்துள்ளது. நமக்கு உகந்த கல்வித்துறையைத் தேர்ந்தெடுத்து, அத்துறையில் சிறந்து விளங்க வேண்டிய பொறுப்பு நம்முடையது என்பதை மறவாதீர்கள். நீங்களும் நண்பர் தமிழ்க்கனல்போல் தொழிற்கல்வியில் சிறந்து விளங்கலாம் என்பதை முன்னுதாரணமாகக் கொள்ளுங்கள். ஒரு தமிழ்க்கனல் அன்று; ஓராயிரம் தமிழ்க்கனல்கள் உருவாக வேண்டுமென்பதே அரசின் எதிர்பார்ப்பு. கற்போம்; கல்லாமையை இல்லாமை ஆக்கிடுவோம்! தொழிற்கல்வி வளமான வாழ்வுக்கு நல்லதோர் அடித்தளம். நண்பர் தமிழ்க்கனலைப் பாராட்டி மேலும் பல வெற்றிகளைக் குவித்து வீட்டுக்கும் நாட்டுக்கும் நற்பெயரை ஈட்டித்தர எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானாக! விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

**இடுபணி 1**

**பாராட்டுரையின் அமைப்பு முறையைக் கண்டறிந்து கூறுக.**

**இடுபணி 2**

**பாராட்டுரையில் இடம்பெற்றுள்ள விளிப்பையும் இனிய சொற்றொடர்களையும் அடையாளங்கண்டு கூறுக.**

**இடுபணி 3**

**உள்நாட்டிலேயே தொழிற்கல்வி பயின்று, அரிய கண்டுபிடிப்பு ஒன்றனைக் கண்டுபிடித்த ஒருவரை அவ்வூர் மக்கள் பாராட்டும் ஒரு நிகழ்ச்சி. அப்பாராட்டுரையை எழுதுக.**

**வளப்படுத்துதல்**

**பள்ளிப் பூப்பந்து போட்டியில் பங்குபெற்று வாகை சூடிய தோழரைப் பாராட்டி உரை ஒன்றனை ஆற்றுக.**

**குறைநீக்கல்**

**கருத்துகளைப் பயன்படுத்தி பாராட்டுரை ஆற்றுக.**

- பள்ளியில் ‘சிறந்த பண்பாளர் விருது’ பெறுவது எளிமையன்று.
- சிறுவயது முதற்கொண்டே நற்பண்புகள் கொண்டு விளங்கியவர்.

## பாடம் 2 தேவை தொழிற்கல்வி

**வாசிக்கும் முன்: தொழிற்கல்வி பற்றி நீர் அறிந்தவற்றைக் குழுவில் கலந்துரையாடிக் கூறுக.**





பல நாடுகளில் இன்று, வேலை இல்லாத் திண்டாட்டம் பெரும் சிக்கலாக உருவெடுத்துள்ளது. நம் நாடும் இதற்கு விதிவிலக்கன்று. நம் நாட்டிலும் வேலையில்லாப் பட்டதாரிகள் பலர் உள்ளனர். அவர்களிடையே காணப்படும் வேலையின்மைக்குக் காரணங்கள் பல உள. எனினும், அவற்றுள் முதன்மையானது, அவர்களின் கல்வி, சந்தையின் ஆள்பலத் தேவைக்கு ஏற்றதாக இல்லாதிருப்பதாகும். இன்றைய ஆள்பலச் சந்தை தொழில் திறன் கற்றோரையே பெரிதும் எதிர்பார்க்கின்றது. எனவே, மாணவர்கள், குறிப்பாக ஏட்டுக் கல்வியில் நாட்டம் இல்லாதோர், தொழிற்கல்வியின் வழியும் சிறந்த வாழ்வினைப் பெறலாம் என்பதனைத் தெளிதல் வேண்டும்.

### தொழிற்கல்வி என்றால் என்ன?

நாம் வாழும் வழியைத் தெளிவுபடுத்தும் கல்வியை நூற்கல்வி என்றும் தொழிற்கல்வி என்றும் இரு வகைப்படுத்தலாம். செய்முறைப் பயிற்சி ஏதுமின்றி நூல்களின் வழியாகப் பெறும் அறிவினை நூற்கல்வி என்றும் ஏதேனும் ஒருவகைத் தொழிலைத் திறம்பட மேற்கொள்ள வேண்டி, தொழில் திற நுணுக்கங்களின் அடிப்படையில் அமைந்த, கைத்தொழில் சார்ந்த கல்வியைத் தொழிற்கல்வி என்றும் கூறலாம்.

### ஏன் தொழிற்கல்வி பயில வேண்டும்?

தொழிற்கல்வியைக் கற்றவர்கள் வேலைக்குப் பிறரைச் சார்ந்துதான் இருக்க வேண்டும் என்பதில்லை. சுய முயற்சியில், சுயதொழிலையும் தொடங்கலாம். சிறுகத் தொடங்கி, பெருகச் செய்யலாம். இப்படி அடியெடுத்து வைத்து வெற்றி பெற்றவர்கள் பலர் உளர். இயந்திரப் பட்டறைகள், உற்பத்தி வளாகங்கள் போன்றவற்றை நிறுவியும் வெற்றி பெற்றுள்ளனர்.

2.2.5 வாசிப்புப் பகுதியிலுள்ள தகவல்களை வகைப்படுத்துவர்.

தொழிற்கல்வியைக் கற்றவர் தம் தொழிலுக்கு உள்நாட்டை மட்டுமே சார்ந்திருக்க வேண்டும் என்பதில்லை. திறமை கொண்ட தொழிற்கல்வியாளருக்கு உலகெங்கும் வாய்ப்புகள் உள. அவற்றைக் கண்டறிந்து பயன்படுத்திக் கொள்ளலாம்.

### தொழிற்கல்வியின் மேன்மைகள் யாவை?

நம்பிக்கையும் நல்லொழுக்கமும் நிறைந்து புகழும் பொருளும் கிட்டக்கூடிய மேன்மையைத் தருவது தொழிற்கல்வி. இத்தகைய சிறப்புகள் தொழிற்கல்வி கற்போருக்கும் கிட்டும். சாதாரண மனிதனையும் தொழில்முனைவராக்கும் ஆற்றல் தொழிற்கல்விக்கு உண்டு. முன்னர் கூறியது போன்று, சுயதொழிலில் ஈடுபட விரும்புவோர் எவ்விதத் தயக்கமும் இன்றி ஈடுபடலாம். ஏனெனில், அவர் தொழில்முனைவராகப் பிறரைச் சார்ந்திருக்கத் தேவையில்லை. தம் ஆற்றலையும் திறனையுமே நம்பி ஈடுபடலாம்.

தொழிற்கல்வி கற்றோரின் ஆற்றலும் மதித்திறனும் பிறரால் போற்றப்படும்; மதிக்கப்படும். ஆற்றலும் திறனும் மிக்க ஒருவரையே பயனாளர் போற்றுவர்; நாடுவர். சில இடங்களில் பணியாளரின் ஆற்றலுக்கு மதிப்பில்லாமல் போகலாம். இந்நிலை தொழிற்கல்வி கற்றுச் சுயதொழிலில் ஈடுபடுவோருக்கு நிகழாது எனலாம். திறமிகு சேவை வழங்குபவரை வாடிக்கையாளர்கள் பெரிதும் மதிப்பர்; போற்றுவர்.

### என்ன செய்ய வேண்டும்?

இன்று நம் நாட்டில் தொழில் திறன் கல்வியின் அவசியம் பெருகி வருவதால், ஏட்டுக்கல்வியை மட்டுமே நம்பி இராமல் இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி, ஏற்ற தொழிற்கல்வியாகத் தெரிவு செய்து வாழ்க்கையில் வெற்றி பெறுவோம்.

**இடுபணி 1**

**வாசிப்புப் பகுதியில் உள்ள கருத்துகளைப் பின்வரும் அடிப்படையில், ஏற்ற வரிப்படக்கருவியைப் பயன்படுத்தி வகைப்படுத்துக.**

- தொழிற்கல்வி பற்றிய விளக்கம்
- தொழிற்கல்விக்கான காரணங்கள்
- தொழிற்கல்வியின் மேன்மைகள்
- தொழிற்கல்விக்கும் ஏட்டுக்கல்விக்கும் உள்ள வேறுபாடுகள்

**இடுபணி 2**

**நீங்கள் விரும்பும் தொழில் திறன் கல்வி தொடர்பான தகவல்களைத் திரட்டி, அவற்றை வகைப்படுத்தி திரட்டேடு ஒன்றனைத் தயாரித்து வழங்குக.**

**இடுபணி 3**

**தொழிற்கல்விக்கான கையேட்டினை வாசித்துத் தகவல்களை மர வரைபடத்தில் வகைப்படுத்துக.**

KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

## தொழிலியல், திறனியல் கல்விக்கான விண்ணப்பம்





இப்பொழுது விண்ணப்பிக்கலாம்

இறுதி நாள்: 30 12 20__

விண்ணப்பிக்கும் முறை

ஆண்டு 20__

**நுழைவுத் தகுதி**

படிவம் 5 (SPM)

**கல்விக் காலம்**

1. தொழிலியல் கல்வி (4 ஆண்டு)
2. திறன் பயிற்சி (2 ஆண்டு)
3. திறனியல் கல்வி (2 ஆண்டு)

**படிப்பு வகைகள்**

1. தொழிலியல் கல்வி (4 ஆண்டு) மலேசியத் தொழிலியல் பட்டயக் கல்வி (DVM)
2. திறன் பயிற்சி (2 ஆண்டு) மலேசியத் திறன் சான்றிதழ் (SKM)
3. திறனியல் கல்வி (2 ஆண்டு) மலேசியக் கல்விச் சான்றிதழ் (SPM)
4. மலேசியத் தொழில் திறன் சான்றிதழ் (SVM)

i-THINK


**தொழிற்கல்விக்கான விண்ணப்பம்**

| | | |
|---|---|---|
| **நுழைவுத் தகுதி** | ........................ | ........................ |
| படிவம் 5 (SPM) | ........................ ........................ | ........................ ........................ |

**தொழிற்கல்விக்கான கையேட்டுத் தகவல்களை வகைப்படுத்தும் மர வரைபடம்**


## வளப்படுத்துதல்

**வட்டக்குறிவரைவு, தொழில்கல்லூரிக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களின் தேர்வைக் காட்டுகிறது. வாசித்துத் தகவல்களை வகைப்படுத்துக.**




## குறைநீக்கல்

**தொழிற்கல்வியின் சிறப்புகளைப் பின்வரும் வரிப்படக்கருவியில் படைத்திடுக.**



## பாடம் 3 சாதனைச் சுவடு

மாதிரிப் பாராட்டுரையை வாசித்து அதன் வடிவ அமைப்பைக் கூறுக.




**எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்**
**மங்காத தமிழென்று சங்கே முழங்கு**
**எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்**
**இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே!**

பெருமதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, மலேசியத் தமிழ் இளைஞர் கழகத்தின் தலைவர் அவர்களே, இப்பாராட்டு விழாவின் நாயகன் அன்புமிகு தமிழ்க்கதிர் அவர்களே, உங்கள் அனைவருக்கும் இவ்வினிய வேளையில் முத்தான முத்தமிழ் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவையோரே,

தமிழ்க்கதிர் அவர்களை வாழ்த்திப் பேச வாய்ப்பளித்தமைக்கு ஏற்பாட்டுக் குழுவினர்க்கு உளமார்ந்த பாராட்டுதலையும் நன்றிதனையும் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்க்கதிர் அவர்கள் தமது உயர்கல்வியை அமெரிக்காவில் முடித்தவர். அமெரிக்கப் பொறியியல் பல்கலைக்கழகத்தில் முதல் நிலையில் தேர்ச்சி பெற்றவர் என்பது பாராட்டத்தக்கது. மேலும், இவர் அப்பல்கலைக்கழகத்திலேயே முனைவர் பட்டப் படிப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்று அறிகையில் உள்ளம் பேருவகை


3.4.17 180 சொற்களில் பாராட்டுரை எழுதுவர்.

கொள்கின்றது. என் மாணவரொருவர் இத்தகைய உயரிய நிலையை அடைந்திருப்பது பேரானந்தத்தை என்னுள் ஏற்படுத்துகிறது.

சபையோரே,

**ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய்**

என்பது வான்புகழ் வள்ளுவனாரின் திருவாக்கு. அவ்வாக்கினுக்குச் சான்றாய் நம் முன்னே அடக்கத்துடன் அமர்ந்திருக்கிறார் தமிழ்க்கதிர் அவர்கள். தாய் தந்தையர்க்குப் பெருமை சேர்த்திருக்கிறார் என்பதை நான் சொல்லி அறிய வேண்டியதில்லை. இடைநிலைப்பள்ளிக் கல்வியில் அதிக நாட்டமில்லாதவராய்த் தமிழ்க்கதிரை நான் முதலில் கண்டது கட்டொழுங்கு அறையில்தான் என்பது உங்களில் எத்தனை பேருக்குத் தெரியும்? ஏட்டுக் கல்வியில் நாட்டம் மிகக் குறைவாக இருப்பதாகவும் வகுப்பறைக் கற்றலில் தம்மால் ஈடுபட முடியவில்லை என்றும் என்னிடம் குறைப்பட்டுக் கொண்டார். அஃது ஒரு நாள்.



**பாராட்டுரை வடிவமைப்பு**

**தொடக்கம்**
- அவைத் தலைவருக்கு நன்றியும் வணக்கமும் கூறுதல்.
- அவையோருக்கு வணக்கம் கூறுதல்.

**கருத்துகள்**
- சிறந்த செயற்பாடுகளுக்குப் பாராட்டு வழங்குதல்
- சிறப்பு
- கடுமையான உழைப்பு
- போற்றுதல்
- இன்னும் வெற்றி பெற வாழ்த்துதல்
- மகிழ்ச்சி புலப்பாடு

**முடிவு**
- மேன்மேலும் சிறப்புப் பெற வாழ்த்துதல்.

அவையோரே,

அவரிடம் நான் சொன்னதெல்லாம் ஒன்றுதான். "தொழிற்கல்வி வாய்ப்புகள் நம் நாட்டில் நிறைய உள்ளன. அதன்வழி நீ பெருமளவில் சாதிக்கும் வாய்ப்புகளும் உள்ளன. ஆனால், அதற்கு அடிப்படை, படிவம் மூன்று கல்வியை நீ முடித்திருக்க வேண்டும். படிவம் மூன்று கல்வியில் அடிப்படைத் தேர்ச்சி பெற்று வா! பிறகு பார்க்கலாம்," என்றேன். இப்பொழுது நான் மட்டுமல்லன்; இவ்வுலகமே இவரைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. இவர் சாதனையைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. அவரை மனதாரப் பாராட்டுவதில் பெருமை அடைகிறேன்.

அவையினரே,

'வெற்றி வேண்டுமா? முயற்சி செய்; இல்லையேல் பயிற்சி செய்!' என்பர். தமிழ்க்கதிர் அவர்கள் விடாமுயற்சியும் தொடர்பயிற்சியும் செய்து மிகப் பெரிய வெற்றியை ஈட்டியுள்ளார். இவருக்கு இது வெறும் தொடக்கமே. இவர் அடைய வேண்டிய உச்சம் இன்னும் இருக்கிறது. அவ்வுச்சத்தை நிச்சயம் இவர் அடைவார்; அடைய வேண்டுமென்று இறைவன் திருவருளை வேண்டி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**இடுபணி 1**

**பாராட்டுரையில் உள்ள விளிப்புகளையும் பாராட்டு மொழிகளையும் அடையாளங்கண்டு எழுதுக.**

**இடுபணி 2**

**குறிப்புகளைப் பயன்படுத்தி 180 சொற்களில் பாராட்டுரை ஒன்றனை எழுதுக.**

**சூழல்**

தொழில் கல்லூரிகளுக்கிடையிலான புத்தாக்கப் போட்டியில் வெற்றி பெற்ற போர்ட்டிக்சன் தொழில் கல்லூரி மாணவர் ஒருவரைக் கல்லூரி முதல்வர் பாராட்டிப் பேசுதல்.

**தொடக்கம்**


- அவைத் தலைவருக்கு நன்றியும் வணக்கமும்
- அவையோருக்கு வணக்கம்

**கருத்துகள்**

- குழுவினருக்கும் துணை நின்ற ஆசிரியர்களுக்கும் பாராட்டு.
- எடுத்த முயற்சிகளைச் சிறப்பித்தல்.
- வெற்றிக்குப் பின்னால் உழைப்பு.
- கூட்டு முயற்சி;
- போட்டியின்வழி சுய ஆற்றல் வெளிப்படுதல்.
- கல்லூரிக்குப் பெயரும் புகழும் ஈட்டுதல்.

**முடிவு**

- மேன்மேலும் வெற்றிகளைச் சாதிக்க வாழ்த்துதல்.



**இடுபணி 3**

**குவாந்தான் தொழில் கல்லூரி மாணவரான தமிழ்ச்சுடர் சீனாவில் நடைபெற்ற ஆசிய இளையோர் சதுரங்கப் போட்டியில் முதல்நிலையில் வெற்றிபெற்றுக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார். அவரை வாழ்த்தி 180 சொற்களில் பாராட்டுரை ஒன்றனை எழுதுக.**

**வளப்படுத்துதல்**

**உமது தொழிற்கல்விக்கு நிதியுதவி செய்த தொழில்முனைவரை வாழ்த்தி பாராட்டுரை ஒன்றனை எழுதுக.**

**குறைநீக்கல்**

**பாராட்டுரையின் தொடக்கத்தையும் முடிவையும் எழுதுக.**

## பாடம் 4 இலக்கணம்

**உடன்பாட்டுவினை, எதிர்மறைவினை அறிக.**

சொல்லியல்: உடன்பாட்டுவினை, எதிர்மறைவினை. இது வினைச்சொல் வகைகளுள் ஒன்று.

### உடன்பாட்டுவினை

- ஒரு செயல் நடைபெறுவதைப் பற்றியும் நடைபெற்றதைப் பற்றியும் நடைபெறவிருப்பதைப் பற்றியும் கூறும் வினைச்சொல் உடன்பாட்டுவினை எனப்படும்.

### எதிர்மறைவினை

- ஒரு செயல் நடைபெறாததைப் பற்றிக் கூறும் வினைச்சொல் எதிர்மறைவினை எனப்படும்.

**உடன்பாட்டுவினை**

எ.கா:
1. அருள்மதி பள்ளிக்கு வந்தாள்.
2. மாடுகள் கொட்டகைக்கு வந்தன.

**எதிர்மறைவினை**

எ.கா:
1. அருள்மதி பள்ளிக்கு வரவில்லை/வந்திலள்.
2. மாடுகள் கொட்டகைக்கு வரவில்லை/வந்தில.

**பாண்டிய மன்னன்:** என்ன அமைச்சரே? என் ஐயத்தைப் போக்கும் பாடலை ஒரு புலவர்கூடவா எழுதிலர். பெரும்புலவர் நக்கீரர் இருந்தும் என் ஐயம் தீர்க்க வழியில்லை என்றால் என்ன வியப்பாக இருக்கிறது!

**நக்கீரர்:** அரசர் பெருமான் ஐயம் தீர்க்க பாடல் வேண்டுமென்று வினவியிருந்தால் ஓராயிரம் பாடல்களை நானென்ன நம் புலவர்களே எழுதியிருப்பர். பரிசுக்குப் பாட்டெழுதச் சொன்னதால்தான் அனைவரும் அமைதி காத்து இருக்கின்றனர்.

### இடுபணி 1

**மேற்கண்ட உரையாடலை வாசித்து உடன்பாட்டுவினை எதிர்மறைவினைச் சொற்களை அடையாளம் காண்க.**

### இடுபணி 2

**அட்டவணையில் உள்ள உடன்பாட்டுவினை, எதிர்மறைவினைச் சொற்களை உற்றுநோக்கி அவற்றிற்கிடையே உள்ள வேறுபாட்டை அறிந்து கொள்க.**

| எண் | உடன்பாட்டுவினை | எதிர்மறைவினை |
|---|---|---|
| 1 | படிப்பேன் | படியேன் / படிக்கமாட்டேன் |
| 2 | வந்தனர் | வந்திலர் / வரவில்லை |
| 3 | செய்தான் | செய்திலன் / செய்யவில்லை |
| 4 | நடுவாள் | நடாள் / நடமாட்டாள் |
| 5 | கண்டாய் | கண்டிலாய் / காணவில்லை |

5.2.5 உடன்பாட்டுவினை, எதிர்மறைவினை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

## இடுபணி 3

**உடன்பாட்டுவினை வாக்கியங்களை எதிர்மறைவினை வாக்கியங்களாக எழுதுக.**

1. கவின் கதைப் புத்தகம் படித்தான்.
2. செல்வன் பள்ளிச் சுற்றுலாவுக்கு வருவான்.
3. நளனது ஆடுகள் போதுமான நீர் அருந்தின.
4. பறவைகள் வானத்தில் மகிழ்ச்சியாகப் பறந்தன.
5. யாழினி, கண்ணகி கதாபாத்திரத்தை மிகவும் திறமையாக நடித்தாள்.

## இடுபணி 4

**எதிர்மறை வாக்கியங்களை உடன்பாட்டுவினை வாக்கியங்களாக எழுதுக.**

1. அறிவிப்பாளர் செய்தியைத் திறம்பட வாசித்திலர்.
2. சிவா கண்காட்சிக்கு வரமாட்டான்.
3. மலர்விழி அழகான ஓவியம் வரைந்திலள்.
4. தாத்தா செடிகளுக்கு நீரூற்றி வளர்த்திலர்.

## வளப்படுத்துதல்

**அட்டவணையில் (இடுபணி 2) உள்ள சொற்களுள் மூன்று இணைகளைப் பொருள் விளங்க வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக.**

## குறைநீக்கல்

**கீழ்க்காணும் வாக்கியங்களை உடன்பாட்டுவினை வாக்கியம், எதிர்மறைவினை வாக்கியம் என வகைப்படுத்துக.**

| எண் | வாக்கியம் | வாக்கிய வகை |
|---|---|---|
| 1 | முல்லை குறிப்பிட்ட நேரத்திற்குள் வேலைக்கு வரமாட்டாள். | |
| 2 | முரளி போட்டி விளையாட்டுகளில் அதிக ஈடுபாட்டுடன் பங்கேற்பான். | |
| 3 | பாட்டி மதிய வேளையில் உறங்கார். | |
| 4 | நேற்று நடைபெறவிருந்த காற்பந்து விளையாட்டு நடந்திலது. | |
| 5 | பெரும்பாலான பெண்கள் மார்கழி மாதத்தில் கோவிலுக்குச் செல்வர். | |

# தொகுதி 5 கலையும் பண்பாடும்

## பாடம் 1 மலேசியத் தமிழ்க்கலை

தலைப்பையொட்டிய வாதப்பகுதிகளையும் அவற்றில் இடம்பெற்றுள்ள பண்புச் சொற்களையும் கவனத்தில் கொள்க.

**தலைப்பு: மலேசியத் தமிழிசை வளர்ச்சியை நோக்கியே பயணிக்கின்றது.**

உள்நாட்டுப் பாடல்களுக்கு இன்று வரவேற்பும் மதிப்பும் கூடியுள்ளதை மறுப்பதற்கில்லை. திறன்பேசியின் அழைப்பொலியாக உள்நாட்டுப் பாடல்களே இன்றைய நிலையில் அதிகம் உள்ளன. நம் பாடல்களுக்குச் சிறந்த எதிர்காலம் உண்டு. நன்றி.





வணக்கம். நம் நாட்டுத் தமிழ்ப் பாடல்கள் நல்ல வளர்ச்சியைப் பெற்று வருகின்றன. கடந்த 10 ஆண்டுகளில் பெரும் மாற்றம் ஏற்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது. இசைக் கலைஞர்களுக்கு என் பாராட்டும் வாழ்த்தும் உரியனவாகுக.

உங்கள் கருத்துகளுக்கு என் பாராட்டுகள். நீங்கள் சொல்லும் கருத்தில் எனக்கு உடன்பாடு உண்டு. நம் நாட்டுப் பாடல்கள் வளர்ச்சியின் தொடக்கக் காலகட்டத்தில் உள்ளன. எனவே, சில குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. இக்குறைகளையும் கடந்து, அண்மையக் காலமாகத் தர வளர்ச்சியைக் காண முடிகின்றது.





உள்நாட்டுப் பாடல்களுக்கு இன்று வரவேற்பு கூடியுள்ளதை மறுப்பதற்கில்லை. முன்புபோல் அல்லாமல், மெல்லிசைப் பாடல்களும் மேலும் பல்வகைப் பாடல்களும் வெளிவருகின்றன. இது வளர்ச்சி அல்லவா? இது மேலும் வளர்க்கப்பட வேண்டுமென்பதே என் அவா! நன்றி.

1.3.6 தலைப்பையொட்டிப் பண்புடன் வாதம் செய்வர்.

தொகுதி 5

**இடுபணி 1**

**பாகமேற்றுப் பண்புடன் வாதத்தை வாசித்திடுக.**

**இடுபணி 2**

**தலைப்பையொட்டிப் பண்புடன் வாதம் செய்க.**

**தலைப்பு:**
மலேசியத் தமிழ்ப் பாடல்கள் மக்கள் இரசனைக்கேற்பவே அமைந்திருக்கின்றன.

**கவனத்தில் கொள்க**

**பண்புடன் வாதிடுதல்**

**எ.கா:**

- உங்கள் கருத்தை முழுமையாக ஏற்கவியலாது.
- மன்னிக்கவும், உங்கள் கருத்தோடு நான் முரண்படுகின்றேன்.
- உங்கள் கருத்தை ஏற்கவியலாது என்பதற்கு வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன்.
- உங்கள் கருத்தில் உண்மை இருப்பதை மறுப்பதற்கில்லை, இருந்தபோதும் அக்கருத்தை ஏற்க முடியாது.
- நன்றி நவில்கின்றேன்.
- பாராட்டுகள்.

**கவனத்தில் கொள்க**

ஏதேனும் ஒரு நிலைப்பாட்டைச் சார்ந்தே வாதம் அமைய வேண்டும். ஆனால், நம் கருத்தை முன்வைக்கும்போது பணிவுடனும் பண்புடனும் வாதிடுவது மிக அவசியம் ஆகும். பண்புடன் வாதிடுவதற்கு மரியாதைச் சொற்களின் பயன்பாடு அவசியமாகும்.

**இடுபணி 3**

**பண்புடன் வாதிடுக.**

**தலைப்பு:**
உள்நாட்டுத் தமிழ்த் திரைப்படங்களையே மலேசியர்கள் ஆதரிக்க வேண்டும்.

**வளப்படுத்துதல்**

**நிலைப்பாட்டை ஒட்டி வாதிடுக.**

தலைப்பு:
மொழி அழிந்தாலே இனம் அழிந்துவிடும்

நிலைப்பாடு:
மொழி அழிந்தால் இனம் அழியும்.

**குறைநீக்கல்**

**வாதக் கருத்துகளைப் பயன்படுத்தி வாதிடுக.**

தலைப்பு:
இன ஒற்றுமையே நாட்டின் வளர்ச்சிக்கு அடித்தளம்

- இனங்களுக்கிடையே ஒற்றுமை இல்லையெனில் அமைதி நிலவாது. ஓயாமல் சண்டையும் போருமாகக் காலம் கழியும்; சுபிட்சம் இருக்காது.

## பாடம் 2 ஏறு தழுவுதல்

**வாசிக்கும் முன்: பதில் கூறுக.**

1. ஏறு தழுவுதல் பற்றி நீர் அறிவதென்ன?
2. ஏறு தழுவுதல் நடத்துவது பற்றிய உமது கருத்து யாது?

**உரைநடைப் பகுதியை மௌனமாக வாசித்திடுக.**



ஏறு தழுவுதல், ஏறு கோள், மாடு பிடித்தல், ஜல்லிக்கட்டு, மஞ்சு விரட்டு, பொல்லெருது பிடித்தல் எனத் தமிழகத்தின் பல பகுதிகளில் பல பெயர்களில் தமிழர்களின் வீர விளையாட்டாக ஏறு தழுவுதல் அழைக்கப்படுகிறது. இவ்விளையாட்டு, முல்லை நிலப் பகுதியில் வாழ்ந்த ஆயர் மக்களின் திருமணத்துடன் தொடர்புடையதாகப் பண்டைக் காலத்தில் இருந்தது. முல்லை நில மக்களின் வீரவிளையாட்டாக இருந்தாலும் தென்தமிழகத்தின் மதுரை மாவட்டம் சார்ந்த பகுதிகளில் இவ்விளையாட்டு இன்றும் ஆர்வமாக நிகழ்த்தப்படுகிறது. பண்பாட்டுத் திருவிழாவாகவும், மக்களின் சமயம் சார்ந்த திருவிழாவாகவும், இளைஞர்களின் வீர உணர்வை நினைவுகூரும் விழாவாகவும் நடைபெறும் ஏறு தழுவுதல் தமிழரின் பண்பாட்டு விளையாட்டுகளுள் ஒன்று. பழங்காலத்தில் ஏறு தழுவுதல் என்கிற பெயரில் காளைகளை அடக்குகிற மரபைச் சங்க இலக்கியங்கள் சொல்கின்றன. காளைகளை அடக்குகிற மாதிரியான கற்சிற்பங்களை இப்போதும் சிவகங்கை மாவட்டத்தில் பார்க்க முடியும். தென் தமிழகத்திலுள்ள பல மாவட்டங்களில் மாடு பிடிப்பதில் தேர்ச்சி பெற்ற இளைஞர்கள் பலரையும் பார்க்க முடியும். மாடு வளர்ப்பதில் பாரம்பரியமான ஈடுபாடு கொண்டவர்களையும்

2.3.8 பண்பாடு தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.



பார்க்க முடியும். இதற்கென்றே தகுந்த முறையுடன் வளர்க்கப்படும் காளைகள் இருக்கின்றன. அவற்றுள் பலவகை இருக்கின்றன.

ஏறு தழுவுதலில் மாடுகள் துன்புறுத்தப்படுகின்றன என்கிற குற்றச்சாட்டு ஏறு தழுவுதலுக்குத் தடை விதிப்பதற்கான காரணமாகச் சொல்லப்படுகிறது. நேரடியாக ஏறு தழுவுதலுடன் தொடர்புடைய பல கிராமங்களுக்குச் சென்ற அனுபவத்தை முன்வைத்துச் சொல்வதென்றால் ஏறு தழுவுதலில் மாடுகள் துன்புறுத்தப்படுகின்றன என்பதைவிட, அதை அடக்கும் முயற்சியில் இறங்குகிற இளைஞர்கள் காயம் அடைவதும் உயிர் இழப்பதும்தான் மிக அதிகமாக நடந்திருக்கின்றன. இவ்வளவுக்கும் ஏறு தழுவுதல் நடக்கும்போது மருத்துவமனைக்கு வருகிறவர்களையும் உயிரிழந்தவர்களையும் கவனித்தாலே இது புலப்படும். இப்படிப் பல நூற்றுக்கணக்கான தமிழர்களின் உயிர்கள் இதில் பலியாகியிருக்கின்றன. பலர் ஊனப்பட்டிருக்கிறார்கள்; வாழ்வை இழந்திருக்கிறார்கள். ஆனால், ஏறு தழுவுதலுக்குப் பின் நிகழ்வாக எங்கும் மாடுகள் உயிரிழந்ததாகத் தகவல்கள் பதிவாகவில்லை.

பெரும்பாலான இளைஞர்கள் பரிசுகளுக்காக அல்லாமல், ஏறு தழுவுதலில் இருக்கும் சாகச உணர்வுக்காகவே அதில் இறங்குகிறார்கள். பரிசு பெற்ற பலருடைய உடம்பில் இருக்கும் தழும்புகள் இதை அடையாளப்படுத்தும். இப்படி வீரத்தின் பெயரால் பலியாகிற இளைஞர்கள் மீது இருக்கிற அக்கறை காரணமாக ஏறு தழுவுதல் சிக்கலில் உரிய முடிவெடுக்கலாம். அதைவிடுத்து, மாடுகளைத் துன்புறுத்துகிறார்கள் என்ற கோணத்தில் முடிவெடுத்தால், பல இடங்களில் பல வகையான விலங்குகளைத் தொடர்ந்து மோசமாகத் துன்புறுத்தப்படுவதை எப்படிப் பார்ப்பது?

- எடுத்தாளப்பட்டது: இணையக் கட்டுரை

## இடுபணி 1

**வினாக்களுக்கு விடை கூறுக; எழுதுக.**

1. ஏறு தழுவுதல் என்றால் என்ன?
2. இவ்வுரைநடைப் பகுதியின் இரண்டாம் பத்தி எதனை வலியுறுத்துகிறது?
3. ஏறு தழுவுதலில் காளைகள் துன்புறுத்தப்படுவது எந்த அளவிற்கு ஏற்புடையது? விளக்குக.
4. எதற்காக இளைஞர்கள் ஏறு தழுவுதலில் ஆர்வமாக உள்ளனர்?
5. ஏறு தழுவுதல் ஏன் தமிழர் பண்பாட்டின் அடையாளமாகக் கருதப்படுகிறது?

## இடுபணி 2

**உரைநடைப்பகுதியை வாசித்து நிறைவு செய்க.**

தமிழர்களின் ஏறு தழுவுதலுக்கும் ஸ்பெயின் நாட்டில் நடைபெறும் காளைச் சண்டைக்கும் இடையே பல்வேறு வேற்றுமைகள் உள்ளன. இவற்றைப் பலரும் அறியவில்லை. ஸ்பெயின் நாட்டுக் காளைச் சண்டையை ஆண்டு முழுவதும் கண்காட்சியாக நடத்துகின்றனர். ஆனால், தமிழர்களின் ஏறு தழுவுதலோ பண்பாட்டு விழாவாக ஆண்டுக்கொரு முறை நடத்தப்படுகின்றது. காளைச் சண்டையில் ஆயுதங்களைப் பயன்படுத்த அனுமதி உண்டு. ஏறு தழுவுதலில் எவ்வித ஆயுதத்திற்கும் அனுமதி கிடையாது. ஸ்பெயின் காளைச் சண்டையில் காளைகள் கொல்லப்படுவதே ஆட்டத்தின் முடிவாகக் கொள்ளப்படுகிறது. ஏறு தழுவுதலிலோ விரட்டிப் பிடிக்கப்படும் காளைகள் எல்லைக் கோட்டைக் கடந்துவிட்டாலே, ஆட்டம் முடிவு பெற்றுவிடும். ஸ்பெயின் காளைச் சண்டையின் இறுதியில் அனைத்துக் காளைகளும் கொல்லப்படும் நிலை, தமிழர் ஏறு தழுவுதலில் இல்லை. மாறாக அன்பும் வீரமும் வெளிப்படும் வீர விளையாட்டான ஏறு தழுவுதல் ஆட்டத்தின் முடிவில் காளைகளுக்கு வழிபாடு நடைபெறும் என்பது நம்மில் எத்தனை பேர் அறிவர்?



**தமிழர் ஏறு தழுவுதலுக்கும் ஸ்பெயின் காளைச் சண்டைக்கும் இடையேயுள்ள வேற்றுமைகள்**

| தமிழர் ஏறு தழுவுதல் | ஸ்பெயின் காளைச் சண்டை |
|---|---|
| | |
| | |
| | |
| | |

## வளப்படுத்துதல்

**உரைநடைப் பகுதியை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**



இல்லாதவர்களுக்கு வாரிக் கொடுத்துப் புகழ்பெற்று வாழ்ந்த பரம்பரை தமிழர் பரம்பரை. மனிதன் மனிதனையே தாக்கும் இந்நவீனக் காலத்தில் தாவரங்கள் மீதும் இரக்கப்பட்ட பண்பாடு நமக்கு உண்டு.

**'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம்**
**வாடினேன் மனம்நொந்தேன்'**

என்றார் வடலூர் வள்ளலார். இதுவன்றோ பண்பாட்டின் உச்சம். தம்மைக் காணவந்த சாத்தனார் எனும் புலவருக்குக் கொடுக்க ஒன்றுமில்லையே எனக் குமண மன்னர் தம் தலையையே வெட்டித் தர முன்வந்தார் என்றால் அம்மன்னரின் ஈகைத்திறனை என்னவென்று சொல்வது?

பண்பாட்டின் தலைசிறந்த இனமாகவும் வழிகாட்டிய இனமாகவும் இருந்த தமிழர் நிலையை எண்ணிப் பார்த்தால் மனம் மகிழ்கின்றது. நம் கடந்த கால பண்பாட்டு விழுமியங்களைத் தேடி அறிவதுடன், அவற்றை நம் வாழ்வில் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய கடப்பாடு ஒவ்வொரு தமிழர்க்கும் உண்டு என்பதை உணர்ந்து செயலாற்றுவோமெனில் நம்மினம் மேன்மை நிலையை அடையும்.

1. இன்றையத் தமிழர் பண்பாட்டு நிலை எவ்வாறு உள்ளதெனக் கருதுகிறீர்?
2. இன்னும் பத்து ஆண்டுகளில் தமிழர்கள், பண்பாட்டின் உச்சத்தைத் தொட எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்?

## குறைநீக்கல்

**உரைநடைப் பகுதியை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

பண்பாட்டின் உச்சத்தில் வாழ்ந்தவர் தமிழர் என்பதற்கு நனிசிறந்த எடுத்துக்காட்டு, ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்த நம் பாட்டனார் கணியன் பூங்குன்றனாரின்,

**'யாதும் ஊரே, யாவரும் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா!'**


என்ற வாசகமே ஆகும். உலகம் இருபது ஆண்டுகளுக்கு முன்னர்தான் உலகமயக் கொள்கையைப் பற்றிப் பேசத் தொடங்கி இருக்கின்றது. உலக நாடுகள் அனைத்தும் ஒரே குடையின்கீழ் இயங்கும் நிலைக்கான முயற்சியும் தற்போதுதான் தொடங்கப்பட்டுள்ளது. ஆனால், நம் தமிழ்ப் பாட்டனோ அனைத்து ஊர்களும் நம் ஊர்கள்தாம்; அம்மக்கள் அனைவரும் நம் உறவினர்தாம் என விளித்தமை தமிழர் பண்பாட்டின் உச்சமன்றோ?

1. தமிழர்கள் பண்பாட்டின் உச்சத்தில் வாழ்ந்தவர்கள் என்பதற்குச் சான்று யாது?
2. 'யாதும் ஊரே யாவரும் கேளிர் ' எனும் கூற்றின்வழி அறியப்படும் கருத்து யாது?

# பாடம் 3 மலேசியக் கலையுலகம்

**வாதங்களை வாசித்துக் குழுவில் கலந்துரையாடுக.**

**தலைப்பு: மலேசியக் கலைத்துறைக்கு வளமான எதிர்காலமே உள்ளது.**



**தலைவர்:**

மலேசியத் தமிழ்க் கலையுலகத்திற்கு வளமான எதிர்காலம் உள்ளதா என்ற கேள்வி அனைவரின் மனத்திலும் நிழலாடுகின்றது. 'மலேசியத் தமிழ்க் கலையுலகத்திற்கு வளமான எதிர்காலம் உண்டா, இல்லையா' எனத் தங்கள் கருத்துகளை முன்வைக்க நம் அழைப்பின் பேரில் இங்கு வந்திருக்கின்ற பேச்சாளர்கள் என்ன சொல்கிறார்கள் எனக் கேட்போம்.



**திரைப்பட நடிகர்:**

உள்ளூர்க் கலைத்துறைக்கு வளமான எதிர்காலம் இருக்கின்றது என்பது என் கருத்து. நம் நாட்டுக் கலைத்துறையைப் பொறுத்தவரையில் நமது வளர்ச்சியைத் தமிழ்நாட்டோடு ஒப்பிடுதல் முறையாகாது. நமது கலைத்துறை வளர்ச்சி வானொலி, தொலைக்காட்சித் தொடர்களிலிருந்து வளர்ந்து இன்றைய நாளில் இசைத்துறை, திரைத்துறை எனப் பெருமளவில் வளர்ந்துள்ளதை யாரும் மறுக்கவியலாது. வெறும் தமிழ்நாட்டுத் திரைப்படங்களையே பார்த்து வந்த நாம், இன்று உள்நாட்டுப் படங்களையும் பார்க்கின்ற நிலையில் வளர்ச்சி கண்டிருக்கின்றோம். தமிழ்நாட்டிலும் வெளிநாடுகளிலும் நம் படங்களுக்கும் இசைத் தொகுப்புகளுக்கும் பெருகிவரும் ஆதரவே இதற்குச் சான்று. எனவே, நம் நாட்டுத் திரைத்துறைக்குச் சிறந்த எதிர்காலம் உண்டு என்றே கூறலாம்.



**திரை விமர்சகர்:**

உள்நாட்டுக் கலைத்துறை வளர்ச்சி அடைந்துள்ளதை யாரும் மறுப்பாரிலர். ஆனால், நம் கலைத்துறைக்கு வளமான எதிர்காலம் உள்ளதா என்பதுதானே இங்கு வாதம். வளர்ச்சி அடைந்திருப்பதும் வளமான எதிர்காலம் இருக்கின்றது என்று சொல்வதற்கும் நிறையவே வேறுபாடு உள்ளது. வளர்ச்சி என்பதை நம் நாட்டோடு மட்டும் பார்ப்பது எவ்வகையில் நியாயம்? நான் திரை விமர்சகன். இந்நாட்டுப் படங்கள் மட்டுமன்றித் தமிழ்நாட்டுப் படங்களுக்கும் உலகப் படங்களுக்கும் விமர்சனம் எழுதுகிறேன். அவ்வகையில், மலேசியத் தமிழ்த் திரைப்படத்துறை தொடக்க நிலையில் உள்ளது என்பதை ஒப்புக்கொள்ளலாம். ஆனால், அஃது எதிர்காலத்தில் வளரலாம். எனவே, அதற்கு வளமான எதிர்காலம் உள்ளது என்பதை மறுக்கலாகாது.

**இடுபணி 1**

**மேற்கண்ட தலைப்பையொட்டி 180 சொற்களில் வாதக்கட்டுரை ஒன்றனை எழுதுக. கலந்துரையாடிய கருத்துகளைப் பயன்படுத்திக் கொள்க.**

3.4.19 180 சொற்களில் வாதக்கட்டுரை எழுதுவர்.

**இடுபணி 2**

**'தற்காப்புக் கலையைக் கற்பது நன்மையையே விளைவிக்கும்', எனும் தலைப்பில் 180 சொற்களில் வாதக்கட்டுரை ஒன்றனை எழுதுக. கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டுரைச் சட்டகத்தைத் துணையாகக் கொள்க.**

## கட்டுரைச் சட்டகம்

### முன்னுரை

- தற்காப்புக் கலை என்றால் என்ன?
- தற்காப்புக் கலை என்பது ஒழுங்குபடுத்தப்பட்ட சண்டைப் பயிற்சி.
- எதிர்ப்புகளிடமிருந்து நம்மைத் தற்காத்துக் கொள்ள உதவுவது.
- தற்காப்புக் கலைகள் பலவகை
  - சிலம்பம்
  - சீலாட்
  - தேக்குவாண்டோ
- தற்காப்புக் கலையைக் கற்பதனால் நமக்கு நன்மைகளே விளைகின்றன.

### கருத்து 1

- நாம் வாழும் பூமியில் நல்லவர்களும் தீயவர்களும் உள்ளனர்.
- தீயவர்களிடமிருந்து நம்மைத் தற்காத்துக் கொள்ள தற்காப்புக் கலை உதவும்.
  எ.கா: தற்போது நடக்கும் கொலை, கொள்ளைச் சம்பவங்கள்
- தைரியமாக எக்காரியத்தையும் செய்ய தற்காப்புக்கலை துணைபுரியும்.
- மனத்திற்குத் தைரியத்தை அளிக்கும்.

### கருத்து 2

- தற்காப்புக் கலையைக் கற்றுக் கொள்வதால் நாம் நம் உடல் நலத்தையும் பேண முடியும்.
- தற்காப்புக் கலை ஒரு நல்ல உடற்பயிற்சிக்கான தூண்டுகோலாக அமையும்.
- இதனால் உடல் நலம் பெறும்.
- நேரத்தை நல்வழியில் கழிக்க உதவும்.

### கருத்து 3

- தற்காப்புக் கலையை ஒரு தொழிலாகச் செய்ய முடியும்.
- வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள உதவும்.
- வாழ்க்கைத் தரத்தை நல்வழியில் உயர்த்திக் கொள்ள உதவும்.
- பலருக்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தரும்.

### கருத்து 4

- நல்ல பொழுதுபோக்காக அமைந்து நல்லொழுக்கத்தையும் கற்றுத் தரும்.
- பொழுதை வீணாகக் கழிக்காமல் பயனுடைய வழியில் கழிக்க முடியும்.
- நல்ல பழக்க வழக்கங்களையும் ஒழுக்க நெறிகளையும் கற்றுத் தரும்.

இடுபணி 3

**'நம் மாணவர்கள் உலக அரங்கில் தற்காப்புக்கலைப் போட்டிகளில் சாதனை படைக்கின்றனர்.' இத்தலைப்பில் 180 சொற்களில் வாதக்கட்டுரை ஒன்றனை எழுதுக.**

**வளப்படுத்துதல்**

**கொடுக்கப்பட்ட கருத்துகளை விளக்கி வாதக்கட்டுரை ஒன்றனை எழுதுக.**

**தமிழ்ப்பள்ளிகளே மாணவர்களிடையே தமிழ்ப்பற்றை வளர்க்கின்றன.**

1. **சிறுவயது முதல் தமிழைப் பேசுகின்றனர்.**
   - பசுமரத்தாணி போல் பதியும்.
   - தமிழில் போதிப்பதால் தமிழில் நாட்டம் அதிகரிக்கும்.

2. **இலக்கண இலக்கியங்கள்.**
   - இனம், மொழி, மரபு, பண்பாட்டைப் பற்றி ஆழமாக அறிவர்.
   - தமிழர்கள் எதற்கும் சளைத்தவர்கள் அல்லர் என்பதை உணர்வர்.

3. **தமிழாசிரியர்கள் அன்பானவர்கள்; உணர்வுடன் கற்பிப்பர்.**
   - மொழிப்பற்றை ஊட்டுவர்.
   - ஆசிரியர்கள் தமிழின் அவசியத்தை மற்றும் சிறப்பைத் தெளிவாகப் புரிய வைப்பர்.
   - மாணவர்களுடன் நல்ல தொடர்பைக் கொண்டு தமிழ்ப்பற்றை வளர்ப்பர்.

**குறைநீக்கல்**

'தமிழ்ப்பள்ளிகளே மாணவர்களிடையே தமிழ்ப்பற்றை வளர்க்கின்றன' எனும் தலைப்பில் 10 வாக்கியங்கள் எழுதுக.

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## மரபுத்தொடர் அறிக.

| மரபுத்தொடர் | பொருள் |
|---|---|
| உடும்புப் பிடி | கொண்ட எண்ணம், கருத்து முதலியவற்றில் உறுதியாக இருத்தல் |
| இடித்துரைத்தல் | கண்டித்துக் கூறுதல் |
| ஈயாடவில்லை | அவமானத்தால் ஏற்படும் மகிழ்ச்சியின்மை |
| தலை வணங்குதல் | உரிய முறையில் மதித்தல் / மதிப்புத் தருதல் |
| கானல் நீர் | நிறைவேறாத எண்ணம் |



கடலுக்கு நடுவே நான். கண்ணுக்கு எட்டிய தூரம் வரை கடல் எல்லையற்று விரிந்து கொண்டிருந்தது. அப்போதுதான் நடந்தது நினைவுக்கு வந்தது. " டேய் அகி! இதுக்கு மேல போகாதடா..." நேற்று இரவு கதிரின் இறுதி அறிவுறுத்தலிலிருந்து மீளத் தொடங்கியிருந்தது என் நினைவு.

"இன்று பங்கோர் கடற்கரையோரப் பகுதிகளில் தென்மேற்குப் பருவக் காற்று பலமாக வீசும். அலைகள் பத்தடிகளுக்கு மேல் உயரும். இப்பகுதிகளில் வாழும் மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்," கடலுக்குக் கிளம்பும்போது வந்து சேர்ந்த செய்தி அது. என் அருகில் இருந்த கதிரும் சாமியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கண்களால் பேசிக் கொண்டனர்.

அவர்களின் கண்கள் உதிர்த்த மொழி எனக்கு விளங்காமலில்லை. அவர்கள் ஏதாவது பேசுவதற்குள் நான் முந்திக் கொண்டேன். "இவனுங்க பொழப்பே இப்படிதான்... எப்ப பார்த்தாலும் அது வருது, இது வருதுன்னு சொல்லி நம்ம சோத்துல மண்ண போடுவானுங்க..." ஏதோ சொல்ல வாயெடுத்த கதிரின் பேச்சை முந்திக் கொண்டு, என் வார்த்தைகள் வந்து விழுந்தன. "அகி... இன்னைக்கு கடலுக்குப் போறது சரியாப் படல எனக்கு... இந்தக் கடல பாரேன்... அலைகள் அதிகமா இருக்கு; காற்று வேற வேகமா வீசுது..." கதிர் சொல்லி முடிப்பதற்குள் " டேய்! இங்க பாரு. நா எதையும் கேட்க விரும்பல... கடல்லே பொறந்து கடலே கதின்னு கிடக்கிற நம்மல இந்தக் கடல் ஒன்னும் செய்ய முடியாது... ஒன்னும் பேசாம சீக்கிரம் கிளம்பு" **உடும்புப் பிடியாய்** நின்றேன்.

4.6.3 மூன்றாம் படிவத்திற்கான மரபுத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

“டேய் அகி, உனக்கு என்ன பைத்தியமா? கடலுக்குப் போறது நல்லது இல்லன்னு செய்தில சொல்லறாங்க... நீ என்னமோ கடலையே கைக்குள்ள அடக்கிற மாதிரி பேசிக்கிட்டு இருக்க...” சாமி சற்றுக் கடுமையாகவே **இடித்துரைத்தான்.**

அப்போது அவ்வழியே கடல் பாதுகாப்பு அதிகாரி வருவதைக் கண்டு கதிரும் சாமியும் சட்டென எழுந்து **தலை வணங்கி** நின்றனர். ” எங்கப்பா கிளம்பிட்டிங்க...! செய்தில சொன்னது விளங்கலயா..? இன்னைக்கு கடலுக்குப் போறது சரியில்ல... பேசாம வீட்லபோய் அடங்குங்க... போங்க” நடந்து கொண்டே சொல்லிவிட்டுப் போனார். என் முகத்தில் **ஈயாடவில்லை.** அதிகாரியின் எச்சரிக்கை அவர்கள் மத்தியில் என்னை அவமானத்திற்குள்ளாக்கி இருந்தது.

“டேய் நீங்க வரீங்களா? இல்லயா?... அவர்கள் இருவரையும் ஒருவித வற்புறுத்தலான நிலைக்குத் தள்ளினேன். “டேய் எப்படியாச்சும் போடா... நா வரல...” சாமி கழன்று கொண்டான்.

கதிரைப் பார்த்தேன், அவனும் எழுவதுபோல் தெரிந்தது. “ச்சே... தொடநடுங்கி பசங்க...!” கதிரின் தோளில் மாட்டியிருந்த வலையை வலுக்கட்டாயமாகப் பறித்துக் கொண்டு படகை நோக்கி நடந்தேன். “டேய்... அகி... டேய் வேணாம்டா... சொன்னாக் கேளுடா... டேய்! டேய்!” கதிரின் பேச்சைப் பொருட்படுத்தாமலே படகைக் கடலில் தள்ளி பயணத்தைத் தொடங்கினேன். கதிரும் பின் தொடர்ந்து வந்து ஏறிக் கொண்டான். எப்படியும் மீன் பிடித்தே தீர வேண்டுமென்ற எண்ணம் **கானல் நீராகுமென** அப்போது எனக்குத் தெரியாது.

**இடுபணி 1**

**மரபுத்தொடரையும் பொருளையும் மனனம் செய்து கூறுக; எழுதுக.**

**இடுபணி 2**

**மரபுத்தொடரைப் பயன்படுத்தி வாக்கியம் அமைத்திடுக.**

**இடுபணி 3**

**மரபுத்தொடர்களுக்கு ஏற்ற சூழலை அமைத்திடுக; படைத்திடுக.**

**வளப்படுத்துதல்**

**மரபுத்தொடர்களுள் ஒன்றனைத் தெரிவுசெய்து கதை எழுதுக.**

**குறைநீக்கல்**

**வாக்கியங்களில் ஏற்ற மரபுத்தொடர்களை நிறைவு செய்க.**


1. வகுப்பறைக் கற்றலின்போது நண்பருடன் கதை பேசிக் கொண்டிருந்த மாணவனை ஆசிரியர் ____________ .
2. “உன் முடிவே சரியென ____________ யாக இருப்பது முறையாகாது,” எனத் தம் தரப்பு முடிவையும் முன் வைத்தார் சிவா.
3. நண்பனின் எழுதுகோலைத் தான் எடுக்கவில்லை என்று சாதித்த அலியின் புத்தகப்பையில் அந்த எழுதுகோல் கண்டுபிடிக்கப்பட்டதும் அவன் முகத்தில் ____________ .

# தொகுதி 6 இலக்கியப் பயனும் சுவையும்

## பாடம் 1 இலக்கியமும் நாமும்


**கருத்துகளைக் குழுவில் கலந்துரையாடுக.**

**பண்பட்ட வாழ்க்கைக்கு இலக்கியம்**




**இலக்கியம் அறிவு வளர்ச்சிக்கு அடிப்படையாகும்.**
- பொது அறிவு வளரும்.
- அனுபவம் பெருகும்.

**இலக்கியம் நன்னெறிப் பண்புகளை வளர்த்தெடுக்கும்.**
- ஒழுக்க நெறியை வளர்க்கும்.
- படிப்பினையைக் கற்பிக்கும்.






**நுகர் உணர்வைக் கூட்டிச் சுவையூட்டும்.**
- வாழ்வின் அழகைக் காட்டும்.
- இலக்கிய நயம்; மன மகிழ்ச்சியைத் தரும்.

**சிந்தனையைச் செம்மைப்படுத்தும்.**
- சிந்திக்கத் தூண்டும்.
- முடிவெடுக்க உதவும்.




**எ.கா:**

• இலக்கியம் வாழ்க்கைக்கு வழிகாட்டி

ஓர் இலக்கை எடுத்துச் சொல்வது (இயம்புவது) இலக்கியம் (இலக்கு + இயம்). இவ்வாறான இலக்கியங்கள் நமது வாழ்க்கையின் இலக்கை அடையாளம் காட்டும். அதனை அடைய வழிவகுக்கும். நமக்குத் தன்னம்பிக்கையைக் கொடுக்கும். பாரத, இராமாயணக் கதைகள்தாம் காந்தியின் வாழ்க்கைப் போக்கில் தாக்கத்தை ஏற்படுத்தின.

**கவனத்தில் கொள்க**

- முதன்மைக் கருத்தை அடையாளம் காணுதல்.
- துணைக் கருத்துகளைச் சான்றுகளுடன் விளக்குதல்.
- எடுத்துக்காட்டுகளைச் சான்றுகளுடன் வழங்குதல்.

**இடுபணி 1**

**கலந்துரையாடிய கருத்துகளைச் சான்றுகளுடன் விவரித்துக் கூறுக.**

1.4.5 கருத்துகளைச் சான்றுகளுடன் விவரித்துக் கூறுவர்.

இடுபணி 2

**கவிதையை வாசித்து, கருத்துகளைக் கலந்துரையாடுக.**

# இலக்கியக் கலையை வளர்ப்போம்



நாவினில் நல்லசொல் இனிமைதரும்
நலிவுறும் நெஞ்சினில் வலிமைதரும்!
வாழ்வினில் நல்லறம் வாய்ந்திட வையத்தில்
வாழ்வாங்கு வாழ்ந்திடும் பெருமைதரும்!

**கருத்து:** இலக்கியம் செம்மையான வாழ்க்கைக்கு வழிகாட்டும்.

உணர்விலும் அறிவிலும் புதுமைதரும்
உறவுகள் யாவிலும் செழுமைதரும்!
குணத்தினில் மேன்மையும் கொள்கையில் உறுதியும்
குன்றாத இளமையின் நலமுந்தரும்!

வாழ்ந்திடும் நாட்டினில் உரிமைதரும்
வளர்ந்திடும் அறிவியல் வளமைதரும்!
ஆழ்ந்தநல் ஆய்வியல் அகன்றமெய் வாழ்வியல்
அனைத்திலும் தெளிவுறும் புலமைதரும்!

**- கவிஞர் செ.சீனி நைனா முகம்மது**

**முதற்கண்ணியின் பொருள் தெளிவோம்**

நாம் பேசுகின்ற சொல் நமக்கு இனிமையைத் தருவது போல், நெஞ்சுக்கு மேலும் வலிமை சேர்ப்பது இலக்கியங்கள். மேலும், நல்ல அறநெறிகளோடும் இந்த உலகத்தில் பெரும்புகழோடும் வாழ இவ்விலக்கியங்கள் வழிவகுக்கும். தமிழ் இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்ததன்வழி அறிவியல் துறையில் சிறந்து விளங்கிய அப்துல் கலாம் அவர்கள் இதற்குச் சான்றாக விளங்குகிறார்.

இடுபணி 3

**கவிதையில் அடையாளமிடப்பட்டுள்ள கருத்துகளைச் சான்றுகளுடன் விவரித்துக் கூறுக.**

## வளப்படுத்துதல்

**படத்திலுள்ள கருத்துகளை விவரித்துக் கூறுக.**



இலக்கியப் போட்டிகளில் பங்கெடுத்தல்



வாசிக்கும் பழக்கத்தைக் கடைப்பிடித்தல்

**இலக்கியத்தில் ஆர்வம்**



இலக்கிய நிகழ்ச்சிகளுக்குச் செல்லுதல்



இலக்கியப் பயிற்சிப் பட்டறைகளில் பங்கெடுத்தல்

**இலக்கிய ஆர்வத்தைத் தூண்டும் நடவடிக்கைகளைக் குறிக்கும் வரைபடம்.**

## குறைநீக்கல்

**கருத்துகளைச் சான்றுகளுடன் விவரித்துக் கூறுக.**

**இலக்கியம் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைகின்றது.**

**நல்ல படிப்பினையைக் கொடுக்கும்:**
- நல்ல விஷயங்களைக் கற்றுக் கொள்ள உதவும்.
- தீய விஷயங்களை அகற்றிட உதவும்.

**நல்ல பண்பைக் கற்றுக் கொடுக்கும்:**
- கதைகளில் வரும் கதை மாந்தர்களின் நற்பண்புகள் வழிகாட்டியாக அமையும்.

# பாடம் 2 அழகியின் அழகு

**மௌனமாக வாசித்திடுக.**



"அம்மா... அம்மா... சீக்கிரம் வாம்மா...! ரொட்டிக்காரர் போயிடப்போறாரு," வீட்டின் வாசல் கதவை முட்டித் தள்ளிவிட்டு அரக்கப் பரக்க ஓடி சாலைக்கு வந்தாள் அழகி. ரொட்டிக்காரர் இரண்டு வீடுகள் தள்ளி நின்று கொண்டிருந்தார். நின்ற இடத்திலிருந்தே, அழகி ரொட்டிக்காரரைப் பார்த்துக் கைகளை உயர்த்தி தான் காத்திருப்பதை **உறுதி**செய்து கொண்டாள். ரொட்டிக்காரரும் பதிலுக்கு அழகியை நோக்கிக் கையசைத்து **வருகை**யை உறுதி செய்தார்.

இரு வீடுகள் தள்ளி ரொட்டிக்காரர் நின்றிருக்கும் இடைவெளிகூட அழகிக்குப் பல மைல் தூரமாகப்பட்டது. "அம்மா... இன்னும் என்னம்மா **பண்றீங்க**...? சீக்கிரம் வாம்மா!, ரொட்டிக்காரர் வந்துட்டாரு," வீட்டின் வெளியிலிருந்தே கத்தினாள் அழகி.

"இதோ... இதோ... வந்துகிட்டே இருக்கேன்..." எதிர்முனையிலிருந்தும் அம்மாவின் குரலும் உரக்க ஒலித்தது.

வீட்டின் வாசலில் நின்றபடியே ரொட்டிக்காரரின் மோட்டார் சைக்கிளில் தொங்கவிடப்பட்டிருந்த ரொட்டிகளின் மேல் **பார்வை**யைப் படரவிட்டாள் அழகி. "அதோ... அதோ..." பல வகையான ரொட்டிகள் **ஒன்றன்** மேல் ஒன்றாக மறைந்திருந்த நிலையிலும் அவளுக்கு **விருப்பமான** சீனி ரொட்டியைக் கண்டுபிடித்திருந்தாள். "ரொட்டிக்காரர் தன் வீட்டு வாசலுக்கு வருவதற்குள் யாராவது அதை வாங்கி விடுவார்களோ?" **பரபரக்கிறது** அழகியின் மனம்.

ரொட்டிக்காரர் அடுத்த வீட்டிற்கு முன்னேறிக் கொண்டிருந்தார். அடுத்த வீடு மணியின் வீடு. அழகியின் படபடப்பும் **இரட்டிப்பாகி** இருந்தது. அடுத்த வீட்டில் இருக்கின்ற மணிக்கும் அந்த ரொட்டி மிகவும் பிடிக்கும் என்பது அழகிக்குத் தெரியும்.

"மணி வந்து தனக்கு முன்பாகவே அந்த ரொட்டியை வாங்கிவிட்டால் தனக்கு அந்த ரொட்டி கிடைக்காமல் போய்விடுமே..." என அவள் மனத்தின் ஆசையும் நிராசையும் சிண்டு பிடிக்கத் தொடங்கியிருந்தன. அழகிக்கு அழுகை அடி **வயிற்றிலிருந்து** கிளம்ப ஆரம்பித்திருந்தது. "போச்சு...

2.1.7 கதையைச் சரியான தொனி, வேகம், உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

போச்சு... இன்னிக்கும் சீனி ரொட்டி போச்சா” முணுமுணுக்கத் தொடங்கியிருந்தாள் அழகி.

நல்ல வேளையாக மணியின் பார்வையிலும் ரொட்டிக்காரரின் பார்வையிலும் அந்தச் சீனி ரொட்டி படவேயில்லை.

‘போம்ப்... போம்ப்... போம்ப்... போம்ப்...’ சுற்றியுள்ள வீடுகளுக்கும் தம் வருகையைத் தெரிவித்துக் கொண்டே அழகியின் வீட்டு வாசலை வந்தடைந்தார் ரொட்டிக்காரர்.

“என்ன கண்ணு என்ன ரொட்டி வேணும்...?” ரொட்டிக்காரரின் அன்பான அழைப்பு அழகியைச் சீனி ரொட்டியின் ஈர்ப்பிலிருந்து மீட்டிருந்தது.



ரொட்டிக்காரருக்கு என்ன பதில் சொல்வது என்று **தடுமாறிய** வேளையில், அம்மா இன்னும் வராததை உணர்ந்தாள் அழகி. சாலை ஓரத்தில் நின்றபடி வீட்டின் வாசலைத் திரும்பிப் பார்க்கிறாள். அம்மாவின் நிழல்கூட கண்ணில் படவில்லை.

மீண்டும் பலத்த குரலில் “அம்மா...!” என அடித்தொண்டையிலிருந்து கத்திக்கொண்டே “கொஞ்சம் நேரம் இருங்க அங்கிள், நா உள்ள போய் அம்மாவைக் கூட்டிக்கிட்டு வரேன்...” அழுகையோடும் முகத்தில் **இறுக்கத்தோடும்** அம்மாவை நோக்கி ஓடினாள் அழகி. வீட்டின் வாசற்கதவோரம் ஓடி நின்று கொண்டு மீண்டும் “அம்மா... அம்மா... வாம்மா..., சீனி ரொட்டிமா...,” வீறிட்டு அழத் தொடங்கியிருந்தாள்.

மறுமுனையில் அம்மா அழகிக்குத் தெரியாமல் சன்னல் ஓரம் மறைந்து நின்று கொண்டு ரொட்டிக்காரரைப் பார்த்துச் சத்தமில்லாமல் கையசைத்து, ரொட்டி வாங்க காசில்லாததை உணர்த்தி அவரைப் போய்விடுமாறு சைகை காட்டினாள். ரொட்டிக்காரர் கிளம்புவதைப் பார்த்த அழகிக்கு நிலை கொள்ளவில்லை.

“அம்மா... ரொட்டிக்காரர் போறாரும்மா...” என அழுது கொண்டே ரொட்டிக்காரரை நோக்கி ஓடினாள் அழகி. அம்மா ஓடி வந்து அழகியை **வாரி** அணைத்துத் தூக்கினாள். இம்முறையும் சீனி ரொட்டி கைவிட்டுப் போனதை எண்ணி அழுகை அழுகையாக வந்தது அழகிக்கு.

அழகியை அணைத்திருந்த அம்மாவின் கண்கள் நீர் **வார்த்தபடி** இருந்தன. “அழாதிங்கம்மா. இன்னொரு நாள் வாங்கிக் கொள்ளலாம்.” அழகி வாய்மொழிந்த வார்த்தைகள் இவை.

- இளம்பூரணன்

**இடுபணி 1**

**கதையைச் சரியான தொனி, வேகம், உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப உரக்க வாசித்திடுக.**

**இடுபணி 2**


**வண்ணமிடப்பட்ட ‘ர’கர, ‘ற’கர எழுத்துகள் கொண்ட சொற்களைப் பட்டியலிட்டு உச்சரித்துப் பழகுக. பின்னர், அவற்றின் பொருள் கூறுக.**

**இடுபணி 3**

**கதையில் வரும் தாய், மகள் கதாபாத்திரங்களின் வசனங்களைத் தேர்ந்தெடுத்து வகுப்பில் பாகமேற்று ஏற்ற தொனியுடன் வாசித்திடுக.**

## வளப்படுத்துதல்

**கதையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்திடுக.**



சீடன் ஒருவனிடம் வழிப்போக்கன் ‘‘உங்களிடம் ஒரு சந்தேகம் கேட்கட்டுமா?’’ என்றான். அதைக் கேட்டு ஆச்சரியப்பட்ட அந்தச் சீடன் ‘‘அதற்கென்ன? தாராளமாகக் கேளுங்கள்,’’ என்றான்.

‘‘உங்கள் குருவிடம் அற்புத ஆற்றல்கள் உண்டா?’’

‘‘அதுபற்றி எனக்குத் தெரியாது,’’ என்றான் சீடன். ‘‘ஆனால், அவரிடம் தினமும் அநேகர் வருவது உண்மை. அவர்களில் பலர் திரும்ப வந்து தங்கள் பிரச்சினைகள் நீங்கிவிட்டன என்று கூறியுள்ளதை நான் பல முறை கண்டிருக்கின்றேன்,’’ என்றான்.

‘‘அதற்காகக் கேட்கவில்லை,’’ என்றான் வழிப்போக்கன். ‘‘உங்கள் குரு ஏன் தாம் செய்வதை வெளியில் சொல்வதில்லை. ஆனால், இதனை இயற்கையின் அருள் என்கிறார். அதற்காகத்தான் கேட்டேன்,’’ என்றான் வழிப்போக்கன்.

இதைக் கேட்ட சீடன் சற்று நேரம் மௌனமாக இருந்துவிட்டு, பிறகு சொன்னான். ‘‘உண்மைதான், நானும் இதனைப் பலமுறை கவனித்திருக்கின்றேன். எனக்குத் தெரிந்தவரை அவர் அனைவரது கவனத்தையும் ஈர்க்க விரும்பவில்லை. அடுத்து, மக்கள் அற்புதங்களில் தங்கள் ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் வளர்த்துக் கொண்டால், உண்மையான ஆன்மிகம் வளராமல் போய்விடக்கூடும் எனக் கருதுவதாக இருக்கலாம்,’’ என்றான் சீடன். வழிப்போக்கன் மௌனமானான்.

- எடுத்தாளப்பட்டது: கதைத் தொகுப்பு

## குறைநீக்கல்

**நாப்பிறழ்ப் பயிற்சியை உச்சரித்துப் பழகுக.**

- துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கி துப்பார்க்கு
  துப்பாய தூஉம் மழை
- குலை குலையாய் வாழைப்பழம் மழையில் அழுகி கீழே விழுந்தது.
- கொக்கு நெட்ட கொக்கு, நெட்ட கொக்கு இட்ட முட்ட கட்ட முட்ட.

தொகுதி 6

தொகுதி 6

## பாடம் 3 இலக்கியமும் பயனாக்கமும்

**வரைபடத்தில் உள்ள நன்மை தீமைகளை ஆராய்ந்து கூறுக.**

**இலக்கியங்களைத் திரைப்படமாக்குவதால் ஏற்படும் விளைவுகள்**

| நன்மை | தீமை |
| --- | --- |
| • ஒளியும் ஒலியுமாக இருப்பதால் பல புலன்களுக்கும் விருந்தளிக்கின்றது; மகிழ்ச்சியூட்டுகின்றது.<br>• புரிதல் எளிமையாக இருக்கும்.<br>• மெய்நிகர் தோற்றம் அளிக்கின்றது; நேரடியாகப் பார்ப்பது போன்று இருக்கும்.<br>• இலக்கிய ஆர்வத்தைத் தூண்டும். வாசகர்களுக்கு எளியமுறையில் இலக்கியம் அறிமுகமாகும். | • இலக்கியங்களை வாசித்து நலம் பாராட்டுவது குறையும்.<br>• திரைப்படங்கள் கற்பனைத் திறன் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக அமைகின்றன; இலக்கியத்தில் வாசகனின் கற்பனைக்கு வாய்ப்புண்டு.<br>• இலக்கியம் திரைப்படமாக ஆகும்போது கதை, திரைக்கு ஏற்றவாறு மாற்றப்படலாம்; சுவை கெடும். |

**இடுபணி 1**

**ஆராய்ந்த கருத்துகளைப் பயன்படுத்தி நன்மைக்கு ஒரு பத்தியும் தீமைக்கு ஒரு பத்தியும் அமைத்திடுக.**

**இடுபணி 2**

**இலக்கியப் படைப்புகளைத் திரைப்படமாக்குவதால் ஏற்படும் விளைவுகள் எனும் தலைப்பிற்கு ஏற்ற முன்னுரை எழுதுக.**

**இடுபணி 3**

**இலக்கியப் படைப்புகளைத் திரைப்படமாக்குவதால் ஏற்படும் விளைவுகள் எனும் தலைப்பில் 180 சொற்களில் விவாதக்கட்டுரை ஒன்றனை எழுதுக.**

3.4.20 180 சொற்களில் விவாதக்கட்டுரை எழுதுவர்.

## கவனத்தில் கொள்க

**விவாதக்கூறுகள்**

- விளைவுகள்: நன்மை, தீமை கருத்துகள் கண்டிப்பாக இடம் பெற்றிருக்க வேண்டும்.
- விவாதத்தில் முதன்மைக் கருத்தும் அதனையொட்டிய துணைக் கருத்துகளும் இருத்தல் வேண்டும்.
- கருத்துகளை வலுப்படுத்த ஏற்ற சான்றுகளைத் தருதல் வேண்டும்.
- விவாதத்தின் இறுதியில் முடிவை/நிலைப்பாட்டை வலியுறுத்துதல் வேண்டும்.

## கட்டுரை அமைப்பு

- **முன்னுரை:** தலைப்பின் விளக்கம்; நிலைப்பாடு.
- **உள்ளடக்கம்:** முதன்மைக் கருத்தும் விவரிப்பும் (4).
- **முடிப்பு:** கருத்துகளின் தொகுப்பும் நிலைப்பாடும்.


## வளப்படுத்துதல்

**'மின்னூலில் இலக்கியங்களை மின்னூலாகப் படைப்பதால் ஏற்படும் விளைவுகள்' எனும் தலைப்பில் 180 சொற்களில் விவாதக்கட்டுரை ஒன்றனை எழுதுக.**

## குறைநீக்கல்

**வழிகாட்டியைப் பயன்படுத்தி முன்னுரை எழுதுக.**

**தலைப்பு: நவீன இலக்கியங்கள் படைப்பதனால் ஏற்படும் விளைவுகள்**



# பாடம் 4 இலக்கணம்

**வலிமிகுதலை அறிக.**

- சொற்றொடர்களில், வருமொழி க், ச், த், ப் ஆகிய வல்லெழுத்துகளில் தொடங்கினால் நிலைமொழி ஈற்றில் சில இடங்களில் வல்லெழுத்து மிகும்.
- வருமொழியின் முதல் எழுத்து வல்லினமாக இருந்தால்தான் வல்லினம் மிகும்.

குறிப்பு: நிலைமொழி – முதலில் நிற்கும் சொல்
வருமொழி – அடுத்து நிற்கும் சொல்

- அகர, இகர ஈற்று வினையெச்சங்களின் பின் வலிமிகும்.

எ.கா:
செய்ய + சொன்னான் = செய்யச் சொன்னான்
ஆடி + பாடினாள் = ஆடிப் பாடினாள்

தொகுதி 6

## பூசலார் நாயனார்



காஞ்சிபுறத்தில் காடவர்கோன் என்ற பல்லவ மன்னன் ஈசனுக்குக் கோயில் ஒன்று கட்டினான். அதே வேளையில் பூசலார் நாயனாரும் மானசீகமாக ஒரு கோயிலைக் கட்டி முடித்தார். இருவரின் கோயில் குடமுழுக்கும் ஒரே நாளில் அமைந்துவிட்டது. இருவரின் குடமுழுக்கு ஏற்பாடுகள் சிறப்பாக நடைபெற்று வந்தன. அச்சமயம் குடமுழுக்குக்கு முந்தைய நாள் இரவு இறைவன் மன்னனின் கனவிலே எழுந்தருளி "அன்பா! திருநின்றவூரில் குடியிருக்கும் நம்முடைய அன்பனாகிய பூசலார் தமது கோயிலுக்கு நாளை குடமுழுக்குச் செய்யவுள்ளார். அந்த ஆலயத்துள் நாளை யாம் எழுந்தருள சித்தம் கொண்டுள்ளோம். ஆதலால் நீ வேறு ஒரு நாளில் குடமுழுக்கை வைத்துக்கொள்வாயாக," என்று மொழிந்தார். மன்னன் கண் விழித்தெழுந்து கனவை நினைத்து வியந்தான். திருநின்றவூர் சென்று அச்சிவனடியாரைச் சந்தித்து அவரது திருக்கோயிலையும் தரிசித்து வர ஆவல் கொண்டான். ஊர் முழுதும் தேடியும் கோயில் கண்ணுக்குத் தெரியவில்லை. இறுதியில் மன்னன் அவ்வூர் மக்கள் துணையுடன் பூசலார் இருக்குமிடத்தைத் தெரிந்து கொண்டான். பூசலாரைக் கண்டு அவரது அடிகளைத் தொழுது எழுந்தான். "அன்பரே! எம்பெருமான் என் கனவிலே தோன்றி நீங்கள், திருக்கோயில் அமைத்துள்ளதாகவும் நாளை

5.4.4 அகர, இகர ஈற்று வினையெச்சத்தின்பின் வலிமிகும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

அதற்குக் குடமுழுக்கு நாளாமே? அதனால் நான் எழுப்பிய திருக்கோயில் குடமுழுக்கை வேறு நாள் பார்த்து வைத்துக்கொள்ள வேண்டும் என்றும் கட்டளையிட்டு அருளினார். ஆக, நீர் கட்டி முடித்துள்ள திருக்கோயிலைத் தரிசித்து வழிபட பெருமகிழ்ச்சி கொண்டு வந்துள்ளேன். அத்திருக்கோயில் எங்குளது?" என்று பணிவோடு கேட்டு வணங்கினான் மன்னன். மன்னன் மொழிந்ததைக் கேட்டு பூசலார் பெரும் வியப்பில் மூழ்கினார். அவர் உள்ளம் மருண்டார் . மன்னனிடம் "அடியேனையும், ஒரு பொருளாகக் கொண்டு இறைவன் இங்ஙனம் திருவாய் மலர்ந்து அருளினாரோ? இவ்வூரில் அரனார்க்கு ஆலயம் அமைக்க அரும்பாடுபட்டேன். பொருள் இல்லா நான், புறத்தேதான் ஆண்டவனுக்குக் கோயில் கட்ட முடியவில்லை, அகத்திலாவது கட்டுவோம் என்ற எண்ணத்தில், வேறு வழியின்றி எனது உள்ளத்திலே கோயில் கட்டி , இன்று அவரை இத்திருக்கோயிலில் வழிபாடு செய்து வருகிறேன்," என்றார்.

## இடுபணி 1

**பனுவலில் கண்டறிந்த 'அ'கர, 'இ'கர வினையெச்சங்களை அடையாளம் கண்டு எழுதுக.**

## இடுபணி 2

**சொற்றொடர்களில் வலிமிகுவதற்கான இலக்கண விதியைக் கூறுக.**

1. துள்ளிக் குதித்தது
2. நீட்டிப் படுத்தார்
3. தடுக்கச் சென்றார்
4. காணச் சென்றான்
5. பறக்கச் சொன்னார்
6. எடுக்கத் துடித்தார்

## இடுபணி 3

**'அ'கர ஈற்று 'இ'கர ஈற்று வினையெச்சங்களை அடையாளம் கண்டு அவற்றை வலிமிகும் விதிக்கு ஏற்ப இணைத்துக் காட்டுக.**

| 'அ'கர ஈறு |
|---|
| |
| |
| |
| |
| |

கலக்க, கூடி, எடுக்க, தேடி, கொடுக்க, விளக்க, வாட்ட, பாடி, எழுதி, ஒட்டி

| 'இ'கர ஈறு |
|---|
| |
| |
| |
| |
| |

தொகுதி 6

இடுபணி 4

**'அ'கர, 'இ'கர ஈற்று வினையெச்சங்களை வினையெச்சத் தொடராக எழுதுக.**

| எச்சம் | வினையெச்சத் தொடர் |
|---|---|
| எ.கா: படுக்க | படுக்கச் சென்றார் |
| வடிக்க | |
| எழுப்பி | |
| திறக்க | |
| வழுக்கி | |
| திரட்டி | |
| திருத்தி | |
| தாக்க | |
| வணங்க | |
| துடைக்க | |

தொகுதி 6

## வளப்படுத்துதல்

**உரைநடைப் பகுதியை வாசித்து வலிமிகுதலுக்கு ஏற்ப எழுதுக.**

இலக்கியச் சுவையை அறிந்து கொள்வதற்குக் கபிலன் வாரந்தோறும் தவறாமல் நூல்நிலையத்திற்குப் படிக்க செல்வான். தனக்கு வேண்டிய புத்தகங்களை வகைப்படுத்தி தேடுவான். அப்படித் தேடிய புத்தகங்களில் பலவற்றைப் படித்துத் தன் நண்பர்களுக்கு விளக்கி சொல்வான். அப்படி விளக்கும்போது அவனை நிறுத்த சொல்ல யாருக்கும் மனம் வராது. அவ்வளவு இனிமையாக இருக்கும்.

## குறைநீக்கல்

**'அ'கர, 'இ'கர ஈற்று வினையெச்சத்தின் பின் வலிமிகும் எனும் விதிக்கு ஏற்பச் சேர்த்து எழுதுக.**

- தர + சொன்னார் =
- ஆட + தோன்றியது =
- விழ + செய்தான் =
- ஓடி + கொடுத்தேன் =
- கூடி + கலைந்தது =
- பாடி + பழகினான் =

# தொகுதி 7 மனித வாழ்வில் பாதுகாப்பு

## பாடம் 1 வீட்டுப் பாதுகாப்பு

விளம்பரத்தை உற்று நோக்கி அதில் காணப்படும் தகவல்களைப் பற்றிக் கலந்துரையாடுக.

எ.கா.:
- விற்பனைப் பொருள்
- விலை
- நிறுவனம்




1.5.3 விளம்பரத்திலுள்ள தகவல்களையொட்டி கருத்துரைப்பர்; முடிவு கூறுவர்.

**இடுபணி 1**

**விளம்பரத் தகவல்களைப் பின்வரும் வழிகாட்டி வரிப்படக்கருவி அடிப்படையில் ஆராய்ந்து கருத்துரைத்திடுக.**

**பாதுகாப்புக் கருவிகள்**

| விபத்தைத் தடுக்கும் கருவிகள் | விபத்திற்குப் பின்னர் பயன்படும் கருவிகள் | பயன்பாட்டின் விளைவு |
| --- | --- | --- |
| எ.கா: கத்தி வைக்குமிடம் | எ.கா: தீயணைப்புப் போர்வை | எ.கா: கருத்துரைப்பிற்கான வரிப்படக்கருவி |

**இடுபணி 2**

**கருத்துரைத்ததின் அடிப்படையில் முடிவினை விளக்கிக் கூறுக.**

**இடுபணி 3**

**திரட்டிய விளம்பரத் தகவல்களையொட்டி கருத்துரைத்து முடிவு கூறுக.**

## வளப்படுத்துதல்

**விளம்பரத்திலுள்ள தகவல்களையொட்டி கருத்துரைத்து முடிவினைக் கூறுக.**




## குறைநீக்கல்

**மேற்கண்ட விளம்பரத்தில் வழங்கப்பட்ட தகவல்களைக் கருத்துரைத்து முடிவு கூறுக.**

ஏன் பயன்பாட்டிற்கு உகந்தது?

| கிடைக்கும் இடம் | சிறப்புக் கழிவு | பயன் |
| --- | --- | --- |


தொகுதி 7


# பாடம் 2 பணியிடப் பாதுகாப்பு

**பட்டைக் குறிவரைவை ஆய்ந்து வாசித்து முக்கியத் தகவல்களை அடையாளம் கண்டு கூறுக.**



பணியிடப் பாதுகாப்பு கவனத்தில் கொள்ள வேண்டிய மிகவும் முக்கியமான துறையாகும். தற்போதைய சூழலில் பாதுகாப்பானது, உடல்நலம், பொதுநலம் ஆகிய கூறுகளை மையமாகக் கொண்டுள்ளது. நம் நாட்டில் பணியிடப் பாதுகாப்பு அம்சங்கள் 1991 ஆம் ஆண்டு நடப்புக்கு வந்தன. அதாவது 1991 ஆம் ஆண்டு சுங்கை பூலோவில் அமைந்திருந்த பட்டாசுத் தொழிற்சாலை வெடி விபத்துக்குள்ளானதற்குப் பிறகு மனிதவள அமைச்சினால் இந்தப் பாதுகாப்பு அம்சம் கொண்டு வரப்பட்டது. இந்த விபத்தில் 26 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். மேலும், பலர் கடுமையான தீப்புண் காயங்களுக்கு உள்ளானார்கள். இதனைத் தொடர்ந்து 1994ஆம் ஆண்டு பணியிடப் பாதுகாப்பு அம்சம் சட்ட விதியாக உருவாக்கப்பட்டது.



குறியீடு: உ – உற்பத்தி, சு – சுரங்கம், க – கட்டுமானம், வி - விவசாயம்

**பணியிட விபத்துகளின் பட்டைக் குறிவரைவு**

மூலம்: DOSH, 2017. எடுத்தாளப்பட்டது)

2.2.4 வாசிப்புப் பகுதியிலுள்ள முக்கியத் தகவல்களை அடையாளம் கண்டு ஒப்பிடுவர்.

தொகுதி 7

**இடுபணி 1**

**வாசித்துக் கண்டறிந்த தகவல்களை அட்டவணையில் குறித்துக்கொள்க; விளக்குக.**

**பணியிட விபத்துகளின் ஒப்பீட்டு அட்டவணை**

| பணியிட விபத்துகள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பாதிப்பு வகை / தொழில் துறை | உயிரிழப்பு | | தற்காலிகப் பாதிப்பு | | நிரந்தரப் பாதிப்பு | |
| | 2016 | 2017 | 2016 | 2017 | 2016 | 2017 |
| உற்பத்தி | | | | | | |
| சுரங்கம் | | | | | | |
| கட்டுமானம் | | | | | | |
| விவசாயம் | | | | | | |

**இடுபணி 2**

**அட்டவணையில் குறித்த தகவல்களை ஒப்பிட்டு விளக்குக.**

**இடுபணி 3**

**அட்டவணைத் தகவல்களைக் கீழ்க்காணும் மரவரைபடத்தின் துணைகொண்டு ஒப்பிட்டு விளக்குக.**

எ.கா:
எது அதிகம்?
உற்பத்தித் துறையில் உயிரிழப்பு அதிகமாகக் காணப்படுகிறது.
ஏன்?
முறையான பாதுகாப்புக் கூறுகளைக் கடைப் பிடிக்காததால்.

i-THINK

**ஒப்பீடு துறையும் பாதிப்பு வகையும்**

| எது அதிகம்? | எது அதிகம்? | எது அதிகம்? |
|---|---|---|
| ஏன் அதிகம்? | ஏன் அதிகம்? | ஏன் அதிகம்? |

விபத்துகள் பற்றியத் தகவல்களின் ஒப்பீட்டு வரிப்படக்கருவி


**வளப்படுத்துதல்**

**உற்பத்தித் துறையில் விபத்துகள் அதிகமாக நிகழ்கின்றன. விவசாயத்துறையில் விபத்துகள் குறைவாகவே நிகழ்கின்றன. இவற்றுக்கான காரணங்களைப் பின்வரும் அடிப்படையில் ஒப்பிட்டுக் கூறுக.**

**பணிசெய்யும் முறை** | **பாதுகாப்பு ஏற்பாடுகள்** | **தொழில் செய்யும் இடம்**

## குறைநீக்கல்

**பணியிட விபத்துகளுக்கான பொதுவான காரணங்களையும் தீர்வுகளையும் ஒப்பிட்டு நிறைவு செய்து விளக்குக; எழுதுக. கயற்கூட்டுவரைவைப் பயன்படுத்துக.**




**பணியிட விபத்துகளுக்கான காரணங்களையும் தீர்வுகளையும் ஒப்பிட்டு ஆராயும் கயற்கூட்டுவரைவு**

## பாடம் 3 வசிப்பிடப் பாதுகாப்பு

**அலுவல் கடிதத்தை மௌனமாக வாசித்து அதன் அமைப்பையும் கருத்துகளையும் வகுப்பில் கூறுக.**

பண்டார் சன்வே குடியிருப்போர் சங்கம்,
33, சாலை பி.ஜே.எஸ் 5/10,
46000 பெட்டாலிங் ஜெயா,
சிலாங்கூர்.

---

தலைமை நிர்வாகி,
தெனாகா நேசனல் பெர்ஹாட்,
லோட் 18, 7ஆவது மாடி,
ஜாலான் 55/6,
46000 பெட்டாலிங் ஜெயா,
சிலாங்கூர். 09 செப்டம்பர் 20☐☐

ஐயா,

**மின்கம்பம் சாலையில் விழும் அபாயம்**

வணக்கம். மேற்கண்ட முறையீடு தொடர்பாகப் பண்டார் சன்வே குடியிருப்போர் சங்கத்தின் செயலர் என்னும் முறையில் எங்கள் பகுதியில் பாதுகாப்புக்கு மிரட்டலாக இருக்கும் நிலையை முறையிடுவதற்கும், தாங்கள் எவ்வாறு எங்களுக்கு உதவ இயலும் என்பதை அறிந்து கொள்வதற்கும் இக்கடிதத்தை எழுதுகிறேன்.

2. பண்டார் சன்வே குடியிருப்போர் சங்கத்தில் நான் செயலர் என்னும் முறையில் இந்தத் தகவலைத் தெரிவிக்கும் பொறுப்பு என்னிடம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த வாரம் பெய்த தொடர்மழை காரணமாக எங்கள் பகுதியின் குடியிருப்புவாசிகள் தினமும் பயன்படுத்தும் முதன்மைச் சாலையில் உள்ள இரண்டு மின்கம்பங்கள் சாய்ந்து விழும் அபாயத்தில் இருக்கின்றன. இதனால், எங்கள் வட்டாரத்தில் வாழும் மக்களின் பாதுகாப்பிற்குப் பெரும் நெருக்குதல் ஏற்பட்டுள்ளது.

3. மின்கம்பம் எந்நேரத்திலும் சாய்ந்து விழும் அபாயத்தில் இருப்பதால், அவ்வழியே கடந்து செல்லும் வாகனங்கள் மீது விழுவதற்கான வாய்ப்புண்டு. அப்படி நிகழ்ந்தால் கண்டிப்பாக மின்கம்பத்தில் இருக்கும் மின்சாரம் வாகனத்தில் பாயும். இதனால், உயிர்ச்சேதம் ஏற்படும் ஆபத்தும் உள்ளது. மேலும், மின்கம்பம் வாகனத்தின்மீது விழுந்தாலும்கூட வாகனத்திற்குள் அமர்ந்து வரும் பயணிகளின் உடலில் காயம் ஏற்படுவதற்கும் வாய்ப்புகள் உள்ளன. எதுவாயினும், குடியிருப்புவாசிகளுக்கு இஃது அச்சுறுத்தலாக இருப்பது வெள்ளிடைமலை.

3.4.16 180 சொற்களில் அலுவல் கடிதம் எழுதுவர்.

4. இதனால், எங்கள் குடியிருப்புப் பகுதியில் வாழும் சிலர் இந்தப் பாதையைப் பயன்படுத்துவதற்கு அஞ்சி, கடந்த ஒரு வாரமாக இதனைப் பயன்படுத்தாமல் அருகில் இருக்கும் வீடமைப்புப் பகுதியைச் சுற்றிவந்து ஏழு கிலோ மீட்டர் கொண்ட நீண்ட வழியைப் பயன்படுத்துகின்றனர். இதனால், அவர்களின் நேரமும் பணமும் அதிகம் விரயமாகின்றன.

5. இன்னும் எத்தனை நாள்களுக்கு இவர்கள் இந்த மாற்றுவழியைப் பயன்படுத்தப் போகிறார்கள் என்று தெரியவில்லை. விரைந்து இதற்கொரு தீர்வு கண்டீர்கள் என்றால், எங்கள் பாதுகாப்பிற்கு மிகவும் உறுதுணையாக இருக்கும். ஆகவே, தங்கள் நிறுவனத்தின் ஊழியர்களை விரைவாக அனுப்பி இந்தச் சிக்கலுக்கு உடனடியாகத் தீர்வைக் காண முனைவீர்கள் எனப் பெரிதும் எதிர்பார்க்கின்றேன்.

6. உங்கள் ஒத்துழைப்பைப் பெரிதும் எதிர்பார்க்கின்றோம். அவ்வகையில் எங்கள் குடியிருப்பு வாழ் பொதுமக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி.

கடமையாற்றும்,

.............................................................

(கவின்முகிலன் த/பெ தமிழ்ச்செல்வன்)
செயலர்,
பண்டார் சன்வே குடியிருப்போர் சங்கம்.

**கவனத்தில் கொள்க**

**அமைப்பு**

- எழுதுநர் முகவரி
- பெறுநர் முகவரி
- நாள்
- விளிப்பு
- கரு
- பத்தி அமைப்பு
- முடிவு
- நன்றி
- கையொப்பம்
- பெயர்/பதவி

**இடுபணி 1**

**கலந்துரையாடி உமது வசிப்பிடத்தில் காணும் ஆபத்தான சூழல்கள் இரண்டையும் அவற்றின் காரணங்களையும் எழுதுக.**

**இடுபணி 2**

**இந்தக் காரணியினைப் பயன்படுத்தி ஓர் அலுவல் கடிதம் எழுதுக.**

**இடுபணி 3**

**மேற்கண்ட மாதிரியைப் பின்பற்றி 180 சொற்களில் அலுவல் கடிதம் ஒன்றனை எழுதுக.**

உமது பள்ளிக்கு அருகில் இருக்கும் நகராண்மைக் கழகச் சிறுவர் விளையாட்டு மையம் பழுதடைந்து உள்ளது. அது சிறுவர்களுக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடும். எனவே, அதனைச் சரிசெய்யும்படி நகராண்மைக் கழகத்திற்கு அலுவல் கடிதம் ஒன்றனை எழுதுக.

## வளப்படுத்துதல்

**நெருங்கிய உறவினர் ஒருவரின் திருமணத்திற்காக இரண்டு நாள்கள் பள்ளிக்கு விடுப்பு எடுக்கத் திட்டமிட்டிருந்தீர். அது குறித்துப் பள்ளி முதல்வர்க்குத் தெரிவிக்க அலுவல் கடிதம் ஒன்றனை எழுதுக.**

## குறைநீக்கல்

**அலுவல் கடிதத்தை நிறைவு செய்க.**

பள்ளியின் சில கால்வாய்கள் மூடப்படாத நிலையில் உள்ளன

வணக்கம். மேற்கண்ட முறையீடு தொடர்பாகப் பள்ளியின் பாதுகாப்புக் குழுவின் செயலர் என்ற முறையில், பள்ளியில் திறந்த நிலையில் காணப்படும் சில கால்வாய்கள் ஆபத்தை விளைவிக்கும் நிலையில் இருப்பதைத் தெரிவிக்க இக்கடிதத்தை எழுதுகிறேன்.

2.

3.

4. உங்கள் ஒத்துழைப்பைப் பெரிதும் எதிர்பார்க்கின்றோம்.

நன்றி.
கடமையாற்றும்,

( )

செயலர்,

தொகுதி 7

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

**திருவருட்பாவை வாசித்து அறிக.**

## திருவருட்பா

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமைபெறும் நினது புகழ் பேசவேண்டும் பொய்மை
பேசா திருக்க வேண்டும்

**- இராமலிங்க அடிகள்**

**பொருள்:** ஒரு நெறிப்பட்ட மனத்துடன் நின்னுடைய மலர் போன்ற திருவடிகளை நினைக்கின்ற உத்தமர்களின் உறவே எனக்கு வேண்டும். உள்ளத்திலொன்றும் புறத்திலொன்றுமாகப் பேசும் வஞ்சகர் உறவு என்னை அடையாதவாறு காக்க வேண்டும். பெருமை சான்ற நினது புகழையே நான் பேசுபவனாகவும் பொய்மை மொழிகளைப் பேசாதவனாகவும் இருக்க வேண்டும்.

**தித்திக்கும் தீந்தமிழ் திருவருட்பா பாடல்களை,**
**எத்திக்கும் புகழ் மணந்து எழில் ஓங்கச் செய்வோம்!**



'திரு' எனும் சொல் தெய்வீகத் தன்மை கொண்டது எனப் பொருள்படும். இந்தத் 'திரு' எனும் சொல்லுடன் அருளும் பாவும் சேர்ந்து, திருவருட்பா என்று ஆனது. திருவருட்பா என்பது தெய்வீகத் தன்மை பொருந்திய பாடல் என்பதாகும். அஃதாவது, அருள்நெறி கொண்ட தெய்வீகப் பாடல்கள் ஆகும். இத்தொகுப்பை நமக்களித்த அருளாளர் திருவருட்பிரகாச வள்ளலார். இவரின் இயற்பெயர் இராமலிங்கம்.

திருவருட்பா மொத்தம் 5818 பாடல்கள் அடங்கிய தொகுப்பாகும். ஆசிரிய விருத்த நடையில் இப்பாடல்கள் பாடப்பட்டுள்ளன. இது மொத்தம் ஆறு தொகுப்புகளாக வெளியிடப்பட்டுள்ளது. இத்தொகுப்புகளைத் திருமுறை என அவர்தம் தொண்டர்கள் பெயரிட்டுள்ளனர். இது சைவத்திருமுறைகளான பன்னிரண்டு திருமுறைகளோடு ஒப்பிடுகையில் வேறுபட்டது. இப்பாடல்கள் வள்ளலார் தம்முடைய சுய அனுபவங்களையும் ஆன்மிகப் பெரு உணர்வையும் விளம்புவன என்றும் அவற்றை வணிக முறையில் பதிப்பிக்க வேண்டாம் என்றும் வள்ளலார் கேட்டுக்கொண்டார். எனினும், வள்ளலாரின் தொண்டர்கள் அவரிடம் தொடர்ந்து வலியுறுத்தி இப்பாடல்களைப் பதிப்பிப்பதற்கான அனுமதியைப் பெற்றனர்.

4.3.3 மூன்றாம் படிவத்திற்கான பல்வகைச் செய்யுளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

**இடுபணி 1**

**திருவருட்பாவை மனனம் செய்து நயமுடன் ஒப்புவித்திடுக.**

**இடுபணி 2**

**சொற்களின் பொருளை எழுதி வாசித்திடுக.**

| | | | |
|---|---|---|---|
| ஒருமையுடன் | | புறமொன்று | |
| திருமலரடி | | பெருமை | |
| உத்தமர் | | நினது | |

**இடுபணி 3**

**செய்யுளடிகளுக்கு ஏற்ற கருத்துரையை இணைத்திடுக.**

| செய்யுளடி | கருத்துரை |
|---|---|
| ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும். | பெருமை சான்ற நினது புகழையே நான் பேசுபவனாகவும் பொய்மை மொழிகளைப் பேசாதவனாகவும் இருக்க வேண்டும். |
| உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும். | ஒரு நெறிபட்ட மனத்துடன் நின்னுடைய மலர் போன்ற திருவடிகளை நினைக்கின்ற உத்தமர்களின் உறவே எனக்கு வேண்டும். |
| பெருமைபெறும் நினது புகழ் பேசவேண்டும் பொய்மை பேசா திருக்க வேண்டும். | உள்ளத்திலொன்றும் புறத்திலொன்றுமாகப் பேசும் வஞ்சகர் உறவு என்னை அடையாதவாறு காக்க வேண்டும். |

**வளப்படுத்துதல்**

**திருவருட்பாவின் பொருளை விளக்கிக் கூறுக; எழுதுக.**

**குறைநீக்கல்**

**செய்யுளடிகளை நிறைவு செய்க.**

ஒருமையுடன் நினது திருவடி நினைக்கின்ற

________________

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோர்

________________

பெருமைபெறும் நினது புகழ்பேச வேண்டும் பொய்மை

________________

தொகுதி 7

# தொகுதி 8 தகவல் யுகம்

## பாடம் 1 தமிழில் தகவல் தொழில்நுட்பம்

பனுவலை மௌனமாக வாசித்திடுக.



இருபத்தொன்றாம் நூற்றாண்டுக் கற்றல் திறன்களில் மிக முக்கியமான இடத்தைப் பிடித்திருப்பது கணினியும் இணையமும் ஆகும். அவ்வகையில் தமிழ்மொழி கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளுக்கும் கணினியும் இணையமும் பெரும் பங்காற்றி வருகின்றன. ஆரம்பக் கட்டத்தில் ஆங்கிலத்தில்தான் கணினியும் இணையம்வழி தகவல் கருத்துப் பரிமாற்றமும் நடைபெற இயலும் என்ற நிலை இருந்தது. பின்னர், அந்நிலை மாறி, தமிழ்மொழியிலேயே அனைத்தையும் செய்ய முடியும் என்ற நிலை அமைந்துள்ளதை இன்றைய காலக்கட்டத்தில் நாம் கண்கூடாகப் பார்த்து வருகிறோம்.

ஜூலை மாதம் 2000 ஆம் ஆண்டு சிங்கப்பூரில் நடைபெற்ற தமிழ் இணைய மாநாட்டில் உலகத் தமிழ்த் தகவல் தொழில்நுட்ப மன்றம் (உத்தமம்) என்ற அமைப்புத் தோற்றுவிக்கப்பட்டது. கணினியிலும் இணையத்திலும் தமிழின் பயன்பாட்டை மேம்படுத்துவதற்குத் தேவையான மென்பொருள்களையும் கருவிகளையும் உருவாக்குவதை முதன்மை நோக்கமாகக் கொண்டு உத்தமம் அமைக்கப்பட்டது. கணினித் தமிழ் வளர்ச்சியில், தமிழ்க் கலைச்சொல் ஆக்கம், யுனிகோட் தமிழ் (Unicode Tamil) மேம்பாடு, தமிழ் வரிவடிவக் குறியீட்டுத் தரப்பாடு, தமிழ் அனைத்தெழுத்துரு தரப்பாடு, தமிழ் எழுத்துரு அறிதல் (Tamil Optical Character Recognizer),

1.2.4 ஊகிக்கத் தூண்டும் வகையில் கேள்விகள் கேட்பர்.



லினக்ஸில் தமிழ் (Tamil in Linux) போன்ற பல்வேறு ஆய்வுப் பணிகளுக்காக உத்தமம் ஆய்வுப் பணிக்குழுக்களை நிறுவி, ஆய்வுகளைச் செய்து வருகிறது.

இந்த ஆய்வுகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்காக ஆண்டுதோறும் தமிழ் இணைய மாநாடுகள் நடத்தப்படுகின்றன. மலேசியாவில் மலேசிய உத்தமம் மலாயாப் பல்கலைக்கழக மொழி மொழியியல் புலத்தோடு இணைந்து நம் நாட்டில் 2001 இல் நான்காவது மாநாட்டையும் 2013 இல் பன்னிரண்டாவது மாநாட்டையும் நடத்தின. தகவல் தொழில்நுட்பத்தில் அவ்வப்போது ஏற்பட்டுவரும் மாற்றங்களை உள்வாங்கிக் கொண்டு தரமான ஆய்வுக் கட்டுரைகளை வெளிக்கொணர்வதே இம்மாநாடுகளின் நோக்கமாகும். அந்த வகையில், நாம் பயன்படுத்தும் மின்னணுக் கருவிகளில் தமிழ்மொழி இருப்பதை உறுதி செய்வோம்; கன்னித் தமிழைக் கணினிவழி வளர்த்தெடுப்போம்.

**ஊகிக்கும் வகைக் கேள்விகள்**

1. எதுவாக இருக்கும் எனக் கருதுகிறாய்?
2. அடுத்து என்ன நிகழ்ந்திருக்கும்?

**எ.கா:**

தமிழ்மொழியில் தகவல் தொழில்நுட்பம் வளர்ச்சியடையாமல் இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும்?

**இடுபணி 1**

**கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு ஊகிக்கும் வகையில் கேள்விகள் கேட்டிடுக.**

**தமிழ்க் கணினித் தொழில்நுட்பம்**
- உருவாக்கம்
- நோக்கம்

**புத்தாக்கப் படைப்புகள்**
- வகை
- முறைகள்

**எ.கா:**

தமிழ்க் கணினித் தொழில்நுட்பம் எவ்வாறான செயலியை உருவாக்கலாம் எனக் கருதுகிறீர்?

**இடுபணி 2**

**வாசிப்புப் பகுதியைத் துணையாகக்கொண்டு ஊகிக்கும் வகையில் கேள்விகள் கேட்டிடுக.**


## இடுபணி 3

**தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் இன்று பின்வரும் வசதிகள் இல்லையென்றால் என்ன நடக்கக்கூடும் என்பன தொடர்பாக ஊகிக்கும் வகைக் கேள்விகள் கேட்டிடுக.**

| | |
|---|---|
| குறுஞ்செயலி | அருகலை |
| தமிழ் எழுத்து - ஒருங்குறி | சமூக வலைத்தளம் |

## வளப்படுத்துதல்

**தமிழ்மொழியில் செயலி ஒன்றனை உருவாக்கத் திட்டமிட்டுள்ளீர்கள். நீங்கள் உருவாக்கும் செயலி எவ்வாறு அமையக்கூடும் என்பதை அறிய, குழுமுறையில் கலந்துரையாடி ஊகிக்கும் வகையில் கேள்விகள் கேட்டிடுக.**




## குறைநீக்கல்

**ஊகிக்கும் வகைக் கேள்விகளைத் தெரிவு செய்க.**

1. நான்காவது உலகத் தமிழ் இணைய மாநாடு எங்கு நடைபெற்றது?
2. வருங்காலத் தலைமுறையினரைக் கவரும் ஊடகம் எதுவாக இருக்கும் எனக் கருதுகிறீர்?
3. தமிழ்த் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் அடுத்த கட்ட வளர்ச்சி எதுவாக இருக்கும்?
4. கணினி இன்றைய பயன்பாட்டில் இல்லாமல் இருந்திருந்தால் என்ன நிகழ்ந்திருக்கும்?
5. ஏன் தமிழ் இணைய மாநாடுகள் நடைபெறுகின்றன?
6. திறன்பேசி பயன்பாட்டினால் என்ன நன்மை?

பாடம் 2 அருகலை நகரம்

**வாசிக்கும் முன்:**
அருகலை பற்றி நீங்கள் அறிந்தவற்றை நண்பரோடு கலந்துரையாடிக் கூறுக.

காணொளி

**ஊகித்துப் பொருள் கூறுக.**

| | | |
|---|---|---|
| அருகலை | மின்கடத்தி | உலகெங்கிலும் |
| மின்காந்தம் | இணைப்புகள் | வெற்றிகரமாக |
| மென்பொருள் | வழங்கப்பட்டு | உள்ளடக்கிய |

**வாசித்து அறிக.**

## அருகலை நகரம்



தகவல் பரிமாற்றத்தில் முக்கியப் பங்காற்றுவனவற்றுள் குறிப்பிடத்தக்கது அருகலை வசதியாகும். அருகலை (Wi-Fi) என்பது கம்பியில்லாத் தொடர்பு வசதி கொண்ட கருவியின் வணிகக் குறியீடு. இந்த வசதி, குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட இடத்திற்கான கம்பியில்லா மின்காந்தத் தொடர்பு ஆகும். இது கணினிகளுக்கிடையேயும் அது **தொடர்பான** பிற சாதனங்களுக்கிடையேயும் இணைப்பை ஏற்படுத்துகின்றது. கணினிகள், கணினி **மென்பொருள்கள்**, மின்னச்சு இயந்திரங்கள் மற்றும் பல்வேறு கணினித் துணைக்கருவிகளும் அருகலைச் சேவையைக் கொண்டு இயங்கும் திறன் கொண்டவை.

2.3.9 தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

மின்கடத்தியைப் பயன்படுத்தி **இணைப்புகளையும்** தொடர்புகளையும் கொண்டிருந்த இலக்கியல் உலகம், அருகலையின் வரவால் பெரும் மாற்றத்திற்கு உள்ளானது. அருகலை வசதி, வீடு, ஊர், நகர், மாநிலம், நாடு, உலகம் எனப் பரந்து விரிந்த தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளது. இதனால், ஒரு வீட்டையோ ஊரையோ நகரையோ அருகலைச் சேவையின்வழி ஒரு தொடர்பு வலைக்குள் கொண்டுவர இயலும். இதனால், **நகர் அமைப்பிலும்** பல மேம்பாடுகள் நிகழலாயின.

அருகலைக் குறியீடு முதன்முதலாக ஆகஸ்டு மாதம், 1999ஆம் ஆண்டிலிருந்து **வணிக நோக்கப்** பயன்பாட்டில் வழங்கப்பட்டு வருகின்றது. அதாவது, 2000ஆம் ஆண்டின் முற்பகுதியில், உலகெங்கிலும் உள்ள பல **நகரங்கள்**, நகர அளவிலான அருகலை தொடர்பைக் **கட்டமைப்பதற்கான** திட்டங்களை அறிவித்தன. அந்த வகையில் பல நாடுகள் தங்கள் நாட்டில், முக்கிய நகரங்களை வெற்றிகரமாக **அருகலை மயப்படுத்தி** வெற்றி கண்டுள்ளன. இத்திட்டத்தில், 2004ஆம் ஆண்டில் மைசூர் நகரம் இந்தியாவின் முதல் அருகலை நகரமாக **உருவெடுத்தது**. இதில் அருகிலுள்ள சில கிராமங்களையும் உள்ளடக்கிய பகுதிகளுக்கு இந்த அருகலைச் சேவை வெற்றிகரமாகத் தொடங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, உலகின் பல நாடுகளில் இத்தகைய நகரங்கள் உருவாகத் தொடங்கின.

**இடுபணி 1**

**வண்ணமிடப்பட்ட சொற்களுக்கு அகராதியின் துணைகொண்டு சூழலுக்கேற்ற பொருள் எழுதுக.**

**இடுபணி 2**

**வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. அருகலை என்றால் என்ன?
2. அருகலை கொண்டுவந்த வசதிகளை விவரித்திடுக.
3. அருகலை நகர உருவாக்கம் எத்தகையத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது?
4. அருகலை நகரத்தில் நீங்கள் வசித்தால் அவ்வசதியை எவ்வாறு பயன்படுத்திக் கொள்வீர்கள்?
5. ஒரு நாட்டில் அருகலை நகரங்கள் பெருகினால் எத்தகைய மாற்றங்கள் ஏற்படக்கூடும்?

**இடுபணி 3**

**அருகலைப் பயன்பாடு பல நன்மைகளைக் கொண்டு வருகிறது. இருப்பினும், அதன் பயன்பாடு சில தீமைகளை ஏற்படுத்துவதை மறுப்பதற்கு இல்லை. அவ்வகையில் அத்தீமைகளைக் கலந்துரையாடிக் குமிழி வரைபடத்தில் படைத்திடுக.**

**வளப்படுத்துதல்**

# இலக்கியல் உலக மறுமலர்ச்சி



இருபத்தோராம் நூற்றாண்டில் வாழ்ந்து வருகின்ற நாம் பேறு பெற்றவர்கள். கடந்த நூற்றாண்டுகளில் வாழ்ந்த மனிதனுக்குக் கிட்டிராத அளப்பரிய வசதிகளையும் வாய்ப்புகளையும் நவீன அறிவியல் நம் முன் கொண்டு வந்து சேர்த்திருக்கின்றது. புதுப்புது கண்டுப்பிடிப்புகளால் மனித வாழ்வை வளப்படுத்தி வருகின்றது.

அஃதாவது, 1999இல் தொடங்கிய இலக்கியல் (டிஜிட்டல்) தொழில்நுட்பம், இன்று அனைத்துத் துறைகளையும் தன்வசப்படுத்தியிருக்கிறது. அந்த வகையில், இன்றைக்குத் தொழில்நுட்பத்தில் விரும்பத்தக்க புரட்சிகளையும் மனித தேவைக்கேற்ற வாழ்வியல் மாற்றங்களையும் இலக்கியல் தொழில்நுட்பம் நிறுவி வருகிறது.

இந்த வகையில் இலக்கியல் தொழில்நுட்பம் அச்சு சார்ந்த நடவடிக்கைகளுக்கான மாற்று வழியாக அமைகிறது. அச்சு நடவடிக்கைகள் எனக் கூறப்படுவது தாள்களைக் கொண்டு அச்செடுத்துத் தகவல் பரிமாற்றமோ பரப்புரையோ செய்வதாகும். இவ்வாறு செய்வதனால் பணச்செலவு அதிகம் ஏற்படுகிறது. இலக்கியல் தொழில்நுட்பத்தால் காகிதச் செலவைத் தவிர்க்க முடிகிறது. மேலும் இலக்கியல் தொழில்நுட்பத்தால் இயற்கையைப் பாதுகாக்கும் சூழலும் ஏற்படுகிறது. பசுமையை நோக்கி (Go Green) எனும் விழிப்புணர்வுத் திட்டத்தின் கீழ் காகிதம் தயாரிக்க உதவும் மரங்களைப் பாதுகாப்பதன்வழி இயற்கையைப் பாதுகாக்க முடிகிறது. இன்று நம் நாட்டில் பல நிறுவனங்கள் இந்த வழிமுறையைப் பயன்படுத்துகின்றன. ஆகவே, இயற்கையைப் பாதுகாத்து, பணச் செலவைக் குறைக்கும் இலக்கியல் உலகோடு நாமும் ஒன்றிணைவோம்.

**கருத்துணர் கேள்விகளுக்குப் பதில் எழுதுக.**

1. இருபத்தோராம் நூற்றாண்டில் வாழ்கின்ற நாம் ஏன் பேறு பெற்றவர்களாகக் கருதப்படுகிறோம்?
2. இலக்கியல் தொழில்நுட்பத்தின் நன்மைகள் இரண்டனை எழுதுக.

**குறைநீக்கல்**

**இலக்கியல் தொழில்நுட்பத்தால் ஏற்படும் தீமைகளைத் தொகுத்துப் படவில்லையைத் தயார் செய்து படைத்திடுக.**

## பாடம் 3 எங்கும் தகவல் தொழில்நுட்பம்

**மௌனமாக ஆழ்ந்து வாசித்து, கருத்து விளக்கக் கட்டுரையின் சட்டகத்தை வரைக.**

### தகவல் தொழில்நுட்பம்



'நீர் இன்றி அமையாது உலகம்' என்பதுபோல இன்றைய உலகம் தகவல் தொழில்நுட்பம் இன்றி இயங்காது. தொழில்நுட்பத்தைக் கொண்டு தகவல் பரிமாற்றம் செய்வதுதான் தகவல் தொழில்நுட்பம். எந்தத் துறையில் தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு இல்லையோ அந்தத் துறை பின்தங்கிய துறையாகிவிடும். அதனாலேயே பல்வேறு துறைகளில் தகவல் தொழில்நுட்பம் பயன்பட்டு வருகிறது.

தகவல் தொழில்நுட்பம் வணிகத்துறை வளர்ச்சியில் வாடிக்கையாளர்களுக்குச் சிறந்த சேவையை வழங்கி உதவுகிறது. வணிகப் பரிவர்த்தனையில் எளிய வழிமுறையில் தகவல்களை விரைவாகவும் தெளிவாகவும் வாடிக்கையாளர்களிடம் கொண்டு சேர்க்கிறது. எடுத்துக்காட்டாக முகநூல், கீச்சல் மற்றும் வலையொளி போன்ற சமூக வலைத்தளங்கள் சான்று பகர்கின்றன. ஆக, தகவல் தொழில்நுட்பம் வணிகத்துறை வளர்ச்சிக்கு முக்கியக் காரணியாக அமைகிறது.

மருத்துவத்துறையை எடுத்துக்கொண்டால் அனைத்துச் செயல்பாடுகளிலும் தகவல் தொழில்நுட்பம் நிறைந்துள்ளது. நோயாளி மருத்துவமனையில் பதிவு செய்வது தொடங்கி மருத்துவப் பரிசோதனை மற்றும் அறுவை சிகிச்சை, மருந்து விநியோகம் என்று அனைத்து நிலைகளிலும் இந்தத் தகவல் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதன் வாயிலாக நோயாளிகளுக்கான சேவையை விரைவாகவும் தரமாகவும் வழங்க முடியும்.

3.4.18 180 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுவர்.

இது மருத்துவத்துறை வளர்ச்சிக்கு மேலும் வலுசேர்க்கிறது என்பது வெள்ளிடைமலை.




உலகமயமாதலின் அடிநாதமாக விளங்கும் தகவல் தொழில்நுட்பம்வழி ஒரு நாட்டில் ஏற்படும் சமூகம், அரசியல், பொருளாதாரம், அறிவியல் போன்ற மாற்றங்களை உலக மக்கள் அறிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படுகிறது. எடுத்துக்காட்டாக, வளர்ச்சி குன்றிய சிலி போன்ற நாடுகள், அதிவளர்ச்சி அடைந்த ஜப்பான் நாட்டில் நடக்கும் மாற்றங்களை அறிந்து தாமும் அத்தகைய வளர்ச்சியை நோக்கிச் செல்வதை நாம் பார்க்க முடிகின்றது. ஒரு வகையில், இதற்குத் தகவல் தொழில்நுட்பம் பெருந்துணையாக இருக்கிறது எனலாம்.

கல்வித்துறை மேம்பாட்டிற்குத் தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு அளப்பரியதாகும். தகவல் தொழில்நுட்பத்தின் வாயிலாக நடத்தப்படும் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் பயன்விளைவு மிக்கதாக அமைந்திருப்பதை ஆய்வாளர்கள் உறுதிப்படுத்துகின்றார்கள். எனவே, கல்வித் துறையின் அடுத்த கட்ட வளர்ச்சிக்குத் தகவல் தொழில்நுட்பம் முக்கியக் காரணியாக இருந்து வருவதை நாம் நன்குணர முடிகிறது.

இப்படிப் பல நிலைகளில் பல பரிணாமங்களைக் கொண்டு விளங்கும் தகவல் தொழில்நுட்பம் வணிகம், மருத்துவம், தகவல் கருத்துப் பரிமாற்றம் மற்றும் கல்வித் துறை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வருவதை இதன்வழி அறிய முடிகிறது.

## இடுபணி 1

**கொடுக்கப்பட்ட கருத்துகளுக்கு ஏற்ற துணைக் கருத்துகளை நிறைவு செய்க; தொடர்ந்து பத்தியில் எழுதுக.**

கருத்து 1: கற்றல் நடவடிக்கைகளுக்கு மெய்நிகர் கற்றல் (VLE Frog) பயன்பாடு மிகுந்த பயனைத் தருகிறது.

துணைக்கருத்து 1:

துணைக்கருத்து 2:

ஆக, மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு மெய்நிகர் கற்றல் நல்ல பயன் தருகிறது என்பது இதன் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

## இடுபணி 2

**'தகவலுலகச் சவால்கள்' எனும் தலைப்பிற்கேற்ற முன்னுரையை எழுதுக.**

தொகுதி 8

## இடுபணி 3

**குறிப்புகளின் துணையுடன் 'தகவலுலகச் சவால்கள்' எனும் தலைப்பில் 180 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை ஒன்றனை எழுதுக.**




தகவலுலகச் சவால்கள் தொடர்பான கருத்துகளின் வரிப்படக்கருவி

## வளப்படுத்துதல்

**கணினியின் மேன்மை எனும் தலைப்பில் 180 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுக.**

## குறைநீக்கல்

**உமது வீட்டில் பயன்படுத்தப்படும் தகவல் தொடர்புச் சாதனங்களைப் பட்டியலிட்டு அவற்றின் பயன் குறித்து எழுதுக.**

| | சாதனங்கள் | வாக்கியம் |
|---|---|---|
| எ.கா: | திறன்பேசி | மிகவும் எளிதில் தகவல்களை இணையத்திலிருந்து பெற்றுக் கொள்ள வழிவகுக்கும். |
| 1 | | |
| 2 | | |
| 3 | | |

பாடம் 4 **இலக்கணம்**

**திரிதல் விகாரம் அறிக.**

மகர ஒற்று (ம்) க்,ச்,த் ஆகிய வல்லினத்தோடு புணரும்போது இன மெல்லெழுத்தாகத் திரியும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எ.கா: | மரம் | + | கண்டான் | = | மரங்கண்டான் |
| | மரம் | + | சாய்ந்தது | = | மரஞ்சாய்ந்தது |
| | வரம் | + | தா | = | வரந்தா |

## மின்னியல் உலகில் மின்னஞ்சல்



சிவா ஐயாதுரை



இந்தியாவில் பிறந்து அமெரிக்காவின் குடிமகனாகிய ஓர் அறிவியலாளர் சிவா ஐயாதுரை. இன்று அறியப்படும் மின்னஞ்சல் (e-mail) என்பதை உருவாக்கியவர் என்னும் பெருமைக்குரியவர்.

**மின்சாரந்தான்** எல்லாமே. இன்று மின்சாரம் இல்லாத மனிதனுடைய வாழ்க்கையைக் கற்பனை செய்ய முடிகிறதா? நிச்சயம் முடியாது. அதைப் போலவே மின்னஞ்சல் இல்லாத மனித வாழ்க்கையை இனி நினைத்துப் பார்க்கவும் முடியாது. தகவல் பரிமாற்றத்திற்கு மின்னஞ்சல் மனிதனின் **திறஞ்சார்ந்த** ஒன்றாக ஆகிவிட்டது.

இந்த மின்னஞ்சலைக் கண்டுபிடித்தவர் யாராவது வெளிநாட்டுக்காரர்தாம் என்று நினைத்திருப்பீர்கள். நீங்கள் நினைத்தது உண்மைதான். அவர் வெளிநாட்டில் வசிக்கும் ஒரு தமிழர்; **தமிழ்நிலஞ்சேர்ந்தவர்**. அதுவும் தமது 14ஆவது வயதில் மின்னஞ்சலைக் கண்டுபிடித்துச் சாதனை செய்தவர் சிவா ஐயாதுரை.

தம்முடைய கல்வி வளர்ச்சிக்கும் சாதனைக்கும் அவர்தம் பெற்றோர்கள் **கரங்கொடுத்ததாகக்** கூறுகிறார். மேலும், **தினந்தோறும்** கடுமையாக உழைத்தும் இருக்கிறார். இந்தப் பின்னணியில்தான்

5.3.5 திரிதல் விகாரப் புணர்ச்சியில் மகர ஒற்று 'ம்', க், ச், த் ஆகிய வல்லினத்தோடு புணர்தல் பற்றி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

1993 இல் அப்போதைய அமெரிக்க அதிபராக பில் கிளிண்டன் இருந்தபோது, ECHO MAIL என்ற முறையை உருவாக்கிக் கொடுத்தார். அதற்காகப் பரிசும் கிடைத்தது. அவர் உருவாக்கிய இந்த மின்னஞ்சல் நிருவாக முறை உலகிலேயே முதன்முதலில் உருவாக்கப்பட்டது. இஃது அவரின் மற்றுமொரு கண்டுபிடிப்பு ஆகும். இவரின் கண்டுபிடிப்புகள் நம் **உள்ளங்கவரும்** வண்ணமாக நிமிர்ந்து நிற்கின்றன.

## இடுபணி 1

**மகர ஒற்று (ம்), க் வல்லினத்தோடு சேரும்போது ஏற்படும் திரிதல் புணர்ச்சிக்கு எடுத்துக்காட்டுகள் ஐந்தனை எழுதுக.**

## இடுபணி 2

**மகர ஒற்று (ம்), ச், த் ஆகிய வல்லினத்தோடு சேரும்போது ஏற்படும் திரிதல் புணர்ச்சிக்கு எடுத்துக்காட்டுகள் ஐந்தனை எழுதுக.**

## இடுபணி 3

**திரிதல் விகாரப்புணர்ச்சியில் - மகர ஒற்று 'ம்', க், ச், த் ஆகிய வல்லினத்தோடு புணர்தல் விதியின் அடிப்படையில் சேர்த்தெழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | திறம் | + | கொண்டான் | = | |
| 2. | கரம் | + | தொடு | = | |
| 3. | நிலம் | + | தா | = | |
| 4. | குலம் | + | கெடுத்தான் | = | |

## வளப்படுத்துதல்

**மேற்கண்ட சொற்களுள் இரண்டனைத் தெரிவுசெய்து வாக்கியம் அமைத்திடுக.**

## குறைநீக்கல்

**திரிதல் விகாரப்புணர்ச்சியில் - மகர ஒற்று 'ம்', க், ச், த் ஆகிய வல்லினத்தோடு புணர்தல் விதியின் அடிப்படையில் பிரித்தெழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | வலஞ்சுழித்து | = | | + | |
| 2. | வளந்தேடி | = | | + | |
| 3. | குணங்கொண்டான் | = | | + | |
| 4. | இளந்தமிழ் | = | | + | |

## தொகுதி 9 வரலாற்றை மீட்டெடுப்போம்

### பாடம் 1 பூஜாங் பள்ளத்தாக்கு

விளம்பரத்தை உற்றறிந்து நண்பருடன் முக்கியத் தகவல்கள் பற்றிக் கலந்துரையாடுக.

# மலைத்தமிழ்ச் சுற்றுப்பயண நிறுவனம்

**தமிழர் வரலாற்றை அறிந்து கொள்வதற்கு ஓர் அரிய வாய்ப்பு!**
**2 நாள், 1 இரவு சுற்றுலா**









- தமிழர் வரலாறு சார்ந்த அகழ்வாராய்ச்சி அருங்காட்சியகம்.
- 1700 ஆண்டுகள் பழமை.
- 100க்கும் மேற்பட்ட அகழ்வாராய்ச்சிப் பொருள்கள்.
- 3 வேளை உணவு, போக்குவரத்து (வசதி), நான்கு நட்சத்திரத் தங்கும் விடுதி ஆகியன உட்பட ஒருவருக்குத் தலா மலேசிய RM250.00 மட்டுமே.
- தமிழ் பேசும் சுற்றுலா வழிகாட்டி.
- சுற்றுலா நாள்: ஒவ்வொரு மாதத்தின் இறுதி வாரம் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை.
- ஒவ்வொரு மாதமும் 15ஆம் தேதிக்குள் பதிவு செய்கிறவர்களுக்கு 25% சிறப்புக் கழிவு.
- புறப்படும் இடம்: பத்துமலை வாகனம் நிறுத்துமிடம்.


**தொடர்புக்கு:** 012 1114507 **(திரு.கனல்வீரன்)**
**அலுவலகம்:** 03-67852980
**மின்னஞ்சல்:** kanal_veeran11@gmail.com

1.5.3 விளம்பரத்திலுள்ள தகவல்களையொட்டிக் கருத்துரைப்பர்; முடிவு கூறுவர்.



## இடுபணி 1

**கண்டறிந்த தகவல்களை ஆராய்ந்து கருத்துரைத்திடுக. உமது முடிவினைக் கூறுக.**




கருத்துரைத்திடவும் முடிவு செய்திடவும் உதவும் வரிப்படக்கருவி

## இடுபணி 2

**விளம்பரத்தைப் பார்வையிட்ட பிறகு எந்தெந்தக் கூறுகள் உங்களது பங்கேற்பை உறுதி செய்யும் என நினைக்கின்றீர்கள் என்பதைக் கலந்துரையாடிக் கருத்துரைத்திடுக.**

## இடுபணி 3

**விளம்பரத்தில் பங்கேற்பாளரை ஈர்க்கும் வகையில் அமையாத கூறுகள் யாவை? என்ன காரணம் என்பதைக் கூறுக.**

## வளப்படுத்துதல்

**விளம்பரத்தில் காணப்படும் தகவல்களைக் கருத்துரைத்திடுக; முடிவினைக் கூறுக.**

### அருங்காட்சியகத்தில் வேலை வாய்ப்பு

**இலாகா: தேசிய அருங்காட்சியகம், தேசியக் கலைக்கூடம், தேசியப் பழஞ்சுவடி காப்பகம்**

**தொடக்க ஊதியம்: RM1600.00**

**விண்ணப்பத் தகுதிகள்:**
- இளங்கலைப் பட்டம் (சமூகவியல், மானுடவியல், வரலாறு, நுண்கலை & கட்டடக் கலை)
- எஸ்.பி.எம். அல்லது அதற்கொத்த தேர்வில் மலாய் மொழியில் தேர்ச்சி
- 35 வயதிற்குட்பட்டவர்கள்

**பொறுப்புகள்:**
- அருங்காட்சியக நிர்வாகப் பணிகளைச் செய்தல்
- அருங்காட்சியகக் கண்காட்சிகள் ஒருங்கிணைத்தல்
- ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளுதல்

**விண்ணப்ப இறுதி நாள்:** 31.03.20□□

## குறைநீக்கல்

**பின்வரும் இரு கூறுகளை ஒட்டி கருத்துரைத்து முடிவு கூறுக.**

தொடக்க ஊதியம் | கல்வித் தகுதி

தொகுதி 9

# பாடம் 2 சரவாக் மாநிலத்தில் தமிழர்கள்

விரைந்து வாசித்துக் கருத்துகளை அடையாளம் கண்டு கூறுக.



மாத்தாங் மலைக் கோவிலின் பழைய தோற்றம்



மாத்தாங் மலைக் கோவிலின் புதிய தோற்றம்

மலாயாவைத் தவிர, சரவாக்கிலும் தமிழர்கள் குடியேறி உள்ளனர் என்பது உங்களுக்குத் தெரியுமா? சரவாக் தமிழர்களின் வரலாற்றுப் பின்னணி மலையகத் தமிழர்களைக் காட்டிலும் வேறுபட்டது. சார்லஸ் புரூக்கின் கட்டுப்பாட்டில் சரவாக் இருந்தபோது, 1867ஆம் ஆண்டு தென்னிந்தியத் தமிழர்கள் அழைத்து வரப்பட்டனர்.

இவர்கள் மாத்தாங் தோட்டத்தில் தேயிலை மற்றும் காப்பி பயிரிடும் பணியில் அமர்த்தப்பட்டனர். தொடக்கக் காலத்தில் சுமார் 2000 கூலித் தொழிலாளிகள் அழைத்து வரப்பட்டதாக வரலாற்றுப் பதிவுகள் கூறுகின்றன. தேயிலை, காப்பித் தோட்டங்களின் **பின்னடைவுக்குப்** பிறகு 1912ஆம் ஆண்டு முதல் அரசாங்கம் இவர்களைப் பொது இலாகாத் துறை, இரயில் துறை, அஞ்சல் மற்றும் டெலிகிராம் துறை போன்ற துறைகளில் பணியமர்த்தியது.

இவர்கள் தங்கள் பண்பாட்டினை, குறிப்பாகச் சமய வழிபாடுகளைக் கைவிடாது பின்பற்றி வருகின்றனர். தொடக்கக் காலத்தில் கைவிடப்பட்ட மாத்தாங் மலைக் கோவிலை 1970இல் மறுசீரமைப்புச் செய்தனர். இன்று அங்குத் தொடர்ந்து வழிபாடு நடைபெற்று வருகிறது. ஆக, தற்போது சரவாக் மாநிலத்தின் கூச்சிங் நகரில் மொத்தம் மூன்று இந்து ஆலயங்கள் இருக்கின்றன. மேலும், சரவாக் மாநிலத்தில் இந்தியர்களின் மேம்பாட்டிற்காகவும் பண்பாட்டு **விழுமியங்களைக்** கட்டிக் காப்பதற்காகவும் சில பொது அமைப்புகளும் முக்கியப் பங்காற்றி வருகின்றன.

இவற்றைத் தவிர்த்து, பொது வாழ்க்கையிலும் தமிழரின் பங்கேற்பு இருந்துள்ளதை வரலாற்றில் காண முடிகின்றது. இவ்வகையில் குறிப்பிடத்தக்க ஒருவர் டாக்டர் சொக்கலிங்கம்

2.3.7 வரலாறு தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

ஆவார். இவர் சரவாக்கில், நகராட்சி சபை உறுப்பினராகவும், தொடர்ந்து மாநிலச் சபை உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டார். மேலும், மாநிலச் சபையின் சபாநாயகராகவும் பொறுப்பு வகித்தார். இவரின் சேவையைப் பாராட்டும் வண்ணம்தான் அவர் பெயரைக் கூச்சிங் நகரின் ஒரு சாலைக்கும் சூட்டியுள்ளனர்.

மேலும், தமிழ்மொழியைப் பேணிக் காத்து வளர்க்கும் முயற்சியிலும் அங்குள்ள தமிழர்கள் ஈடுபட்டனர். இவர்களின் கூட்டு முயற்சியில் தமிழ்மொழியை **மீட்டெடுக்கும்** நடவடிக்கை 1937ஆம் ஆண்டுக்குப் பிறகு மிகத் துரிதமாக நடைபெற்றது. இதன் விளைவாகப் பகுதி நேர ஆசிரியர்களை வைத்துத் தமிழ்ப்பள்ளி ஒன்றை இவர்கள் நடத்தி வந்தார்கள்.

தற்போது சரவாக் மாநிலத்தில் திரு. குமாரசாமி அவர்கள் 'கப்பித்தான்' பொறுப்பில் மாநில அரசாங்கத்தால் 2005ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார். இவர் இந்தியர்களின் **நலன்** சார்ந்த திட்டங்கள் அல்லது நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக அமர்த்தப்பட்டவர். பின்னர், அவர் 'பெங்ஹுலு'வாகப் பொறுப்பேற்றார்.

ஆக, சரவாக் தமிழர்களின் வரலாறு மலாயாத் தமிழர்களின் வரலாற்றிலிருந்து வேறுபட்டது. அடிப்படையில் இவர்கள் ஒரே மொழியியல் பின்னணியைக் கொண்டிருந்தாலும் அவர்களுக்கெனத் தனிப் பாணியைக் கொண்டுள்ளார்கள். இருப்பினும், சரவாக் மாநிலத்தில் தொடர்ந்து தங்கள் மொழியையும் பண்பாட்டையும் சமயத்தையும் கட்டிக்காத்து வருகிறார்கள் என்பது போற்றுதற்குரியது.

## இடுபணி 1

**வண்ணமிடப்பட்ட சொற்களுக்கு அகராதியின் துணைகொண்டு சூழலுக்கு ஏற்ற பொருள் கூறுக.**

## இடுபணி 2

**வினாக்களுக்கு விடை தருக.**

1. சரவாக் மாநிலத்திற்குத் தமிழர்கள் அழைத்து வரப்பட்டதன் நோக்கம் யாது?
2. எதற்காக சரவாக் மாநிலத்தில் தமிழர் ஒருவரின் பெயர் சாலைக்குச் சூட்டப்பட்டது?
3. சரவாக் தமிழர்கள் எவற்றையெல்லாம் கட்டிக்காக்க முயன்றனர்? ஏன்?
4. மலாயாத் தமிழர்களுக்கும் சரவாக் தமிழர்களுக்கும் உள்ள வேறுபாடுகளைக் கூறுக.
5. சரவாக் மாநிலத்தில் உள்ள மாணவர்களோடு நீர் எவ்வாறு நட்பை வளர்த்துக்கொள்ள இயலும் என்பதனை விளக்குக.
6. சரவாக் தமிழர்களின் சிறப்புகளாக எவற்றை நீர் உணர்கிறீர்?

## இடுபணி 3

**உமது இடத்தில் வாழும் தமிழர்கள் வரலாற்றைச் சித்தரிக்கும் வகையில் குறுங்காணொளி ஒன்றனைத் தயார் செய்க.**

## வளப்படுத்துதல்

**உரைநடைப் பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**



பேராக் மாநிலத்தின் பத்துகாஜா பட்டணத்தின் அருகில் அமைந்துள்ள பழங்கால மாளிகை ‘கெல்லிஸ் காஸ்டல்’ எனும் மாளிகை ஆகும். இந்த மாளிகை 1910ஆம் ஆண்டு வில்லியம் கெல்லி சிமித் என்கின்ற ஒரு தோட்ட முதலாளியின் அழகிய கற்பனையில் உருவான கனவுமாளிகை. இம்மாளிகை தமிழ்நாட்டுச் தச்சர்களைக் கொண்டு கட்டப்பட்டது. இந்தியாவின் ஆக்ராவில் புகழ்பெற்ற ‘மொகூல்’ அரண்மனையின் சாயலில் இம்மாளிகை அமைந்தது. இந்தக் ‘கெல்லிஸ் காஸ்டல்’ உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மகாலோடு ஒப்பிட்டுக் கூறப்படுகிறது. தாஜ்மகாலைத் தம் காதல் மனைவி மும்தாஜுக்குக் கட்டினார் ஷாஜகான்.

அதைப் போன்று, தம் அன்புமனைவி எக்னசுக்கு அன்புப் பரிசாக, இந்த மாளிகையைக் கட்டினார் கெல்லி சிமித். மலாயாவில் முதன் முதலாக மின்தூக்கியைப் பயன்படுத்திய மாளிகையாகத் தம் மாளிகையை ஆக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, மின்தூக்கியைக் கொள்முதல் செய்ய லிஸ்பன் சென்றார் கெல்லி. ஆனால், நோயின் காரணமாக அங்கேயே இறந்து போனார். அதனால், இந்த மாளிகையின் கட்டுமானம் முழுமை பெறவில்லை. ஏறக்குறைய, ஒரு நூற்றாண்டு ஆனாலும், இம்மாளிகையில் கெல்லி சிமித் குடும்பத்தாரின் ஆவிகள் உலவிக் கொண்டிருப்பதாக ஒரு கட்டுக்கதையும் உலவிக் கொண்டிருக்கிறது. இருப்பினும், இம்மாளிகை இன்றும் சுற்றுலாப் பயணிகள் பலரையும் ஈர்த்த வண்ணம் உள்ளது.

1. கெல்லிஸ் மாளிகையின் சிறப்புகள் யாவை?
2. கெல்லி இம்மாளிகையை ஏன் கட்ட விரும்பினார்?
3. கெல்லி சிமித்தின் நோக்கம் பற்றிய உமது கருத்து யாது?
4. கெல்லிஸ் மாளிகை இன்று எவ்வகையில் பயன்படுகின்றது?
5. கட்டுமானப் பணிகள் தடைபட்டது பற்றி நீர் என்ன நினைக்கின்றீர்?

## குறைநீக்கல்

**பனுவலை வாசித்து வரலாற்று நிகழ்வுகளை நிரலொழுங்கு வரிப்படத்தில் நிறைவு செய்க.**

பத்துமலைக் கோயில் உலகப் புகழ்பெற்ற திருத்தலமாகும். 1878இல் பத்துமலைப் பகுதிகளில் இருந்த சுண்ணாம்புக் குன்றுகளை ஆய்வு செய்த அமெரிக்க தாவரவியலாளர் வில்லியம் ஹோர்னடே என்பவர்தாம் பத்துமலையைப் பற்றி வெளியுலகத்திற்கு அறிவித்தவர். அதன்பின் பத்துமலையின் பெயர் புகழடைந்தது. அதனைத் தொடர்ந்து 14 ஆண்டுகள் கழித்து 1891இல் தம்புசாமிப் பிள்ளை அங்கு ஒரு கோயிலைக் கட்டினார். பத்துமலைக் கோயிலின் நுழைவாயில் ஒரு வேல் வடிவத்தில் இருந்தது அவரைப் பெரிதும் கவர்ந்தது. பத்துமலைக் கோயிலில் முருகப் பெருமானை வைத்து வழிபடத் தொடங்கினர். 1891இல் பத்துமலையின் குகைக்கோயிலில் சுப்ரமணியர் சிலையை வைத்து அருச்சித்தனர். 1892இல் இருந்து பத்துமலையில் தைப்பூசக் கொண்டாட்டம் கொண்டாடப்பட்டு வருகிறது.

பாடம் 3 **வரலாற்றுக் கழகம்**

**விரைந்து வாசித்துக் கருத்துகளை அடையாளம் கண்டு கூறுக.**

**சுபாங் ரியா தேசிய இடைநிலைப்பள்ளியின் தமிழ்மொழிக் கழக**
**உலகத் தாய்மொழி நாள் செயலறிக்கை**

1.0 **தொடக்கம்**

சுபாங் ரியா தேசிய இடைநிலைப்பள்ளியின் தமிழ்மொழிக் கழகத்தின் ஏற்பாட்டில் கடந்த 21 பிப்ரவரி 20☐☐ காலை மணி 7:30 முதல் காலை மணி 9:30 வரை பள்ளி மண்டபத்தில் உலகத் தாய்மொழி நாள் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்கு மாநிலக் கல்வி இலாகாவின் தமிழ்மொழிப் பிரிவின் உதவி இயக்குநர் சிறப்பு வருகை புரிந்து, நிகழ்ச்சியை அதிகாரப்பூர்வமாகச் சிறப்புரையாற்றித் தொடக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மூவினத்தையும் சார்ந்த பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

2.0 **வரவேற்புரை**

இவ்விழாவின் ஏற்பாட்டுக் குழுச் செயலாளர் செல்வன் மகிழவன் தமதுரையில் அனைவரையும் வரவேற்றார். அவர் உலகத் தாய்மொழி நாள் கொண்டாட்டம் கொண்டாடுவதன் நோக்கத்தையும் தாய்மொழி நாள் கொண்டாட்டத்தின் பின்னணியையும் தெரிவித்தார்.

3.0 **தலைமையுரை**

பள்ளியின் முதல்வர் திரு. பார்த்திபன் சதாசிவம் அவர்கள் தலைமையுரையாற்றினார். இவ்விழா கொண்டாடப்படுவதன் முக்கியத்துவத்தையும் பல்லின மக்கள் வாழும் மலேசியாவில் தாய்மொழி தொடர்ந்து காக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் பற்றிப் பேசினார்.

4.0 **திறப்புரை**

மாநிலக் கல்வி இலாகாவின் தமிழ்மொழிப் பிரிவு உதவி இயக்குநர் இவ்விழாவில் திறப்புரையாற்றினார். இன்றைய காலக்கட்டத்தில் பல்லின மக்களில் குறிப்பாகச் சிறுபான்மை மக்களிடையே தாய்மொழி பயன்பாடு குறைந்து வருவதாகவும், இவ்வேளையில் இவ்வாறான நிகழ்ச்சிகள் தாய்மொழி அவசியம் எனும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் என்றும் கூறினார். மேலும், இவ்வருமையான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்த தமிழ்மொழிக் கழகத்திற்குப் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொண்டார். தொடர்ந்து விழாவை அதிகாரப் பூர்வமாகத் தொடக்கி வைத்தார்.

5.0 **மாணவர் படைப்பு**

இவ்விழாவில் பல்லின மக்களின் தாய்மொழியைப் பிரதிபலிக்கும் வகையில் வெவ்வேறு தாய்மொழிகளைச் சார்ந்த ஏழு மாணவர்கள் பள்ளியின் சுலோகத்தைத் தத்தம் மொழிகளில் முழங்கினர். மேலும், தாய்மொழி நாளை முன்னிட்டு நடைபெற்ற போட்டிகளில் பங்குபெற்று வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

3.4.15 180 சொற்களில் செயலறிக்கை எழுதுவர்.

**6.0 முடிவுரை**

ஏற்பாட்டுக் குழுவின் துணைச் செயலாளர் செல்வி கவியாழினி நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி கூறினார். காலை மணி 9:00க்கு நிகழ்ச்சி நிறைவை எய்தியது.

அறிக்கை தயாரித்தவர், 29 மே 20☐☐



சீராளன் சிவனியன்,
செயலாளர்,
தமிழ்மொழிக் கழகம்,
சுபாங் ரியா தேசிய இடைநிலைப்பள்ளி.

**கவனத்தில் கொள்க**

**அறிக்கையின் கூறுகள்**

- தலைப்பு (கழகத்தின் பெயர், பள்ளி/இயக்கம், ஆண்டு)
- கழகத்தின் முன்னுரை
- நிகழ்ச்சிகள் - (நோக்கம், பங்கேற்பாளர்கள் & பயன்)
- முடிவுரை - கழகத்தின் வெற்றி/ எதிர்பார்ப்பு
- அறிக்கை தயாரித்தவர் (கையொப்பம், பெயர், பதவி, கழகம், பள்ளி)
- நாள்

**இடுபணி 1**

**செயலறிக்கையின் பின்வரும் விவரங்கள் பற்றி குழுவில் கலந்துரையாடுக.**

- செயலறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகள்.
- நடவடிக்கைகளில் குறிப்பிடப்படும் விவரங்கள்.

**இடுபணி 2**

**சட்டக அமைப்பை வழிகாட்டியாகக் கொண்டு செயலறிக்கையை நிறைவு செய்க.**

________ **இடைநிலைப் பள்ளியின்**
________ **கழகத்தின் செயலறிக்கை**

________ இடைநிலைப்பள்ளியில் வரலாற்றுக் கழகம் ______ ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

- நடவடிக்கை 1 (நோக்கம், பங்கேற்பாளர்கள், பயன்)
- நடவடிக்கை 2 (நோக்கம், பங்கேற்பாளர்கள், பயன்)
- நடவடிக்கை 3 (நோக்கம், பங்கேற்பாளர்கள், பயன்)
- நடவடிக்கை 4 (நோக்கம், பங்கேற்பாளர்கள், பயன்)

அறிக்கை தயாரித்தவர்
________ நாள்: ________
(பெயர் )
(பதவி )
(கழகம், பள்ளி )

**இடுபணி 3**

**நடவடிக்கைகள் துணைகொண்டு மொழிக் கழகத்தின் செயலறிக்கை ஒன்றனை எழுதுக.**

**மொழிக் கழகத்தின் செயல் நடவடிக்கை**

- உலகத் தமிழ்மொழி நாள் கொண்டாட்டம்
- மாணவர்களுக்கான தன்முனைப்பு
- சொற்போர்ப் பயிற்சி
- சிறுகதைப் பயிலரங்கு

**வளப்படுத்துதல்**

**உமது பள்ளியின் பூப்பந்துக் கழகத்தின் நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு 180 சொற்களில் செயலறிக்கை ஒன்றனைத் தயார் செய்க.**

**குறைநீக்கல்**

**செயலறிக்கையில் இடம்பெற வேண்டிய நடவடிக்கைகளை விவரித்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| 1. சுவரொட்டி தயாரிக்கும் போட்டி<br>எ.கா: | ● நோக்கம்: | மாணவர்களின் புத்தாக்கத் திறனை மேம்படுத்துவது |
| | ● பயன்: | 50 மாணவர்கள் பங்கெடுத்தனர்.<br>30 மாணவர்கள் சிறந்த முறையில் படைப்புகளை வழங்கினர். |
| 2. புதிர்ப் போட்டி | ● நோக்கம்: | |
| | ● பயன்: | |
| 3. புதையல் தேடுதல் போட்டி | ● நோக்கம்: | |
| | ● பயன்: | |

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

திருக்குறளை அறிக.

## குறளும் பொருளும்

விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின் (648)

கருத்துகளை முறையாகவும் இனிமையாகவும் சொல்லும் ஆற்றலுள்ளவர் சொன்ன வேலையை உலகத்தார் உடனே செய்வார்கள்.

கருத்து: இனிமையாகப் பேசக்கூடியவர் இடும் வேலையைப் பிறர் உடனே செய்வர்.



## சொல்லுதல் வல்லார்ப் பெறின்...



மார்ட்டின் லூதர் கிங், ஜே. ஆர். ஐக்கிய அமெரிக்காவில் சமூக உரிமைக்காகப் போராடிய ஆப்பிரிக்க சமூகத்தைச் சேர்ந்த அமெரிக்க நாட்டின் மாபெரும் தலைவர் ஆவார். அமெரிக்காவில் கறுப்பின மக்களை ஒதுக்கும் கொள்கையை எதிர்த்துப் போராடினார். அவர் காந்திய வழியில் வன்முறையற்ற அறப்போராட்டத்தின்வழி, இக்கொள்கையை எதிர்த்தார். மார்ட்டின் லூதர் கிங் அமெரிக்க வரலாற்றில் வரலாற்றுச் சின்னமாகக் கருதப்படுகிறார்.

இவர் 1962இல் அலபாமாவில் நடத்திய அறப்போராட்டம் பலரது கவனத்தை ஈர்த்ததுடன், தேசிய அளவில் புகழ்பெற்றது. கிங் 1963இல் ‘வேலையும் சுதந்திரமும் வேண்டி வாஷிங்டனுக்குப் பேரணி’ என்ற சுலோகத்துடன் மிகப் பெரிய பேரணிக்கு

4.2.3 மூன்றாம் படிவத்திற்கான திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

ஏற்பாடு செய்தார். இப்பேரணியில் பெருமளவில் மக்கள் திரண்டனர். இங்கு அவர் தமது 'எனக்கொரு கனவு உள்ளது' என்ற புகழ்பெற்ற சொற்பொழிவினை ஆற்றினார்.

**விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது**
**சொல்லுதல் வல்லார்ப் பெறின்** (குறள் 648)

எனும் வள்ளுவர் வாக்கிற்கேற்பக் கூறவந்த தமது கருத்துகளை முறையாகவும் இனிமையாகவும் சொல்லும் ஆற்றல் கொண்டிருந்ததால், அவரின் உரை அனைவரையும் ஈர்த்தது. அவர் சொல்லிய கருத்தில் நியாயம் இருந்ததை அனைவரும் ஏற்றனர். ஒரு வழக்குறைஞரான அவரின் பேச்சாற்றலும் கருத்துத் தெளிவும் மக்களை அவர்பால் ஈர்த்துத் திரளச் செய்தன; வெற்றியும் பெற்றார். எனவே, அமெரிக்க வரலாற்றில் இது மிகப் பெரிய திருப்புமுனையை ஏற்படுத்தியது. மறு ஆண்டில், அதாவது, அக்டோபர் 14, 1964இல் வன்முறையற்ற வகையில், நிறவெறிக் கொள்கையை எதிர்த்துப் போராடியதற்காக மார்ட்டின் லூதர் கிங்குக்கு அமைதிக்கான 'நோபல்' பரிசு வழங்கப்பட்டது.

## இடுபணி 1

**குறளையும் அதன் பொருளையும் வாசித்து உய்த்துணர்க.**

## இடுபணி 2

**குறளை மனனம் செய்து நயம்பட ஒப்புவித்திடுக; அதன் பொருளைக் கூறுக.**

## இடுபணி 3

**கற்ற குறளுக்கு ஏற்ற சூழல் அல்லது கதை ஒன்றனை எழுதுக.**

## வளப்படுத்துதல்

**கொடுக்கப்பட்டுள்ள வரியின் பொருளை எழுதுக.**

**விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது**

## குறைநீக்கல்

**குறளை நிரல்படுத்தி எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| தொழில்கேட்கும் | நிரந்தினிது | பெறின் | ஞாலம் |
| விரைந்து | வல்லார்ப் | சொல்லுதல் | |


# தொகுதி 10 மொழியே நமது விழி

## பாடம் 1 தமிழ்க் கல்வி

செவிமடுத்திடுக

**கருத்துகளைச் செவிமடுத்திடுக.**

**2011 முதல் 2017ஆம் ஆண்டு வரையிலான**
**மலேசியத் தமிழ்ப்பள்ளிகள் மற்றும் மாணவர்களின் எண்ணிக்கை**




மூலம்: மலேசியக் கல்வி அமைச்சு

நம் நாட்டில் தற்போது 500க்கும் மேற்பட்ட தமிழ்த் தொடக்கப்பள்ளிகள் உள்ளன. ஆனால், இந்திய மாணவர்கள் அனைவரும் இப்பள்ளிகளுக்குச் செல்வதில்லை. ஏறத்தாழ 50 விழுக்காடு இந்திய மாணவர்கள் மட்டுமே தமிழ்ப்பள்ளிகளில் பயில்கின்றனர். மற்றவர்கள் தேசியப் பள்ளிகளிலும் தேசிய வகைச் சீனப்பள்ளிகளிலும் பயில்கின்றனர்.

இதன் அடிப்படையில் 2011ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டு வரை தமிழ்ப்பள்ளிகளுக்குச் செல்லும் மாணவர் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து கொண்டே வருகிறது. 2011ஆம் ஆண்டு 11 இலட்சத்தில் இருந்த மாணவர் எண்ணிக்கை 2017ஆம் ஆண்டு 87,230 ஆக குறைந்து விட்டது. இதற்குப் பல காரணங்களை நாம் முன் வைத்தாலும் ஏன் இவ்வாறு நிகழ்ந்துள்ளது? இச்சூழலில் மாற்றங்களை எவ்வாறு கொண்டு வரலாம் போன்ற கேள்விகள் நம்முள் எழவே செய்கின்றன.

### இடுபணி 1

**கருத்துகளைச் செவிமடுத்துப் பட்டைக் குறிவரைவுடன் ஒப்பிட்டுக் கலந்துரையாடுக.**

### இடுபணி 2

**மாணவர்களின் எண்ணிக்கையை ஆண்டு வாரியாக ஒப்பிட்டுத் தொகுத்துக் கூறுக.**

1.1.3 செவிமடுத்தவற்றிலுள்ள கருத்துகளை ஒப்பிட்டுத் தொகுத்துக் கூறுவர்.


**இடுபணி 3**

**வழங்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் மாணவர்களின் எண்ணிக்கையையும் பள்ளிகளின் எண்ணிக்கையையும் தொகுத்துக் கூறுக.**

## வளப்படுத்துதல்

**இரட்டிப்புக் குமிழி வரைபடத்தைப் பயன்படுத்தி, இரு கவிஞர்களின் கருத்துகளையும் ஒப்பிட்டுத் தொகுத்துக் கூறுக.**

i-THINK




## குறைநீக்கல்

**கவிதைகளைச் செவிமடுத்துக் கருத்துகளைக் குறித்துக் கொள்க.**

செவிமடுத்திடுக



எளிய நடையில் தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்
இலக்கண நூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்
வெளியுலகில் சிந்தனையில் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெல்லாங் கண்டு
தெளிவுற்றும் படங்களொடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்
எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை யென்றால்
இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்

- பாவேந்தர் பாரதிதாசன்

அறிவியலுக் கேற்றபடி தமிழை மாற்றும்
ஆய்வுகளை மேற்கொள்ளல் நலம்ப யக்கும்
பொறியியலில் பூத்திருக்கும் கதிர்கள் எல்லாம்
புதுமைகளை அறுவடையாய் வழங்கும் போது
பொறியியலை வழங்குகின்ற நூல்க ளின்றேல்
போகின்ற வேகத்தில் பின்னே நிற்போம்
ஒருமொழியில் உலகத்தின் அனைத்துக் கூறும்
ஒருங்கேநாம் பெறுவதற்குத் தமிழைக் கற்போம்

- தீப்பொறி பொன்னுசாமி

செவிமடுத்திடுக



தொகுதி 10

## பாடம் 2 மொழிப்பற்று

**கதையைச் சரியான வேகத்துடனும் தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்திடுக.**



அமுதனின் அப்பா எனக்காகக் காத்துக் கொண்டிருந்தார். நெடிய உருவம்; அடர்த்தியான மீசை; மிடுக்கான தோற்றம்; பார்த்தவுடன் பயமுறுத்தும் தோற்றம்தான். அவரை நெருங்கினேன்.

"வணக்கங்க…! என்னைப் பார்க்கணுமுன்னு சொன்னீங்களாம்…"

"ஆமாம் சார்…! என் மகனைப் பி.டி.திரி. தேர்வுல தமிழ்ப்பாடத்தை எடுக்கச் சொல்லி வற்புறுத்தறீங்களாம்… ஏன் சார்?"

இப்படி, எடுத்த எடுப்பிலேயே அதிரடியாய்த் தாக்குவார் என்று நான் சற்றும் எதிர்ப்பார்க்கவில்லை.

"ஓ…! அதுங்களா? அமுதன் தமிழ்ப்பள்ளிலிருந்து வந்தவன்; திறமையான மாணவன். தமிழைத் தேர்வுப் பாடமா எடுத்தா நல்ல தேர்ச்சி எடுப்பான். அந்த நல்லெண்ணத்திலதான் அறிவுரை கூறினேன். வற்புறுத்தவில்லையே!" சமாளிக்க முயன்றேன்.

"அவனுக்குத்தான் பிடிக்கலிங்கல சார், விட்டுடுங்களேன். நேற்றெல்லாம் ஒரே அழுகை. உங்களைப் பார்த்துப் பேசச் சொல்லி ஒரே பிடிவாதம்.", வேலையிலிருந்து விடுப்பு எடுத்துக் கொண்டு, என்னைப் பார்க்க வந்த கோபம், அவரிடமிருந்து எரிச்சலாய் வெடித்துக் கொண்டிருந்தது.

"இங்க பாருங்க, தமிழ்மொழி நம்முடைய தாய்மொழி. அந்தப் பாடத்தைத் தேர்வுப் பாடமா பார்க்காம, கொஞ்சம் உணர்வாய்ப் பார்க்கணும். தமிழ்ப்பள்ளியில் ஆறாண்டுகள் படித்து, கல்வியைத் தொடங்கிய மாணவர்களே, அதைத் தேர்வுல எடுக்கலன்னா வேற இனத்து மாணவர்களா எடுப்பாங்க? நீங்க பேசறது உங்களுக்கே நல்லா இருக்கா?" நானும் என் குரலில் கொஞ்சம் கடுமையைச் சேர்க்க முற்பட்டேன்.

2.1.7 கதையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தற்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

“அட போங்க சார்...! இந்தக் காலத்தில போயி உயிரு உணர்வுன்னு பேசிக்கிட்டு இருக்கீங்க..., தமிழ்ப் படிச்சா, சோறா போடப் போவுது?”. அமுதனின் அப்பா இப்படி அலட்சியமாகப் பேசியது, என்னைக் கோபத்தின் உச்சத்திற்குக் கொண்டு சென்றது.

“நீங்கள் இப்படிப் பேசுவது ரொம்ப தப்புங்க. வயிற்றுப் பிழைப்புக்காக மட்டும் ஒரு மொழியைப் படிக்கனுமுன்னு சொல்வது சரியில்லைங்க. இந்த உலகத்திலேயே தாய்மொழி படிச்சா சோறு போடுமான்னு கேட்கிற ஒரே இனம் நாமதாங்க. மற்ற இனத்துகாரங்க தங்களது மொழியை ஏதோ ஓர் உணர்வுக்காகதான் படிக்கிறாங்க...”

என் கருத்தில் அவருக்கு உடன்பாடில்லை போலும். என் முகத்தைப் பார்க்காமல் மேலே சுற்றிக்கொண்டிருக்கும் மின்விசிறியைப் பார்க்கத் தொடங்குகிறார். நான் விடவில்லை.

“நம்ம தாய்மொழியைக் கற்பது வெறும் மொழியைக் கற்றல் இல்லைங்க. தாய்மொழியைக் கற்றால்தான் நம் பண்பாட்டை அறியமுடியும்; தொன்மையை அறிய முடியும்; இலக்கியங்களைக் கற்க முடியும்; ஏன்? தமிழன் என்ற அடையாளத்தையும் அறியமுடியும். அதானே தமிழனா பிறந்த நமக்குப் பெருமை?”. அதற்கு மேல் அவர் என்னைப் பேசவிடவில்லை.

“போதும் சார்...! என் மகனுக்கு மட்டுமல்ல, எனக்கே அவன் தமிழ்மொழியை ஒரு பாடமா எடுக்கிறதில உடன்பாடில்லை. அதிகமான பாடத்தை எடுத்தா அவனால மற்ற பாடங்களில் கவனம் செலுத்த முடியாது. நல்ல தேர்ச்சியும் கிடைக்காது. எனக்கு அவனோட தேர்ச்சிதான் முக்கியம்; அவனோட எதிர்காலம்தான் முக்கியம். அதனால, அவனை வற்புறுத்தாதீங்க” என்று எரிச்சலாகப் பேசிவிட்டு, விருட்டென்று, என்னிடம் விடை பெறாமலேயே வேகமாக வெளியேறினார் அமுதனின் அப்பா.

தமிழ்மொழி அறிவு மொழியாகவும் அறிவியல் மொழியாகவும் திகழும் ஆற்றல் கொண்டது என அறிஞர் பலர் கூறிய கூற்றுகளையும் நம் மொழியில் உள்ள படைப்புகளில் பொதிந்துள்ள வளங்களையும் அறியாது உள்ளனரே நம் மக்கள் என என் உள்ளம் அலை மோதியது.

அயர்வோடு நாற்காலியில் அமர்கிறேன். மேசையில் இருந்த அன்றைய நாளிதழில், ‘தமிழ்ப்பள்ளிக்கு அனுப்புவோம்’ என்ற தலைப்புச் செய்தியின் கீழே தம் இரண்டு பிள்ளைகளையும் தமிழ்ப்பள்ளியில் சேர்த்த மலாய்க்காரப் பெண்மணியும் அவரின் இரு பிள்ளைகளின் படமும் அச்சாகியிருந்தது. ஏனோ தெரியவில்லை, என் மனம் லேசாக வலிக்கத் தொடங்கியிருந்தது.

- மு.தமிழரசு

**இடுபணி I**

**கதையில் வரும் ஆசிரியர், தந்தை ஆகிய இருவரின் கதாபாத்திரங்களைப் பாகமேற்று, சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்திடுக.**

தொகுதி 10

## இடுபணி 2

**பின்வரும் பகுதியைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தற்குறிகளுக்கேற்ப வாசித்திடுக.**

புரிந்தது புரியாதது, தெரிந்தது தெரியாதது, பிறந்தது பிறவாதது அனைத்தும் அறிவோம். அதுபற்றி உமது அறிவுரை தேவையில்லை. எல்லாம் எமக்குத் தெரியும்.................................. கீரன்... எம் பாட்டிலே குற்றம் கூறுகிறாரா? கூறும், கூறும், கூறிப் பாரும்............................... நக்கீரரே! எம் பாட்டில் எங்குக் குற்றம் கண்டீர்? சொற்சுவையிலா? அல்லது பொருட்சுவையிலா?

காணொளி

## இடுபணி 3

திருத்திக் கொள்ளுங்கள் தயவு செய்து. அழைத்து வரவில்லை, இழுத்து வரச் செய்திருக்கிருக்கிறீர்கள். ............ கட்டளையா இது?

கரைகாண முடியாத ஆசை. பொன்னும் மணியும் மின்னும் வைரமும் பூட்டி மகிழ்ந்து, கண்ணே! முத்தே! தமிழ்ப் பண்ணே! என்றெல்லாம் குழவிக் கொஞ்சி, தங்கத்தால் ஆன கட்டிலிலே சந்தனத் தொட்டிலிலே, வீரனே ! என் விழி நிறைந்தவனே! வீரவழி வந்தவனே! என்று யாரைச் சீராட்டிப் பாராட்டினீர்களோ! அவனை, அந்த மனோகரனைச் சங்கிலியால் பிணைத்துச் சபை நடுவே நிறுத்தி, சந்தோஷம் கொண்டாட வேண்டும் என்ற உங்கள் தணியாத ஆசைக்குப் பெயர் கட்டளையா தந்தையே?

காணொளி

## வளப்படுத்துதல்

**கதையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்திடுக.**

மக்கள் நெரிசல் மிகுந்த மாநகர் தெரு. அத்தெருவில் மக்கள் கூட்டத்தை விலக்கிக்கொண்டு ஒரு குதிரை வண்டி வேகமாகக் ஓடிக் கொண்டிருந்தது. வண்டியினுள் நடுத்தர வயது பெண்மணி ஒருத்தியின் மடியில் பச்சிளங்குழந்தை ஒன்று இருந்தது. வண்டிக்காரனின் கட்டுப்பாட்டிலிருந்த குதிரை, திடீரென நான்குகால் பாய்ச்சலில் சிட்டாகப் பறக்கலாயிற்று. குதிரையை அடக்க இயலாத வண்டிக்காரன் தூக்கி எறியப்பட்டுக் கீழே விழுந்தான்.

## குறைநீக்கல்

**உச்சரித்துப் பழகுக.**

| | | |
|---|---|---|
| புரிந்தது | பணம் | குலை |
| அறிந்தது | வனம் | பள்ளம் |
| வாழைக் கறை | நகரம் | வளம் |
| குரைத்தது | பணி | குழைத்து |

## பாடம் 3 பேச்சுக் கலை

வரிப்படக்கருவியிலுள்ள கருத்துகளைத் தொகுத்துக் கூறுக.





**இடுபணி 1**

வரிப்படக்கருவியிலுள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**இடுபணி 2**

வரிப்படக்கருவியிலுள்ள விவரங்களைத் தொகுத்து எழுதுக.




3.3.3 வரிப்படக்கருவியிலுள்ள விவரங்களைத் தொகுத்து எழுதுவர்.

தொகுதி 10

**இடுபணி 3**

**சிறந்த மேடைப் பேச்சாளருக்கான பின்வரும் கூறுகளைத் தொகுத்து எழுதுக.**

தொடக்கம் | கருத்து வைப்பு முறை | கருத்துத் தொகுப்பு /முடிவு

## வளப்படுத்துதல்

**வரிப்படக்கருவியிலுள்ள விவரங்களைத் தொகுத்து எழுதுக.**

**தமிழ்மொழி வளர்ச்சிக்கான வழிமுறைகள்**

- அன்றாட வாழ்வில் தமிழ்மொழியைப் பயன்படுத்துதல்.
- தமிழ்க் கல்வியைத் தொடர்ந்து நிலைநிறுத்துதல்.
- தமிழ்மொழியில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்.
- பிறமொழி நூல்களைத் தமிழ்மொழியில் மொழிபெயர்த்தல்.
- இளைய தலைமுறையினரிடையே மொழிப்பற்றை ஊட்டுதல்.

**தமிழ்மொழி வளர்ச்சிக்கான வழிமுறைகள் தொடர்பான வரிப்படக்கருவி**

## குறைநீக்கல்

**வரிப்படக்கருவியிலுள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

**காணொளி விளையாட்டுகள்**

- இளைஞர்களிடையே பிரபலம்; மகிழியாக அமைதல்.
- எதிர்மறை விளைவுகளைத் தவிர்த்தல்: பெற்றோர் கண்காணித்தல்; சேர்ந்து விளையாடுதல்.
- நல்ல விளைவுகள்
  - நன்மை அடைவோர்: புதுமை விரும்பிகள்; புதிய அனுபவங்களை நாடுவோர்; புதிய தொழில்நுட்பங்களில் ஆர்வமுடையோர்.
- தீய விளைவுகள்
  - எளிதில் கோபப்படுதல்; உணர்ச்சி வசப்படுதல்; யோசிக்காமல் செயல்படுதல்; கட்டுப்பாடுகளை மீறுதல்.


**காணொளி விளையாட்டுகள் பற்றிய வரிப்படக்கருவி**

## பாடம் 4 இலக்கணம்

**திரிதல் விகாரம் அறிக.**

மகர ஒற்று (ம்) க், ச், த் ஆகிய வல்லினத்தோடு புணரும்போது இன மெல்லெழுத்தாகத் திரியும்.

| | | | | |
|---|---|---|---|---|
| மரம் | + | கண்டான் | = | மரங்கண்டான் |
| மரம் | + | சாய்ந்தது | = | மரஞ்சாய்ந்தது |
| வரம் | + | தா | = | வரந்தா |



பாவலேறு எனவும் பெருஞ்சித்திரனார் எனவும் தமிழ் உணர்வுகளால் போற்றி மதிக்கப்படும் இராசமாணிக்கம் 10.3.1933இல் பிறந்தார். பெருஞ்சித்திரனார் தென்மொழி என்னும் இதழை 1959இல் தொடங்கி, தொடர்ந்து வழிநடத்தி வந்ததற்காக நாம் சிரந்தாழ்த்தி அவருக்கு நன்றி மலர்களைச் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பெருஞ்சித்திரனார், அக்காலத்தில் வீறுகொண்டு எழுந்த இந்தி திணிப்பைக் கண்டு கடுங்கோபத்திற்கு உள்ளானார். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் இவரின் தென்மொழி இதழுக்குத் தனிப்பெரும் இடமுண்டு.

தம் இலக்கியப் பணிகளுக்கு அரசுப் பணி பெருந்தடையாக இருந்ததால் அறஞ்சார்ந்த பணியாக முழுநேரம் மொழி பணியாற்ற அரசுப்பணியை உதறினார்; மனங்கோணாது தமிழ்ப்பணியைத் தொடர்ந்தார்.

### இடுபணி 1

**பனுவலில் இடம்பெற்றுள்ள மகர ஒற்று (ம்) க்,ச்,த் ஆகிய வல்லினத்தோடு புணரும்போது இன மெல்லெழுத்தாகத் திரியும் சொற்களைப் பட்டியலிடுக.**

### இடுபணி 2

**மகர ஒற்று (ம்) க்,ச்,த் ஆகிய வல்லினத்தோடு சேரும்போது ஏற்படும் திரிதல் புணர்ச்சி விதிக்கு ஏற்பச் சேர்த்து எழுதுக.**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. குணம் | + | சார்ந்த | = | | 4. பலம் | + | சேர்ந்தது | = |
| 2. தினம் | + | தோறும் | = | | 5. தினம் | + | சோறு | = |
| 3. பணம் | + | கேட்டான் | = | | 6. திறம் | + | கொண்டான் | = |

5.3.5 திரிதல் விகாரப்புணர்ச்சியில் மகர ஒற்று 'ம்', க், ச், த் ஆகிய வல்லினத்தோடு புணர்தல் பற்றி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

தொகுதி 10

**இடுபணி 3**

**மகர ஒற்று (ம்) க்,ச்,த் ஆகிய வல்லினத்தோடு சேரும்போது ஏற்படும் திரிதல் புணர்ச்சிக்கு எடுத்துக்காட்டு ஐந்தனைப் பட்டியலிடுக.**

### வளப்படுத்துதல்

**உரைநடைப் பகுதியை வாசித்து அதில் காணப்படும் மகர ஒற்று (ம்) க்,ச்,த் ஆகிய வல்லினத்தோடு சேரும்போது ஏற்படும் திரிதல் புணர்ச்சியை அடையாளம் கண்டு எழுதுக.**



நகுலனும் சுகந்தனும் இரவுச் சந்தைக்குச் சென்றனர்; உள்நாட்டுப் பழங்களை வாங்கினர். இருவரும் பழம் சுவையைச் சுவைத்து மகிழ்ந்தனர். தாமும் இவ்வாறான பழங்களைத் தங்கள் தோட்டத்திலும் நடுவதற்குத் திட்டமிட்டு நிலம் தேடினர். நிலத்தைத் தேடுவது இறைவனிடம் வரம் கேட்பது போல் சிரமமாக இருந்தது. நாட்டிலுள்ள வளம் கெட்டுப் போனதால் நல்ல நிலம் கிடைப்பது போராட்டமாகவே இருந்தது.

### குறைநீக்கல்

**பிரித்தெழுதுக.**

1. சினந்தொலைந்தது = ________ + ________
2. மனந்தேடியது = ________ + ________
3. குணங்கெட்டு = ________ + ________
4. தலங்கண்டு = ________ + ________
5. வலஞ்சுழி = ________ + ________
6. நிலஞ்சுருங்கி = ________ + ________

# தொகுதி 11 சுற்றுச்சூழலும் தூய்மையும்

## பாடம் 1 மண் மாசுபடுதல்

குழுவில் கலந்துரையாடுக.


கழிவுப் பொருள்கள்


பூச்சிக் கொல்லி மருந்து

மண் மாசுபடுதல்


மண்ணின் செழுமை மாற்றம்


செயற்கை உரத்தின் பயன்பாடு

**சொற்களைத் துணையாகக் கொள்க.**

- பாழடைந்த பொருள்கள்
- மட்காத பொருள்கள்
- இரசாயனத் தெளிப்பு
- நீர் இல்லாமை
- அமிலக் கலப்பு
- ஆற்றோரத் தாவரங்கள்

**இடுபணி 1**

**குழுவில் கலந்துரையாடி படங்கள் தொடர்பான விளக்கங்களைப் பெறக் கேள்விகள் கேட்டிடுக.**

1.2.3 விளக்கம் பெறக் கேள்விகள் கேட்பர்.


**இடுபணி 2**

**மண் மாசுபடுதல் தொடர்பான கேள்விகளைக் கேட்டிடுக.**

மண் மாசுபடுதல்
- நிகழும் முறை
- வகைகள்
- காரணங்கள்
- விளைவுகள்
- தீர்வுகள்

**இடுபணி 3**

**கேலிச்சித்திரம் உணர்த்த விழையும் கருத்தினையொட்டி விளக்கம் பெறுவதற்கு ஏற்ற கேள்விகளைக் கேட்டிடுக.**




**வளப்படுத்துதல்**

**படம் தொடர்பான விளக்கங்களைப் பெற ஏற்ற கேள்விகளைக் கேட்டிடுக.**






**குறைநீக்கல்**

**படம் உணர்த்த விழையும் கருத்தினையொட்டி விளக்கம் பெறுவதற்கு ஏற்ற மூன்று கேள்விகளைக் கேட்டிடுக.**

தொகுதி 11

## பாடம் 2 மாந்தர் வினை

**செய்தியைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப உரக்க வாசித்திடுக.**



செப்டம்பர் 10, 2017 - இந்தியப் பெருங்கடல் பகுதியும் தென் சீனக் கடல் பகுதியும் உலகின் மிகவும் சஞ்சாரமிக்க இரண்டு கடல்வழிப் பாதைகளாகும். இவற்றை மிக அதிகமான கப்பல்கள் போக்குவரத்திற்குப் பயன்படுத்தி வருகின்றன. இவ்விரு கடல் பகுதிகளின் உயரே மிகவும் சக்தி வாய்ந்த இடி மின்னல்கள் நிகழ்வதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு வேறெந்த கடல் பகுதியிலும் நிகழ்வதில்லை என்று கூறப்பட்டுள்ளது. இந்த விவரம் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்வழி தெரிய வந்துள்ளது. இந்த ஆய்வு 2005ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டு வரையில் மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறான இடி மின்னல்கள் பருவ நில மாற்றங்களால் நிகழவில்லை என ஆய்வாளர்கள் உறுதிபடக் கூறுகின்றனர். இவ்வாய்வாளர்களின் முடிவின்படி அவ்வழித்தடத்தைப் பயன்படுத்தும் கப்பல்களின் புகைக் கூண்டுகளிலிருந்து வெளியேற்றப்படும் புகைகளுடன் எரிவாயுத் துகள்களும் கலந்து வெளியேற்றப்படுகின்றன என்பது கண்டறியப்பட்டுள்ளது.

புகையுடன்கூடிய எரிவாயுத் துகள்கள் ஓர் அழுத்தத்தை உருவாக்கி, கடற்பகுதியின் மேல் திரளும் மேகக்கூட்டங்களைச் சிறு சிறு மேகத்திரட்சிகளாக ஆக்கிவிடுகின்றன. இவ்வாறு உடைபடும் மேகத்திரட்சிகள் வளிமண்டலத்தில் மிகவும் உயரே கொண்டு செல்லப்படுகின்றன. இதனால், அம்மேகங்களில் சிறு பனிக்கட்டிகள் உருவெடுக்கின்றன. இதனாலேயே மிகவும் சக்தி மிக்க இடி மின்னல்கள் உருவாகுகின்றன என அந்த ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

எனவே, இடியும் மின்னலும் பயங்கரச் சக்தியுடன் நிகழவும், ஆபத்தை விளைவிக்கக்கூடியதாக அமையவும் மனித இனமே காரணமாக உள்ளதாக அந்த ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதனைத் தவிர்க்க வழிதேடலாமே!

2.1.6 செய்தியைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

தொகுதி 11

## இடுபணி 1

**நாளிதழில் தலைப்புச் செய்திகளைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்திடுக.**

தாது மணல் அள்ளப்படுவதால் நிலத்தடி நீர் மட்டம் பாதிக்கப்பட்டு உப்பு நீராக மாறுவது, நீர் மாசுபாட்டை ஏற்படுத்துகிறது என்கிறது மனித உரிமைப் பாதுகாப்பு மையம்.

சுற்றுச் சூழல் மாசுபாடுகளால் ஓசோன் படலத்துக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை எதிர்கொண்டு, அதனைப் பாதுகாக்க வீடுகள் தோறும் துளசிச் செடிகளை வளர்க்கவேண்டும் என்கிறது உலகப் பசுமை வளர்ச்சிக் குழு.

காற்றில் இருக்கின்ற மாசுபாடுகளால் ஒவ்வோர் ஆண்டும் 30 இலட்சம் பேர் அகால மரணம் அடைவதாக உலக சுகாதார நிறுவனம் மதிப்பீடு செய்துள்ளது.

சாலையோரம் மற்றும் பொது இடங்களில் குப்பைகளை எரிக்கும் மக்கள்: சுற்றுச் சூழல் விழிப்புணர்வு இல்லாத அவலம்.

## இடுபணி 2

**கீழ்க்காணும் பனுவலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப உரக்க வாசித்திடுக.**

கிள்ளான், பிப்ரவரி 24, 2018

சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது சுற்றுச்சூழலைத் தனி மனிதனோ, அமைப்போ, அரசாங்கமோ இயற்கைச் சூழலுக்காகவும் மனிதனின் நன்மைக்காகவும் பாதுகாக்கும் ஒரு முயற்சியாகும். பல கட்டட நிர்மாணிப்பினாலும் தொழில்துறை வளர்ச்சியினாலும் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகிறது. சுற்றுச்சூழல் தொடர்பான விழிப்புணர்வு மக்களிடையே பெருக வேண்டும். தற்போது, அரசாங்கமும் அரசு சாரா நிறுவனங்களும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றன. பள்ளி மாணவர்கள், பொது மக்கள் என அனைத்துத் தரப்பினரும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டும் எனச் சுற்றுச்சூழல் ஆர்வலர் கூறினார்.

## இடுபணி 3

**நாளிதழ்களில் உள்ள பல்வேறு செய்திகளைச் சேகரித்து அவற்றைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு, ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்திடுக.**

### வளப்படுத்துதல்

**நாளிதழிலுள்ள ஏதேனும் ஒரு செய்தியை ஏற்ற வேகம், தொனி, உச்சரிப்புடன் உரக்க வாசித்திடுக.**

### குறைநீக்கல்


**நோக்குக் குறியீட்டில் இடம்பெற்றுள்ள செய்தியைச் செவிமடுத்து, பின்பற்றி வாசித்திடுக.**

செவிமடுத்திடுக

## பாடம் 3 கழிவுநீர் மறுசுழற்சி

விளக்கப்படத்தையொட்டிக் குழுவில் கலந்துரையாடுக.

**கழிவுநீர் மறுசுழற்சி எவ்வாறு செயல்படுகின்றது?**




**கழிவுநீர் மறுசுழற்சி விளக்கப்படம்**

3.3.4 விளக்கப்படத்திலுள்ள விவரங்களைத் தொகுத்து எழுதுவர்.

**கவனத்தில் கொள்க**

- கருத்தை நிரல்படத்தில் தொகுத்திடுக.
- கோவையாக எழுதுக.
- முதலில், அடுத்து, தொடர்ந்து, இறுதியாக போன்ற சொற்களைப் பயன்படுத்துக.

## இடுபணி 1

**கழிவுநீர் சுத்திகரிப்புச் செயல்முறையை நிரலொழுங்கு வரைபடத்தில் நிறைவு செய்க.**


வீடு, அலுவலக, தொழிற்சாலை கழிவுநீரை வெளியேற்றுதல் → [ ] → [ ] → [ ] → [ ] → [ ] → குளோரின் → வீடு

## இடுபணி 2

**நிரலொழுங்கு வரைபடத்தை வழிகாட்டியாகக் கொண்டு விளக்கப்பட விவரங்களைத் தொகுத்து எழுதுக.**

## இடுபணி 3


**அமில வாயு தூய்மைக்கேட்டைத் தொகுத்து எழுதுக.**




**அமில வாயு தூய்மைக்கேட்டின் விளைவுகளின் விளக்கப்படம்**

## வளப்படுத்துதல்

**'ஏடிஸ்' கொசுவின் வாழ்க்கைச் சுழற்சி விளக்கப்பட விவரங்களைத் தொகுத்து எழுதுக.**




டிங்கியைப் பரப்பும் வைரஸ் கிருமி ஏடிஸ் எஜிப்டி என்கிற பெண் கொசு மூலமாகத்தான் பரவுகிறது.

## குறைநீக்கல்


**டிங்கிக் கொசுவின் வாழ்க்கைச் சுழற்சியின் மூன்று நிலைகளைத் தொகுத்து எழுதுக. வளப்படுத்துதல் பயிற்சியில் உள்ள விளக்கப்படத்தைத் துணை கொள்க.**

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

**அறநெறிச்சாரம் அறிக.**

**எப்பிறப் பாயினும் ஏமாப் பொருவற்கு**
**மக்கட் பிறப்பில் பிறிதில்லை - அப்பிறப்பில்**
**கற்றலும் கற்றவை கேட்டலும் கேட்டதன்கண்**
**நிற்றலும் கூடப் பெறின்.**

மனிதப் பிறப்பில் கற்க வேண்டியதைக் கற்க வேண்டும். கற்றறிந்த அறிஞர்களின் அரிய கருத்துகளைக் கேட்க வேண்டும். கேட்ட கருத்துகளின்படி வாழ்க்கையில் நடக்கவும் வேண்டும். இவ்வாறு செய்வதன்வழி உலகில் உள்ள மற்ற எந்தப் பிறப்புகளையும்விட மனிதப் பிறப்புச் சிறப்பானதாகவும் பாதுகாப்பானதாகவும் அமையும்.



**நிலா:** அம்மா! இன்று என் ஆசிரியர் அறநெறிச்சாரச் செய்யுள் ஒன்றனைக் கற்றுக் கொடுத்தார். இதனை இயற்றியவர் முனைப்பாடியார். இச்செய்யுளைக் கற்றுக்கொண்டால் நாம் வாழ்க்கையில் வழி தவறிச் செல்ல வாய்ப்பில்லை என்று ஆசிரியர் கூறினார். இதுதான் அச்செய்யுள் அம்மா:

எப்பிறப் பாயினும் ஏமாப் பொருவற்கு
மக்கட் பிறப்பில் பிறிதில்லை - அப்பிறப்பில்
கற்றலும் கற்றவை கேட்டலும் கேட்டதன்கண்
நிற்றலும் கூடப் பெறின்.

**அம்மா:** நிலா, நாம் கல்வியில் சிறந்து விளங்கும் பெரியோர்களின் புத்தகங்களைப் படிக்க வேண்டும். அவர்களின் அறிவுரைகளைக் கேட்டு அதன்படி நடக்க வேண்டும். அப்படிச்

4.3.3 மூன்றாம் படிவத்திற்கான பல்வகைச் செய்யுளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

செய்தால்தான் வாழ்க்கையில் நல்ல நெறிகளைக் கடைப்பிடித்து மேன்மையாக வாழ முடியும்.

**நிலா:** அம்மா, என்னிடம் சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற புத்தகங்கள் உள்ளன. அவை நற்பண்புகள் வளர்க்கும் கருத்துகள் கொண்ட இலக்கியச் செல்வங்கள். அவற்றைப் படித்து அவற்றின் வழி வாழ்க்கையில் நான் நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுக்கொள்ளப் போகின்றேன்.

**அம்மா:** அது மட்டுமன்று நிலா. நன்கு கற்று அறிந்து வாழ்வில் முன்னேற்றம் அடைந்த அறிஞர்களான ஐயா அப்துல் கலாம், அருட்பிரகாச இராமலிங்க வள்ளலார், மு. வரதராசனார் போன்ற இன்னும் பலருடைய வாழ்க்கை இந்தச் செய்யுளுக்குப் பொருத்தமானதாகவும் நமக்கு ஒரு முன்மாதிரியாகவும் அமையக்கூடும். ஓய்வு கிடைக்கும்போதெல்லாம் இந்த அறிஞர்களின் நூல்களைப் படி. அவை கூறும் அறிவுரைகளின்படி நட.

**நிலா:** அப்படியே செய்கின்றேன், அம்மா.

**இடுபணி 1**

**உரையாடலை வாசித்துச் செய்யுளையும் பொருளையும் அறிந்து கூறுக.**

**இடுபணி 2**

**பொருள் எழுதுக.**

- எப்பிறப்பாயினும்
- கற்றலும்
- கற்றவை
- ஏமாப்பொருவற்கு
- கேட்டதன்கண்
- பிறிதில்லை

**இடுபணி 3**

**செய்யுளை மனனம் செய்து நயம்பட ஒப்புவித்திடுக; எழுதுக.**

**வளப்படுத்துதல்**

**கேள்விகளுக்கு விடை எழுதுக.**

1. 'கற்க வேண்டியனவற்றைக் கற்க வேண்டும்' என்று குறிப்பிடப்படுவது யாது? ஏற்ற எடுத்துக்காட்டைத் தருக.
2. மேற்கண்ட அறநெறிச்சாரம் எவ்வாறு நம் வளமான வாழ்க்கைக்கு உதவும் எனக் கூறுக.

**குறைநீக்கல்**

**செய்யுள் அடிகளை நிரல்படுத்துக.**

| | |
|---|---|
| நிற்றலும் கூடப் பெறின் | கற்றலும் கற்றவை கேட்டலும் கேட்டதன்கண் |
| எப்பிறப் பாயினும் ஏமாப் பொருவற்கு | மக்கட் பிறப்பில் பிறிதில்லை - அப்பிறப்பில் |

# தொகுதி 12 வாழும் கலை

## பாடம் 1 கலைத் தொண்டு

**ஒலிநாடாவில் உரையைக் கவனமாகச் செவிமடுத்து அவ்வுரையின் வடிவமைப்பைக் கூறுக.**



செவிமடுத்திடுக

அவைத் தலைவர் அவர்களே, பெருமதிப்பிற்குரிய ஆசிரியர் திரு. புகழேந்தி அவர்களைப் பாராட்டிப் பேசுவதற்கு என்னை அழைத்த இந்நிகழ்ச்சியின் நெறியாளர் அவர்களே, இளைஞர் பணி மன்றத் தலைவர் திரு. அழகன் அவர்களே, இங்கே சிறப்புக்குரியவராக அமர்ந்திருக்கும் ஆசிரியர் திரு. செழியன் அவர்களே, ஏனைய ஆசிரியப் பெருமக்களே, பெற்றோர்களே, மற்றும் இங்கே குழுமியுள்ள மாணவ மணிகளே, உங்கள் அனைவருக்கும் என் அன்பு கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அவையோரே,

இந்நிகழ்ச்சி சிறப்பிற்குரிய ஒரு நிகழ்ச்சி; பொருள் பொதிந்த ஒரு நிகழ்ச்சியும்கூட. ஏன் இவ்வாறு சொல்கின்றேன்? ஒருவர் செய்த சிறந்த சேவைக்காக, பணிக்காகப் பாராட்டுவது ஒரு

1.3.5 பாராட்டுரை ஆற்றுவர்.

சீரிய பண்பு. அஃது, அவரின் பணியைப் பாராட்டுவது போன்றது. இப்பாராட்டைத் தனி மனிதரைப் பாராட்டுவதாகக் கருதக்கூடாது. அவரின் சேவைக்கு நன்றி உரைப்பது போன்றதாகக் கருத வேண்டும். நன்றி உரைப்பது நற்பண்பு அல்லவா?

எதற்காக இந்த நன்றி உரைப்பு? சேவை என்று சொன்னேனே, அந்தச் சேவை எது? நாடகக்கலை என்பது தமிழர் பண்பாட்டில், முக்கியமான ஒரு கூறு. காணொளிகளும், தொலைக்காட்சிகளும், சினிமாக்களும் மலிந்துவிட்ட இக்காலத்தில், நாடகக்கலை அரிதாகி வருகின்றது. அதனை உயிர்ப்பிக்கும் ஒரு பெரும் முயற்சியில் ஆசிரியர் புகழேந்தி அவர்கள் நெடுங்காலமாகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். இவ்வாறு சமுதாயம் கிட்டத்தட்ட மறந்துபோன ஒரு கலையை, மீண்டும் சமுதாயத்திற்கு நினைவூட்டுவது என்பது அரிய முயற்சி அல்லவா?

அதிலும் குறிப்பாக, இளைய சமுதாயத்தினரிடையே, நாடகக்கலையின்பால், ஓர் ஈர்ப்பினை ஏற்படுத்துவதென்பது எளிய செயலன்று. நாடகம் பற்றிய கருத்தரங்கங்கள் நடத்துவது, நாடகக்கலை தொடர்பான பயிற்சிகளை வழங்குவது, நாடகப் போட்டிகளை நடத்துவது, அவற்றிலே சமுதாயத்தினரை, குறிப்பாக, இளைஞர்களைப் பங்கு பெறச் செய்வது சுலபமன்று. இவற்றையெல்லாம், நம் அன்பிற்குரிய ஆசிரியர் புகழேந்தி அவர்கள் தொடர்ந்து வெற்றிகரமாகச் சாதித்துக் காட்டியுள்ளார். அதற்காகத்தான் இந்தப் பாராட்டு.

அவரும், அவர்தம் குழுவினரும் இணைந்து, தொடர்ந்து இப்பணியை ஆற்றி வருகின்றனர். இதற்கு, அவருடைய நற்பண்புகளும், பழகுறவு முறைகளும் முன்மாதிரியாகக் கொள்ளத் தக்கன. அவர் வயதிலே சற்றே முதிர்ந்தவராக இருப்பினும், இளைஞர்களுடனும் இணைந்து செயல்படும் திறமும், அவருடைய முயற்சிகளின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்துள்ளன எனத் துணிந்து கூறலாம். இவை மட்டுமல்ல, அவருடைய கனிவான பார்வை, இனிய பேச்சு, எவருடனும் எளிதாகப் பழகிடும் தன்மை போன்ற பண்புநலன்களே இந்தச் சாதனைகளுக்குக் காரணங்கள் என்பதனை உணர வேண்டும். இவை பொதுப் பணியாளர்களுக்கு ஒரு முன்மாதிரியாக அமைதல் வேண்டும்.

இன்னும் பல சொல்லிப் பாராட்டினாலும் தகும். பதவி ஓய்வு பெற்ற பின்னரும், தாமுண்டு தம் வேலையுண்டு என்று இல்லாமல், நாடகக்கலை சமுதாயத்தில் நிலைக்கவும் தழைக்கவும் தொண்டாற்றி மகிழும் ஆசிரியர் அவர்களைப் பாராட்டுவதில் பெருமை கொள்கின்றேன். வாழ்க அவர்தம் சேவை! வளர்க அவர்தம் தொண்டு! எனக் கூறி அமர்கின்றேன். நன்றி.

**கவனத்தில் கொள்க**

பாராட்டுரை வடிவமைப்பு

**தொடக்கம்**
- அவைத் தலைவருக்கு நன்றி
- அவையோருக்கு வணக்கம்

**கருத்துகள்**
- பாராட்டிற்கு உரிய செயலும் காரணமும்

**முடிவு**
- சுருக்கமும் விடைபெறலும்

**இடுபணி I**

**பாராட்டு மொழிகளை அடையாளங்கண்டு கூறுக.**

**எ.கா:** சிறப்புக்குரிய நிகழ்ச்சி

**இடுபணி 2**

**உரையின் முக்கியக் கருத்துகளைக் கண்டறிந்து கூறுக.**

**இடுபணி 3**

**குறிப்புகளைப் பயன்படுத்தி பாராட்டுரை ஒன்றனை ஆற்றுக.**

உங்கள் நண்பர் தற்காப்புக் கலைப் போட்டியை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளார். அவரை வாழ்த்தி பாராட்டுரை ஒன்றனை ஆற்றிடுக.

**குறிப்புகள்**
- அவை வணக்கம்
- பாராட்டிற்குரியவர்
- பாராட்டுவதற்கான காரணங்கள்
- ஒத்துழைப்பு நல்கியவர்கள்
- நன்றியும் முடிப்பும்

**பாராட்டிற்குரிய ஏற்பாடுகளும் நிகழ்ச்சிகளும்**

- பாராட்டிற்குரிய ஏற்பாடுகளைத் திட்டமிடல்
- பாராட்டிற்குரிய வேலைகள் பகிர்வு
- பல்வகையான போட்டி
- மக்களின் பாராட்டு

**வளப்படுத்துதல்**

**மாதிரிப் பாராட்டுரை ஒன்றனைத் தயார்செய்து வகுப்பின் முன் அவ்வுரையை ஆற்றுக.**

**குறைநீக்கல்**

**பாராட்டு மொழி ஐந்தனைப் பட்டியலிட்டுக் கூறுக.**

# பாடம் 2 தமிழரின் ஓவியக்கலை

**வாசிக்கும் முன் ஓவியம் பற்றிய தகவல்களைக் கூறுக.**

**உரைநடைப் பகுதியை ஆழ்ந்து வாசித்திடுக.**



தமிழரின் பண்பாட்டு அடையாளங்களுள் ஓவியக்கலைக்குத் தனிச் சிறப்புண்டு. தமிழர்கள் வளர்த்த **நுண்கலைகளின்** வரிசையில் ஓவியக்கலை முன்னணியில் நிற்பதாகச் சிலர் கூறுவர். எல்லைகளையெல்லாம் கடந்து எங்கும் பரந்து வாழும் மக்கள் மனங்களைக் கவர்வது ஓவியம். மக்களை வியக்க வைக்கும் விந்தை மொழி, ஓவியம். காண்பவரைக் கவர்ந்திழுக்கும் தன்மையது. உள்ளங்களைத் **தன்வயப்படுத்தும்** உயர்ந்த கலை ஓவியம். ஓவியம் பேசும் செய்திகள் பல; உணர்த்தும் கருத்துகளோ மிகப் பல.

பழங்கால மக்கள், தம் உள்ளக் கருத்துகளைப் **புலப்படுத்த** பாறைகளிலும் குகைகளிலும் கீறி எழுதினர். தம் எண்ணங்களைச் சித்திரம் வரைந்து வெளிப்படுத்தினர். இவற்றைத் தொல்பொருள் ஆய்வுகளாலும் இலக்கியச் சான்றுகளாலும் அறிந்துகொள்ள முடிகின்றது. தமிழகத்தில் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட குகை ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தமிழர்கள் ஓவியங்களை வரைவதற்கு

**கவனத்தில் கொள்க**

தமிழர் ஓவியத்திற்குப் பயன்படுத்திய சொற்கள்:
ஓவு, ஓவம், ஓவியம், சித்திரம், படம், வட்டிகைச் செய்தி.

தமிழர் ஓவியர்களைக் குறிப்பிடப் பயன்படுத்திய சொற்கள்:
ஓவியக் கலைஞர், ஓவியப் புலவன், கண்ணுள் விளைஞன், சித்திரக்காரர், வித்தக விளைஞன், வித்தகர், கிளவி வல்லோன்.

2.3.8 பண்பாடு தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.



நேர்கோடு, சாய்வுக்கோடு, வளைவுகோடு முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டனர். இவற்றையே **கோட்டோவியங்கள்** என்றனர். இவ்வரை கோடுகளின் மேல் வண்ணங்கள் பூசி அழகிய ஓவியங்களாக உருவெடுக்கச் செய்தனர்.தமிழர், அக்காலத்தில் ஓவியம் தீட்ட பல்வகைக் கருவிகளைப் பயன்படுத்தினர். வண்ணம் தீட்டும் கோல், தூரிகை, துகிலிகை, வட்டிகை எனப்பட்டது. வண்ணங்கள் குழப்பும் பலகைக்கு வட்டிகைப் பலகை எனப் பெயரிட்டழைத்தனர்.

தமிழர் வாழ்வில், ஓவியங்கள் அழகுணர்வின் **வெளிப்பாடாக** அமைந்தன. அரசரின் அரண்மனையில் சித்திரங்கள் சிறப்பிக்கப்பட்டன. அந்தப்புரங்களை அலங்கரித்தன; செல்வர் **வளமனைகளை** எழிலூட்டின; மாளிகைகள், ஆடலரங்குகள், கோவில் மண்டபங்கள், பொதுமன்றங்கள், கட்டடச் சுவர்கள் முதலிய பல இடங்களில் ஓவியங்கள் காட்சிப் பொருளாகின.

தமிழர்களின் ஓவியங்களுக்குரிய **கருப்பொருளாகப்** பலவும் இருந்துள்ளன. இயற்கைக் காட்சிகள், கற்பனைக் காட்சிகள், சமுதாய வாழ்க்கை முறைமை, இதிகாச புராணக்கதைகள் போன்றவை அவற்றுள் அடங்கும். விண்மீன்களையும் வரைந்த செய்தி, நெடுநல்வாடை என்னும் சங்க நூல் தரும் அரிய செய்தியாகும்.

ஈராயிரம் ஆண்டுகளாகப் போற்றிப் பாதுகாக்கப்பட்டு, வளர்ந்துவரும் கலையாக ஓவியக்கலை உள்ளது. இதனை **முன்னெடுத்துச் சென்று**, வளர்ப்பது இன்றைய தமிழர்தம் கடமை.

**இடுபணி 1**

**உரைநடைப் பகுதியை ஒட்டிய கேள்விகளுக்கு விடை எழுதுக.**

1. ஓவியக்கலையின் சிறப்புகள் யாவை?
2. ஓவியங்கள் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன?
3. “ஓவியம் பேசும் செய்திகள் பல; உணர்த்தும் கருத்துகளோ மிகப் பல,” என்று ஏன் சொல்லப்பட்டது?
4. தமிழகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட குகை ஓவியங்களின் மூலம் எதனை அறிந்து கொள்ளலாம்?
5. ஓவியங்களின் பயன்கள் யாவை?
6. தமிழர்களின் ஓவியக்கலை ஈடுபாட்டை ஊக்குவிக்க என்ன செய்யலாம்?

**இடுபணி 2**

**வண்ணமிடப்பட்ட சொற்களின் பொருள் எழுதுக.**

**இடுபணி 3**

**உரைநடைப் பகுதியை வாசித்து, முக்கியக் கருத்துகளைக் குழுவில் கலந்துரையாடுக.**

## வளப்படுத்துதல்

**உரைநடைப் பகுதியை வாசித்திடுக; வினாக்களுக்கு விடை எழுதுக.**



அறிவியல் முன்னேற்றம் மாந்தரின் அன்றாட வீட்டுப்பணிகளை எளிதாக்கியுள்ளது எனலாம். சமைக்கும் முறை, சமைக்கும் உணவு, உடுத்தல், ஓய்வினைக் கழித்தல் என எல்லா நடவடிக்கைகளும் மாறிவிட்டன. முதலில் விறகடுப்பில் சமைத்த முறை மாறி, வாயு அடுப்புகள் வந்தன; இன்று மின்னடுப்புகளில் சமைக்கின்றனர். வீட்டில் துணி துவைத்த பெண்கள், இன்று துணி துவைக்கும் மையங்களுக்குச் செல்வது வழக்கமாகிவிட்டது. துணி துவைக்கும் மையங்களில், துணிகளைத் துவைத்து, அங்கேயே இயந்திரங்களில் உலர்த்தி, பின்பு, காய்ந்த துணிகளை மடித்தே வீட்டிற்குக் கொண்டுவர முடிகிறது. இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கையில், அறிவியல் தொழில்நுட்பத்தின் துரித வளர்ச்சியால் மனிதனின் வாழ்க்கைப் பண்பாடும் மாறிவிட்டதுபோல் தோன்றுகின்றது.

1. அறிவியல் கண்டுபிடிப்புகளும் தொழில்நுட்ப மேம்பாடுகளும் மாந்தரிடையே ஏற்படுத்திய தாக்கங்கள் யாவை?
2. அறிவியல் கண்டுபிடிப்புகளும் தொழில்நுட்பமும் பெண்களுக்கு எவ்வகையில் உதவியுள்ளன?
3. அறிவியல் தொழில்நுட்பம் கொண்டு வந்துள்ள மாற்றங்கள் பற்றி உமது கருத்து யாது?

## குறைநீக்கல்

**உரைநடைப் பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**



கற்காலத்தில் இருந்த நிலையிலிருந்து, இன்று மனிதன் மிக நாகரிகம் பெற்றவனாக மாறிவிட்டான். மனிதனின் அறிவும் ஆற்றலும் இன்று மிகப் பெருகிவிட்டன. இந்த வளர்ச்சிக்குக் காரணமாய் விளங்குவது அறிவியலும் தொழில்நுட்பமும் ஆகும். இந்த நூற்றாண்டில், அறிவியல் கண்டுபிடிப்புகளும் தொழில்நுட்ப மேம்பாடுகளும் உலகப் பண்பாட்டையும் ஓரளவிற்கு மாற்றிவிட்டன எனலாம். எனவே, மனிதனின் வாழ்க்கை முறையும் மாற்றங்கண்டுவிட்டது. இந்த மாற்றங்கள் மாந்தர்க்கு நல்ல விளைவுகளையே கொண்டுவந்துள்ளன எனலாம்.

1. கற்கால மனிதன் மாறிவிட்டான் என்று ஏன் கூறப்படுகின்றது?
2. மனிதனின் அறிவாற்றல் பெருக்கத்திற்கான காரணங்கள் யாவை?

## பாடம் 3 வெற்றிக்கொரு பாராட்டு

**மௌனமாக வாசித்துப் பாராட்டுரையின் வடிவமைப்பை நினைவுகூர்க.**



அனைவருக்கும் என் முத்தமிழ் வணக்கம் உரித்தாகுக. இப்பள்ளியின் முதல்வர் புவான் மரியம் அவர்களே, பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் அவர்களே, இந்நிகழ்வை வழி நடத்திக் கொண்டிருக்கும் மாணவர் தலைவர் அறிவழகன் அவர்களே, எனக்கு இங்குப் பேச வாய்ப்பளித்த உங்கள் அனைவருக்கும் முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவையோரே,

இந்நிகழ்வின் நாயகராக வீற்றிருக்கும் என் தோழர் அமிழ்தன் அவர்கள் தேசிய அளவிலான சிலம்பக் கலைப் போட்டியில் முதல் நிலையில் வாகை சூடியது நாம் அனைவரும் அறிந்த ஒன்றே. இவரைப் பாராட்டும் பொருட்டு இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தோழர் அமிழ்தனை நான் சிறு வயதிலிருந்தே அறிவேன். விடாமுயற்சி நிறைந்தவர். அதுவே இவ்வெற்றிக்கு அடித்தளம். எதில் கால் பதித்தாலும் வெற்றி ஒன்றே இவரது இலக்காக இருப்பதால்தான் இவரால் இத்துறையில் பிரகாசிக்க முடிகின்றது. அதற்காகவே இவரைப் பாராட்ட வேண்டும். யானையின் பலம் தும்பிக்கையிலே, மனிதரின் பலம் நம்பிக்கையிலே என்பார்கள். அதுபோல் தம் திறமையின் மீது மிகுந்த நம்பிக்கை கொண்ட இவரின் இத்தகு குணம் பாராட்டுக்குரியதாகும்.

மேலும், ‘விழுவது எழுவதற்கே’ என்னும் கொள்கைப் பிடிப்புக் கொண்டவர் என் தோழர். பல முறை இவ்விளையாட்டுத் துறையில் தோல்வியைத் தழுவினாலும் இவரின் இந்தக் குணமே சோர்வினின்று இவரைத் தற்காத்து மேன்மேலும் முயற்சி செய்யத் தூண்டியுள்ளது எனலாம். இஃது அனைவராலும் போற்றப்பட வேண்டிய நற்குணமாகும், இத்தகைய குணம் பாராட்டுக்குரியது.

3.4.17 | 180 சொற்களில் பாராட்டுரை எழுதுவர்.

**'எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**
**திண்ணிய ராகப் பெறின்'** (**குறள்** 666)

என்பது குறள். இக்குறளுக்கு ஒப்ப, மிகுந்த ஈடுபாட்டோடும் உறுதியோடும் பயிற்சிகளில் ஈடுபட்டுத் தம் வெற்றியை நிலை நாட்டியுள்ளார். இதற்காகவும் இவரை வெகுவாகப் பாராட்டலாம். இவரின் இவ்வருங்குணம் பாராட்டுக்குரியது மட்டுமன்று; நம் அனைவராலும் கடைப்பிடிக்கப்பட வேண்டியதுமாகும்.

தோழர்களே,

அருமை நண்பர் அமிழ்தன் தற்காப்புக் கலை, விளையாட்டுத் துறை மட்டுமன்றி கல்வியிலும் சிறந்து விளங்குகின்றார்.

**'கற்க கசடற கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக'** (**குறள்** 391)


எனும் குறள் உரைக்கும் நெறிக்கு ஏற்ப, பல நூல்களைக் கற்பதோடல்லாமல், அவற்றின் கருத்துகளின்படி ஒழுகவும் செய்கிறார். ஒழுக்கம், அடக்கம், பணிவு என எல்லா வகையிலும் சிறப்புற்று விளங்கும் தோழர் அமிழ்தன் நம் அனைவருக்கும் சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்கிறார். இவர் காலடிச் சுவட்டைப் பின்பற்றி நாமும் வெற்றி மேல் வெற்றி குவிக்க ஆவன செய்வோம் எனக் கூறி விடை பெறுகின்றேன். நன்றி.

**இடுபணி 1**

**பாராட்டுரையின் சட்டகத்தை அமைத்திடுக.**

**இடுபணி 2**

**தமிழரின் நுண்கலைப் பயிற்சிப் பள்ளி ஒன்றனை நிறுவியவரைப் பாராட்டும் வகையில் 180 சொற்களில் பாராட்டு உரை எழுதுக.**



**இடுபணி 3**

**பூப்பந்துப் போட்டியில் மாநில அளவில் முதல் நிலையில் வாகை சூடிய உன் நண்பனைப் பாராட்டி ஒரு பாராட்டுரை எழுதுக.**

## வளப்படுத்துதல்

**முத்தமிழ் விழாவின்போது தமிழ் மாணவர்களைப் பாராட்டி பள்ளி முதல்வர் உரையாற்றுகிறார். படங்கள் மற்றும் குறிப்புகளின் துணையுடன் பாராட்டுரை எழுதுக.**





தமிழ் வகுப்பு மாணவர்கள் அமைதியாகக் கற்றல்.

தமிழ் மாணவர் பரிசு பெறுதல்.



**பாராட்டுரைக்கான வழிகாட்டிக் குறிப்புகள்**

- அவை விளிப்பும் வணக்கமும்; பாராட்டப்படுவோர்.
- பாராட்டப்படுவதற்கான பின்னணி;
  - மாணவர்களின் ஒழுங்கு முறைகள்;
  - எடுத்துக்காட்டான நடத்தைகள்;
  - கற்றலில் நாட்டம்;
  - கற்றலில் நல்ல தேர்ச்சி;
  - தமிழ் வகுப்பு மாணவர்கள் விளையாட்டுத்துறையிலும் முதன்மை பெறுதல்;
  - ஆசிரியரின் பங்கைப் போற்றுதல்.
- முடிப்பு: நன்றியும் எதிர்பார்ப்பும். தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்வதும்.

## குறைநீக்கல்

**பின்வரும் வழிகாட்டல்களைப் பயன்படுத்தி ஆடை அலங்காரக் கண்காட்சி ஏற்பாட்டாளர்களைப் பாராட்டி, பாராட்டுரை ஒன்றனை எழுதுக.**

- அவை விளிப்பும் வணக்கமும்
- தமிழர் ஆடை அலங்காரக் காட்சி
- புதுமையான ஆடை அணிகலன்கள்
- ஏற்பாட்டாளர்களின் சீரிய முயற்சி
- பாராட்டும் நன்றியும்

# பாடம் 4 இலக்கணம்

**கெடுதல் விகாரப்புணர்ச்சி அறிக.**

விகாரப்புணர்ச்சி
- தோன்றல்
- திரிதல்
- கெடுதல்

நிலைமொழியில் உள்ள 'மை' ஈறும் வருமொழியில் உள்ள முதலும் புணரும்போது, நிலைமொழியின் 'மை' ஈறு மறைந்து (கெட்டு) வருமொழி முதலுக்கேற்பத் திரிந்தும் தோன்றியும் வரும்.

எ.கா:

| | | | | |
|---|---|---|---|---|
| செம்மை | + | கோல் | = | செங்கோல் |
| பசுமை | + | பயிர் | = | பசும்பயிர் |
| சிறுமை | + | ஊர் | = | சிற்றூர் |
| தண்மை | + | நீர் | = | தண்ணீர் |

**கவனத்தில் கொள்க**

**பண்புப்பெயர்கள்:**
பசுமை, சிறுமை, தன்மை, செம்மை ஆகியன பண்பைக் குறிப்பதனால் பண்புப்பெயர்ச் சொற்களாகும். பண்புச் சொற்களில் பெரும்பாலும் 'மை' ஈற்றில் வரும்.

மலர், மை ஈற்றுப் பண்புப் பெயர்ப் புணர்ச்சி தொடர்பாக நான் வகுப்பில் பேச வேண்டும். அது தொடர்பாகச் சற்று விளக்கம் தருகிறாயா? நீதான் இலக்கணத்தில் சிறந்து விளங்குகிறாயே!





ஓ! அதுவா எழிலன்! என்னால் தற்போது எடுத்துக் காட்டுச் சொற்கள்தான் தர இயலும். இதோ அவை: வெண்குடை, செம்மலர், வெண்பட்டு என இன்னும் பல சொற்கள் உள்ளன. இப்போது நான் வெளியே செல்ல வேண்டியுள்ளதால் பின்னர் வந்து விளக்கம் கூறுகிறேன்.

சரி, மலர். பிறகு சந்திப்போம். மிக்க நன்றி.



5.3.6 கெடுதல் விகாரப் புணர்ச்சியில் 'மை' ஈற்றுப் பண்புப்பெயர்ப் புணர்ச்சி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**இடுபணி 1**

**உரையாடலில், கெடுதல் புணர்ச்சியினைக் கொண்ட சொற்களை அடையாளம் கண்டு கூறுக.**

**இடுபணி 2**

**அடையாளம் கண்ட சொற்களைப் புணர்ச்சி விதியுடன் ஒப்பிட்டு அறிக.**

**இடுபணி 3**

**கெடுதல் விகாரப்புணர்ச்சிக்கு ஏற்பச் சேர்த்தெழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வெண்மை + தாமரை | = | | கடுமை + சொல் | = | |
| வண்மை + தமிழ் | = | | செம்மை + கோல் | = | |
| வெறுமை + இலை | = | | மென்மை + சிரிப்பு | = | |

## வளப்படுத்துதல்

**பத்தியில் காணப்படும் 'மை' ஈற்றுப் பண்புப் பெயர்ச்சொற்களை அடையாளம் கண்டு பிரித்து எழுதுக.**

காட்டு வழியே சென்ற மணிமேகலை, அங்கிருந்த குளத்திலுள்ள செந்தாமரை, வெண்டாமரை மலர்களின் அழகை இரசித்தவாறே சுதமதியுடன் பசுஞ்சோலை மலர்களைக் கொய்து கொண்டிருந்தாள். அவ்வேளையில், சோழ மன்னனின் மைந்தன் அங்கு வந்தான். அவனை எதிர்கொண்ட சுதமதி கடுங்கோபத்துடன் அவனைத் தடுத்து நிறுத்தினாள். "மன்னவா! தீஞ்சொல் என் நா உரைக்கு முன் இங்கிருந்து சென்று விடுக! மணிமேகலை அறவழி செல்பவள். நீர் அவளை அடைய நினைப்பது பெரும்பாவம், வெறுங்கனவு," என்றாள். அவள் சொல் கேட்ட உதயகுமாரன், கடுஞ்சொல் எதுவும் கூறவில்லை. மென்சிரிப்பு ஒன்றை உதிர்த்தவாறே, "அவளை அடையும் விதம் நான் அறிவேன்; வருகிறேன்," என்று கூறிச் சென்றான்.

## குறைநீக்கல்

**கெடுதல் விகாரப்புணர்ச்சிக்கு ஏற்பப் பிரித்தெழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கடுங்கோபம் | = | | செந்தமிழ் | = | |
| தீஞ்சொல் | = | | வெண்பட்டு | = | |
| வெந்நீர் | = | | பைந்தமிழ் | = | |

**தொகுதி 13** | **தொழில்நுட்பம்**

**பாடம் 1** | **தொழில்நுட்ப விளைவுகள்**

**படத்தைப் பார்த்துக் கலந்துரையாடுக.**



திறன்பேசிகளையும் இணையத்தளத்தையும் அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தினால் பதற்றம், சோர்வு ஆகியவற்றுடன் மூளையின் செயல்பாட்டிலும் பாதிப்பு ஏற்படும் என ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். நேரம் காலம் தெரியாமல் திறன்பேசிகளைப் பயன்படுத்திய இளைஞர்களை ஆய்வாளர்கள் சோதனை செய்தனர். அப்போது, அவர்களுக்கு அளவுக்கு அதிகமான பதற்றமும் சோர்வும் ஏற்படுவதைக் கண்டறிந்துள்ளனர். ‘சிக்னல்’ குறைவாக இருக்கும்போது திறன்பேசிகளைப் பயன்படுத்தினால், அதில் இருந்து வெளியாகும் கதிர்வீச்சு, மூளையில் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

ஒருவர் எத்தனை ஆண்டுக் காலம் உயிர் வாழப் போகிறார் என்பதைக் கண்டுபிடிக்க ஒரு புதிய செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பத்தை (Artificial intelligence - AI) ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர். தெற்கு ஆஸ்திரேலியாவில் உள்ள அடிலெய்ட் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள், இந்தப் புதுச் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளார்கள். இந்தத் தொழில் நுட்பமானது, மனித உறுப்புகளை ‘சி.டி.ஸ்கேன்’ மூலம் படம் எடுத்து வைத்து அதை ஆராய்ந்து, அவர் இன்னும் எத்தனை ஆண்டுக் காலம் உயிருடன் இருப்பார் என்பதைக் கணக்கிட்டுக் கூறுகின்றது.



1.3.6 தலைப்பையொட்டிப் பண்புடன் வாதம் செய்வர்.

**இடுபணி 1**

**வாதக்கருத்துகளை அறிந்திடுக: குழுவில் வாதிடுக.**

**இடுபணி 2**

**வழங்கப்பட்டுள்ள கருத்துகளோடு மாற்றுக் கருத்துகளை இணைத்துப் பண்புடன் வாதிடுக.**


**இடுபணி 3**

**பண்புடன் வாதிடுக.**

**தலைப்பு: தொழில்நுட்ப வளர்ச்சி மனிதவாழ்வை இலகுவாக்கியுள்ளது.**

## வளப்படுத்துதல்

**'தொழில் நுட்பம் மாந்தரிடையே நல்ல மாற்றங்களையே கொண்டு வந்துள்ளது' எனும் தலைப்பையொட்டி வாதிடுக.**




**தொழில் நுட்பம் தொடர்பான வாதக்கருத்துகள்**

## குறைநீக்கல்

**'இயந்திர மனிதனின் வருகையால் மனித வாழ்வு சிறப்படைகிறது' வாதம் செய்க.**



## பாடம் 2 தகவல் தொழில்நுட்ப உலகம்

- **கலந்துரையாடி விடையறிந்து கூறுக. பார்வையற்றோர் எவ்வாறு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் கண்டு இரசிப்பர்?**
- **ஊகித்துப் பொருள் கூறுக.**

| | | | |
|---|---|---|---|
| களிப்புடன் | வரிவடிவங்கள் | அதிநவீன | பிரத்தியேக |
| மின்னியல் | செயலியின்வழி | நிபுணர்களும் | வடிவமைத்து |

**ஆழ்ந்து வாசித்து முக்கியக் கருத்துகளை ஏற்ற வரைபடத்தில் குறித்து குழுவில் கலந்துரையாடுக.**



உலக அளவில் கண் பார்வையற்றோரின் எண்ணிக்கை 3 கோடியே 70 இலட்சம் ஆகும். இவர்கள் தங்கள் பொழுதைக் களிப்புடன் கழிப்பதற்குப் பார்வையற்றோருக்கான அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய புதிய தொலைக்காட்சி உருவாக்கப்பட்டுள்ளது.

இன்றைய மின்னியல் தொழில்நுட்ப வளர்ச்சி, அதிநவீன தொழில்நுட்பப் படைப்புகளை உருவாக்கி வருகின்றது. ஆதலால், பார்வையற்றோர் நிகழ்ச்சிகளை வேறு ஒருவரின் துணையின்றித் தாங்களாகவே உணர்ந்து இரசிக்கும் வகையில் புதிய தொலைக்காட்சி தயாரிக்கப்பட்டுள்ளது.

ஸ்பெயின் தலைநகர் மாட்ரிட் நகரில் உள்ள கரோல்ஸ் பல்கலைக்கழகமும் '3டி மாட்ரிட்' என்னும் நிறுவனத்தைச் சேர்ந்த நிபுணர்களும் இணைந்து, புதிய ஆய்வுகளின் மூலம் அதிநவீன தொழிநுட்பத்தைப் பயன்படுத்தும் தொலைக்காட்சியை உருவாக்கியுள்ளனர். அதாவது, பார்வை இல்லாதவர்கள் எழுத்துகளைப் படிக்க, விரல்களால் தொட்டு உணரும் 'பிரெய்ல்' முறையை ஒருங்கிணைத்து இதனைச் செய்துள்ளனர். இதன்படி, தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பாகும்

2.3.9 தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

தொகுதி 13

நிகழ்ச்சிகளின் வரிவடிவங்கள், பிரெய்ல் முறைக்கு மாற்றப்பட்டு, திறன்பேசி அல்லது மடிக்கணினிக்கு அனுப்பப்படும். இவ்வாறு அனுப்பப்படும் நிகழ்ச்சித் தொகுப்பை, பிரத்தியேக செயலியின்வழி விரல்களால் தொட்டு உணர்ந்தறிய இயலும். எனவே, பார்வையற்றோரும் தொலைக்காட்சி நிகழ்ச்சியினை இரசிக்க முடியும்.

சுருங்கச் சொல்வதானால், பிரெய்ல் மூலம் அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய தளம் உருவாக்கி அதன் மூலம் பார்வையற்றோர் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை இரசிக்கும் வகையில் வடிவமைத்துள்ளனர். இதன் சோதனை மாட்ரிட் நகரில் சமீபத்தில் வெற்றிகரமாக நடந்தது. அந்நிகழ்ச்சி மாட்ரிட் நகரில் உள்ள தொலைக்காட்சி அலைவரிசைகளில் ஒலி, ஒளி பரப்பப்பட்டது. இந்தத் தொழில்நுட்பம், விரைவில் பிற அலைவரிசைகளுக்கும் நடைமுறைக்கு வர உள்ளது.

**இடுபணி 1**

**கேள்விகளுக்கு விடையளித்திடுக.**

1. பார்வையற்றோர் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை இரசிப்பதற்குத் தொழில் நுட்பம் எவ்வாறு உதவுகின்றது?
2. பார்வையற்றோர் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் கண்டுகளிப்பதில் எத்தகைய சவால்களை எதிர்கொள்கின்றனர்?
3. பார்வையற்றோருக்கு உதவிடும் புதிய கண்டுபிடிப்புகளைப் பற்றி விவரித்துக் கூறுக.
4. பார்வையற்றோர் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஏன் அனுபவிக்க வேண்டும்?
5. இக்கண்டுபிடிப்பு பற்றிய உமது கருத்து யாது?

**இடுபணி 2**

**விரைந்து வாசித்துத் தகவல்களைக் குறித்துக் கொள்க.**

காணொளி

### முப்பரிமாணம் காட்டுவேன்...

நான்தான் ஹோலோகிராம் (Hologram) பேசுகிறேன். நான் ஒருவிதமான புகைப்படம் ஆவேன். ஆனால், சாதாரண ஒளியை வைத்து எடுக்கப்படாமல் ஒருங்கொளியை (லேசரை) வைத்து எடுக்கப்படுகிறேன். எனது சிறப்பு என்னவென்றால், நான் பிடிக்கும் புகைப்படங்களை முப்பரிமாண அமைப்பில் காட்டுவேன். சாதாரண புகைப்படத்தில் ஒருவரை ஒரே ஒரு கோணத்தில்தான் பார்க்கலாம். ஆனால், நான் பிடிக்கும் நிழல்படம் நிஜத்தில் பார்ப்பது போலவே, எல்லாக் கோணங்களிலும் உருவைப் பார்க்க முடியும். என்னால் ஓர் ஆளை எளிதில் மறைக்கவும் முடியும்; வேறிடத்தில் இருக்கும் ஒருவரை, குறிப்பிட்ட வேறோர் இடத்தில் இருக்கும்படி உருவாக்கிக் காட்டவும் முடியும்.





### விந்தை கைவளை...

நான்தான் இரகசியக் கைவளை (Secret bracelet) பேசுகிறேன். நான் அதிநவீன தொழில்நுட்பத்தின் மூலம் உருவாக்கப்பட்டவன். மனிதர்களின் கைகளைத் தொடுதிரையாக்கி (Touch screen) அவர்கள் ஒவ்வொரு முறையும் தங்கள் கை மணிக்கட்டைத் திருப்பும்போதெல்லாம் திறன்பேசி போல் செயல்படுவேன். என்னில் உள்ள எட்டு வகை அருகுணரிகள் (Proximity sensors) என்னைப் பயன்படுத்துவோரின் விரல்களை அடையாளங்கண்டு, என்னைப் பயன்படுத்த அவர்களுக்கு வழிவகுக்கின்றன. மின்னஞ்சல், இணைய வலைத்தளம், விளையாட்டு, தொலைபேசி அழைப்பு எனத் திறன்பேசியின் அனைத்துப் பயன்பாடுகளையும் கொண்டவன் நான்.

காணொளி

### நிகர்நிலைக் கண்ணாடி...

நான்தான் கூகுள் கண்ணாடி (Google glass) பேசுகிறேன். நான் கூகுள் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட மூக்குக் கண்ணாடி போன்று அணியத்தக்கக் கணினி ஆவேன். நான் தலை அமர்வு படங்காட்டியைக் கொண்ட ஓர் அணிவுக் கணினி ஆவேன். சுட்டிக் கணினியைப் போன்று தகவல்களை அளிக்கக்கூடிய வகையிலும், இயற்கை மொழியில் என்னுடன் தொடர்பு கொள்ளக்கூடிய வகையிலும் அமைந்துள்ளேன். பிற நிகர்நிலைக் கருவிகள் போன்றே, சூழலில் காண்பவற்றுடன் வரைபடம், ஒலி, உணர்வுத் தகவல்களை நிகர்நிலையில் (நிகழ் நேரத்தில்) தருகிறேன். சாதாரண மூக்குக்கண்ணாடி போன்று காட்சியளிக்கும் நான் இன்னும் விற்பனைக்கு வரவில்லை.



காணொளி

**இடுபணி 3**

**கேள்விகளுக்கு விடையளித்திடுக.**

1. ஹோலோகிராமின் சிறப்புகள் யாவை?
2. பயனாளருக்கு ஹோலோகிரம் எத்தகைய அனுபவங்களைக் கொண்டு வரும் என்பதனை விளக்குக.
3. மற்றத் திறன்பேசிகளிலிருந்து இரகசியக் கைவளை எவ்வகையில் வேறுபடுகின்றது என்பதை விவரித்திடுக.
4. நிகர்நிலைக் கண்ணாடி மாணவர்களுக்கு எவ்வாறு பயன்படும் என்பதை விளக்குக.
5. புதிய தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள் பற்றிய உமது கருத்து யாது?

## வளப்படுத்துதல்

**உரைநடைப் பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**



இன்றைய உலகில் தகவல் தொழில்நுட்பம் மிகப் பெரிய மாறுதல்களைக் கொண்டு வந்துள்ளதெனின் அது மிகையன்று. குறிப்பாக மனிதரிடையிலான தொடர்பையும் உறவையும் பரவலாக்கியுள்ளது; துரிதப்படுத்தியும் உள்ளது. மேலும், வசதிகளையும் பெருக்கியுள்ளது என்றே சொல்லத் தோன்றுகின்றது.



கல்வித்துறையில் ஏற்பட்டுவரும் மிகுந்த மாற்றங்களுக்கும் இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சி இன்றியமையாப் பங்கினை ஆற்றிவருகின்றது எனலாம். இது மிக முக்கிய நேர்மறை விளைவுகளைக் கொண்டுவந்துள்ளதை அறிய முடிகின்றது. கற்றலும் கற்பித்தலும் பல்லூடகத்தைப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டன. மாணவர்கள் தம் தேர்ச்சி அறிக்கையைக்கூட இணைய அகப்பக்கத்தில் பெற்றுக் கொள்கின்றனர். வாசிப்புக்கு நூல்நிலையத்தையும் நாளிதழையும் நாடியவர்கள், இன்று மின்னூல்களில் அறிவுலகத்தைத் தேடிச் சென்றுவிட்டார்கள். கல்விக் கழகங்களுக்குச் செல்லாமலேகூட சான்றிதழ்களையும் பட்டங்களையும் பெற இயலும். சுருங்கக் கூறினால், கல்வி நடைமுறைகளே இன்று முற்றிலுமாக மாறிவிட்டன என்றால் மிகையில்லை.

1. தகவல் தொழில்நுட்பம், தொடர்புத் துறையை எவ்வகையில் மாற்றியுள்ளது?
2. கல்வி உலகில் நேர்மறை விளைவுகள் என எவற்றைக் கூறலாம்?
3. மின்னுலக அறிவுலகத்தைப் பற்றி விளக்குக.
4. கல்விக் கழகங்களுக்குச் செல்லாமலே எவ்வாறு பட்டங்களைப் பெற இயலும் என்பதனை விளக்குக.

## குறைநீக்கல்

**உரைநடைப் பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

தொடர்பு கொள்ள வீட்டுத் தொலைபேசி, கடிதம் மற்றும் விரைவஞ்சல் போன்றவற்றை மட்டுமே நம்பி வாழ்ந்த மனிதன், இன்று பல்வேறு தொடர்பு முறைகளுக்கு மாறிவிட்டான். பல்லூடக வசதி கொண்ட கணினி, இணையம், தொலைநகலி, கைப்பேசி போன்றவை மக்களின் அன்றாடத் தொடர்பு முறையில் முக்கியப் பங்கு வகிக்கத் தொடங்கிவிட்டன. உண்மையில், தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி மனிதனின் தொடர்பு உலகை ஒரு சிறிய வட்டத்திற்குள் கொண்டு வந்துவிட்டது. ஓரிடத்தில் நடைபெறும் நிகழ்வுகளை உடனுக்குடன் அறிந்து கொள்ளும் தகவல் அறியும் சமூகமாகவே மனிதன் மாறிவிட்டான். இந்த மிகப் பெரிய முன்னேற்றம் மக்களின் வாழ்வில் புது மலர்ச்சியை ஏற்படுத்தி வருகின்றது.

1. தொடர்பு முறையில் மனிதன் அடைந்த மாற்றங்களைக் குறிப்பிடுக.
2. ‘பல்லூடக வசதி கொண்ட கணினி’ என்பதை விளக்குக.

## பாடம் 3 சமூக வலைத்தளங்கள்

**வாதக்கட்டுரையைக் கருத்தூன்றி வாசித்துக் கருத்துகளைக் கூறுக.**




இன்றைய சூழலில் சமூக வலைத்தளங்களில் தொடர்பில்லாத மாந்தரைக் காண்பது அரிது. முகநூல் (Facebook), கீச்சகம் (twitter), இயங்கலை (online), வலையொளி (YouTube) ஆகியவற்றில் உறுப்பியம் இல்லாதவர்களை இவ்வுலகம் எள்ளி நகையாடுகின்றது. நேரம் கிடைக்கும்போதெல்லாம் இணையத்தைப் பயன்படுத்தும் நிலை மாறி, இணையத்திலேயே நேரத்தைக் கழிக்கின்ற நிலை உருவெடுத்துள்ளது. இத்தகு சமூக மாற்றங்களைத்தாம் சமூக வலைத்தளங்கள் தற்போது ஏற்படுத்தியுள்ளன. இத்தகு மாற்றங்கள் சமூகத்திற்கு நன்மையையே அளிக்கின்றன என்பதை எவராலும் மறுக்கவியலாது.

மக்களிடையே கருத்துப் பரிமாற்றம் நிகழ்வதற்கு உறுதுணையாக இருப்பவை சமூக வலைத்தளங்களே. ஒருவரின் எண்ணப் பதிவுகள் வலைத்தளங்களில் பதிவு செய்யப்படும்போது அப்பதிவுகள் பலரால் பகிரப்படுகின்றன. இப்பகிர்வுகள் பல புதிய கருத்துகள் உருவெடுக்கவும் மற்றும் புத்தாக்கச் சிந்தனைகள் உருவாவதற்கும் ஏதுவாக அமைகின்றன. சில வேளைகளில் கருத்து மாறுபாடுகள் எழலாம் என்றாலும் கருத்தொற்றுமைகள் உருவாகவும் சமூக வலைத்தளங்கள் பங்காற்றுகின்றன எனலாம்.

சமூக வலைத்தளங்கள் பன்முகப் பயன்களைக் கொண்டுள்ளன. அவ்வகையில் அவை சமூக மேம்பாட்டிற்குப் பேருதவியாக இருக்கின்றன என ஆணித்தரமாகக் கூறலாம். கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளவும், பொருளாதார வளர்ச்சிக்கும், மக்களை ஒன்றிணைக்கவும், தகவல் பரிமாற்றத்திற்கும் சமூக வலைத்தளங்கள் பயன்படுகின்றன.

சமூகத்தினரிடையேயும், பொதுவாக மக்களிடையேயும் உறவுப் பாலமாக அமைவது இந்தச் சமூக வலைத்தளங்களே. குடும்பத்தைப் பிரிந்து சென்று பிற இடங்களில் வாழும் பலருக்குக் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளவும், புகைப்படங்களையும், காணொளிப் பதிவுகளைப் பகிர்ந்து கொள்ளவும் சமூக வலைத்தளங்களே பெரும் பங்காற்றுகின்றன. மேலும், ஒரு சமூகப் பிரிவினர் இன்னொரு சமூகத்தைப் புரிந்துகொள்ளவும் சமூக வலைத்தளங்கள் துணை நிற்கின்றன. இதனால், நல்லுறவும் சமூக ஒருமைப்பாடும் ஏற்படுகின்றன.

இன்றைய சூழலில், வணிக வளர்ச்சிக்குச் சமூக வலைத்தளங்கள் பங்காற்றத் தொடங்கியுள்ளன. ஒரு புறம் வணிக நிறுவனங்கள் தங்களின் வணிகத்திற்குச் சமூக

3.4.19 180 சொற்களில் வாதக்கட்டுரை எழுதுவர்.

வலைத்தளங்களைப் பெரிதும் நம்பியிருக்கின்றன. மற்றொரு நிலையில் தனி மனிதர்களும் வணிகத்தில் கால் பதிக்க அவை துணை புரிகின்றன. இருக்கும் இடத்திலிருந்தே தங்கள் பொருள்களை விளம்பரம் செய்து வாடிக்கையாளர்களின் கருத்துகளை நேரடியாகவே அறிந்துகொள்ளவும் அப்பொருள்களைச் சந்தைப்படுத்தவும் ஏற்ற அரிய வாய்ப்பைச் சமூக வலைத்தளம் ஏற்படுத்திக் கொடுத்திருப்பதை மறுக்கவியலாது.

இன்னும் இவை போன்ற எத்துணையோ நன்மைகளைச் சமூக வலைத்தளங்கள் நமக்கு நல்குகின்றன. இனி வரும் காலங்களில் சமூக வலைத்தளங்கள் இன்றி நம்மால் வெற்றிப் படிகளை எட்ட இயலாது என்பது திண்ணம். எனவே, சமூக வலைத்தளங்களைத் திறம்படக் கையாண்டு அவை வழங்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்திப் பெரும் பயனடைவோம். எனவே, சமூக வலைத்தளங்களால் நன்மையே விளைகின்றது எனலாம்.

**இடுபணி 1**

**வாதத்தை நிலைநாட்டும் வகையில் கூறப்பட்ட வாக்கியங்களை அடையாளம் கண்டு குழுவில் கலந்துரையாடிக் குறித்துக் கொள்க.**

**இடுபணி 2**

**வாதக்கட்டுரையில் உள்ள வாதத்தன்மை கொண்ட சொற்கள் அல்லது சொற்றொடர்களை அடையாளம் கண்டு எழுதுக.**

**இடுபணி 3**

**'கட்டுப்பாடில்லாத தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி சமூகத்திற்குச் சீர்கேட்டைக் கொண்டு வரும்' எனும் தலைப்பில் 180 சொற்களில் வாதக்கட்டுரை ஒன்றனை வரைக. கீழ்க்காணும் குறிப்புகளை வழிகாட்டியாகக் கொள்க.**

- அதிநவீன தொழில்நுட்ப வளர்ச்சி மனித உணர்வுகளைச் சீர்குலைத்து அவர்களைத் தனிமைப்படுத்திவிடும். மனித உறவுகள் சீர்கெடும்.
- மனிதர்கள் தனித்தன்மையை இழக்க நேரிடும். ஆக்கத் திறன், கற்பனை ஆற்றல் போன்றவற்றை இழக்க நேரிடும்.

**வளப்படுத்துதல்**

**'தொழில்நுட்ப வளர்ச்சியினால் மனுக்குலத்திற்கு நன்மைகளே விளைகின்றன'எனும் தலைப்பில் 180 சொற்களில் வாதக்கட்டுரை ஒன்றனை எழுதுக.**

**குறைநீக்கல்**

**'தொழில்நுட்ப வளர்ச்சியினால் மனுக்குலத்திற்கு நன்மைகளே விளைகின்றன' எனும் தலைப்பில் வாதத்தன்மை கொண்ட ஐந்து வாக்கியங்களை எழுதுக.**

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## இணைமொழிகள் அறிக.

| இணைமொழிகள் | | பொருள் |
|---|---|---|
| 1. சீரும் சிறப்பும் | → | மேன்மை / உன்னத நிலை / ஏற்றம் மிகுந்த |
| 2. ஏழை எளியவர் | → | வறியவர் / பொருளாதாரத்தில் நலிவுற்றவர் |
| 3. ஊண் உறக்கம் | → | உணவும் தூக்கமும் |
| 4. ஈடு இணை | → | ஒப்பு |
| 5. அடக்க ஒடுக்கம் | → | பணிவு |




திரு. நகுலன் சொந்தத் தொழில் ஒன்றனைத் தொடங்கினார். தாம் சார்ந்திருந்த அவ்வியாபாரத்துறையில் வெற்றி காண ஊண் உறக்கம் இன்றி உழைத்தார். தம் அயராத உழைப்பின் பலனால் வியாபாரத்தில் நல்ல இலாபம் ஈட்டிச் சீரும் சிறப்புமாய் வாழ்ந்தார். செல்வச் செழிப்போடு திகழும் திரு. நகுலன் ஒவ்வொரு மாதமும் தம்முடைய வருமானத்தில் ஒரு சிறு பகுதியை ஏழை எளியவர்களுக்குக் கொடுத்து உதவத் தவறுவதில்லை. தருமம் தலைகாக்கும் என்பது இவரது தலையாய கொள்கை. இவரது கொடைக் குணத்திற்கு ஈடு இணை எதுவும் இல்லை என்று அவரைப் புகழாதவர் யாருமிலர் என்றே கூற வேண்டும். புகழ்ச்சியின் உச்சியில் இருந்த போதினும் அடக்க ஒடுக்கத்துடன் அனைவரிடமும் பழகும் திரு. நகுலனின் குணம் அனைவரையும் ஈர்த்தது.

### இடுபணி 1

**வாசிப்புப் பகுதியில் உள்ள இணைமொழிகளை அடையாளம் காண்க.**

### இடுபணி 2

**எவையேனும் இரண்டு இணைமொழிகளைத் தெரிவு செய்து, ஏற்ற சூழலை அமைத்துப் பாகமேற்று நடித்துக் காட்டுக.**


4.4.3 மூன்றாம் படிவத்திற்கான இணைமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**இடுபணி 3**

**கீழ்க்காணும் சூழல்களுக்கு ஏற்ற இணைமொழிகளை எழுதுக.**

தமக்குப் பிடித்த வகையிலான ஒரு மனை வாங்க வேண்டும் எனும் குறிக்கோள் கொண்ட மாலன் ஓய்வின்றி, கடுமையாக உழைத்துச் சம்பாதித்து, சேமித்து வாழ்கின்றார். இதனால், அவர் உண்ணும் உணவை மறப்பார்; பல சமயங்களில் உறக்கத்தையும் மறந்துவிடுவார்.





ஏழைக் குடும்பத்தில் பிறந்த மாறன், தாம் முன்னேறுவது மட்டுமன்றி, தம் பிள்ளைகளின் வாழ்க்கையும் மேன்மையுற வேண்டும் என்பதற்காகப் பல முயற்சிகளை மேற்கொண்டார். அவற்றின் பயனாக இன்று அவரும் அவர்தம் பிள்ளைகளும் உன்னத வாழ்க்கை வாழ்கின்றனர்.

பூங்குன்றனும் பூங்குழலியும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து, அவர்களைப் போன்ற இணையர் எவருமிலர் எனும் அளவிற்கு வாழ்கின்றனர். ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு, எவரும் குறை சொல்ல முடியாத வகையில் மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகின்றனர்.





முதுகலைப் பட்டம் பெற்றாலும், யாழினி எந்த ஓர் ஆர்ப்பாட்டமும் ஆணவமும் இன்றி யாவரிடமும் பண்பாக நடந்துகொள்வார். அமைதியாகவும் இன்முகத்துடனும் பழகுவார். பணிவு நிறைந்த பெண் என, அனைவராலும் பாராட்டப்படுகிறார்.

**வளப்படுத்துதல்**

**இணைமொழிகளைப் பொருள் விளங்க வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக.**

**குறைநீக்கல்**

**இணைமொழிகளுக்கு ஏற்ற பொருளை எழுதுக.**

1. சீரும் சிறப்பும் = ______
2. ஏழை எளியவர் = ______
3. ஊண் உறக்கம் = ______
4. ஈடு இணை = ______
5. அடக்க ஒடுக்கம் = ______

# தொகுதி 14 விளையாட்டு உலகம்

## பாடம் 1 விளையாட்டு வீரர்களும் சாதனைகளும்

**கருத்துகளுக்குத் தொடர்புடைய சான்றுகளைத் திரட்டி விவரித்துக் கூறுக.**



**சிவசங்கரி த/பெ சுப்பிரமணியம்**
**சுவர்ப்பந்து (ஸ்குவாஷ்)**

பிறப்பு: 24.1.1999, கெடா பிரிட்டிஷ் இளையோர் சாம்பியன்ஷிப் வெற்றியாளர் (15 வயதின் கீழ்) தங்கப் பதக்கம்: சீ விளையாட்டு (2017), மலேசியா பொது நிலைப்போட்டி வெற்றியாளர்.



**பண்டெலேலா ரினோங்**
**மூழ்காளி (டைவர்)**

பிறப்பு: 2.3.1993, சரவாக். 10மீ. பிளாட்போர்ம் பிரிவில் சிறப்புப் பெற்றவர். 2 முறை ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் பெற்றவர். 4 பதக்கங்கள் – உலக சாம்பியன்ஷிப்.



**மொகமட் அசிசுல் ஹஸ்னி பின் அவாங்**
**சைக்கிளோட்ட வீரர்**

பிறப்பு: 5.1.1988, டுங்குன்,திரெங்கானு தங்கப் பதக்கம்: யூ.சி.ஐ. உலக சைக்கிளோட்டப் பந்தயம் (2017), வெள்ளிப் பதக்கம்: உலக சாம்பியன்ஷிப் (2010 & 2016).



**தனபாலன் த/பெ நடராஜா**
**காற்பந்து**

பிறப்பு: 25.2.1995, நெகிரி செம்பிலான். சீ விளையாட்டு 2017 (4 கோல்கள்)

1.4.5 கருத்துகளைச் சான்றுகளுடன் விவரித்துக் கூறுவர்.

**இடுபணி 1**

**கருத்தினைக் கொடுக்கப்பட்ட சான்றுகளுடன் விவரித்துக் கூறுக.**

**நம் நாட்டில் விளையாட்டுத் தரம் உயர்ந்து வருகிறது**

- **உலகத் தர நிலையிலான பங்கேற்பு.** பூப்பந்தாட்டம், முழ்காளி, சுவர்ப்பந்து, சைக்கிளோட்டம்
- **புது விளையாட்டுகளில் கால் பதித்தல்.** அயன்மேன்
- **பள்ளிகளில், உயர்கல்விக்கூடங்களில் விளையாட்டிற்கு முக்கியத்துவம் அளித்தல்.** இணைப்பாட நடவடிக்கை, ஒரு மாணவர் ஒரு விளையாட்டு
- **ஆதரவும் ஊக்குவிப்பும் நல்குதல்.** அரசு சாரா நிறுவனங்கள்

**இடுபணி 2**

**சிறந்த விளையாட்டாளர்களை உருவாக்குவதற்குப் பள்ளியே அடித்தளமாக அமைகிறது. இக்கருத்தைச் சான்றுகளுடன் விவரித்துக் கூறுக.**

**இடுபணி 3**

**விளையாட்டுத்துறை வளர்ச்சியால் நாட்டிற்குக் கிட்டும் விளைவுகளைச் சான்றுகளுடன் விவரித்துக் கூறுக.**

## வளப்படுத்துதல்

**கருத்துகளைச் சான்றுகளுடன் விவரித்துக் கூறுக.**

அ. தற்போது விளையாட்டுத் துறையில் இளைஞர்களின் ஈடுபாடு அதிகரித்துள்ளது.

ஆ. விளையாட்டாளர்கள் தம் திறனையும் ஆற்றலையும் வளர்த்துக்கொள்ள உள்நாட்டில் பல வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

## குறைநீக்கல்

**கொடுக்கப்பட்டுள்ள கருத்துகளைச் சான்றுகளுடன் விவரித்துக் கூறுக.**



- 'மலேசியன் மோட்டோஜிபி' பந்தயம்
- உலகத்திலேயே மிகப் பெரிய அளவில் நடைபெறுகின்றது.

# பாடம் 2 விளையாட்டுச் சுற்றுலா

**வாசிக்கும் முன் விளையாட்டுச் சுற்றுலாத் துறை பற்றி நீங்கள் அறிந்தவற்றை உங்கள் நண்பருடன் கலந்துரையாடுக.**

**விரைந்து வாசித்து, முக்கியக் கருத்துகளைக் குறித்துக் கொள்க.**




அனைத்துலக ரீதியில் அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டு வரும் துறைகளில் விளையாட்டுத் துறையும் ஒன்றாகும். குறிப்பாக, நமது நாட்டில் அத்துறை தனக்கெனத் தனி முத்திரையைப் பதித்து வரும் துறையாக உருமாறியுள்ளதென்றால் அது மிகையாகாது. மக்களின் உடல்நலம் சார்ந்த முயற்சியாக மட்டுமன்றி, நாட்டிற்கு நற்பெயரையும் வருமானத்தையும் ஈட்டும் சுற்றுலாத் துறையாகவும் விளையாட்டுத் துறை உருமாறி வருகிறது.

அண்மைய காலமாக நமது நாட்டில் விளையாட்டுத் துறை மக்கள் மயப்படுத்தப்படுகிறது. தாங்கள் விரும்பும் விளையாட்டுகளில் ஈடுபட பொதுமக்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். இதில் இலட்சக்கணக்கான மக்கள் பங்கேற்கின்றனர். பங்கேற்பாளர்களுள் உள்நாட்டினர் மட்டுமன்றி, வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களும் அடங்குவர். நாட்டின் விளையாட்டுச் சுற்றுலா நடவடிக்கைகளுக்குக் கிடைத்து வரும் மகத்தான வரவேற்பிற்கு மெருகூட்டும் வகையில் இஃது அமைந்துள்ளது என்றே குறிப்பிட வேண்டும்.

மலேசியாவில் பல விளையாட்டுகள் இருப்பினும் பொதுமக்கள் ஆர்வம் காட்டும் விளையாட்டுகளாகச் சில விளங்குகின்றன. அவற்றுள் நீர் சாகச விளையாட்டுகள், இயற்கைச் சவால்கள் நிறைந்த விளையாட்டுகள், திறன் சார்ந்த விளையாட்டுகள் முதலியன குறிப்பிடத்தக்கன. படாஸ் ஆற்று 'ராஃப்பிட்டிங்' நடவடிக்கை, வலிமைத் திறன் காட்டும் 'அயன்மேன்' போட்டி

2.2.5 வாசிப்புப் பகுதியிலுள்ள தகவல்களை வகைப்படுத்துவர்.



படகு துடுப்புப் பயிற்சி



மலையேறுதல்

‘லீ-டுவர்’ லங்காவி சைக்கிளோட்டப் போட்டி, ‘ஃபார்முலா I’ மகிழுந்துப் பந்தயம் போன்றவை மிகவும் கவரும் விளையாட்டுகளாகத் திகழ்கின்றன. இந்த விளையாட்டுகள் உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை மிகவும் ஈர்த்து வருகின்றன.

இயற்கை வளம் செழித்த நாடு நம் மலேசியா. இந்த இயற்கைச் செழிப்புகளுள் சில நல்ல பொழுதுபோக்கு மையங்களாகவும் விளையாட்டுத் தலங்களாகவும் அமைந்துள்ளன. தாமான் நெகாரா, கினாபாலு மலை, குனோங் தாகான் மலை போன்ற இயற்கை சுற்றுலாத் தளங்கள் இப்பொழுது வெறும் கண்கவர் காட்சித் தலங்களாக மட்டும் அமையாமல், இத்தகு இடங்கள் நல்ல மனமகிழ் விளையாட்டுகளுக்கு உறுதுணையாய் விளங்குகின்றன. மலையேறுதல், மலை உச்சியிலிருந்து குதித்தல், குகை உலா செல்லல் போன்றவற்றிற்கு இந்தத் தளங்கள் வாய்ப்பளிக்கின்றன.

விளையாட்டுச் சுற்றுலா ஒரு புதிய துறையாக நம் நாட்டில் வளர்ந்து வருகிறது. இத்துறை மக்களின் உடல் நலத்தை வளப்படுத்துவதோடு நாட்டுப் பொருளாதாரத்தை வலுப்படுத்துகிறது. இதனால், வெளிநாட்டுச் சுற்றுப்பயணிகளின் வருகை நாட்டின் புகழை உலக அரங்கில் பரவச் செய்கிறது.

**இடுபணி 1**

**மர வரைபடத்தின் துணையுடன் தகவல்களை வகைப்படுத்துக.**

i-THINK

**விளையாட்டும் சுற்றுலாவும்**

| விளையாட்டில் மக்கள் பங்கேற்பு | சுற்றுப் பயணிகள் ஈர்ப்பு | பொதுமக்களை ஈர்க்கும் விளையாட்டுகள் | விளையாட்டுச் சுற்றுலாவின் வகைகள் |
|---|---|---|---|
| | | | |
| | | | |

## இடுபணி 2

**வாசிப்புப் பகுதியை உற்று நோக்கி வாசித்து, தகவல்களைக் குறித்துக் கொள்க.**



**மகிழுந்துப் பந்தயம்**
- தொழில்முறை விளையாட்டு
- அனைத்துலக ஈர்ப்புடையது



**சைக்கிளோட்டப் போட்டி**
- இளையோரிடையே நாட்டம்
- இளையோருக்கு வழித்தடம் அமைத்தல்



**குதிரைப் பந்தயம்**
- மனமகிழ்வும் போட்டியும்
- குறிப்பிட்ட சிலரே பங்கேற்க இயலும்



**குத்துச் சண்டை**
- பொழுதுபோக்கும் தொழில்முறையும்
- வலிமையும் திறனும்



**மட்டை இழுத்தல்**
- மனமகிழ் விளையாட்டு
- சிறார்களை ஈர்க்கும்



**ஒற்றை இரட்டை**
- ஆசிய நாடுகளில் புகழ்பெற்றது
- சிறார்களின் மனமகிழ் விளையாட்டு

**இடுபணி 3**

**வாசித்துக் குறித்த தகவல்களை வகைப்படுத்துக.**

- பாரம்பரிய விளையாட்டு
- தற்கால விளையாட்டு

- சாகச விளையாட்டு
- சாகசமற்ற விளையாட்டு

- மனமகிழ் விளையாட்டு
- போட்டி விளையாட்டு

- பல்லின விளையாட்டு
- இனம் சார்ந்த விளையாட்டு

**வளப்படுத்துதல்**

**வாசிப்புப் பகுதியிலுள்ள தகவல்களை வகைப்படுத்துக. ஏற்ற வரைபடத்தைப் பயன்படுத்துக.**



மலேசியாவில் தற்போது விளையாட்டுத் துறை நாட்டிற்கு வருவாய் ஈட்டித் தரும் துறையாக உருமாறி வருகின்றது. உள்நாட்டுப் போட்டிகள் மட்டுமன்றி, காமன்வெல்த், தென் கிழக்காசியா விளையாட்டுப்போட்டி (சீ விளையாட்டு) எனப் பல்வேறு அனைத்துலக விளையாட்டுப் போட்டிகளை மலேசியா ஏற்று நடத்துவதால் இது சாத்தியமாகிறது.

இத்தகைய போட்டி நிகழ்ச்சிகள் மூலம் மலேசியாவுக்கு அதிகமான உள்நாட்டுச் சுற்றுப் பயணிகளும் வெளிநாட்டுச் சுற்றுப்பயணிகளும் பார்வையாளர்களாக வருகை புரிகின்றனர். போட்டியாளர்களுடன் பார்வையாளர்களும் இணைவதால் இங்குள்ள தங்கும் விடுதிகளுக்கும் உணவகங்களுக்கும் மிகுதியான வாடிக்கையாளர்கள் கிட்டுகின்றனர். அப்போட்டிகள் நடைபெறும் காலக்கட்டத்தின் போது மக்கள் கூட்டம் நிரம்பி வழிகின்றது. இதன் மூலம், வணிகர்களுக்கும் நாட்டிற்கும் கணிசமான அளவில் வருவாய் பெருகுகின்றது.

**குறைநீக்கல்**

**கீழ்க்காணும் விளையாட்டுகளைப் பாரம்பரிய விளையாட்டு, தற்கால விளையாட்டுகள் என வகைப்படுத்துக.**

- சைக்கிளோட்டம்
- திரி திரி பந்தம்
- ஒற்றை இரட்டை
- பூப்பந்து
- உயரம் தாண்டுதல்
- காற்பந்து
- பல்லாங்குழி
- கயிறு தாண்டுதல்

பாடம் 3 வருவாய் ஈட்டும் விளையாட்டு

மௌனமாக வாசித்துக் கருத்து விளக்கக் கட்டுரையின் அமைப்பு முறையை நினைவுகூர்க.




**தலைப்பு: தொழில்முறை விளையாட்டு**

**முன்னுரை**

- தொழில்முறை விளையாட்டு என்பது விளையாட்டாளர் முழுநேரமாக, அதையே தொழிலாகக் கொள்வது.
- நம் நாட்டில் தொழில் முறையில் விளையாடும் விளையாட்டுகள்.

**முதன்மைக் கருத்து 1:** விளையாட்டாளர்களுக்கு நிரந்தர வருமானம் வழங்கப்படுகிறது.
**துணைக் கருத்து:** நிரந்தர வருமானம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும்.

**முதன்மைக் கருத்து 2:** விளையாட்டாளர்கள் விளையாட்டில் முழுக் கவனம் செலுத்துவதால் நாட்டின் விளையாட்டுத் தரத்தை மேம்படுத்த இயலும்.
**துணைக் கருத்து:** விளையாட்டில் முழுக் கவனம் செலுத்துவதால், அதிக ஈடுபாடும் மேம்படுத்தும் பயிற்சிகளிலும் தீவிர கவனம் செலுத்துவர்.

3.4.18 180 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுவர்.

**முதன்மைக் கருத்து 3:** விளையாட்டாளரின் புகழும் நாட்டின் புகழும் மேலோங்கும்.

**துணைக் கருத்து:** முழுநேரமாக ஈடுபடுவதால் சிறந்த நிலையை அடைய முடியும்; உள்நாட்டிலும் அனைத்துலக நிலையிலும் புகழ்பெறலாம்; நாடும் புகழ் பெறும்.

**முதன்மைக் கருத்து 4:** திட்டமிடப்பட்ட பயிற்சிகள் வழங்கப்படும்.

**துணைக் கருத்து:** இது பல நன்மைகளைக் கொண்டுவரும்.

**முடிவுரை**

தொழில்முறை விளையாட்டு, விளையாட்டாளர்களுக்கும் நாட்டிற்கும் நற்பயனை விளைவிப்பதால் மலேசிய மக்கள் தொழில்முறை விளையாட்டில் ஈடுபாடு காட்ட வேண்டும்.

## இடுபணி 1

**விளக்கக் கட்டுரைக்கான அமைப்பு முறையைப் பயன்படுத்தி 180 சொற்களில் 'தொழில்முறை விளையாட்டு' எனும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுக.**

## இடுபணி 2

**'விளையாட்டின் மேன்மை நாட்டிற்குப் பெருமை' எனும் தலைப்புக்கான அமைப்பு அல்லது சட்டகம் தயாரித்திடுக.**

## இடுபணி 3

**இடுபணி 2இன் அமைப்பு முறையைப் பயன்படுத்தி 'விளையாட்டின் மேன்மை நாட்டிற்கும் பெருமை' எனும் தலைப்பில் 180 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை ஒன்றனை எழுதுக.**

## வளப்படுத்துதல்

**'மலேசியக் காற்பந்து' என்ற தலைப்பில் 180 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை ஒன்றனை எழுதுக.**

## குறைநீக்கல்

**'காற்பந்து விளையாட்டு' எனும் தலைப்பையொட்டி 10 வாக்கியங்கள் எழுதுக.**

# பாடம் 4 இலக்கணம்

## தோன்றல் விகாரம் அறிக.

**தோன்றல் விகாரம்**

தனிக்குறிலை அடுத்து மெய் வந்து, வருமொழி உயிரெழுத்தில் தொடங்கினால் நிலைமொழியின் இறுதியில் உள்ள மெய் இரட்டிக்கும்.

எ.கா:

மெய் + அடி = மெய்யடி

கண் + இமை = கண்ணிமை

**கவனத்தில் கொள்க**

இரு சொற்கள் புணரும்போது நிலைமொழியின் ஈற்றிலோ வருமொழியின் முதலிலோ மாற்றங்கள் ஏற்பட்டால் அது விகாரப்புணர்ச்சியாகும்.

**விகாரப்புணர்ச்சி 3 வகை**

விகாரப்புணர்ச்சி
- தோன்றல் விகாரம்
- கெடுதல் விகாரம்
- திரிதல் விகாரம்

"எனக்கு மண்ணாசையோ, பெண்ணாசையோ, பொன்னாசையோ கிடையாது. எனக்கு வேண்டியதெல்லாம் மக்கள் வாழ்வு. மக்களின் கண்ணிமைகளிலிருந்து சிறிதளவு கண்ணீர் வந்தாலும் என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது. அதனால்தான், அநியாயத்தைத் தட்டிக் கேட்க வந்தேன்," என்று ஆவேசமாகப் பேசினான் அறிவரன். அவனை அமைதிப்படுத்தி அழைத்துச் செல்ல வந்த இரு இளைஞர்களும் அவன் பேச்சின் உண்மையை உணர்ந்து அப்படியே நின்றனர்.



**இடுபணி 1**

**வாசிப்புப் பத்தியில், தோன்றல் விகார விதியிலான சொற்களைப் பட்டியலிடுக.**

**இடுபணி 2**

**மேலே பட்டியலிடப்பட்ட சொற்களைப் பிரித்தெழுதுக.**

5.3.4 தோன்றல் விகாரப்புணர்ச்சியில் நிலைமொழியில் தனிக்குறிலை அடுத்து மெய்யும் வருமொழியில் உயிரெழுத்தும் புணர்தல் பற்றி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

தொகுதி 14

**இடுபணி 3**

**தோன்றல் விகாரவிதிக்கு ஏற்பச் சேர்த்து எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| 1. கல் + ஆணி = | | 4. பொன் + ஆசை = | |
| 2. மெய் + அறிஞர் = | | 5. பொன் + அட்டை = | |
| 3. விண் + ஒளி = | | 6. மெய் + அடி = | |

**இடுபணி 4**

**தோன்றல் விகாரவிதிக்கு ஏற்பப் பிரித்து எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| 1. பண்ணோசை = | | 4. மின்னஞ்சல் = | |
| 2. கண்ணொளி = | | 5. பொன்னூஞ்சல் = | |
| 3. முன்னட்டை = | | 6. மின்னட்டை = | |

## வளப்படுத்துதல்

**தோன்றல் விகாரச்சொற்களை அடையாளம் கண்டு பிரித்தெழுதுக.**

1. தாயின் இனிமையான தாலாட்டு அஞ்சனாவின் கண்ணிமைகளை மூடச் செய்தது.
2. இறைவனின் மெய்யடி வணங்குபவர்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வர் என்று கூறினார் சிவனடியார்.
3. அறியாமையால் மூழ்கியிருந்த கதிரவன் அறிஞரின் உரையைக் கேட்டு மெய்யறிவு பெற்றான்.
4. சிறப்பாகக் கவி பாடிய கவிஞருக்கு மன்னரால் பொன்னாரம் பரிசளிக்கப்பட்டது.
5. மண்ணாசை கொண்ட இளவேந்தன் பார்க்கும் இடமெல்லாம் நிலங்களை வாங்கிக் குவித்தான்.

## குறைநீக்கல்

**தோன்றல் விகாரப்புணர்ச்சி விதிக்கேற்பச் சேர்த்தெழுதுக.**


| | | | |
|---|---|---|---|
| 1. பண் + இசை = | | 4. மண் + ஆசை = | |
| 2. சொல் + அணி = | | 5. கண் + ஓட்டம் = | |
| 3. பொன் + ஆபரணம் = | | 6. பொன் + ஆரம் = | |

# தொகுதி 15 சமூக வாழ்வில் சுமூக வாழ்வு

## பாடம் 1 குடும்ப வாழ்வு

செவிமடுத்திடுக

இருவகைக் கருத்துரைகளைச் செவிமடுத்திடுக.




நான் திருமதி மங்கை. நான், என் கணவர் மற்றும் குழந்தையுடன் தனிக் குடும்பமாக வசிக்கின்றேன். இன்று தனிக்குடும்ப வாழ்க்கையைப் பலரும் விரும்புகின்றனர். நானும் என் கணவரும் வேலைக்குச் செல்ல வேண்டியுள்ளது. எனவே, எங்கள் குழந்தையைக் காப்பகத்தில் விட்டுச் செல்ல வேண்டியுள்ளது. எங்கள் பிள்ளையின் பாதுகாப்பையும் நலனையும் பற்றி நாள்தோறும் கவலைபட்டுக் கொண்டுதான் இருப்போம்.

நாங்கள் தனிக்குடித்தனமாக வாழ்வதால், மற்ற உறவினர்களோ பெரியவர்களோ எங்களோடு இல்லை. இதனால், நாங்கள் மகிழ்ந்து உறவாடவும் தக்க ஆலோசனை பெறவும் வழியில்லாமல் போகின்றது. எங்களுக்கு அறிவுரை கூறி வழிநடத்தவும் வீட்டில் ஒருவரும் இல்லை. எப்போதாவது தாத்தா பாட்டிகள், அத்தை, மாமன்மார்கள் மற்றும் பிற உறவினர்கள் வருகை தருவார்கள். அப்போது, வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும்; குழந்தையின் முகமும் மலர்ந்திருக்கும். ஏன்? நானே சில வேளைகளில் என் கணவர் குழந்தையுடன் வெளியில் சென்றுவிட்டால், தனிமையை உணர்ந்துள்ளேன். அது கொடுமையானது.

ஆபத்து அவசர வேளைகளில் நாங்கள் அக்கம் பக்கத்தாரை நாட வேண்டியுள்ளது. எனக்கோ என் கணவருக்கோ உடல் நலம் குன்றினால் பல சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. உதவிக்கோ வீட்டுப் பணிகளைப் பகிர்ந்துகொள்ளவோ ஆள் இல்லை. இச்சூழல் சில சமயங்களில் மன அழுத்தத்தையும் ஏற்படுத்துகின்றது. இதுவே, கூட்டுக் குடும்பமாக இருந்திருந்தால்..., எண்ணிப் பார்க்கின்றேன்.

1.1.3 செவிமடுத்தவற்றிலுள்ள கருத்துகளை ஒப்பிட்டுத் தொகுத்துக் கூறுவர்.





நான் திருமதி மலரழகி. நான் என் கணவருடன், எங்கள் பிள்ளைகளுடனும் மாமன் மாமியாருடனும் மற்றும் என் கணவரின் உடன் பிறப்புகளுடனும் ஒரே வீட்டில் வாழ்கின்றோம். கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்றனர் நம் மூதாதையர். இஃது எந்த அளவிற்கு உண்மை என்பதை என் வாழ்நாளில் கண்டு வருகின்றேன்.

என்னைச் சுற்றி ஒரு பெரிய சுற்றமே இருப்பதாக நான் கருதுகின்றேன். அதுவே எனக்குப் பெரிய பலத்தையும் ஆறுதலையும் கொடுக்கின்றது. கூட்டுக் குடும்பம், எத்துணைப் பயனுள்ளதாகவும், பலமாகவும், பயனாகவும் அமைந்துள்ளது என்பதை உணர்ந்து மகிழ்ந்திருக்கின்றேன்.

கூட்டுக் குடும்பமாய் வாழ்வதால் பொருளுக்கும், உடைமைக்கும், குழந்தைகளுக்கும் பாதுகாப்பாக இருக்கின்றது. இவை மட்டுமன்றி, வீட்டு வேலைகளைப் பகிர்ந்து செய்து கொள்கின்றோம். ஒரு நிகழ்ச்சி நடத்துவதென்றாலோ, யாருக்கேனும் சிக்கல் என்றாலோ குடும்பத்தில் கலந்து ஆலோசித்து, நல்ல முடிவினை எடுப்போம். எல்லாருக்கும் ஒரே சமையலாய்ச் சமைப்பதன் மூலம் வீண் விரயத்தைத் தவிர்க்கின்றோம். அனைவரும் வீட்டுச் செலவுகளைப் பகிர்ந்து கொள்வதால், எங்கள் குடும்பத்தில் செலவினங்களும் குறைகின்றன.

ஏதேனும் அசம்பாவிதங்கள் ஏற்பட்டால், உதவிக்கு எந்த நேரமும் வீட்டில் ஆள் இருக்கும். குழந்தைகளைப் பராமரித்துப் பாசம் காட்ட தாத்தா, பாட்டி போன்றோர் இருப்பர்; கொஞ்சிப் பேசி விளையாட தாய்மாமன் இருப்பார். கூட்டுக்குடும்பம், ஒரு குழந்தை பாசத்துடன் வளர வழி செய்கிறது. பெரியவர்களின் அறிவுரைக்குக் கட்டுப்பட்டு ஒழுக்கமாகவும், கண்ணியமாகவும் வாழ வழி வகுக்கின்றது. எங்கள் கூட்டுக் குடும்பத்தில் அன்பும் பாதுகாப்பும் குடும்ப நலனும் உறவும் முகிழ்ப்பதைப் பார்க்கின்றேன்.

**இடுபணி 1**

**முக்கியக் கருத்துகளை இரட்டிப்புக் குமிழி வரைபடத்தில் குறித்துக்கொள்க.**

**இடுபணி 2**

**ஒப்பிட்ட கருத்துகளைத் தொகுத்து வகுப்பில் கூறுக.**

**கவனத்தில் கொள்க**

**ஒப்பீடு:**

- ஒற்றுமை காணுதல்;
- வேற்றுமை ஆராய்தல்;
- ஒப்பிட்ட அடிப்படையில் கருத்துரைத்தல்.

இடுபணி 3

பாடல்களைச் செவிமடுத்து அவை உணர்த்தும் கருத்துகளைத் தொகுத்துக் கூறுக.

**கண் தரும் கல்வி**

செவிமடுத்திடுக

ஆயிரம் ஜன்னல் வீடு இது அன்பு வாழும் கூடு
ஆலமரத்து விழுது இதன் ஆணி வேரு யாரு
அடை காக்கிற கோழியப் போலவே
இந்த கூட்டைக் காப்பது யாருங்க
அழகான அம்மனப் போலவே
இங்க அப்பத்தாவப் பாருங்க

- கவிஞர் நா. முத்துக்குமார்

**மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும்**

செவிமடுத்திடுக

வாழை மலர் போல பூமி முகம் பார்க்கும்
கோழை குணம் மாற்று தோழா
நாளை உயிர்போகும் இன்று போனாலும்
கொள்கை நிறைவேற்று தோழா X 2

அன்பே உன் அன்னை
அறிவே உன் தந்தை
உலகே உன் கோயில்
ஒன்றே உன் தேவன் - கவிஞர் வாலி

**வளப்படுத்துதல்**

குழுவில் கலந்துரையாடி, பாடல் உணர்த்தும் கருத்தை உமது அனுபவத்தோடு ஒப்பிட்டுத் தொகுத்துக் கூறுக.

**குறைநீக்கல்**

இருவகைப் பொழுதுபோக்குகள் தொடர்பான கருத்துகளை ஒப்பிட்டுத் தொகுத்துக் கூறுக. மர வரைபடத்திலுள்ள குறிப்புகளை வழிகாட்டியாகக் கொள்க.

i-THINK

**இருவகைப் பொழுதுபோக்குகள்**

| பிராணிகளை வளர்த்தல் | பூச்செடிகளை வளர்த்தல் |
| --- | --- |
| நல்ல பொழுதுபோக்கு. | நல்ல பொழுதுபோக்கு. |
| உயிர்களை நேசிக்கும் பண்பு வளரும். | வீட்டின் சுற்றுச் சூழல் அழகு பெறும். |
| பிராணிகள் உதவியாக இருக்கும். | அழகுணர்ச்சி வளரும். |
| உடனிருந்து கவனிக்க வேண்டியிருக்கும். | உடன் இருந்து பாதுகாக்க வேண்டுமென்பதில்லை. |

# பாடம் 2 இதயம் பேசுகிறேன்

**மௌனமாக ஆழ்ந்து வாசித்து 'சீ-மா-னே' மக்கள் பற்றிய முக்கியத் தகவல்களை ஏற்ற வரிப்படக்கருவியில் குறித்துக் கூறுக.**





காணொளி

உலகிலேயே ஆரோக்கியமான இதயத்தை உடையவர்கள் பொலிவியா காடுகளில் வசிக்கும் 'சீ-மா-னே' மக்கள் என்று அறிவியலாளர்கள் கூறுகின்றனர். இவர்களில் வயதானவர்கள் உட்பட எவருக்குமே இதயத் தமனிகளில் அடைப்புகள் இல்லை என லான்செட்டின் ஓராய்வு கூறுகிறது.

இவர்களின் உணவுப் பழக்கங்களும் வாழ்க்கை முறையும் மற்றவர்களிடமிருந்து முற்றிலும் மாறுபட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இவர்களின் வேட்டையாடும் குணத்தையும் பண்டைய விவசாய முறைகளையும் யாராலும் மாற்ற முடியாது என்று கூறும் ஆய்வாளர்கள், அவர்கள் நம் அனைவருக்கும் முன்மாதிரியாக விளங்குவதை ஒப்புக்கொள்கின்றனர். பொலிவியாவின் தாழ்வான பகுதிகளின் அமேசோன் மழைக்காடுகளில் பாயும் 'மனிக்குய்' நதிக்கரையை ஒட்டிய பகுதிகளில் வாழும் இந்த மக்களின் முக்கியத் தொழில் வேட்டையாடுதல், மீன் பிடித்தல் , விவசாயம் செய்தல் ஆகும்.

கடின உழைப்பாளிகளான சீ-மா-னேக்களில் பெண்கள் ஒரு நாளுக்குச் சுமார் 16 000 அடி தூரமும், ஆண்கள் சுமார் 17 000 அடி தூரமும் நடக்கின்றனர். அறுபது வயதிற்கு மேற்பட்டவர்கள்கூட தினசரி 15 000 அடி தூரம் நடக்கின்றனர். அதிகத் தொலைவு நடப்பதே அவர்களின் ஆரோக்கியத்திற்கு முக்கியமான காரணம் என்று கலிபோர்னியாவில் இருக்கும் லாங் பீச் மெமோரியல் மையத்தின் ஆய்வாளர் டாக்டர் கிரிகொரி தாமஸ் கூறுகின்றார்.

காட்டுப் பழங்கள், கொட்டை வகைகள், காட்டுப் பன்றி மற்றும் நன்னீரில் வாழும் மீன்கள், இவற்றுடன் குடும்ப விவசாயத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் அரிசி, ராகி, சர்க்கரைவள்ளிக் கிழங்கு, வாழைப்பழம் ஆகியன இவர்களின் உணவில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளன.

பட்டணப்புறங்களில் வாழும் மக்களின் வாழ்க்கை முறையோ சீ-மா-னே மக்களின் வாழ்க்கை முறையைவிட மாறுபட்டது. தற்போது உடல் பருமன் அதிகரிப்பு, அளவிற்கு மீறி

2.2.4 வாசிப்புப் பகுதியிலுள்ள முக்கியத் தகவல்களை அடையாளம் கண்டு ஒப்பிடுவர்.

உண்ணுதல், துரித நகர்மயமாக்கல், வாழ்க்கை முறை மாற்றம், செயல் முறைகள் போன்றவை இவர்களின் ஆரோக்கிய உணவுப் பழக்கத்தை முற்றாகவே மாற்றிவிட்டன. பதப்படுத்திய உணவை இவர்கள் அதிகம் எடுத்துக்கொள்கின்றனர். உண்ணும் உணவுகள் கொழுப்பு, சீனி மற்றும் உப்பு முதலியவற்றைக் கொண்டவையாக இருக்கின்றன. துரித வாழ்க்கையின் வெற்றியெனக் கருதி பொருளாதாரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் இவர்களின் உணவும் துரித உணவாகவே அமைகிறது. பொருளியல் தேடி ஓடிக் கொண்டிருக்கும் பரபரப்பான வாழ்க்கை முறையை எதிர் நோக்கும் இவர்களுக்கு நடை பயிலவோ உடற்பயிற்சி செய்யவோகூட நேரம் கிடைப்பதில்லை. இதன் காரணமாக உடல் பருமன் போன்ற நோய்த் தாக்கத்துக்கான அபாய நிலைகள் ஏற்படுவதுடன் தொற்றா நோய்களான நீரிழிவு, உயர் குருதி அழுத்தம், உயர் கொழுப்பளவு, புற்று நோய் மற்றும் இதய நோய்கள் போன்றவை ஏற்படுகின்றன.

நகர்மயப் பரபரப்புகளுக்கிடையே சீ-மா-னேக்களைப் போல கிழங்கு, தானியம், பழவகை, சுத்தமான குடிநீர் போன்ற ஆரோக்கியமான உணவை வைத்துக்கொள்ளத் தவறிவிடுகின்றனர். நவீன உலகம் நம்மை முன்னேற்றியுள்ளது. ஆனால், நகரமயமாக்கல் மற்றும் உழைப்பில் குறிப்பிட்ட துறைகளில் நிபுணத்துவம் பெறச் செய்யும் நடைமுறைகளும் இதயத்தின் ஆரோக்கியக் குறைவுக்கான முதன்மைக் காரணங்களாக உள்ளன. இதயம் பேசினால் இதைத்தான் சொல்லுமோ!

**இடுபணி 1**

**நகர்வாழ் மக்களின் பழக்கம் பற்றிய தகவல்களைச் சீ-மா-னே மக்களின் பழக்கவழக்கங்களோடு ஒப்பிட்டு எழுதுக.**

**இடுபணி 2**

**வாசிப்புப் பகுதியிலுள்ள தகவல்களை அடையாளம் கண்டு ஒப்பிட்டு எழுதுக.**

வாழ்க்கைச் செலவினங்கள் இன்று பெருகிவிட்டன. நாளுக்கு நாள் பொருள்களின் விலை வானளவிற்கு உயர்ந்து வருகின்றது. நீர் மற்றும் மின்சாரக் கட்டணங்களின் உயர்வு, பிள்ளைகளின் உயர்கல்விக்கான செலவுகளின் அதிகரிப்பு போன்ற பொருளியல் அழுத்தம் குடும்பங்களில் பெருகி வருகின்றது. குடும்பச் சுமைகளும் அதிகரித்த வண்ணம் உள்ளன. இதனால், இன்று பெண்களும் வேலைக்குச் சென்று குடும்பத்தின் பொருளாதாரச் சுமைகளைக் குறைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுவிட்டது.

குடும்பப் பொருளாதாரச் சுமைகள் பெருகிவிட்டன. அவற்றை நிறைவு செய்ய வேண்டிய கட்டாயத்திற்குக் குடும்பங்கள் ஆளாகியுள்ளன. வசதியுடன் வாழ்வதற்கு ஏற்ற வீடு, பயணிக்க மகிழுந்து, அன்றாட வாழ்க்கையை எளிமையாக்கும் மின்னியல் பொருள்கள், எதிர்காலத்திற்கான சேமிப்பு போன்றவையும் இன்று அடிப்படைத் தேவைகளாக மாறிவிட்டன. இல்லங்களில் இவற்றை நிறைவு செய்ய வேண்டும் என்றால் கணவனோடு மனைவியும் வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது.

## இடுபணி 3

**பின்வரும் இரு வகைத் தொடர்புறவுத் தகவல்களை ஒப்பிட்டுக் கருத்துரைத்திடுக.**

i-THINK

- **பயன்விளைவு மிக்க தொடர்புறவு**
  - வாய்மொழி
    - நல்ல மொழி
    - இனிய சொற்கள்
    - பண்புச் சொற்கள்
  - மெய்மொழி
    - முகமலரப் பேசுதல்
    - வணக்கம் சொல்லல்
    - ஏற்ற தொனி, அங்க அசைவுகள்

பயன்விளைவுமிக்க தொடர்புறவுக் காரணிகளைக் குறிக்கும் இணைப்பு வரைபடம்

- **எதிர்மறை தொடர்புறவு**
  - வாய்மொழி
    - தெளிவற்ற மொழி
    - சரளமற்ற பேச்சு
    - வன்சொற்கள்; பண்பற்ற சொற்கள்
  - மெய்மொழி
    - முகம் பார்த்துப் பேசாமை
    - இறுக்கமான முகபாவனை
    - தேவையற்ற அங்க அசைவுகள்

எதிர்மறை தொடர்புறவுக் காரணிகளைக் குறிக்கும் இணைப்பு வரைபடம்

### வளப்படுத்துதல்

**வட்ட வரைபடத்தின் விவரங்களை இன்றைய மாணவர்களின் பழக்க வழக்கங்களுடன் ஒப்பிட்டு எழுதுக.**

- **மாணவர்களிடையே காணப்பட வேண்டிய நற்பண்புகள்**
  - உண்மை பேசுதல்
  - விதிமுறைகளைப் பின்பற்றுதல்
  - ஆசிரியர் சொற்படி நடத்தல்
  - பிறரை மரியாதையுடன் நடத்துதல்
  - பண்புடன் பேசுதல்

### குறைநீக்கல்

**ஒப்பிட்டு எழுதுக.**

| துரித உணவு | சமசீர் உணவு |
| --- | --- |

## பாடம் 3 விளைவுகள் அறிவோம்

**‘வெளிநாட்டுத் தொழிலாளர்களால் நாட்டிற்கு ஏற்படும் விளைவுகள்’ எனும் தலைப்பு தொடர்பாகச் சிலர் தங்களின் விவாதக்கருத்துகளை வெளியிட்டுள்ளனர். குழுவில் வாசித்துக் கலந்துரையாடுக.**



நம் நாட்டிற்குள் சட்டப்பூர்வமாகவோ கள்ளத்தனமாகவோ வெளிநாட்டினர் பலர் நுழைகின்றனர். நாளுக்கு நாள் இவர்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டிருக்கின்றது. இவர்களின் வருகையால் சில நன்மைகளும் பல தீமைகளும் விளைகின்றன.



அழுக்கு மற்றும் கடின உடலுழைப்புத் தொழில்களை நம் இளைஞர்கள் அவ்வளவாக விரும்புவதில்லை. எனவே, அத்தகைய வேலைகளிலுள்ள தொழிலாளர் தேவையை வெளிநாட்டினர் நிறைவு செய்கின்றனர். இவர்கள் இல்லையென்றல் முன்னர் குறிப்பிட்ட பல வேலைகளும் திட்டங்களும் முடங்கிப் போகலாம்.



இன்னும் சொல்லப்போனால், ஒரு வகையில், இக்குடியேறிகள் வீட்டுமனைகள் கட்டுதல் போன்ற கட்டட மேம்பாடுகள், தோட்டத் தொழில்கள், துப்புரவுப் பணிகள் போன்றவற்றில் ஈடுபடுகின்றனர். இவற்றின்வழி, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் பங்களிக்கின்றனர்.



3.4.20 180 சொற்களில் விவாதக்கட்டுரை எழுதுவர்.

இங்கு வருகின்ற வெளிநாட்டினர்களுள் வீட்டுப் பணிப்பெண்களும் அடங்குவர். பெரும்பாலான குடும்பங்களில் கணவனும் மனைவியும் மற்றும் குடும்ப உறுப்பினர்களும் வேலை செய்கின்றனர். இந்நிலையில், இப்பணிப்பெண்கள் குடும்பப் பணிகளைச் செய்து, குடும்ப உறவு சுமூகமாக அமைய துணை நிற்கின்றனர் எனலாம்.





மன்னிக்கவும். நண்பர் வீட்டுப்பணிப் பெண்கள் சுமூக குடும்ப உறவிற்கு உதவுகின்றனர் என்றார். இதனால், சில நன்மைகளும் பல தீமைகளும் விளைகின்றன. இந்த வெளிநாட்டுப் பணிப் பெண்களால்தான் பல வீடுகளில் சுமூக உறவு கெட்டுப் போனதாகச் செய்திகள் சுட்டுகின்றன. இது மட்டுமா? இது பல சமூகச் சிக்கல்களையும் அல்லவா விளைவிக்கின்றது?



இது மட்டுமா, நம் நாட்டில் கொலை, கொள்ளை, வல்லுறவு போன்ற குற்றச் செயல்கள் பெருகுவதற்கும் இவ்வெளிநாட்டினரே முக்கியக் காரணங்களுள் ஒன்றாக உள்ளனர் எனப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. இந்தக் குற்றச் செயல்கள் உள்நாட்டினரையும் பாதிக்கவே செய்கின்றன.



இவை மட்டுமல்ல, இவர்கள், ஒரு பக்கம் நாட்டின் மேம்பாட்டிற்கு உதவினாலும், மறு பக்கம், இவர்களால் நாட்டின் பொருளாதாரத்திற்குப் பெரும் பாதிப்பும் ஏற்படுகின்றது எனலாம். இவ்வெளிநாட்டினர், தாங்கள் ஈட்டும் பணத்தை ஒவ்வோர் ஆண்டும் கோடிக் கணக்கில் தங்களின் தாயகத்திற்கு அனுப்புகின்றனர். இதனால், நாடு பல கோடிகளை ஆண்டுதோறும் இழக்கின்றது.

### இடுபணி 1

**கலந்துரையாடிய கருத்துகளைப் பயன்படுத்தி விவாதக்கட்டுரைக்கான சட்டகத்தைத் தயார் செய்க.**

### இடுபணி 2

**வரிப்படக்கருவியின் துணைகொண்டு, ‘தாய் தந்தை இருவரும் வேலைக்குச் செல்வதால் குடும்பத்தில் ஏற்படும் விளைவுகள்’ எனும் தலைப்பில் 180 சொற்களில் ஒரு விவாதக்கட்டுரை எழுதுக.**

**தாய் தந்தை இருவரும் வேலைக்குச் செல்வதால் குடும்பத்தில் ஏற்படும் விளைவுகள்**

| நன்மை | தீமை |
|---|---|
| குடும்ப வருமானம் பெருகும். | பிள்ளைகளின் வளர்ப்பும் பராமரிப்பும் பாதிப்புறும். |
| வாழ்க்கைத் தரம் மேம்படும். | குடும்ப உறவு சீர்கெடும். |
| குடும்பத் தேவைகளை நிறைவு செய்ய இயலும். | பிள்ளைகளின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும். |
| குடும்ப நிலைத்தன்மையால் அமைதி பெருகலாம். | பிள்ளைகள் சமூகச் சீர்கேட்டில் சிக்கும் அபாயம் தோன்றும். |

### இடுபணி 3

**‘நகரமயமாக்குதலால் உண்டாகும் விளைவுகள்’ எனும் தலைப்பில் வரிப்படக்கருவி தயாரித்திடுக. பின்னர் 180 சொற்களில் ஒரு விவாதக்கட்டுரை எழுதுக.**

### வளப்படுத்துதல்

**வெளிநாடுகளில் உயர்க்கல்வியை மேற்கொள்வதால் ஏற்படும் விளைவுகள் எனும் தலைப்பில் 180 சொற்களில் விவாதக்கட்டுரை ஒன்றனை எழுதுக.**

### குறைநீக்கல்

**வெளிநாடுகளில் உயர்கல்வியை மேற்கொள்வதால் ஏற்படும் விளைவுகள் எனும் தலைப்பில் 10 வாக்கியங்கள் எழுதுக.**

தொகுதி 15

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## உவமைத்தொடர்களை அறிக.

| | |
|---|---|
| **வேலியே பயிரை மேய்ந்தாற்போல** | காக்க வேண்டியவரே துரோகம் செய்தல் |
| **தூண்டில்காரனுக்குத் தக்கை மேல் கண் போல** | வெளியே சொல்ல முடியாமை |
| **இலவு காத்த கிளி போல** | தன் செயலில் கவனமாயிருத்தல் / குறியாயிருத்தல் |
| **மலரும் மணமும் போல** | உறுதியாகக் கிடைக்கும் என்று காத்திருந்து ஏமாற்றம் அடைதல் |
| **ஊமை கண்ட கனாப் போல** | விட்டுப் பிரியாமை / சேர்ந்தே இருத்தல் |

### சூழல் 1



அதியனின் தந்தை வியாபாரத்தைக் கவனித்துக் கொள்ளும்படி அவனிடம் பொறுப்பைக் கொடுத்துவிட்டு வெளியூருக்குச் சென்றார். அதியன் தேர்வுக்குப் படிக்கவிருப்பதால், அவன் தன் நண்பனின் உதவியை நாடினான். தந்தையின் கடையைப் பார்த்துக்கொள்ளும் பொறுப்பை நண்பனிடம் ஒப்படைத்தான். ஆனால், வேலியே பயிரை மேய்ந்தாற்போல, பொருள்களைப் பாதுகாக்க வேண்டிய நண்பனே அவற்றை விற்று, பணத்தைத் தானே எடுத்துக் கொண்டதை அறிந்த அதியன் மனம் வேதனையுற்றான்.

### சூழல் 2





எழிலன் மூன்றாம் படிவ மாணவன். கல்வி கேள்விகளிலும் விளையாட்டுத் துறையிலும் சிறந்து விளங்கிய அவன், மாணவர் தலைவன் பதவி தனக்குத்தான் கிடைக்கும் என்றெண்ணி அதற்காக ஓர் ஆண்டாகக் காத்திருந்தான். அப்பதவியை அடையும் கனவுகளையும் கண்டு வந்தான். ஆனால், வேறொரு மாணவன் அப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதும், தனக்கே கிடைக்கும் என்று நம்பியிருந்த பதவி கிடைக்காமல் போனதை எண்ணி இலவு காத்த கிளி போல ஆனான்.

4.5.3 மூன்றாம் படிவத்திற்கான உவமைத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

சூழல் 3

மாலனுக்கும் மாலதிக்கும் அன்று திருமண நாள். வந்திருந்தோர் அகமும் முகமும் மலர வாழ்த்தினர். தம்பதியர் இருவரும் மலரும் மணமும் போல ஒருவரையொருவர் சார்ந்தே வாழ்வர் எனப் புகழ்ந்தனர். அவர்கள் நீண்ட காலம் சேர்ந்தே வாழவேண்டும் என ஊர் மக்கள் அனைவரும் வாழ்த்தினர்.



சூழல் 4



அமுதா, அமுதினி, அருள்நிலா ஆகிய மூவரும் நெருங்கிய தோழிகள். ஒருநாள் அமுதா அமுதினியின் விலையுயர்ந்த மூக்குக் கண்ணாடியைக் கைதவறிக் கீழே போட்டு உடைத்துவிட்டாள். இதைக் கண்ட அருள்நிலா தோழியைக் கண்டித்தாள். இருப்பினும், அமுதினியிடம் இதைப்பற்றிக் கூறவில்லை. தோழிகளிடையே பிளவு உண்டாகிவிடுமோ என்ற பயத்தில் ஊமை கண்ட கனா போல அவ்வுண்மையைத் தன்னுள்ளேயே வைத்துப் புதைத்து விட்டாள் அருள்நிலா. பின்னர், இருவரும் இணைந்து அமுதினிக்கு அதே போன்ற மூக்குக் கண்ணாடியை வாங்கித் தந்துவிட்டனர்.

## இடுபணி 1

**சூழலில் உள்ள உவமைத்தொடர்களை அறிந்து கூறுக; எழுதுக.**

## இடுபணி 2

**உவமைத்தொடர்களுக்கு ஏற்ற பொருளை எழுதுக.**

- வேலியே பயிரை மேய்ந்தாற்போல
- தூண்டில்காரனுக்குத் தக்கை மேல் கண் போல
- இலவு காத்த கிளி போல
- மலரும் மணமும் போல
- ஊமை கண்ட கனாப் போல

## இடுபணி 3

**உவமைத்தொடர்களுக்கான சூழல் உருவாக்குக.**

1. வேலியே பயிரை மேய்ந்தாற் போல
2. மலரும் மணமும் போல

## வளப்படுத்துதல்

**ஏதேனும் ஓர் உவமைத்தொடரைத் தெரிவுசெய்து கதையை உருவாக்குக.**

## குறைநீக்கல்

**உவமைத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் மனனம் செய்து கூறுக.**

தொகுதி 15

# தொகுதி 16 அறிவார்ந்த பயனீடு

## பாடம் 1 அறிந்து பயன்கொள்

**சூழல்கள் தொடர்பான தகவல்களைப் பற்றி மேலும் விளக்கங்களைப் பெறுவதற்கு ஏற்ற கேள்விகளை விவாதித்து உரையாடுக.**

### சூழல் 1

நினைவகம் | தரம் | செயலி | நிலைவட்டு | விலை

நீங்கள், உங்கள் கல்வி பயன்பாட்டிற்காக மடிக்கணினி ஒன்றை வாங்க உள்ளீர்கள். நீங்கள் வாங்க விரும்பும் மடிக்கணினி பற்றிய முழுவிவரங்களை விற்பனையாளரிடம் பெற விரும்புகிறீர்கள்.



**எ.கா:**

இந்த மடிக்கணினி எவ்வளவு நினைவக ஆற்றலைக் கொண்டுள்ளது? இதன் பயன்கள் யாவை?

### சூழல் 2

மாணவர்களுக்கான விடுமுறைகாலப் பயிற்சி முகாம் பற்றிய அறிவிப்பு ஒன்றைக் காண்கிறீர்கள். ஏற்பாட்டாளரிடம் அதையொட்டிய விவரங்களைப் பெற முனைகிறீர்கள்.

**விடுமுறைகாலப் பயிற்சி முகாம்**

- பி.டி.3 மாணவர்கள் தேர்வு அணுகுமுறைக்கான பயிற்சிக் களம்...!
- தேர்ந்த கல்வியாளர்கள் வழிநடத்தும் பயிலரங்கம்...!
- குறைந்த இடங்களே உள்ளன. முந்துக...!

தொடர்புக்கு: 03 – 3196 1435

பதிவு முறை | பெறக்கூடிய நன்மைகள் | வழி நடத்துநர் | கட்டணம்

1.2.3 விளக்கம் பெறக் கேள்விகள் கேட்பர்.


## இடுபணி 1

**சூழலை ஒட்டி விவரம் அறிய கேள்விகளைப் பட்டியலிட்டுக் கேட்டிடுக.**

### சூழல் 1

உங்கள் அப்பா வாங்கிய கடிகாரம் பயன்படுத்திய ஒரே மாதத்தில் பழுதாகிவிட்டது. உன் அப்பா இது குறித்துப் புகார் செய்ய எண்ணியுள்ளார். அதற்கான நடவடிக்கை முறைகளை அறிய பயனீட்டாளர் சங்கத்தைத் தொடர்பு கொள்ள உங்கள் அப்பா உங்களைப் பணித்துள்ளார். நீங்கள் பயனீட்டாளர் சங்கப் பொறுப்பாளரைத் தொலைபேசியில் அழைக்கிறீர்கள். அழைத்துச் சில விளக்கங்களைப் பெற விரும்புகின்றீர்கள்.

- மேற்கொள்ளத்தக்க நடவடிக்கைகள்
- தீர்வுகள்; பயன்கள்
- தீர்வுக்கான காலம்
- தொடர்பு நபர்; அவரைப் பற்றிய விவரங்கள்
- தொடர்பு முகவரி; மின்னஞ்சல்



## இடுபணி 2

**எவையேனும் இரு முறையீடுகளைத் தெரிவு செய்து, அவற்றைப் பற்றிய விளக்கங்களைப் பெறத் தொடர்கேள்விகளைக் கேட்டிடுக.**

| முறையீட்டு வகைகள் | 30 ஜூன் 2017 | 30 ஜூலை 2017 | முறையீடுகளின் எண்ணிக்கை உயர்வு |
|---|---|---|---|
| சேவை பற்றிய புகார்கள் | 2318 | 2737 | 419 |
| விலை பற்றிய புகார்கள் | 1851 | 2115 | 264 |
| விலைச் சிட்டை இல்லாமை | 377 | 457 | 80 |
| போலியான பொருள்கள் | 263 | 319 | 56 |
| முறையற்ற இலாபம் பெறுதல் | 229 | 268 | 39 |

**எ.கா: முறையற்ற இலாபம் பெறுதல்**

- முறையற்ற இலாபம் பெறுதல் என்றால் என்ன?
- எத்தகைய பொருள்களில் இவ்வகை இலாபங்கள் பெறப்படுகின்றன?
- ஏன் இவ்வகை முறையீடுகள் குறைவாக உள்ளன?

காணொளி

**இடுபணி 3**

**கடன்பற்று அட்டையைப் பயன்படுத்தும் பழக்கம் மலேசியர்களிடையே வெகு வேகமாகப் பரவி வருகிறது. இது குறித்துக் கூடுதல் விளக்கம் பெற ஏற்ற கேள்விகளைக் கேட்டிடுக.**



எ.கா:

கடன்பற்று அட்டை என்றால் என்ன?

## வளப்படுத்துதல்

**பயனீட்டாளர் சங்கப் பொறுப்பாளரைச் சந்தித்து, அந்தச் சங்கத்தைப் பற்றிய விவரங்களை அறிய விரும்புகிறீர்கள். அந்தச் சங்கத்தைப் பற்றிய விளக்கங்களைப் பெறும் வகையிலான கேள்விகளைப் பட்டியலிட்டுக் கேட்டிடுக.**

## குறைநீக்கல்

**பதாகையை ஆராய்ந்து, நிகழ்ச்சியைப் பற்றிய முழு விளக்கம் பெறும் வகையில் கேள்விகளைத் தயார் செய்க.**



**முனைவர் இரா. தண்டாயுதம்**

**'சூழற்கிண்ணச் சொற்போர்'**

**விரைவில்**

தொடர்புக்கு: 021-12310900 (திரு. மாறன்) – இயக்குநர்
026-243 7305 (திரு. சரத்குமார்) – தமிழ்ப்பேரவைத் தலைவர்

எ.கா: இந்த நிகழ்ச்சி எப்போது நடைபெறுகிறது?

தொகுதி 16

# பாடம் 2 மின்னியல் வணிகம்

**வாசிக்கும் முன்:** தற்போது எவ்வாறெல்லாம் பயனீட்டுப் பொருள்களை வாங்கலாம் என்பதனை ஒட்டி கலந்துரையாடுக.

**பனுவலை ஆழ்ந்து வாசித்து முக்கியக் கருத்துகளை அறிக.**



இன்றைய சூழலில் பொருள்களை வாங்கும் முறைகளும் விற்கும் வழிமுறைகளும் முற்றிலும் மாறி வருகின்றன. காலத்தின் தேவைக்கேற்ப இன்று மின்னியல் வணிகமுறை அறிமுகமாகி, பயனீட்டாளர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்று வருகின்றது.

இந்த வரவேற்புக்குப் பல காரணங்கள் உள்ளன. முதலாவதாக, இந்த வகையில் வாங்கப்படும் பொருள்களும் சேவைகளும் விலை மலிவாகவும் தரமுள்ளதாகவும் இருப்பதாகப் பயனீட்டாளர்கள் கருதுகின்றார்கள். மேலும், பயனீட்டாளர்களின் நேரமும் உழைப்பும்கூட இவ்வணிக முறையில் மீதப்படுகிறது. பொருள்களை வாங்க விரும்பும் ஒரு பயனீட்டாளர், விற்பனையாளரின் வலைத்தளங்களுக்குச் சென்று தமக்கான பொருள்களைத் தெரிவு செய்வார். பின்னர், பரிந்துரைக்கப்பட்ட முறையில் பணத்தைச் செலுத்துவார். இதன் பின்னர், அஞ்சல் வழியாகவோ நேரடியாகவோ பொருள், வீடு தேடி வந்துவிடும். இந்த எளிமையான வாங்கும் முறைதான் பயனீட்டாளர்களைப் பெரிதும் ஈர்க்கிறது.

பயனீட்டாளர்கள் மட்டுமன்றி, விற்பனையாளர்களும் இவ்வணிக முறையில் பெரும் பயன் அடைகிறார்கள். குறைவான முதலீடும் ஆக்ககரமான விற்பனை முறையும் அவர்களுக்குப் பெரும் நன்மை தருகின்றன. வணிகர்கள், இணையத்தளத்தின் மூலமாகவே தங்களுடைய பொருளைப் பற்றிப் பயனீட்டாளர்களுக்கு அறிமுகம் செய்து விடுகிறார்கள். அதோடு, விற்பனைக்குரிய பொருள்களைச் சேமித்து வைக்க கிடங்கும் விற்பனை மையமும் விற்பனை முகவர்களும் அவர்களுக்குத் தேவைப்படுவதில்லை. இதனால், அதிகமான முதலீடு இன்றி, பொருள்களை மலிவான விலைக்குத் தர முடிகிறது.

மிகப் பெரிய வரவேற்பைப் பெற்று வரும் இந்த மின்னியல் வணிக முறையில், பல்வேறு குறைபாடுகளும் நிலவி வருகின்றன. குறிப்பாக, குறிப்பிட்ட காலத்திற்குள் பொருள்கள் வந்து சேராமை, பொருளின் தரம் எதிர்பார்த்தபடி இல்லாமல் குன்றியிருப்பது, விண்ணப்பித்த பொருளுக்குப் பதிலாக, வேறு பொருள் வந்தடைதல் போன்ற குறைபாடுகள் பெருகி வருகின்றன.

2.2.5 வாசிப்புப் பகுதியிலுள்ள தகவல்களை வகைப்படுத்துவர்.

## இடுபணி 1

**அடையாளம் கண்ட முக்கியக் கருத்துகளைப் பட்டியலிடுக.**

## இடுபணி 2

**பனுவலின் தகவல்களை வரிப்படக்கருவியில் வகைப்படுத்துக.**

| | |
|---|---|
| மின்னியல் வணிகமுறை பயனீட்டாளரிடையே வரவேற்புப் பெற காரணம். | பொருள்களின் விலை மலிவு. |
| | பொருள்கள் தரமுள்ளதாக இருக்கின்றன. |
| | |
| வணிகர்கள் அடையும் நன்மைகள் | |
| | |
| | |
| மின்னியல் வணிகத்தின் குறைபாடுகள் | |
| | |
| | |

## இடுபணி 3

**போலிப் பொருள்களின் பெருக்கத்தை, கணிமச் சிந்தனைப் படிநிலைகளைப் பயன்படுத்தி ஆராய்க. இதனை அடிப்படையாகக் கொண்டு தீர்வுகளை வகைப்படுத்துக.**

**சிக்கல்: போலிப் பொருள்கள்**

| கணிமச் சிந்தனைப் படிநிலைகள் | |
|---|---|
| சிக்கலின் இயல்புகள்/கூறுகளைப் பகுத்துப் பார்த்தல். | • தரமற்ற பொருள்களாக இருத்தல்.<br>• அசல்போல் இருத்தல்.<br>• தரச்சான்று இல்லாதிருத்தல். |
| அக்கூறுகளுள் ஓர் ஒருமையைக் காணல். | • இக்கூறுகள் போலிப் பொருள்களுடன் தொடர்புள்ளவையாக இருத்தல். |
| அக்கூறுகளைப் பொதுமைப்படுத்தி முடிவெடுத்தல். | • போலிப் பொருள்களைச் சந்தையில் விட்டுப் பயனீட்டாளர்களை ஏமாற்றுதல். |
| சிக்கலைத் தீர்க்கும் வழிமுறைகளைக் கண்டறிதல். | • சட்ட விதிகளின் வழி தடுத்தல்.<br>• பயனீட்டாளர் விழிப்புணர்வை உருவாக்குதல்.<br>• பயனீட்டாளர் இயக்கங்களுடன் ஒத்துழைத்தல். |

**வளப்படுத்துதல்**

**பயனீட்டாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றிய தகவல்களை இணையத்தில் திரட்டி, வகைப்படுத்துக.**

**குறைநீக்கல்**

**நாள்குறிப்பை மௌனமாக வாசித்து, தகவல்களை வகைப்படுத்துக.**

ஞாயிற்றுக்கிழமை

அக்டோபர் 05

**இன்றைய என் மனப் பதிவு...!**

சில சமயங்களில், பழைய வாழ்க்கை முறையை அசை போட்டு உள்ளம் ஏக்கம் கொள்ளும். நேற்று, மாத மளிகைப் பொருள்கள் பட்டியலைத் தயாரிக்கும்போது, அப்படி ஓர் ஏக்கம் நெஞ்சில் நிலை கொண்டது.

சின்னப் பிள்ளையாக இருந்தபோது, அப்பா மாதச் சம்பளம் வாங்கிய உடன் மளிகைப் பொருள்களின் பட்டியலோடு, சீனன் கடை முன், கூட்டத்தில் நின்றது; பொட்டலம் கட்டி அரிசி, பருப்பு, உப்பு, எண்ணெய் போன்றவை வாங்கி வந்தது; வீட்டில் பிரித்துச் சீர்படுத்தி வைத்தது; ஏதாவது பொருள் விட்டுப் போயிருந்தாலோ, சரியில்லை என்றாலோ உடனே ஓடிப் போய் மாற்றி வந்தது என, ஒவ்வொன்றாய் நினைவில் வந்து, மனத்தை ஏக்கம் ஆட்கொள்ளச் செய்தது.

ஆனால், இப்போது இயந்திரத்தனமாய்ப் போய் நின்று, எது தேவை, தேவையில்லை என, வீட்டிலேயே பட்டியல் தயாரித்துக் கொள்ளாமல், கண்களில்படும் எல்லாவற்றையும் அள்ளிப் போட்டு, பணத்திற்குப் பதில் கடன்பற்று அட்டைகளைத் தேய்த்து விட்டு வருவது

இப்பொழுதெல்லாம் நமக்கு வசதியாகப் போய்விட்டது. ஆனால், ஒரு பயனீட்டாளராக நமக்கான உரிமைகளை இது போன்ற சூழல்களில் நாம் உணர்வதே இல்லை.

உணவுப் பொருள்களை வாங்கும்போதும், மருந்துப் பொருள்களை வாங்கும்போதும் நாம் தனிக் கவனமும் அக்கறையும் எடுத்துக்கொள்ள வேண்டும். மருந்துப் பொருள்களை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிலிருந்து மட்டுமே வாங்க வேண்டும். அதைப்போலவே, உணவுப் பொருள்களை வாங்கும்போது, அந்த உணவுப் பொருள்களின் பயன்பாட்டுக் காலக்கெடு, சுவையூட்டிகளின் வகை, வேதிப் பொருள்கள் பற்றி அறிந்திருக்க வேண்டும்.

ஒரு பொருளை வாங்கும் ஒரு பயனீட்டாளர், அதன் தரம் குறித்து முழுமையான அறிவையும், விழிப்புணர்வையும் முன்னரே பெற்றிருக்க வேண்டும். அப்போதுதான், தரமற்ற பொருள்களிலிருந்து, தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். ஆனால், அவற்றிலெல்லாம் நாம் எங்கே அக்கறை செலுத்துகிறோம்?

## பாடம் 3 பயனீட்டாளரின் உரிமைகள்

**வரிப்படக்கருவியில் காணும் கருத்துகளைக் குழுவில் ஆராய்ந்து அறிக.**

### பயனீட்டாளர் உரிமைகள்

**தேர்ந்தெடுக்கும் உரிமை**

- எந்தவித வற்புறுத்தலும் இன்றி சேவை மற்றும் பொருளைப் பெறுவதில் உரிமை பெற்றிருத்தல்; சொந்தமாக முடிவெடுத்தல்.
- தரமான பொருளையும் சேவையையும் பெறுவதில் உரிமை பெற்றிருத்தல்.
- பொருளையும் சேவையையும் நியாயமான விலையில் பெறுவதில் உரிமை பெற்றிருத்தல்.

**இழப்பீடு பெறுவதில் உள்ள உரிமை**

- வாங்கிய பொருள் பழுதுபட்டாலோ பெற்ற சேவைகள் தரமில்லாமல் இருந்தாலோ அதற்கான இழப்பீட்டைப் பெறுவதில் உரிமை பெற்றிருத்தல்.
- தர உறுதிப்பாடு வழங்குதல்.

**பாதுகாப்புப் பெறுவதில் உள்ள உரிமை**

- பொருளைப் பயன்படுத்தும்போது பாதுகாப்பாக இருப்பதற்கு உறுதியைப் பெற்றிருத்தல்.
- பாதுகாப்பு உறுதி பெறுதல்.
- பயன்பாடு, உயிர், உடல் போன்ற பாதுகாப்புகள் அறிந்திருத்தல்.

**எ.கா:**

பயனீட்டாளர்கள் தாம் விரும்பும் சேவையையும் பொருளையும் சொந்தமாகத் தெரிவு செய்யும் உரிமையைப் பெற்றிருக்கிறார்கள். அவ்வாறு அவர்கள் வாங்கும் பொருளும் சேவையும் தரமாக இருப்பதோடு, கட்டணமும் ஏற்புடையதாக இருத்தல் வேண்டும். இவை போன்ற, பயனீட்டாளர்களின் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும்.

**நினைவில் கொள்க**

- தொகுத்தலின் கருப்பொருள் அறிக.
- கருப்பொருள் முதல் வாக்கியம்.
- துணைக்கருத்துகள்: துணை வாக்கியங்கள்; சாரமாகத் தருக.
- எடுத்துக்காட்டுகள், சான்றுகள் தவிர்த்திடுக.
- முடிவு வாக்கியம்.
- கோவையாக எழுதுக.

**இடுபணி I**

**வரிப்படக்கருவியில் காணும் கருத்துகளைத் தொகுத்துப் பத்தியில் எழுதுக.**

3.2.5 கருத்துகளைத் தொகுத்துப் பத்தியில் எழுதுவர்.

## இடுபணி 2

**பயனீட்டாளர் விழிப்புணர்வு கையேட்டின் தகவல்களைப் பத்தியில் தொகுத்து எழுதுக.**

### நீங்கள் விவேகமான பயனீட்டாளரா...?




- பயனீட்டாளரின் உரிமைகள் பற்றி அறிந்திருக்கிறீர்களா?
- பயனீட்டாளரின் கடமைகள் என்ன என்று தெரிந்திருக்கிறீர்களா?
- பொருள் மற்றும் சேவையின் தரத்தையும் நீங்கள்தாம் உறுதி செய்கிறீர்கள் என்பது தெரியுமா?
- வாங்கும் பொருளைப் பற்றிய முழுத்தகவலைப் பெறுவதில் தவறிவிட்டால் ஏமாற்றப்படுவீர்கள் என்பது புரியுமா?
- விவேகமான பயனீட்டாளர் முறையாகச் செலவு செய்வார் என்பதை உணர்ந்திருக்கிறீர்களா?
- ஏமாற்றப்பட்டால் இழப்பீடு பெறும் வழிமுறைகளை அறிந்திருக்கிறீர்களா?
- சேவை முறை, விலைகளில் மாறுபாடு, தவணைமுறை மோசடி போன்ற வழிகளில் நீங்கள் ஏமாற்றப்படுவதை அறிந்திருக்கிறீர்களா?

**பயனீட்டாளர்கள் முறையீடுகள் செய்ய:**

தொலைபேசி: 1-800-886-800 மின்னஞ்சல்: e-aduan.kpdnkk.gov.my

## இடுபணி 3

**கருத்துகளைத் தொகுத்துப் பத்தியில் எழுதுக.**


SIRIM
**நோக்கமும் செயல்பாடும்**

- உற்பத்திப் பொருள்கள் தரக்கட்டுப்பாட்டு மையமாகச் செயல்படுதல்.
- உற்பத்திப் பொருள்களைச் சோதனைக்கு உட்படுத்தி தரத்தை உறுதி செய்தல்.
- உற்பத்தியாளர்களுக்கு ஆலோசனைகளை வழங்குவதன்வழி பொருள்கள் பாதுகாப்புக் கூறுகளுடன் இருப்பதை உறுதி செய்தல்.
- தரக்கட்டுப்பாட்டை அங்கீகரிக்கும் வகையில் 'சீரிம்' முத்திரையிடப்பட்ட சான்றிதழ் வழங்குதல்.
- சந்தையில் தரமான பொருள்கள் இருப்பதைக் கண்காணிப்பின்வழி உறுதி செய்தல்.

மலேசியத் தொழில்துறை ஆய்வு, தர நிர்ணய நிறுவனத்தின் 'சீரிம்' நோக்கமும் செயல்பாடும்


## வளப்படுத்துதல்

வட்டக்குறிவரைவில் அடங்கியுள்ள தரவுகளைத் தொகுத்துப் பத்தியில் எழுதுக.




## குறைநீக்கல்

இவர்கள் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.



## பாடம் 4 இலக்கணம்

**வலிமிகா இடங்களை அறிக.**

சொற்றொடர்களில்,
வருமொழி
**‘க், ச், த், ப்’**
ஆகிய வல்லெழுத்துகளில்
தொடங்கினால் நிலைமொழி
ஈற்றில் சில இடங்களில்
வலிமிகாது.

**உயர்திணைப் பெயர், பொதுப்பெயர்களின் பின் வலிமிகாது.**

**எ.கா:**

தம்பி + சிறியவன் = தம்பி சிறியவன்
பறவை + பறந்தது = பறவை பறந்தது

# இயற்கையின் எழில் கோலம்

கடலும் அலையும் சோலைகளும்
காற்றும் மலையும் ஆறுகளும்
இடியும் மழையும் எல்லாமே
இயற்கைத் தாயின் எழிற் கோலம்

வனத்தில் உலவும் விலங்குகளும்
வானில் பறக்கும் பறவைகளும்
மனத்தில் நிறையும் பூச்சிகளும்
மணக்கும் இயற்கை எழிற் கோலம்

மண்ணில் மலரும் பூவினமும்
மயக்கம் தந்திடும் வண்டினமும்
விண்ணில் நகரும் வெளிர் நிலவும்
விந்தை இயற்கை எழிற் கோலம்

**வலிமிகா இடங்கள்:**
**பொதுப்பெயர் பின் வலிமிகாது**

மூலம்: கவிஞர் மின்னூர் சீனிவாசன்
எடுத்தாளப்பட்டது.



5.5.5 உயர்திணைப் பெயர், பொதுப்பெயர் ஆகியவற்றின்பின் வலிமிகாது என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**இடுபணி 1**

**வாசித்தறிந்த கவிதையில் காணும் பொதுப்பெயர்களைப் பட்டியலிடுக.**

**இடுபணி 2**

**பொதுப்பெயர்கள் தொடர்பான இலக்கண விளக்கத்தைப் பட்டியலுடன் ஒப்பிட்டு அறிக.**



**கவனத்தில் கொள்க**

**பொதுப்பெயர் என்றால் என்ன?**

- ஒரே வகையான பல பொருள்களுக்குப் பொதுவான பெயராக விளங்குவது பொதுப்பெயர்.

**எ.கா:**

| பொதுப்பெயர் | |
|---|---|
| விலங்கு | ஊர் |
| மரம் | மலை |
| பூ | கடல் |
| பறவை | மீன் |

**இடுபணி 3**

**பொதுப்பெயர்களின் பின் வலிமிகாது எனும் விதிக்கேற்பச் சேர்த்து எழுதுக.**

1. ஊர் + கூடியது = ஊர் கூடியது
2. கடல் + பொங்கியது =
3. உணவு + சுவைத்தது =
4. மலை + தெரிந்தது =
5. விண்மீன் + சிமிட்டியது =
6. விலங்கு + சிக்கியது =

## வளப்படுத்துதல்

**பொதுப்பெயர்களுக்குப் பின் வலிமிகாது எனும் விதிக்கேற்பச் சொற்களைத் தெரிவு செய்து எழுதுக.**

இயற்கையை விட்டு நாம் வெகு தூரம் விலகி வந்துவிட்டோம். காலையில் கதிர் தோன்றும் அழகைக் கண்டு வெகு நாளாகிவிட்டது. பூங்காவில், மலர் பூத்துக் குலுங்கும் அழகில் மனத்தை இழந்த நாள்கள் மலை ஏறிவிட்டன. பறவை பாடும் அழகு, இரவு நேரத்தில் தவளை கத்தும் சத்தம், வண்டு பாடும் இனிய ரீங்காரம், ஆறு சலசலத்து ஓடும் எழில் தோற்றம், அருவி கீழே வீழும் அருங்காட்சி, எல்லாம் கானல் நீராய்க் களம் பெயர்ந்து விட்டன. முன்னேற்றம் எனும் போர்வையில், மனிதன் இயற்கையை அழிப்பதால், காடு கண்ணில் படாமல் போய்விடுகிறது. புதிதாய் ஊர் பிறந்து விடுகிறது. அங்கே வாழ்ந்த விலங்கு போய் மறைந்த நிலை பற்றி யாரும் வினவுவதில்லை. மலை கரைத்து, மாடிவீடு கட்டுகிறோம். அங்கே தழைத்திருந்த மரங்களையும் செடிகொடி செழிந்திருந்த செழுமையையும் இனி, எங்கே தேடப் போகிறோம்? இயற்கை வளங்களைச் சுரண்டி எடுத்துவிட்டு, மனிதவளத்தை மேம்படுத்துகிறோம் என்று மனிதனே கூறுவது வேடிக்கையாக இருக்கிறது.



## குறைநீக்கல்


**கீழ்க்காணும் சொற்களுக்குச் சரியான இணையைத் தெரிவு செய்து பொதுப்பெயர்களின் பின் வலிமிகாது என்ற விதிக்கேற்பச் சேர்த்து எழுதுக.**

| | |
|---|---|
| கொடி | பழுத்தது |
| பழம் | சாய்ந்தது |
| மரம் | சீறியது |
| மலர் | பறந்தது |
| பாம்பு | பூத்தது |

## தொகுதி 17 வணிக உலகம்

### பாடம் 1 வணிகம் பலவகை

படச்சூழல்களை ஒட்டி குழுவில் கலந்துரையாடுக.




முதலில் தள்ளுவண்டியில் வியாபாரம் செய்தல்




கடைவைத்து வணிகம் செய்தல்

1.2.4 ஊக்கத் தூண்டும் வகையில் கேள்விகள் கேட்பர்.

**3 அடுத்து...?**

**ஊகிக்க ஏற்ற வினாச்சொற்களைப் பயன்படுத்தி வினவுக.**

**வணிக விரிவாக்கம்**

- விரிவாக்கத் தேவை...?
- விரிவாக்கத்தின் விளைவு...?
- தொடர் முயற்சிகள்...?
- வளர்த்துக்கொள்ள வேண்டிய பண்புகள்...?



## இடுபணி 1

**கலந்துரையாடிய சூழல் தொடர்பாக ஊகிக்கும் வகையில் கேள்விகள் கேட்டிடுக.**

## இடுபணி 2

**பனுவலை வாசித்து ஊகிக்கத் தூண்டும் வகையில் கேள்விகள் கேட்டு விடை கூறுக.**

**ஊகிக்கும் வழிகாட்டிகள்**

- கூடி வாழ்ந்தால்...?
- கூடி வாழும் முறை...?
- நன்மைகள்...?
- சிக்கல்கள்...?
- தீர்வுகள்...?

**எ.கா:** கூடி வாழ்தல் என எதனைக் குறிப்பிடுகின்றனர்?

'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை,' என்பது பழமொழி. நம் முன்னோர் நன்கு உணர்ந்தே இதனை வழங்கி இருக்க வேண்டும். இப்பழமொழியை மெய்ப்பிப்பது கூட்டுறவுக் கழகங்கள். வசதியற்றவர்களும் ஏழ்மையில் இருப்பவர்களும்கூட தங்கள் சக்தியை ஒன்று திரட்டி உயரலாம் என்பதற்குக் கூட்டுறவு இயக்கங்களே சான்று. சிறு சேமிப்பைச் சேர்த்து முதலீடாக்கி, தொழிலோ வணிகமோ தொடங்கலாம்; சொத்துடைமையைச் சேர்க்கலாம்.

இக்கூட்டுறவு மனப்பான்மையைச் சிறு வயது முதலே வளர்க்கவே பள்ளிக் கூட்டுறவுக் கழகங்கள் உருவாக்கப்பட்டன. பள்ளிக் கூட்டுறவுக் கழகங்களில் பள்ளி மாணவர்கள் உறுப்பியம் பெற்றுள்ளனர். அவர்களே அக்கூட்டுறவுக் கழகங்களை இயக்குகின்றனர். ஆசிரியர்கள் ஆலோசனைகளை மட்டுமே வழங்குகின்றனர். மாணவர்களுக்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் கூட்டுறவுக் கழகங்கள் விற்கின்றன. அக்கூட்டுறவுக் கழகங்களில் வரும் இலாபம் உறுப்பியம் பெற்ற மாணவர்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்படுகின்றன.



## இடுபணி 3

**உமது வட்டாரத்தில் இருக்கக் கூடிய சிறு வணிக வாய்ப்புகள் பற்றி ஊகிக்கத் தூண்டும் வகையிலான வினாக்களைப் பட்டியலிட்டுக் கூறுக.**

தொகுதி 17

## வளப்படுத்துதல்

வழிகாட்டல்களைப் பயன்படுத்தி ஊகிக்கத் தூண்டும் வகையில் வணிகம் தொடர்பான கேள்விகளைக் கேட்டிடுக.



- வணிகத்திட்டம்
- வெற்றி வாய்ப்பு
- வாடிக்கையாளர்கள்
- சந்தைப்படுத்துதல்
- எதிர்கால வளர்ச்சி

## குறைநீக்கல்

கேலிச்சித்திரத்தையொட்டி ஊகிக்கத் தூண்டும் வகையில் மூன்று கேள்விகளைக் கேட்டிடுக.



## பாடம் 2 வணிகத்தில் வெற்றி!

**வாசிக்கும் முன்: சொற்களை உச்சரித்துப் பழகுக.**

- சிற்றங்காடி
- பல்சரக்கு
- சரக்குந்து
- தருவிக்கின்றான்
- உற்ற
- வடிகால்
- வாடிக்கையாளர்
- இன்முகம்
- நிறைவுசெய்வது

**கதையை மௌனமாக வாசித்திடுக.**




அஃது ஒரு புறநகர்ப் பகுதி. சுமார் ஈராயிரத்திற்கு மேற்பட்ட குடியிருப்புவாசிகள் வாழ்கின்றனர். பலர் வணிக வாய்ப்புகளை நாடி அந்நகரில் சிற்றங்காடிகளையும் பலசரக்குக் கடைகளையும் திறந்தனர். வேலன், மாறன் என்ற இருவர் அடுத்தடுத்துப் பல்பொருள் அங்காடி வைத்து நடத்தி வந்தனர். இருவருக்கும் விற்பனை நன்றாகவே நடந்து வந்தது.

இருப்பினும், வேலனின் வணிகம் சற்றுக் கூடுதலாகவே நடந்தது. இது மாறனின் மனத்தை உறுத்தியது. எப்படி என் கடையைவிட வேலனின் கடைக்கு அதிகமான வாடிக்கையாளர்கள் செல்கின்றனர் என்ற எண்ணம் தோன்றியது.

ஒரு நாள் வேலனின் கடைக்குச் சரக்குந்து ஒன்று அதிகமான பொருள்களைக் கொண்டு வந்து இறக்கிக் கொண்டிருந்தது. இதைக் கண்ணுற்ற மாறனின் மனத்தில் பல கேள்விகள் எழலாயின.

வேலன் ஏன் இவ்வளவு பொருள்களைத் தருவிக்கின்றான்? அந்த அளவிற்கா அவனுக்கு வியாபாரம் நடக்கின்றது? வேலனின் வணிகத்தைப் பெருக்க எங்கிருந்து பணம் கிடைத்தது? என்பன போன்ற கேள்விகள் பல எழுந்தன. மாறனைப் பொறாமைத் தீ வாட்டியது.

இந்த மன எரிப்பு மாறனை உந்தித் தள்ள, இக்கேள்விகளுக்கான விடை தேட மனம் துடித்தது. மின்னல்போல் ஒரு வழி பளிச்சிட்டது. வேலனின் உற்ற தோழன் திருமூலனை நாடுவது என்று

2.1.7 கதையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிப்பர்.



தீர்மானித்தான். சென்றான்; கண்டான்; மெல்ல பேச்சுக் கொடுத்தான். முதலில், திருமூலனின் குடும்ப நலன்பற்றி விசாரித்தான். பின்னர், மெல்ல தன் மனத்தில் ஒளிந்திருந்த அந்த நினைப்புகளுக்கு வடிகால் திறக்கலானான்.

“ஆமாம், சமீபகாலமாக வேலன் நிறையப் பொருள்களைக் கொண்டு வந்து இறக்குகின்றாரே, ஏன்?” என்று கொக்கிப் போட்டான்.

“ஓ…! அதுவா…! வேலன் தம் வணிகத்தை விரிவுபடுத்த நினைக்கின்றார். அதிகப் பொருள்களை வாங்கி, அவற்றைச் சற்றுக் குறைந்த விலையில் இவ்வட்டாரச் சிறுவணிகர்களுக்கு விற்கத் திட்டமிட்டுள்ளார்,” என்றார் திருமூலன். “உள்ளூரிலும் வேலனின் வணிகம் பெருகிக் கொண்டுதான் உள்ளது. வாடிக்கையாளர்களிடம் இன்முகம் காட்டி அணுகுவது, அவர்களின் தேவையை விரைந்து நிறைவுசெய்வது, தரமான பொருள்களை விற்பது போன்றவை வாடிக்கையாளர்களைப் பெரிதும் கவர்ந்துள்ளன,” என்று மேலும் தொடர்ந்தார் திருமூலன்.

“அப்படியா…!” மாறனின் எதிரொலி. அடுத்து எழுந்த ஐயத்தையும் தெளிவுபடுத்திக்கொள்ள விரும்பினான் அவன். “மூலதனம் எங்கிருந்து கிடைக்கிறது? என அடுத்த உறுத்தலையும் கேட்டான் மாறன்.

“ அவரிடம் அந்த அளவிற்குப் பணமில்லை. ஆனால், அவர் தம் வணிகக் கணக்கு வழக்குகளை முறையாக வைத்துள்ளதால் அதனைப் பயன்படுத்தி வங்கியையும், கடன் வழங்கும் அரசுசார் நிறுவனங்களையும் அணுகினார்; கடன் பெற்றார். அதனைப் பயன்படுத்துகின்றார்,” என்றார் திருமூலன்.

மனம் தெளிந்தவன்போல் காணப்பட்ட மாறன், தன்னையே ஒரு முறை எண்ணிப் பார்க்கலானான்.

படைப்பு: கு. நாராயணசாமி

**இடுபணி I**

**கதையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்திடுக.**

இடுபணி 2

**கதையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்திடுக.**



ஓர் ஊரில் சிற்பி ஒருவன் இருந்தான். ஒருநாள் அந்த ஊர் மக்கள், "ஒரு கோயில் கட்டுகின்றோம் சாமி சிலை ஒன்றைச் செதுக்கித் தாருங்கள்," என்று கேட்டனர். சிற்பி சரி என்று, அருகில் இருந்த மலையிலிருந்து இரண்டு கற்களைக் கொண்டு வந்தான். ஒரு கல்லினைச் சாமி சிலையாகவும், இன்னொரு கல்லை வாசலில் படிக்கல்லாகவும் செய்து முடித்தான். கோயில் கட்டி முடிவடைந்தது.

ஒரு நள்ளிரவில் யாரோ அழுவது கேட்ட சாமிக்கல், "யாரது அழுவது?" எனக் கேட்டது. உடனே, வாசலில் இருந்த படிக்கல், "நான்தான் அழுகிறேன்," என்றது. சாமிக்கல் அழுவதற்கான காரணத்தைக் கேட்க, அதற்குப் படிக்கல், நாம் இருவரும் ஒரே மலையில்தான் பிறந்தோம். ஒரே சிற்பிதான் நம் இருவரையும் செதுக்கினான். ஆனால், உன்னை மட்டும் தெய்வச்சிலையாக மதிப்போடு வைத்துள்ளான். என்னைப் படிக்கல்லாக வெளியே வைத்துவிட்டான். உன்னை அனைவரும் வணங்குகின்றனர். ஆனால், என்னை ஏறி மிதிக்கின்றனர். இது என்ன அநியாயம்...? எனப் புலம்பியது.

அதற்கு உள்ளே இருந்து பதில் வந்தது. "சிற்பி உளியால் வைத்து அடித்தபோது நான் வலி தாங்கினேன்; நீ வலி தாங்கவில்லை. நான் தெய்வச் சிலையானேன்; நீ படிக்கல்லானாய்."

– எடுத்தாளப்பட்டது மயில், ஜூலை 2014

இடுபணி 3

**கதையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்திடுக.**

பிறந்து வளர்ந்தது ஒரு நிலக் குடியேற்றத் திட்டம். இருபத்தெட்டு வயதான பொறியியல் பட்டதாரி. படிப்பு முடித்து ஒரு நிறுவனத்தில் பொறியியலாளராகப் பணியாற்றினார். ஏனோ அப்பணி அவருக்கு ஒத்துவரவில்லை. பெற்றோரின் ஆசைக்கு இணங்க சில காலம் அப்பணியில் தொடர்ந்தார். பணியை விடுப்பது என்று முடிவு செய்தார்.

அடுத்து மின்சார ஈருர்தி தொடர்பான ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றத்தில் நாட்டம்

செலுத்தினார். தம் பட்டறிவையும் வளர்த்துக் கொண்டார். இயந்திர வாழ்க்கையில் மிகுந்த மன உளைச்சல்களுக்கு ஆளானார். ஒரு கட்டத்தில் பொறியியல் சார்ந்த பணிகளிலிருந்து வெளியேறினார்.

சுய வணிகம் தொடங்க ஆசைப்பட்டார். அது தமிழர் சார்ந்த வணிகமாக இருக்க வேண்டும் என விழைந்தார். கருப்பட்டிக் கடலை மிட்டாய் உற்பத்தி செய்யத் திட்டமிட்டார். இதனைச் செய்யும் முறையைக் கற்றறிந்தார். தம் நண்பர்கள் சிலருடன் சேர்ந்து தொழிலைத் தொடங்கினார்.

இன்று நாடறிந்த தின்பண்ட வகைகளுள் ஒன்றாய் அஃது உள்ளது. குழந்தைகள், சிறுவர் சிறுமியர், தாத்தா, பாட்டி எனப் பலரையும் கவர்ந்த தின்பண்டமாகக் கடலை மிட்டாய் மாறியுள்ளது.

– மூலம்: https://tamil.yourstory.com எடுத்தாளப்பட்டது

## வளப்படுத்துதல்

**சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்திடுக.**




கோவலன் கொலையுண்டதைச் செவியுற்றாள் கண்ணகி. அரற்றினாள்; மீளாத் துயருற்றாள்; அவளது கண்கள் நீர் வார்த்தன. பாண்டிய மன்னன் அவை நோக்கி விரைந்தாள். அங்கே கோட்டை வாயிலிலே "நீதிமுறை தவறிய மன்னனின் காவலா, கோவலனின் மனைவி கண்ணகி வந்துள்ளேன் என்று போய் உம் மன்னனிடம் சொல்," என்றாள். காவலன் உள்ளே சென்றான். "காளி போல் தோற்றத்துடன் கையில் சிலம்பு ஒன்றை ஏந்தியவாறு நம் கோட்டை வாயிலேயே உள்ளாள். தங்களைக் காண வேண்டும் என்கின்றாள்." என்றான்.

## குறைநீக்கல்

**சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசித்திடுக.**

நஞ்சில்லா உணவு; ஆரோக்கியமான உணவு; கருப்பட்டியால் செய்தது; கருப்பட்டிக் கடலை மிட்டாய்; தொட்டால் விடாது; தீர்ந்துபோனால் கிட்டாது; வாங்குவீர்! வாங்குவீர்! இன்றே வாங்குவீர்; முந்தி வந்து வாங்குவீர்! குழந்தை முதல் தாத்தா வரை விரும்பி உண்ணும் கருப்பட்டிக் கடலை மிட்டாய்!



# பாடம் 3 வணிக வாய்ப்புகள்

வரிப்படக்கருவியை உற்றுநோக்கி அதன் விவரங்களைக் குழுவில் கலந்துரையாடுக.




மூலப்பொருள்:
காட்டு வளம்; வெட்டுமரங்கள்




தொழிற்சாலை:
மர ஆலை; மரப்பலகைகள்; மரச்சட்டங்கள்



உற்பத்தி: மரத்தளவாடங்கள்; மரச்சாமான்கள் போன்றவை



அங்காடி: உள்நாட்டுச் சந்தை; உள்நாட்டு விற்பனைக்கு



ஏற்றுமதி:
வெளிநாட்டுச் சந்தைக்கு

**இடுபணி I**

**கலந்துரையாடியதன் அடிப்படையில் வரிப்படக்கருவியிலுள்ள விவரங்களைத் தொகுத்து எழுதுக.**

3.3.3 வரிப்படக்கருவியிலுள்ள விவரங்களைத் தொகுத்து எழுதுவர்.

**இடுபணி 2**

**வரிப்படக்கருவி சித்தரிக்கும் சூழல்களில் சில வணிக வாய்ப்புகளும் கிட்டக்கூடும். அவ்வாய்ப்புகளைக் குழுவில் கலந்துரையாடுக. அவற்றின் விவரங்களைத் தொகுத்து எழுதுக. கீழ்வரும் சொற்களைப் பயன்படுத்திக் கொள்க.**

- தொழில் முனைவர்
- உற்பத்தியாளர்
- இடைத்தரகர்
- பெரு வணிகர்
- போக்குவரத்து நடத்துநர்
- ஏற்றுமதியாளர்
- விற்பனை முகவர்
- மொத்த வணிகர்
- சில்லறை வணிகர்

**இடுபணி 3**

**வணிக வெற்றிக்கான காரணிகள் சிலவற்றைப் பின்வரும் வரிப்படக்கருவி விவரிக்கின்றது. அதன் விவரங்களைத் தொகுத்து எழுதுக.**

**வணிக வெற்றிக்கான காரணிகள்**

| வணிக நுணுக்கங்கள் | வணிக நுணுக்கங்கள் | வணிக நுணுக்கங்கள் |
|---|---|---|
| • வணிக வகைகளைப் பற்றி அறிந்திருத்தல்<br>• சந்தை நிலவரங்களை அறிந்திருத்தல்<br>• நெளிவு சுழிவுகள் அறிந்திருத்தல் | • தளத்திலிருந்து இயங்குதல்<br>• தொடர் கண்காணிப்பு இருத்தல்<br>• கணக்கு வழக்குகளை முறையாக வைத்தல் | • வாடிக்கையாளருக்கு முதன்மை அளித்தல்<br>• இன்முகம் காட்டிப் பேசுதல்<br>• நிறைவான சேவை வழங்குதல் |

வணிக வெற்றிக்கான காரணிகளின் வரிப்படக்கருவி


**வளப்படுத்துதல்**

**வணிகத்திற்கான துறைகள் சிலவற்றைப் பின்வரும் வரிப்படக்கருவி விவரிக்கின்றது. அதன் விவரங்களைத் தொகுத்து எழுதுக.**

**வணிகத்திற்கு உரிய சில துறைகள்**

| அங்காடி வணிகம் | விவசாயம் | உற்பத்தித் துறை |
|---|---|---|
| • பேரங்காடி<br>• சிற்றங்காடி<br>• அல்லங்காடி<br>• சிறுசந்தை | • காய்கறிப் பயிரீடு<br>• கால்நடை வளர்ப்பு<br>• கோழி வளர்ப்பு<br>• மீன் வளர்ப்பு | • ஆடை தயாரிப்பு<br>• உணவுப் பொருள்கள்<br>• காலணிகள் தயாரிப்பு<br>• உபரிபாகங்கள் தயாரிப்பு |

வணிக வெற்றிக்கான காரணிகளின் வரிப்படக்கருவி




தொகுதி 17

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

**திருக்குறள் அறிக.**

**உடையார் எனப்படுவது ஊக்கம் அஃதில்லார்**
**உடையது உடையரோ மற்று.** (591)

**பொருள்:** ஊக்கம் உடையவர்கள்தாம் செல்வம் உடையவர்களாகக் கருதப்படுவார்கள். ஊக்கம் இல்லாதவர்கள் எவ்வகைச் செல்வங்களைக் கொண்டிருந்தாலும் உடையவர்களாக ஆகமாட்டார்கள்.



**அப்பா:** செல்வி, ஏன் சோர்வாக இருக்கிறாய்? நீண்ட நேரம் படித்துக் கொண்டிருந்தாயோ?

**செல்வி:** ஆமாம் அப்பா. நாளை அரையாண்டு பருவத் தேர்வு தொடங்கவுள்ளது. சோர்வைவிட மிகப் பயமாக இருக்கிறது அப்பா.

**அப்பா:** உனக்கு ஏற்பட்டிருப்பது பயம் இல்லை செல்வி, தன்னம்பிக்கை இன்மை. எவருக்கு உள்ளத்தில் ஊக்கம் இல்லையோ அவர்களுக்குத்தான் தளர்ச்சி தோன்றும்.

**செல்வி:** (சோகத்துடன்) என்னப்பா இப்படிச் சொல்கின்றீர்கள்? எனக்கா ஊக்கம் இல்லை என்று சொல்கிறீர்கள்?

**அப்பா:** பிறகெப்படிச் சொல்வது? ஊக்கம்தான் செல்வி, வள்ளுவப் பெருந்தகையே கூறுகிறார்.

**உடையர் எனப்படுவது ஊக்கம் அஃதில்லார்**
**உடையது உடையரோ மற்று. (591)**

ஊக்கம் உடையவர்கள்தாம் செல்வம் உடையவர்களாகக் கருதப்படுவார்கள். ஊக்கம்

4.2.3 மூன்றாம் படிவத்திற்கான திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

இல்லாதவர்கள் எவ்வகைச் செல்வங்களைக் கொண்டிருந்தாலும் உடையவர்களாக ஆகமாட்டார்கள் தெரியுமா? ஊக்கம் மனத்தில் இல்லாவிட்டால் இருக்கும் யாவும் இல்லாது போய்விடும்.

**செல்வி:** என்ன சொல்கிறீர்கள் அப்பா?

**அப்பா:** ஆமாம் செல்வி. உள்ளத்தின் எழுச்சிதான் ஊக்கம். அந்த ஊக்கம் இருந்தால்தான், எதிலும் வெற்றி பெற இயலும்.

**செல்வி:** விளங்குகிறது அப்பா. ஊக்கம் கொண்டிருப்பதுதான் உண்மையான செல்வம் உடையதாகக் கருதப்படும். நல்லதப்பா..! இனி, ஊக்கத்தோடு படிப்பேன். ஊக்கத்தைச் செல்வமாக என்னுள் சேர்த்து ஆக்கத்துடன் செயல்படுவேன் அப்பா.

**அப்பா:** அப்படிச் சொல். அதுதான் நான் காண விரும்பும் செல்வி.

## இடுபணி 1

**உரையாடலை வாசித்து, அதிலுள்ள குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுக.**

## இடுபணி 2

**பொருளுக்கு ஏற்ற குறளைத் தெரிவு செய்து எழுதுக.**

| பொருள் | திருக்குறள் |
|---|---|
| ஊக்கம் உடையவர்கள்தாம் செல்வம் உடையவர்களாகக் கருதப்படுவார்கள். ஊக்கம் இல்லாதவர்கள் எவ்வகைச் செல்வங்களைக் கொண்டிருந்தாலும் உடையவர்களாக ஆகமாட்டார்கள். | உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை<br>நில்லாது நீங்கி விடும் |
| | உடையர் எனப்படுவது ஊக்கம் அஃதில்லார்<br>உடையது உடையரோ மற்று. |
| | ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா<br>ஊக்க முடையா னுழை |

## இடுபணி 3

**ஊக்கத்தோடு செயல்படும்போது, விளையும் ஐந்து நன்மைகளை எழுதுக.**

## வளப்படுத்துதல்

**பின்வரும் குறளின் பொருள் எழுதி அதற்கு ஏற்ற சூழலைத் தருக.**

உடையார் எனப்படுவது ஊக்கம் அஃதில்லார்
உடையது உடையரோ மற்று.

## குறைநீக்கல்

**திருக்குறளையும் அதன் பொருளையும் மனனம் செய்து நயம்படக் கூறுக; நினைவுகூர்ந்து எழுதுக.**

# தொகுதி 18 பண்பாடும் உணவும்

## பாடம் 1 பாரம்பரிய உணவு முறை

**'பாரம்பரிய உணவே சிறந்தது' எனும் இருவரின் வாதத்தைச் செவிமடுத்திடுக.**



இன்றைய சூழலில் நம் தமிழர்களின் பாரம்பரிய உணவே சிறந்தது என்பது என்னுடைய தாழ்மையான வாதம். நம் முன்னோர் சோற்றோடு சேர்த்துக் குழம்பிற்கும் காய்கறி பிரட்டலுக்கும் மிளகு, சீரகம், கடுகு, மல்லி போன்ற பொருள்களைப் பயன்படுத்தி உணவைச் சமைத்தனர். இவை நம் உடல் நலத்தைப் பேணிக் காக்க உதவுகின்றன. நம் பாரம்பரிய சமையல் முறை பல வகையன. அவித்தல், பிரட்டல், வறுத்தல், பொரித்தல் போன்ற முறைகளைக் கொண்டுள்ளன. இந்தச் சமையல் முறைகள் சுவையானவை மட்டுமல்ல, உடல் நலத்திற்கு வலுவூட்டுவதாகவும் உள்ளன. இந்த உணவுகளைத்தான் நாகரிக மோகத்தால் மறந்து வருகிறோம். திடீர் உணவுகளையும் மேல்நாட்டு உணவுகளையும் சுவைத்து மகிழ்கிறோம். இதனால், உணவே மருந்தாய் நமக்கு அமைந்த காலம் போய்விட்டது. மாறாக, நாம் உண்ணும் உணவே நஞ்சாய் மாறி நம் நலத்தையும் கெடுக்கிறது என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



மிக நன்று. என் நண்பர் தம் கருத்துகளை அழகாகத் தெரிவித்தார். அவரின் கருத்தை நான் முழுமையாக ஆதரிக்கிறேன். வெவ்வேறு நாட்டின் உணவு வகைகளுக்கும் விதவிதமான சமையல் வகைகளுக்கும் நமது நாக்கு அடிமையாகிவிட்டது. நாம் உண்ணும் உணவு, நம் கலாசாரத்திற்கும் நம் மரபணுவிற்கும் ஏற்றவாறு அமைந்திருக்க வேண்டும். இப்படிப்பட்ட உணவே நல்ல சிந்தனையையும் செயலையும் கொடுக்கும். ஆனால், இன்று நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. நம்மில் பலர் உணவில் கவனம் செலுத்துவதே இல்லை. முன்பெல்லாம் கேப்பைக் களி, வரகரிசிச் சோறு, கம்பு, தோசை, தேன் கலந்த தினைமாவு போன்ற சிறு தானியங்கள்தான் பெருவாரியான நம் மக்களின் உணவாக இருந்தது. வரகு, சாமை, கம்பு, சோளம், தினை போன்ற தானியங்களைச் சமைத்து உண்பதன் மூலம் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும். கொழுப்புச் சத்து குறையும். உடலுக்கு நல்ல ஊட்டச் சத்து கிடைக்கும். உடல் பருமன் ஏற்படாமல் பாதுகாக்கும். மலச்சிக்கல் போன்றவை ஏற்படாது. சர்க்கரை நோய்க்கும் வாய்ப்பு இல்லை. உடலும் தேக்கு மரம் போல் வலுவாக இருக்கும்.

செவிமடுத்திடுக

1.3.6 தலைப்பையொட்டிப் பண்புடன் வாதம் செய்வர்.

தொகுதி 18

**இடுபணி 1**

செவிமடுத்த வாதத்தை இருவராகப் பாகமேற்று வாசித்திடுக.

**இடுபணி 2**

குழுவில் கலந்துரையாடி, தலைப்பையொட்டி ஏதேனும் ஒரு சார்பு தொடர்பான வாதக்கருத்துகளைத் திரட்டுக. குறிப்புகளை வழிகாட்டியாகக் கொள்க.

| திடீர் உணவு | பாரம்பரிய உணவு |
|---|---|
| உடனடித் தேவை | தரமிக்கவை |
| தயாரிப்பது எளிது | சத்துள்ளவை |
| எங்கும் கிடைப்பவை | மருத்துவக் குணமுடையவை |
| மலிவானவை | வேதியல் பொருள் கலக்காதவை |

**இடுபணி 3**

தலைப்பையொட்டி இணையராகப் பண்புடன் வாதம் செய்க. கலந்துரையாடல் கருத்தையும் வரிப்படக்கருவியிலுள்ள குறிப்புகளையும் பயன்படுத்துக.

**வளப்படுத்துதல்**

மலேசியர்களின் உடல் பருமனுக்கு உணவுப் பழக்கமே காரணம். இத்தலைப்புக் குறித்து, வாதக்கருத்துகளை வரிப்படக்கருவியில் நிறைவு செய்து, பண்புடன் வாதிடுக.

**குறைநீக்கல்**

தலைப்பை ஒட்டிய உமது வாதக்கருத்துகளைத் திரட்டி வகுப்பில் பண்புடன் படைத்திடுக.

தலைப்பு: மக்கள் பல்வேறு நோய்களுக்கு ஆளாகக் காரணம் அவர்களின் உணவுப் பழக்கமே.

சரியான நேரத்தில் உணவு உண்ணாமை
நோய்: குடல் அலர்ச்சி நோய்

திடீர் உணவுப் பழக்கம்
நோய்: கொழுப்பு அதிகரித்தல்

## பாடம் 2 மலேசியர்களின் உணவுப் பண்பாடு

**வாசிக்கும் முன்...**
மலேசியர்களின் உணவு வகை பற்றி நீங்கள் அறிந்ததை நண்பர்களுடன் கலந்துரையாடுக.

**பனுவலை மௌனமாக வாசித்து, கருத்துகளை வரிப்படக்கருவியில் குறித்துக் கொள்க.**

நம் நாட்டின் பல்லினப் பண்பாட்டில் தனிச் சிறப்புப்பெற்று விளங்குவது மலேசியர்களின் உணவு உண்ணும் பழக்கமாகும். வகை வகையான பாரம்பரிய உணவுகள், உணவு உண்ணும் முறை, உணவை உண்ணுகையில் கடைப்பிடிக்கும் பண்பாட்டு நெறிமுறைகள், ஆகியவை மலேசியர்களிடையே தொன்றுதொட்ட பழக்க வழக்கங்களாக விளங்குகின்றன.

### தமிழர்களின் உணவுப் பண்பாடு



தமிழர்களின் பண்பாட்டில், உணவுப் பண்பாடு உன்னத நிலையைக் கொண்டுள்ளது. இது **பன்னெடுங்காலப்** பண்பாடாக விளங்கி வருகின்றது. தமிழர்கள் பொதுவாக உணவை வலக் கையால் மட்டுமே உண்ணுவர். வலக் கையால்தான் உணவையும் பரிமாறுவர். விரல்களால் உணவு உண்ணும்போது, முன்விரல்களைக் கொண்டே உணவை உண்ண வேண்டும். உணவுகள் உள்ளங்கையில் படுவது பண்பாடற்ற செயலாகக் கருதப்படுகின்றது.

வாழை இலையில் உணவை உண்ணுவது தமிழர்களின் மரபாகவே இருந்து வருகின்றது. வாழையிலையில் உண்ணுவது, பல **நெறிமுறைகளைக்** கொண்டுள்ளது. குறிப்பாக, வாழை இலையில் உணவுண்ட பிறகு வாழை இலையைத் திறந்தபடி அப்படியே விட்டுச் செல்வது பண்பாடன்று. சாப்பிட்டு முடித்தவுடன் மேல் பாகத்து இலையைக் கீழ்ப் பாகத்து இலையோடு சேர்த்து மூடுமாறு மடித்து வைக்க வேண்டும். இச்செயல் நாம் மனநிறைவோடு உணவினை உண்டோம் என்பதைக் குறிக்கும். இவ்வாறு மூடாமல், கீழ்ப் பாகத்து இலையைக் கொண்டு மேல் பாகத்தை மூடுவது தவறான செயலாகக் கருதப்படுகின்றது. பொதுவாக, இறப்புவீட்டுத் துக்க நிகழ்வுகளில் மட்டுமே வாழை இலையை மேல் நோக்கி மடிக்க வேண்டும் என்பது தமிழர் மரபு.



2.3.8 பண்பாடு தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

தொகுதி 18

## மலாய்க்காரர்களின் உணவுப் பண்பாடு



மலாய்க்காரர்கள் தங்கள் உணவுப் பண்பாட்டைப் போற்றிப் பாதுகாக்கின்றார்கள். அவர்கள், உணவு உண்பதற்கு முன், தமக்கு உணவளித்த இறைவனுக்கு நன்றி கூறுவார்கள். மேலும், ஒன்றாகச் சேர்ந்து உண்ணும்போது முதியவர்களுக்கு **வழிவிட்ட பின்னர்தான்** இளையோர் தமக்குரிய உணவை எடுத்துக் கொள்வார்கள்.

சாப்பிடும்போது, யாருக்காவது தும்மல் ஏற்பட்டால், உடனே சாப்பிடும் இடத்தை விட்டு **அகன்றுவிடுவார்கள்.** அவர்கள் தரையில் அமர்ந்து சாப்பிடும் பழக்கத்தை வழக்கமாகக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், சாப்பிடும் வேளையில், யாரும் காலை நீட்டிக்கொண்டு உட்காரக்கூடாது; வாயில் உணவை வைத்துக்கொண்டும் யாருடனும் பேசக்கூடாது.

## சீனர்களின் உணவுப் பண்பாடு



சீனர்கள் சற்று வேறுபட்ட உணவுப் பண்பாட்டைக் கொண்டுள்ளனர். குச்சிகளைப் பயன்படுத்தி உணவை உண்ணுவது அவர்களின் தனிச்சிறப்பு. குச்சிகளைக் கொண்டு உணவுண்ணும் வேளையில், சீனர்களுக்குப் பல்வேறு **கட்டுபாடுகள்** உள்ளன. உணவைச் சாப்பிடும்போது, இரு குச்சிகளையும் நேராகப் பிடித்தே உணவு உண்ண வேண்டும். இந்தக் குச்சிகளை வைத்துக்கொண்டு கைகளை வீசுவதும் கையை ஆட்டுவதும் தவறான செய்கைகளாகும். குச்சிகளைக் கொண்டு மேசையில் தாளம் போடுவது கூடாது.

தேவையற்ற உணவுக் கழிவுகளை மேசையில் வெறுமனே போட மாட்டார்கள். மாறாக, ஒரு சிறிய தட்டில் கழிவுகளை வைக்கும் **நேர்த்தியையும்** பண்பாடாகக் கொண்டிருக்கின்றார்கள்.

**இடுபணி I**

**வண்ணமிடப்பட்ட கருச்சொற்களுக்குப் பொருள் எழுதுக.**

**இடுபணி 2**

**வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. பல்லினப் பண்பாட்டில் உணவு தனிச் சிறப்புப் பெற்று விளங்குவது ஏன்?
2. மலாய்க்காரர்களின் உணவுமுறையில் எது மிகவும் சிறப்பானது என நீர் கருதுகிறீர்? ஏன்?
3. குச்சிகளைப் பயன்படுத்திச் சாப்பிடுவதன் நோக்கம் என்னவாக இருக்கக்கூடும்?
4. சீனர்கள் உணவுக் கழிவைத் தனித் தட்டில் வைப்பதைப் பற்றிய உமது கருத்து யாது?
5. இந்தியர்களின் உணவுப் பண்பாட்டில் குறிப்பிடத்தக்கது என்று எதனைக் குறிப்பிடலாம்? ஏன்?
6. இன்றைய வாழ்க்கைச் சூழலில் வாழை இலையில் சாப்பிடும் வழக்கம் இந்தியர்களிடையே குறைந்து வருகின்றது. இதனை மீட்டெடுக்கும் வழிவகைகளைக் கூறுக.

**இடுபணி 3**

**பனுவலை விரைந்து வாசித்து, கேள்விகளுக்கு விடை எழுதுக.**

## தமிழரின் விருந்தோம்பல்

தமிழரின் உணவுப் பண்பாட்டில், விருந்தோம்பல் ஓர் உன்னத இடத்தை வகிக்கின்றது. உணவு என்று கேட்டு வந்தோரை உணவளித்து வரவேற்பது, தமிழரின் மிக உயரிய மாண்பு. தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பலின் சிறப்பை உணர்த்தவே திருவள்ளுவர், அறத்துப்பாலில், ‘விருந்தோம்பல்’ எனும் ஓர் அதிகாரத்தையே இயற்றி உள்ளார். அவ்வதிகாரத்தின் முதல் குறளானது,

**‘இருந்தோம்பி இல்வாழ்வது எல்லா விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தல் பொருட்டு.’** (குறள் – 81)

இதற்கு டாக்டர் மு. வரதராசனார், “வீட்டில் இருந்து பொருள்களைக் காத்து இல்வாழ்க்கை நடத்துவதெல்லாம் விருந்தினரைப் போற்றி உதவி செய்யும் பொருட்டே ஆகும்,” என விளக்கம் தருகின்றார்.



தமிழர் உணவு வகைகள்

இதிலிருந்து, விருந்தினரை வரவேற்று அகமும் முகமும் மலர விருந்தளித்தல் தமிழர் பண்பின் அடையாளமாக இருப்பதைத் தெளிந்தறியலாம். இதனை வலியுறுத்தவே ஔவையும், “அன்னமிட்டு உண்,” என்றார். பிறருக்கு உணவளித்த பின் உணவு கொள்க என்பதே இதன் பொருள்.

அப்பூதி அடிகளார் ஒருவர், தாம் பெரிதும் போற்றி மதித்த திருநாவுக்கரசரின் பெயரில் அன்ன சத்திரம் நிறுவி, மக்களுக்கு அன்னதானம் வழங்கி வந்தார். இந்நிலையில், ஒரு நாள், அந்த திருநாவுக்கரசரே அவரின் இல்லம் தேடி வந்துவிட்டார். அகம் மகிழ, உச்சிகுளிர பக்தர் தம் இல்லாளோடும், தம் ஒரே மகனோடும் திருநாவுக்கரசரை வரவேற்று மகிழ்ந்தார். ஒரு வேளையேனும் தமது இல்லத்தில் விருந்து உண்டுசெல்ல வேண்டும் என வேண்டினார். திருநாவுக்கரசரும் அதற்கு இசைந்தார்.

உணவைத் தயார் செய்யும் வேளையில், திருநாவுக்கரசர் கோயிலுக்குச் சென்று வருவதாகச் சொல்லிச் சென்றுவிட்டார். உணவு ஏற்பாடுகளைச் செய்கையில், உணவு பரிமாற வாழை இலை வெட்டச் சென்ற அப்பூதி அடிகளாரின் மகனை நாகம் ஒன்று தீண்டிவிட்டது. சிறுவனும் மாண்டு போனான்.

திருநாவுக்கரசர் விருந்துண்ண வந்தார். பெற்றோரோ இறந்த தங்கள் மகனின் உடலை மறைத்துவிட்டு, எவ்விதச் சலனமும் இன்றி, உணவைப் பரிமாறலாயினர். திருநாவுக்கரசரோ, சிறுவன் இல்லாமல், தாம் விருந்துண்ண இயலாது எனக் கூறிவிட்டார். அதன் பின்னர், பெற்றோர் நடந்ததைக் கூறி வருந்தி, மனம் உருகி மன்னிக்க வேண்டினர். பெற்றோரோ, திருநாவுக்கரசரின் மனம் நோகுமே; முகமலர்ச்சியற்றுப் போகுமே என்றே இறப்பை மூடி மறைக்க முயன்றதாகக் கூறினர்.

என்னே, தமிழர் விருந்தின் சிறப்பு! இஃது ஒரு நல்ல வழக்கம் மட்டுமன்று; ஒரு நன்னெறியும்கூட.

**கேள்விகளுக்கு விடையளித்திடுக.**

1. விருந்தினரை எவ்வாறு உபசரிக்க வேண்டும்? ஏன்?
2. பனுவலில் உள்ள கதை நிகழ்ச்சி எதனை உணர்த்துகின்றது?
3. பனுவலை அடிப்படையாகக் கொண்டு தமிழர் விருந்தோம்பலைப் பற்றிய உமது கருத்தைக் கூறுக.

**வளப்படுத்துதல்**

**இந்தியர், மலாய்க்காரர் மற்றும் சீனர் ஆகிய மூவினத்தவரின் உணவுப் பண்பாட்டில் உள்ள ஒற்றுமைகளை ஏற்ற வரிப்படக்கருவியில் படைத்திடுக.**

**குறைநீக்கல்**

மலேசியர்களின் உணவுப் பழக்கம் இன்னும் 20 ஆண்டுகளில் எவ்வாறு அமைந்திருக்கும் என்பதையொட்டி, சுவரொட்டி ஒன்றனைத் தயார் செய்து ஏற்ற சொற்றொடர்களை எழுதுக.

## பாடம் 3 அலுவல் கடிதம்

அலுவல் கடிதத்தை வாசித்து அமைப்பு முறையைக் கூறுக.

இளமதி த/பெ தமிழரசு,
செயலாளர்,
தமிழ்மொழிக் கழகம்,
தஞ்சோங் சிப்பாட் தேசிய இடைநிலைப்பள்ளி,
42700 தஞ்சோங் சிப்பாட்,
சிலாங்கூர்.

---

இயக்குநர்,
மலாக்கா செட்டிகள் தொல்பொருள் காட்சியகம்,
ஜாலான் காஜா பெராங்,
கம்போங் செட்டி,
72500 மலாக்கா,
மலாக்கா.

10 ஏப்ரல் 20☐☐

மதிப்பிற்குரிய ஐயா,

**பண்பாட்டுக் கழகத்தின் பண்பாட்டுக் கல்விச் சுற்றுலா**

வணக்கம். எங்கள் பள்ளியின் தமிழ்மொழிக் கழகம் தங்களின் மலாக்கா செட்டிகள் தொல்பொருள் காட்சியகத்திற்குக் கல்விச் சுற்றுலா ஒன்றனை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். தமிழ்மொழிக் கழகத்தின் செயலாளர் எனும் முறையில் இச்சுற்றுலாவை மேற்கொள்ள அனுமதி கேட்டுத் தங்களுக்கு இக்கடிதத்தை எழுதுகின்றேன்.

2. நாங்கள் இக்கல்விச் சுற்றுலாவை எதிர்வரும் 05.08.20☐☐ஆம் நாள், செவ்வாய்க்கிழமை காலை மணி 7.00க்கு மேற்கொள்ளவிருக்கின்றோம். சுமார் நாற்பது மாணவர்களும் மூன்று ஆசிரியர்களும் இச்சுற்றுலாவில் கலந்து கொள்வார்கள்.

3. மலாக்கா செட்டிகள் பற்றிய வரலாறுகளையும் அவர்களின் பண்பாடுகளையும் ஆய்வு செய்வதற்காக இச்சுற்றுலாவை மேற்கொள்கின்றோம். குறிப்பாக இந்திய மலாய்ப் பண்பாட்டுக் கலவையாய் மாறி இருக்கும் அவர்களின் பண்பாட்டில், உணவுப் பண்பாடு எவ்வாறு மாற்றம் கண்டிருக்கிறது என்பதையும் அறிய ஆவலாய் உள்ளோம். அதோடு, அவர்களின் உணவு வகைகளைச் சுவைக்க ஏற்பாடு செய்து தந்தால் மிகவும் மகிழ்வோம். மேலும்,

3.4.16 180 சொற்களில் அலுவல் கடிதம் எழுதுவர்.

இச்சுற்றுலா மாணவர்களின் பொது அறிவை வளர்த்துக் கொள்ள வழி வகுக்கும் எனப் பெரிதும் எதிர்பார்க்கின்றோம்.

4. எனவே, தாங்கள் பெருமனத்துடன் எங்களுடைய இக்கல்விச் சுற்றுலாவைத் தங்கள் தொல்பொருள் காட்சியகத்திற்கு மேற்கொள்ள அனுமதிப்பீர்கள் எனப் பெரிதும் நம்புகிறோம். அதே வேளை, எங்களுக்கு உதவும் வகையில் ஒரு வழிகாட்டியையும் ஏற்பாடு செய்து தர வேண்டும் எனப் பெரிதும் விழைகிறோம். தொல்பொருள் காட்சியகத்தை வந்தடையும் நேரம் போன்ற பிற விவரங்கள் யாவும் பயண நிரல் உறுதி செய்யப்பட்ட பின்னர் தெரியப்படுத்துகின்றோம்.

5. எங்கள் விண்ணப்பத்தை ஏற்று விரைவில் பதில் தருவீர்கள் என மிகவும் எதிர்பார்க்கின்றோம். தங்களின் மேலான ஒத்துழைப்புக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி.
தங்கள் பணிவுள்ள,

(இளமதி த/பெ தமிழரசு)
செயலாளர்,
தமிழ்மொழிக் கழகம்,

**இடுபணி 1** i-THINK

**அலுவல் கடிதத்தின் உள்ளடக்கத்தை நிரலொழுங்கு வரைபடத்தில் குறிப்பிடுக.**

கடிதத்தின் தொடக்கம்: எழுதுநர் – பெறுநர் முகவரி - நாள் → [ ] → சுற்றுலா விவரம்: - நாள் – நேரம் – பங்கேற்போர்
→ [ ] → [ ] → [ ]
→ கடிதத்தின் முடிவு: எதிர்பார்ப்பு நன்றி கூறுதல்

அலுவல் கடிதக் கூறுகளின் நிரலொழுங்கு வரைபடம்

**இடுபணி 2**

**உமது பள்ளியின் பண்பாட்டுக் கழகம் பாரம்பரிய உணவுச் சந்தை ஒன்றனை ஏற்பாடு செய்ய உள்ளது. கழகத்தின் செயலாளர் எனும் முறையில் பள்ளி முதல்வரிடம் அனுமதி கேட்டு 180 சொற்களில் ஓர் அலுவல் கடிதம் எழுதுக.**

**இடுபணி 3**

மலேசியர்களின் பண்பாடு என்ற தலைப்பில் திரட்டேடு ஒன்றனைத் தயார் செய்ய விருக்கிறீர்கள். அதற்கான குறிப்புகளும் சான்றுகளும் உமக்குத் தேவைப்படுகின்றன. அவற்றைப் பெறுவதற்காக மலேசியப் பண்பாட்டு மையத்திற்கு 180 சொற்களில் அலுவல் கடிதம் ஒன்றனை எழுதுக.

**வளப்படுத்துதல்**

உங்கள் பள்ளியின் பயிலும் ஒற்றுமை இயக்கம் இந்த ஆண்டு 'உணவுப் பண்பாட்டில் ஒற்றுமை' எனும் கருப்பொருளில் ஓர் உணவுப் பண்பாட்டு விழாவை ஏற்பாடு செய்துள்ளது. இந்த விழாவை நடத்துவதற்கான அனுமதியைக் கேட்டு பள்ளி முதல்வருக்கு 180 சொற்களில் அலுவல் கடிதம் ஒன்றனை எழுதுக.

**குறைநீக்கல்**

உங்கள் பள்ளியில் பயிலும் ஐந்தாம் படிவ மாணவர்களுக்கான பிரியாவிடை நிகழ்ச்சி ஒன்றனைத் தமிழ்மொழிக் கழகம் ஏற்பாடு செய்துள்ளது. இந்நிகழ்ச்சியைத் தமிழர் உணவகம் ஒன்றில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இது குறித்த அலுவல் கடிதம் ஒன்றனை உணவகத்தின் மேலாளருக்கு 180 சொற்களில் எழுதுக. கொடுக்கப்பட்ட குறிப்புகளைத் துணையாகக் கொள்க.

| அமைப்பு முறை | கருத்து |
|---|---|
| • அனுப்புநர் முகவரி<br>• பெறுநர் முகவரி<br>• தேதி<br>• விளிப்பு<br>• தலைப்பு<br>• கடிதத்தின் நோக்கம்<br>• கருத்து<br>• வேண்டுகோள்<br>• முடிவு<br>• அனுப்புநர் விவரம் | • விருந்தின் நோக்கம்<br>• விருந்தின் விவரம்<br>• வேண்டுகோள்<br>→ சைவ உணவு (காரணம்)<br>→ வாழை இலையில் உணவு பரிமாறுதல்<br>→ பாரம்பரிய பலகார வகைகள்<br>→ விலை விவரம்<br>• கோரிக்கை<br>• எதிர்பார்ப்பு |

# பாடம் 4 இலக்கணம்

**வினா எழுத்துகளை அறிக.**

**வினா எழுத்து**

அகர ஈறு 'ஆ', 'ஓ' என்னும் வினா எழுத்துகளின்பின் வலிமிகாது.

**ஆ**

| சொற்கள் |
|---|
| • அவனா? |
| • அப்பாவுக்கா? |
| • உண்மையாகவா? |

| வாக்கியம் |
|---|
| • அவனா கூறினான்? |
| • அப்பாவுக்கா கொடுத்தாய்? |
| • நீ உண்மையாகவா பாடினாய்? |

**ஓ**

| சொற்கள் |
|---|
| • தம்பியோ? |
| • யாரோ? |
| • மெய்யோ? |

| வாக்கியம் |
|---|
| • தம்பியோ படிப்பவன்? |
| • யாரோ சொன்னார்? |
| • மெய்யோ பொய்யோ தெரியாதா? |

**வலிமிகாமை**

| | | | | |
|---|---|---|---|---|
| அவனா | + | சொன்னான் | = | அவனா சொன்னான்? |
| யாரோ | + | பார்க்கிறார்கள் | = | யாரோ பார்க்கிறார்கள்? |
| நீயா | + | செய்தாய் | = | நீயா செய்தாய்? |

கல்வியா செல்வமா வீரமா? அன்னையா தந்தையா தெய்வமா?
கல்வியா செல்வமா வீரமா? அன்னையா தந்தையா தெய்வமா?
ஒன்றில்லாமல் மற்றொன்று உருவாகுமா? – இதில்
உயர்வென்றும் தாழ்வென்றும் பிரிவாகுமா?
ஒன்றில்லாமல் மற்றொன்று உருவாகுமா? – இதில்
உயர்வென்றும் தாழ்வென்றும் பிரிவாகுமா?



5.5.6 'ஆ', 'ஓ' என்னும் வினா எழுத்தின்பின் வலிமிகாது என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**இடுபணி 1**

**பாடலிலுள்ள வினா எழுத்துகளை ஏற்றுவரும் சொற்களைப் பட்டியலிடுக.**

**இடுபணி 2**

**'ஆ', 'ஓ' என்னும் வினா எழுத்துகளின்பின் வலிமிகாது என்பதை அறிந்து சொற்களைச் சேர்த்தெழுதுக.**

1. யாரிடமோ + சொன்னாய்? = ________
2. யாரோ + பார்க்கிறார்கள்? = ________
3. என்னையா + கூப்பிட்டாய்? = ________
4. நீயா + வாங்கினாய்? = ________
5. நன்மையோ + தெரியாது? = ________
6. நன்மையா + செய்தாய்? = ________
7. அவனா + கூறினான்? = ________
8. அப்படியா + கேட்டாய்? = ________
9. வந்ததோ + திருப்பம்? = ________
10. எங்கோ + பார்க்கிறாய்? = ________

**இடுபணி 3**

**காலி இடங்களை வினாச்சொற்களைக் கொண்டு நிறைவு செய்க.**

1. "நீ சொல்வது உண்மையா ________ ? உறுதியாகச் சொல்," என்றான் அமுதன்.
2. "கோவலன் கள்வனா? ________ கள்வன்? சொல் பாண்டியா," என்று பாண்டியனிடம் கோபமாகக் கேள்விக் கணை தொடுத்தாள் கண்ணகி.
3. "________ கூறினான்? நம்ப முடியவில்லையே!" என்றார் அம்மா.
4. "________ செய்தாள்?" என்று அதிர்ச்சியாகக் கேட்டாள் கனிமொழி.
5. "________ சொன்னார்; என்னை ஏன் கேட்கிறாய்?" என்று கோபப்பட்டான்" அருள்வாணன்.
6. "________ கேட்கிறாய், எனக்கும் தெரியாதே!" என்று கையை விரித்தார் அப்பா.

**இடுபணி 4**

**கீழ்க்காணும் ஆகார, ஓகார வினா எழுத்துகளை ஏற்றுவரும் சொற்றொடர்களை வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக.**

| | |
|---|---|
| என்னையா கேட்கிறாய்? | ஆசிரியரா காட்டினார்? |
| அவனா சொன்னான்? | யாரையோ தேடுகிறாயே? |
| என்னவோ செய்கிறதோ? | அம்மாவுக்கா கொடுத்தாய்? |

**வளப்படுத்துதல்**

**இலக்கியக் காட்சிகளில், ஆகார, ஓகார வினா எழுத்துகளை ஏற்றுவரும் சொற்றொடர்களைப் பட்டியலிடுக.**

இராமாயணத்தைத் தன் அவையில் அரங்கேற்ற மறுத்த கம்பரை “என்னை விட்டால் உம்மை ஆதரிப்பார் யாரோ சொல்லும்?” என்று சோழன் கூறியபோது, கோபமுற்ற கம்பர், “மன்னவனும் நீயோ? வளநாடும் உனதோ சொல்? உன்னை அறிந்தோ தமிழை ஓதினோம்? என்னை ஏற்காத மன்னவனும் உண்டா கூறு? ”என்று கடுமையாகப் பேசினார்.



**குறைநீக்கல்**

**காலி இடங்களை நிரப்புக.**

(அவனிடமா கேட்டாய், கடவுளா தண்டிக்கிறார், என்மீதா கோபம், எனக்கா பொறுப்பில்லை)

1. கனிமொழி: நீதான் எல்லாவற்றிக்கும் காரணம். இனி உன்னுடன் நான் பேச விரும்பவில்லை.
   அமுதா: ______________? நான் என்ன குற்றம் செய்தேன்?

2. இளங்கோ: உனக்குக் கொஞ்சம்கூட பொறுப்பில்லை. உன்னை நம்பிதானே இந்த வேலையைக் கொடுத்தேன்?
   வளவன்: ______________? எல்லாவற்றையும் பொறுப்பாகத்தானே செய்தேன்!

3. பனிமலர்: கணக்கில் சில பயிற்சிகள் தெரியவில்லை. மணிவண்ணனிடம் கேட்டேன்.
   வாணி: ______________? சொல்லியிருக்க மாட்டானே!

4. தங்கமணி: கடவுள் ஏன்தான் என்னை இப்படிச் சோதிக்கிறானோ!
   வீரப்பன்: ______________? உனக்கு நீயேதான் வினையைத் தேடிக் கொள்கிறாய்.

# தொகுதி 19 மலேசிய வரலாற்றுத் தோற்றங்கள்

## பாடம் 1 வழிபாட்டுத் தலங்கள்: பல்லின அடையாளங்கள்

**வாசித்தறிக.**

நம் நாடு பல்லின நாடு. இந்தியர், மலாய்க்காரர், சீனர், கடாசான், டூசுன் போன்ற பல்லின மக்கள் வாழும் நாடு. இவர்கள் ஒன்றுபட்டதால்தான் நாடு விடுதலை பெற முடிந்தது. இவர்களின் ஒன்றுபட்ட உழைப்பினால்தான் நாடு முன்னேற்றம் அடைந்து வருகிறது.

பல இனத்தவர்களும் பல சமயத்தைச் சார்ந்தவர்களாக உள்ளனர். இந்த ஒற்றுமையின் சின்னங்களாகப் பல சமயத்தவரின் வழிபாட்டுத் தலங்கள் திகழ்கின்றன. இவை வரலாறு விதைத்த சின்னங்களாக இருக்கலாம். இவை வெறும் அடையாளங்கள் அல்ல இவற்றின் முக்கியத்துவம் கருதியே, இவற்றைப் பேணிக் காக்க எல்லா வகையிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**வரலாறு படைத்த வழிபாட்டுத் தலங்கள்**


பத்துமலை முருகன் ஆலயம்


ஜாமேக் மசூதி


செங் ஹூன் தெங் சீனக் கோயில்


செயிண்ட் பிரான்சிஸ் தேவாலயம்

**இடுபணி 1**

**'மலேசியாவில் வழிபாட்டுத் தலங்களே மக்களிடையே புரிந்துணர்வை வளர்க்கிறது.' இத்தலைப்பில் பண்புடன் வாதிட்டுக் கருத்துகளைத் திரட்டுக.**

1.3.6 தலைப்பையொட்டிப் பண்புடன் வாதம் செய்வர்.

## இடுபணி 2


**திரட்டிய கருத்துகளைக் கொண்டு வகுப்பின் முன்னிலையில் பண்புடன் வாதித்திடுக.**

## இடுபணி 3

**வரிப்படத்திலுள்ள கருத்துகளைத் துணையாகக் கொண்டு, இணையராகப் பண்புடன் வாதிடுக.**

மலேசியாவில் வரலாறு, பாரம்பரியப் பின்னணியைக் கொண்ட கட்டடங்கள் பல உள்ளன. இவை வடிவ அமைப்பையும் கலைநுட்பத்தையும் கொண்டு திகழ்கின்றன. இவற்றை எப்பாடு பட்டேனும் பாதுகாக்க வேண்டும் எனச் சிலர் கருதுகின்றனர். ஆனால், இக்கட்டடங்களை இடித்துவிட்டு, அவ்விடங்களை மேம்படுத்த வேண்டும் என வேறு சிலர் கூறுகின்றனர்.

இதன் அடிப்படையில் உமது நிலைப்பாடு என்ன?




வரலாற்றுக் கட்டடங்களின் பாதுகாத்தல் தொடர்பான வாதக்கருத்துகளின் வரிப்படக்கருவி

### வளப்படுத்துதல்

**'வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களுக்குச் சுற்றுலா செல்வதைவிட மனமகிழ் இடங்களுக்குச் செல்வதையே மாணவர்கள் பெரிதும் விரும்புகின்றனர்.' வகுப்பில் வாதிடுக.**

### குறைநீக்கல்

**'நம் நாட்டில் வரலாற்றுத் தோற்றங்களைக் காக்க வேண்டும் என்ற உணர்வு இளைஞர்களிடையே குறைந்து வருகிறது.' பின்வரும் கருத்துகளைச் சார்ந்து பண்புடன் வாதம் செய்க.**

எ.கா:
- வரலாற்றுத் தோற்றங்களின் பெருமையைப் பற்றி அறிந்திருக்கவில்லை.
- பொழுதுபோக்குக் கூறுகளில் மட்டுமே அதிகம் நாட்டம் கொண்டிருக்கின்றனர்.

## பாடம் 2 வரலாற்றில் ஓங்கி நிற்கும் கட்டடங்கள்

**உரைநடைப் பகுதியை வாசித்து முக்கியக் கருத்துகளை ஏற்ற வரிப்படத்தில் குறித்துக் கொள்க. அதனை நண்பருடன் கலந்துரையாடுக.**

### பேசும் கட்டடங்கள்

பழம்பெரும் பெருமைகளைத் தாங்கி நிற்கும் கட்டடங்களை மலேசியா முழுவதிலும் காணலாம். வரலாற்றின் சான்றுகளாக விளங்கும் இந்தக் கட்டடங்கள், பழங்காலக் கட்டுமானத்தைப் **பறைசாற்றிக்** கொண்டிருக்கும். அழகிய தோற்றம் , கலைநயம், பழைமை இவற்றைத் தாங்கி நிற்கும் இக்கட்டடங்களுள் சில உங்களோடு பேசுகின்றன.

வணக்கம் நண்பர்களே!
தலைநகரின் மத்தியில் எடுப்பான தோற்றத்தில் நின்று கொண்டிருக்கின்ற என்னைப் பார்த்திருக்கிறீர்களா? எழில் மிகுந்த தோற்றம் நுணுக்கமான கலைநுட்பக் கட்டட வேலைப்பாடு ஆகியவற்றுடன் திகழும் நான்தான், சுல்தான் அப்துல் சமாட் கட்டடம்.

அந்தோணி சி.நோர்மன் என்ற ஆங்கிலேயக் கட்டடக் கலைஞர், 10,200 சதுர மீட்டரில் என்னை வடிவமைத்தார். கோலாலம்பூரின் வளர்ச்சியோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டவன் நான். நம் விடுதலை நாளான, 31ஆம் நாள், ஆகஸ்ட் 1957இல், என் முன்னே பறந்த ஆங்கிலேயரின் 'யூனியன் ஜேக்' கொடி இறக்கப்பட்டு, நம் மலேசியக் கொடி ஏற்றப்பட்டுப் பட்டொளி வீசிப் பறந்தது தெரியுமா? அடிமை விலங்கு உடைந்து சுதந்திர மலேசியா மலர்ந்த வரலாற்றை நான்தான் காட்டிக் கொண்டு நிற்கிறேன்.




சுல்தான் அப்துல் சமாட் கட்டடம்

2.3.7 வரலாறு தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.


ஸ்டாடுயூஸ் கட்டடம்

வணக்கம் தோழர்களே!

என் நண்பனின் கதையைக் கேட்டு முடித்து விட்டீர்களா? நானூறு ஆண்டுகால மலாக்காவின் வரலாற்றை நினைவுபடுத்திக் கொண்டிருக்கும் என் கதையையும் கொஞ்சம் கேளுங்கள். நான்தான் 'ஸ்டாடுயூஸ்' கட்டடம். மலாக்காவை டச்சுக்காரர்கள் ஆண்டபோது, டச்சுக்கார கவர்னரின் அதிகாரத்துவ இல்லமாக விளங்கியவன் நான். ஆசிய வட்டாரத்தில், டச்சுக்காரர்களால் முதலில் கட்டப்பட்டவன் நான்தான். அதாவது, 1650ஆம் ஆண்டில் கட்டப்பட்டேன். என் வயதை என் வாயால் சொல்ல மாட்டேன். சொன்னால் என்னைக் கிழம் என்று முடிவு கட்டிவிடுவீர்கள்.

இன்றையச் சூழலில் நான், வரலாற்றுத் தொல்பொருள் காட்சியகமாக விளங்குகின்றேன். மலாக்கா வரலாற்றை நினைவுகூரும் பொருள்கள் என்னுள் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. பாரம்பரிய ஆடைகளின் கண்காட்சியும்கூட தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. மலாக்கா வந்தால் மறக்காமல் என்னை வந்து பாருங்கள்.

தொகுதி 19

வணக்கம் தோழர்களே!

ஸ்ரீ மெனாந்தி அரண்மனை என்பது என் பெயர். நெகிரி செம்பிலான் மாநிலத்தில் அமைந்துள்ளேன். மிக நுணுக்கமான 'மீனாங்கபாவ்' கலைநயத்துடனும் நான் வடிவமைக்கப்பட்டேன்.

என் கட்டமைப்பில் மேலும் ஒரு வியப்பான செய்தியும் உண்டு தெரியுமா? பொதுவாக, கட்டுமானப் பணிகளில் ஆணிகளைப் பயன்படுத்திதானே கட்டடங்களைக் கட்டுவார்கள்? ஆனால், என் உடலில், ஓர் ஆணிகூட பயன்படுத்தாமல் கட்டினார்கள் தெரியுமா? வெறும் சட்டங்களையும் பலகைகளையும் இணைக்கும் ஒருவகைத் தொழில்நுட்பத்தோடு என்னைக் கட்டினார்கள். ஸ்ரீ மெனாந்தி வந்து, அந்த வியப்பை மறவாமல் கண்டு களியுங்கள். என் கட்டுமானப் பணி 1902ஆம் ஆண்டு தொடங்கி, 1906இல் முடிவடைந்தது. எங்கே என் வயதைக் கணக்கிட்டுச் சொல்லுங்கள்! என்ன விடை கிடைத்ததா? சரி, நான் விடைபெறுகிறேன்.

ஸ்ரீ மெனாந்தி அரண்மனை


**இடுபணி 1**

**வினாக்களுக்குப் பதில் தருக.**

1. சுல்தான் அப்துல் சாமாட் கட்டடத்தின் சிறப்பு யாது?
2. இக்கட்டடத்தை எவ்வாறு பாதுகாக்கலாம்?
3. ‘ஸ்டாடுயூஸ்’ கட்டடத்தின் தனித்துவம் என்ன?
4. தற்போது இக்கட்டடம் மலேசியர்களுக்கு எவ்வகையில் பயன்படுகிறது?
5. ஸ்ரீ மெனாந்தியின் தொழில்நுட்பச் சிறப்பு யாது?
6. இக்கட்டடக் கலை கற்றுத்தரும் படிப்பினை என்ன?


**இடுபணி 2**

**இக்கட்டடங்களுக்கிடையே உள்ள ஒற்றுமைகளை விளக்குக.**

**இடுபணி 3**

**பனுவலை மௌனமாக வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

## கோலாலம்பூரின் வரலாறு



கோலாலம்பூர் (அன்றும் இன்றும்)

கோம்பாக் ஆறும் கிள்ளான் ஆறும் சந்திக்கும் இடத்தில்தான் நம் கோலாலம்பூர் தலைநகரம் உருவானது. 1850ஆம் ஆண்டில், கிள்ளானில் மலாய் மன்னராக விளங்கிய ராஜா அப்துல்லா, ஈயச் சுரங்கங்களை அமைக்கும் பணிக்குச் சீனத் தொழிலாளர்களைக் கொண்டு வந்தார். அதில் இருந்துதான், கோலாலம்பூரின் வரலாறு தொடங்கியது. ஈயவயல்கள் சூழ்ந்த குக்கிராமமாக விளங்கிய கோலாலம்பூர் மெல்ல வணிகப் பெருநகரமாக உருவெடுத்தது.

கோலாலம்பூரின் ‘சீன கப்பித்தானாக’, 1870ஆம் ஆண்டில் யாப் ஆ லோய் நியமிக்கப்பட்டார். அதன் பின்னர்தான், கோலாலம்பூர் முறையான வளர்ச்சிப் பாதைக்கு வந்தது. யாப் ஆ லோய் சீரான வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டார். ஒரு சிற்றூராக விளங்கிய கோலாலம்பூரை வளர்முகச்சுரங்க நகரமாக உருமாற்றினார். கட்டடங்கள் செங்கற்கள் மற்றும் ஓடுகள் கொண்டு கட்டப்பட்டன. கோலாலம்பூரின் மீளமைப்பை முடுக்கிவிட யாப் ஆ லோய் செங்கற் சூலைகள்

அமைக்க பெரும் நிலப்பகுதியை வாங்கினார். அந்த இடமே இன்று பிரிக்பீல்ட்சு என்று அழைக்கப்படுகிறது. இங்கே இந்தியர்கள் பெருமளவு வாழ்வதால், இவ்விடம் தற்போது 'லிட்டில் இந்தியா' என அழைக்கப்படுகிறது. 1880ஆம் ஆண்டில் சிலாங்கூர் மாநிலத்தின் தலைநகராக கோலாலம்பூர் அறிவிக்கப்பட்டது. அதன் பிறகு, கோலாலம்பூரின் வளர்ச்சி மேலும் உத்வேகம் பெற்றது.



யாப் ஆ லோய்

**வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. தொடக்கத்தில் கோலாலம்பூர் எப்படி இருந்தது?
2. கோலாலம்பூரின் வளர்ச்சிக்கு யாப் ஆலோய் ஆற்றிய பங்கு என்ன?

## வளப்படுத்துதல்

**பழைமை வாய்ந்த கட்டடங்களின் இரண்டு சிறப்புகளைக் குறிப்பிடுக.**

**வரலாற்றுக் கட்டடங்கள்**







## குறைநீக்கல்

**மலேசியாவில் பழைமை வாய்ந்த கட்டடங்கள் பற்றிய செய்திகளைத் திரட்டி திரட்டேடு ஒன்றனைத் தயாரித்திடுக. இணையத்தளத்தைப் பயன்படுத்துக.**

காணொளி

தொகுதி 19

குழுவில் கலந்துரையாடுக.

## பெந்தாரா டாலாம் தேசிய இடைநிலைப்பள்ளி மலேசிய நாள் வரலாற்றுக் கண்காட்சி செயலறிக்கை

### 1.0 தொடக்கம்

பெந்தாரா டாலாம் தேசிய இடைநிலைப்பள்ளியின் வரலாற்றுக் கழகம், ஆண்டுதோறும் மலேசிய நாள் வரலாற்றுக் கண்காட்சியை ஏற்று நடத்தி வந்துள்ளது. இவ்வாண்டும் இக்கண்காட்சி கடந்த செப்டம்பர் மாதம் 16ஆம் நாள், காலை மணி 8:00 முதல் நண்பகல் மணி 12:00 வரையில் சிறப்பாக நடைபெற்றது. இக்கண்காட்சியில் பள்ளியைச் சார்ந்த அனைத்து மாணவர்களும் கலந்து கொண்டனர்.

### 2.0 வரவேற்புரை

தொடக்க நிகழ்ச்சியாக, இறை வணக்கம் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து, இக்கலைவிழாவின் ஏற்பாட்டுக்குழுச் செயலாளர் செல்வன் முகில்வாணன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அவர் தமதுரையில் இப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் நம் நாட்டின் வரலாற்றையும் மலேசிய நாள் கொண்டாடப்படும் நோக்கத்தையும் உணர்த்துவதற்காக இக்கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

### 3.0 திறப்புரை

பள்ளியின் முதல்வர் திரு. அமுதன் அண்ணாமலை திறப்புரை ஆற்றினார். அவர் தமதுரையில் வரலாற்றுக் கழகத்திற்குத் தம் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டார். மேலும், இப்பள்ளியில் பயிலும் மாணவர்களிடையே நாட்டுப் பற்றினை வலுப்படுத்த இவ்விழா துணை புரியும் எனக் குறிப்பிட்டார். தொடர்ந்து, விழாவினை அதிகாரப்பூர்வமாகத் திறந்து வைத்தார்.

### 4.0 நடைபெற்ற நிகழ்ச்சிகள்

தொடர்ந்து, பள்ளியின் மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கண்காட்சிக் கூடங்களைப் பார்வையாளர்கள் சென்று காணத் தொடங்கினார்கள். அங்கு, மலேசியா உருவான வரலாற்றுச் சான்றுகளைக் காட்டும் காட்சிகளைப் பார்வைக்கு வைத்திருந்தனர். அக்கூடங்களில் வரலாற்றுக் குறிப்புகள் அடங்கிய கையேடுகளும் வழங்கப்பட்டன. மாணவர்களில் பலர் குறிப்புகளும் எடுத்துக் கொண்டனர். கண்காட்சிக் கூடங்களில் வரலாறு தொடர்பான காணொளிக் காட்சிகளும் ஆங்காங்கே இடம்பெற்றன. பார்வையாளர்கள் அவற்றைக் கண்டுகளித்து மகிழ்ந்தனர்.

3.4.15 180 சொற்களில் செயலறிக்கை எழுதுவர்.

5.0 முடிவு


இறுதியாக, நண்பகல் மணி 12:00க்கு இக்கண்காட்சி இனிதே நிறைவடைந்தது. அனைவரும் மனநிறைவோடு விடைபெற்றனர்.

அறிக்கை தயாரித்தவர், 9 அக்டோபர் 20□□

**அருள்நங்கை தமிழ்வாணன்**
செயலர்,
தமிழ்மொழிக் கழகம்,
பெந்தாரா டாலாம் தேசிய இடைநிலைப்பள்ளி, பந்திங்.

**இடுபணி 1**

**வாசித்த அறிக்கையின் உள்ளடக்கத்தைப் பத்திக்கேற்ப இணைப்பு வரைபடத்தில் குறிப்புகளாக எழுதுக.**




**செயலறிக்கையின் அமைப்பைக் கவனத்தில் கொள்க.**

**பயன்படுத்துக**
- அறிக்கையின் தொடக்கம் - என்ன - எப்பொழுது - எங்கு - யாவர்
- தொடக்க நிகழ்ச்சிகள்
- உரைகள்
- கொண்டாட்ட நிகழ்ச்சிகள்
- முடிவு

செயலறிக்கையின் உள்ளடக்கத் தொடர்புகளை விவரிக்கும் இணைப்பு வரைபடம்

**இடுபணி 2**


**உமது பள்ளியில் இயங்கிவரும் வரலாற்றுக் கழகம், 'மலேசியப் பல்லினப் பண்பாட்டு உடைகள்' எனும் கருப்பொருளில் கொண்டாட்ட விழா ஒன்றனை ஏற்பாடு செய்தது. அதில் பல்வேறு நிகழ்ச்சிகள் சிறப்பாக நடந்தேறின. விழாவின் ஏற்பாட்டுக் குழுவின் செயலாளர் என்ற முறையில், அந்நிகழ்வின் செயலறிக்கை ஒன்றனை 180 சொற்களில் எழுதுக.**

**இடுபணி 3**

**அண்மையில் உமது பள்ளியைச் சார்ந்த ஒற்றுமைக் கழக உறுப்பினர்கள் 'மெர்டேக்கா சதுக்க நடை உலாவில்' கலந்து கொண்டார்கள். ஏற்பாட்டுக் குழுவின் செயலாளர் என்ற முறையில் அந்நிகழ்வைப் பற்றிச் செயலறிக்கை ஒன்றனை 180 சொற்களில் எழுதுக. சுற்றறிக்கையில் காணும் குறிப்புகளைத் துணை கொள்க.**

## மெர்டேக்கா சதுக்க நடை உலா

(வரலாற்று இடங்களை அறியவும் நுகரவும் அரிய வாய்ப்பு)




**உலா பாதை**

1. மெர்டேக்கா சதுக்கம்
2. முன்னாள் உயர்நீதிமன்றம்
3. சுல்தான் அப்துல் சமாட் கட்டடம்
4. தேசிய ஆடைகளின் தொல்பொருள் காட்சியகம்
5. விக்டோரியன் நீரூற்று
6. இசைக் காட்சியகம்
7. மெர்டேக்கா சதுக்க வாரிசான் உணவகம்
8. கோலாலம்பூர் சிட்டி கெலரி
9. கோலாலம்பூர் நூலகம்
10. கிளப் சிலாங்கூர் கட்டடம்
11. செண்ட் மேரி தேவாலயம்



- 12 இடங்களைச் சுற்றிவருதல்
- வரலாற்று இடங்களில் கால் பதித்தல்
- இன்ப உலாவில் அரிய செய்திகளைப் பெறுதல்
- வரலாற்றுப் பதிவுகளைக் காணுதல்; நினைவு கூர்தல்

நேரம் : காலை மணி 9:00 - 11:30
ஏற்பாடு : கோலாலம்பூர் நகராண்மைக் கழகம் சுற்றுலா மேம்பாட்டு வாரியம்

தொடர்பு கொள்ள...
03- 2698 0332 அல்லது
pelancongan@dbkl.gov.my.
(முன்பதிவு செய்க)



## வளப்படுத்துதல்

**உமது பள்ளியில் இயங்கிவரும் ஒற்றுமைக் கழகம் 'மெர்டேக்கா ஒற்றுமை ஓட்டம்' ஒன்றனை நடத்தியது. விழாவின் ஏற்பாட்டுக் குழுச் செயலாளர் என்ற முறையில் அந்நிகழ்வைப் பற்றிச் செயலறிக்கை ஒன்றனை 180 சொற்களில் எழுதுக.**

## குறைநீக்கல்

**உமது பள்ளியில் தேசிய நாள் கொண்டாட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்று முடிந்தது. அவ்விழாவின் ஏற்பாட்டுக் குழுச் செயலாளர் என்ற முறையில் அந்நிகழ்வைப்பற்றி செயலறிக்கையை நிறைவு செய்க.**

### தேசிய நாள் கொண்டாட்டச் செயலறிக்கை

1.0 தொடக்கம்

______ ஆண்டுதோறும் தேசிய நாள் கொண்டாட்டம் நடந்து வருகிறது. இவ்வாண்டும் இவ்விழா கடந்த ______ காலை மணி ______ முதல் ______ வரையில் சிறப்பாக நடைபெற்றது.

2.0 வரவேற்புரை

தொடக்க நிகழ்ச்சியாக, இறை வணக்கம் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து, இக்கலைவிழாவின் ஏற்பாட்டுக் குழுச் செயலாளர் ______ அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அவர் தமதுரையில் ______

3.0 திறப்புரை

பள்ளியின் முதல்வர் ______ திறப்புரை ஆற்றினார். இவர் தமதுரையில் ______ தம் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டார். மேலும், ______ எனக் குறிப்பிட்டார். தொடர்ந்து, விழாவினை அதிகாரப்பூர்வமாகத் திறந்து வைத்தார்.

4.0 நடைபெற்ற நிகழ்ச்சிகள்

______

______

5.0 முடிவு

இறுதியாக, பிற்பகல் சுமார் ______ மணிக்கு இவ்விழா நிறைவடைந்தது. வருகையாளர்கள் மகிழ்ச்சியாக விடைபெற்றனர்.

அறிக்கை தயாரித்தவர், ______

______

செயலாளர்,

______

______

தொகுதி 19

## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

உரையாடலில் வரும் பழமொழிகளை அறிந்து கூறுக.

| பழமொழி | பொருள் |
| --- | --- |
| ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு | எச்செயலைச் செய்தாலும் தன் நோக்கத்தில் வெற்றி பெறுவதிலேயே கவனம் செலுத்த வேண்டும். |
| எறும்பு ஊரக் கல்லும் தேயும் | தொடர்ந்து ஒரு செயலைச் செய்து வந்தால் எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் நாளடைவில் எளிதாகிவிடும். |
| அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது | நடந்து முடிந்த ஒரு காரியத்தை அல்லது கைவிட்டுப்போன ஒரு பொருளை நினைத்து வருந்திப் பயனில்லை. |



**இளங்கோ:** வணக்கம் ஐயா...! ஓய்வாக இருக்கிறீர்களா? உங்களோடு பேச இயலுமா?

**நெறியுரை ஆசிரியர்:** வணக்கம் இளங்கோ...! நானும் உன்னைப் பார்க்க வேண்டும் என்றுதான் எண்ணியிருந்தேன். கலைச்செல்வனிடம் சொல்லியிருந்தேனே!

**இளங்கோ:** ஐயா, கலைச்செல்வன் நேற்று மாலைதான் என்னிடம் செய்தியைக் கூறினான். அதனால்தான் தங்களைப் பார்க்க வந்தேன்.

**நெறியுரை ஆசிரியர்:** நல்லது. இப்படி வந்து உட்கார். கடந்த வாரம் உன் அரையாண்டுத் தேர்ச்சியைப் பார்த்தேன். அது எனக்கு அதிர்ச்சியைத் தந்தது. பல பாடங்களில் குறைந்த மதிப்பெண்கள். என்ன ஆயிற்று இளங்கோ?

**இளங்கோ:** உண்மைதான் ஐயா...! என்னால் முன்புபோல் பாடங்களில் கவனம் செலுத்த முடியவில்லை. புறப்பாட நடவடிக்கைகளின் ஈடுபாடு என்

4.7.3 மூன்றாம் படிவத்திற்கான பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

தொகுதி 19

முழுக் கவனத்தையும் சிதறடித்துவிடுகின்றது. அடிக்கடி பள்ளியின் நிகராளியாகப் பல போட்டிகளில் கலந்துகொள்ள வேண்டியுள்ளது.

**நெறியுரை ஆசிரியர்:** இங்குதான் கூடுதல் கவனம் தேவை இளங்கோ! ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாக இருக்க வேண்டும். நாம் எச்செயலைச் செய்தாலும் நம் நோக்கத்தில் வெற்றி பெறுவதிலேயே கவனம் செலுத்த வேண்டும். உன் ஆர்வத்தில் தவறில்லை. போட்டி விளையாட்டில் வெற்றி பெறும் அதேவேளையில் கல்வியிலும் நல்ல தேர்ச்சி பெறுவதும் உன் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும்.

**இளங்கோ:** சரிதான் ஐயா...! என்னால் நேரத்தை முறையாகப் பங்கிட முடியவில்லை. அதுதான் பெரிய சிக்கலாக இருக்கின்றது. பாடங்களை எத்தனை முறை மீள்பார்வை செய்தாலும் விளங்கிக் கொள்ள கடினமாக இருக்கிறது.

**நெறியுரை ஆசிரியர்:** அப்படியா? சரி...! ஒரு பாடத்தை எத்தனை முறை மீள்பார்வை செய்வாய்?

**இளங்கோ:** ஒரு முறை அல்லது இரண்டு முறை மீள்பார்வை செய்வேன் ஐயா.

**நெறியுரை ஆசிரியர்:** அடடா! அது போதாது இளங்கோ. ஓரிரு முறை படித்தும் விளங்கவில்லை என்றால், பல முறை படித்து விளங்கிக் கொள்ள முயல வேண்டும். தொடர்ந்து ஒரு செயலைச் செய்து வந்தால் எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் நாளடைவில் மிகவும் எளிதாகிவிடும். எறும்பு ஊரக் கல்லும் தேயும் என்பதை நீ கேள்வி பட்டதில்லையா?

**இளங்கோ:** சரி ஐயா, நீங்கள் சொல்லும் வழிமுறையை இனிப் பின்பற்றுகிறேன்.

**நெறியுரை ஆசிரியர்:** இளங்கோ...! இனிக் கவனமாகவும் கருத்தாகவும் படி. நீ கெட்டிக்கார மாணவன். மனம் வைத்தால் நல்ல தேர்ச்சியைப் பெற முடியும். இன்னும் மூன்று மாதங்களில் 'பி.டி.3' தேர்வு வரப்போகின்றது. அசட்டையாக இருக்காதே...! இப்பொழுது படிக்காவிட்டால் தேர்வு முடிவு வரும்போது நல்ல தேர்ச்சியைப் பெற முடியவில்லையே என்று வருந்த நேரிடும். அப்போது வருந்திப் பயனிருக்காது. அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது. நடந்து முடிந்த ஒரு காரியத்தை அல்லது கைவிட்டுப்போன ஒரு பொருளை நினைத்து வருந்திப் பயனில்லை.

**இளங்கோ:** நல்லது ஐயா..! இன்றே என் முழுக் கவனத்தையும் கல்வியின்பால் திருப்புகிறேன். தங்களின் அறிவுரைக்கு மிக்க நன்றி. சென்று வருகின்றேன் ஐயா...!

**நெறியுரை ஆசிரியர்:** நல்லது, சென்று வா. நான் கூறியவை நினைவில் இருக்கட்டும்.

**இளங்கோ:** நல்லது ஐயா.

**இடுபணி I**

**பனுவலை அடிப்படையாகக் கொண்டு பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் எழுதுக.**

**இடுபணி 2**

**நண்பரோடு கலந்துரையாடி, சூழலுக்குப் பொருத்தமான பழமொழிகளை அடையாளம் கண்டு எழுதுக.**

1

'திடீர்ப் பணக்காரர்' திட்டத்தின்வழி விரைவில், பணக்காரர் ஆகலாம் என்று அருளப்பருக்கு ஆசையை மூட்டினார் அவரின் நண்பர் ஒருவர். நண்பரின் ஆசை வார்த்தைகளை நம்பினார் அருளப்பர். முன் பின் யோசிக்காமல், தம் சேமிப்பு எல்லாவற்றையும் அத்திட்டத்தில் முதலீடு செய்தார் அருளப்பர். ஆனால், இரண்டே மாதத்தில் அந்த நிறுவனத்தின் முதலாளிகள் பணத்தையெல்லாம் சுருட்டிக் கொண்டு தலைமறைவாகினர். அப்போதுதான், தாம் ஏமாற்றுப்பட்டுவிட்டதை அறிந்தார் அருளப்பர். தாம் முன்பே யோசித்துச் செயல்படாமல் போனதால், தமது வாழ்நாள் சேமிப்பெல்லாம் வீணாகிப் போனதை எண்ணி வருந்தினார். இப்போது வருந்தி என்ன பயன்? முடிந்த கதையை எண்ணி வருந்துவதைவிட, அடுத்து இது போன்று நடவாமல் பார்த்துக் கொள்வதே சிறப்பு என்று தம் மனத்தைத் தேற்றிக் கொண்டார்.

2

கவிச்சக்கரவர்த்தி கம்பர் சோழனின் அவையில் அரசவைப் புலவராக வீற்றிருந்தார். அதே அவையில், தலைமைப் புலவராக வீற்றிருந்தார் ஒட்டக்கூத்தர். அவர்கள் இருவரையும் வடமொழி காவியமான இராமாயணத்தைத் தமிழில் இயற்றுமாறு பணித்தார் சோழ அரசர். அவர்கள் இருவருக்குமிடையே யார் இராமாயணத்தை முதலில் எழுதி முடிப்பது என்பதில் கடும்போட்டி நிலவியது. இருப்பினும், அரசனின் ஆணையை ஏற்றுப் பல காலம் இராமாயணம் இயற்றுவதிலேயே முழுக் கவனத்தையும் செலுத்தினார் கம்பர். இறுதியில் கம்பராமாயணத்தை வெற்றிகரமாக இயற்றி திருவரங்கக் கோயிலில் அரங்கேற்றம் செய்தார். பல இன்னல்களுக்கிடையில் விடாமுயற்சியுடன் கவனம் முழுவதையும் செலுத்தி, தொடர்ந்து முயன்றதால், இராமாயண காவியத்தைச் சிறப்பாக எழுதி முடித்தார் கம்பர்.

3

தமிழருவிக்குக் கணக்குப் பாடம் என்றாலே பாகற்காய் சாப்பிடுவது போன்று கசக்கும். எவ்வளவுதான் முயற்சி எடுத்தாலும் தேர்வில் நல்ல புள்ளிகளைப் பெற முடியாமல் மனம் ஒடிந்து போவாள். ஒருநாள், கணிதப்பாட ஆசிரியர் தமிழருவியை அழைத்து அவளின் சிக்கலைக் கேட்டறிந்தார். கணக்குகளை முறையாகச் செய்யும் நுணுக்கங்களையும் வழிமுறைகளையும் சொல்லிக் கொடுத்தார். அன்றுமுதல், தமிழருவி தொடர்ந்து, விடாமுயற்சியோடு, கணக்குகளை ஒவ்வொரு நாளும் செய்யத் தொடங்கினாள்; பயிற்சிக்கு மேல் பயிற்சி; மெல்ல மெல்ல கணக்குகள் புரியத் தொடங்கின. தொடர்ந்து, முயற்சியை இரட்டிப்பாக்கினாள். அரையாண்டுத் தேர்வில், கணக்குப் பாடத்தில் அதிகப் புள்ளிகள் பெற்றாள். அவளுக்குக் கணக்குப் பாடம் கற்கண்டாய் மாறி, தேனாய் இனித்தது.

**இடுபணி 3**

**பழமொழிகளுக்கு ஏற்ற சூழல்களை எழுதுக.**

எறும்பு ஊரக் கல்லும் தேயும்

அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது

ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு

**வளப்படுத்துதல்**

**பழமொழிகளின் பொருளை மெய்ப்பிக்கும் வண்ணம் வாழ்க்கையில் வெற்றி பெற்ற ஒருவரைப் பற்றி விளக்கி எழுதுக.**

**குறைநீக்கல்**

**சான்றோர்களின் பொன்மொழிகளுக்குப் பொருத்தமான பழமொழியினைத் தெரிவு செய்து தொடர்பினை விளக்கிக் கூறுக.**

ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு

எறும்பு ஊரக் கல்லும் தேயும்

அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது



**வெற்றிக்கும் தோல்விக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை நிர்ணயிப்பதுதான் சிக்கல்.
வாட்டி வதைத்தாலும் கடுமையாக பாடுபட்டால்தான் சிக்கல்களோடு
போராடித் தீர்வு காண முடியும்.**

**கண்ணதாசனின் அனுபவ மொழிகள்**

**நடந்ததை எண்ணிக் கவலைப்பட்டால் அவன் மடையன்,
நடப்பதை எண்ணி வருத்தப்பட்டால் அவன் மூடன்,
போடா வருவது வரட்டும் என்பவனே நல்ல ரசிகன்.**



# தொகுதி 20 அறிவியல் உலகம்

## பாடம் 1 அறிவியல் கண்டுபிடிப்புகளும் விளைவுகளும்

**கருத்துக்கு ஏற்ற சான்றுகளை விவரித்துக் கூறும் எடுத்துக்காட்டை ஆழ்ந்து ஆராய்ந்து நண்பரிடம் கூறுக.**




எ.கா:

**கருத்து**

அறிவியலாளர்களின் பல்வேறு கண்டுபிடிப்புகள் மனித வளர்ச்சிக்கு வித்திடுகின்றன. ஆனால், அதற்கும் மேலாக இந்தக் கண்டுபிடிப்புகள் மனிதனை முடமாக்கிவிட்டன.



**சான்றுகள்**

- குளிரூட்டி இல்லாமல் வாழ முடிவதில்லை.
- மின்சாதனச் சமையல் கருவிகள் மரபுவழி சமையல் முறையை விழுங்கிவிட்டன.
- வீட்டுப் பணிகள் இயந்திர மயமாக்கப்பட்டு, உடல் உழைப்பு இல்லாமல் நோய்கள் பெருகிவிட்டன. பலர் நோயாளிகளாக வலம் வருகின்றனர்.



**விவரித்தல்**

அறியியல் கண்டுபிடிப்புகள் மனித வளர்ச்சிக்கு உதவியிருந்தாலும், அந்தக் கண்டுபிடிப்புகளால் மனித வாழ்க்கை சில வகைகளில் முடமாகிப் போனது என்பது ஓரளவிற்கு உண்மையே. இன்று மனிதன் குளிரூட்டி இல்லாமல் வாழ முடிவதில்லை; மின்சாதனக் கருவிகள் மரபு முறைகளிலான சமையலை மறக்கடித்துவிட்டன; சமையல் அறையில் இருக்கும் மின்னடுப்பு, மின்பானை, அரவை இயந்திரம் எனப் பல கருவிகள், இன்று பெண்களின் அவசியத் தேவைகளாக மாறிவிட்டன. மேலும், வீட்டுப் பணிகள் யாவும் இயந்திர மயமாக்கப்பட்டு, உடல் உழைப்புகள் இல்லாது போயின; இதனால், பலர் நோய்களால் பீடிக்கப்பட்டு நடமாடுகின்றனர். இத்தகைய நவீனக் கருவிகள் இயங்காவிட்டால், பெண்கள் ஒருவித படபடப்பு மற்றும் மனஅழுத்தத்திற்கு ஆளாகி விடுகின்றனர். எந்தச் சமையலையும் செய்ய முடியாதே எனும் கவலையும் பெண்களுக்கு வந்துவிடுகிறது. இல்லத்திற்கே இத்தகைய பல பாதிப்புகளை அறிவியல் கொண்டு வந்துள்ளது என்பதனை மறுக்க இயலுமோ?

கருத்து

சான்றுகள் விவரிப்பு

1.4.5 கருத்துகளைச் சான்றுகளுடன் விவரித்துக் கூறுவர்.

## இடுபணி 1


**கருத்துகளுக்கு ஏற்ற சான்றுகளைத் தெரிவு செய்து விவரித்து வகுப்பில் கூறுக.**



**கருத்து**

அறிவியல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி உலகின் இன்றைய நீர்த்தூய்மைக்கேட்டுக்கு முக்கியக் காரணங்களுள் ஒன்றாக உள்ளது.

- அணுவுலைகளிலிருந்து வெளியாக்கப்படும் கழிவுகள் கடல்நீரின் தூய்மையைக் கெடுத்து வருகின்றன.
- குளிரூட்டிகளின் பெருக்கம் நீர்த் தூய்மைக்கேட்டை உருவாக்கியுள்ளது.
- தொழிற்சாலை இயந்திரங்களிலிருந்து வெளியேற்றப்படும் கரும்புகைகள் அமில மழையை உருவாக்கிவிட்டன.



**கருத்து**

அறிவியல் கண்டுபிடிப்புகள் ஆக்கப் பணிகளுக்கு உதவியுள்ளன என்பதனை மறுக்க இயலாது.

- மருத்துவத்துறை கண்டுபிடிப்புகள் இருதயநோய், குடல்புண் போன்ற நோய்களைக் குணப்படுத்த பெரிதும் உதவியுள்ளன.
- புதிய புதிய மருந்து வகைகளின் கண்டுபிடிப்புகளும் பலரை நோயிலிருந்து காப்பாற்றியுள்ளன.
- சளிக்காய்ச்சல் நோய்க்கும் நிரந்தரத் தீர்வு ஏற்பட்டுள்ளது.

## இடுபணி 2

**கருத்துரைகளுக்கு ஏற்ற சான்றுகளை இணைய முகவரிகளில் திரட்டி விவரித்துக் கூறுக.**

| | | |
|---|---|---|
| அறிவியல், போக்குவரத்துத் துறையை மாற்றியமைக்க உதவியுள்ளது. | அணுசக்தியை முறையாகப் பயன்படுத்தினால், மாந்தர்க்கு நல்ல பல விளைவுகளைக் கொண்டு வரும். | புதிய அறிவியல் கருவிகளில் பல, மானிட நலத்திற்குத் தீங்கு விளைவிக்கின்றன. |

**இடுபணி 3**

**படங்களைத் தொடர்புபடுத்தி ஏற்ற கருத்தினை உருவாக்கிச் சான்றுகளுடன் விவரித்துக் கூறுக.**



அணு உலைகளின் பெருக்கம்          உலகத்திற்குப் பேரழிவு

**எ.கா:**

அணுசக்தியின் பெருக்கம் உலகிற்கு அச்சுறுத்தலாக விளங்குகின்றது. இன்று, பல்வேறு நாடுகளில் வளர்ந்துள்ள அணு உலைகளின் பெருக்கம் உலகத்தில் பேரழிவுகளை உருவாக்கி வருகின்றன. இவை உயிர், உடல் சேதங்களுக்கும் இயற்கைப் பேரழிவிற்கும் காரணமாக விளங்குகின்றன. இந்தியாவில் உள்ள போபால் நகரில் 1984இல் அணுக்கதிர் கசிவினால், 2259 பேர் உயிரிழந்தனர். அங்குப் பிறந்த குழந்தைகளும் பல ஆண்டுகளாக உடற்பேறு குறைந்தே பிறந்தனர். அண்மையில், ஜப்பானில் ஆழிப்பேரலை (சுனாமி) ஏற்பட்டு அணுமின்நிலையம் வெடித்ததால், அதன் கதிர்வீச்சு பரவி, சுற்றுச்சூழலை மிகவும் பாதித்தது.



புதிய நோய்களின் தோற்றம்          தடுப்பு முறைகளின் உருவாக்கம்

## வளப்படுத்துதல்

**பத்திகளில் காணும் முதன்மைக் கருத்துகளையும் அதற்கான சான்றுகளையும் திரட்டி கருத்துகளை விவரித்துக் கூறுக.**



தொழில்நுட்பமானது மனிதர்களுடைய அன்றாட வாழ்க்கையில் ஏற்படுத்துகின்ற சாதகமான தாக்கங்கள் பற்றி நோக்குகின்றபோது தொழில்நுட்பங்கள் மனிதர்களுடைய வேலைப் பளுவைக் குறைத்துவிட்ட நிலையைக் காண முடிகிறது. எடுத்துக்காட்டாக, விவசாயத்துறையை எடுத்துக் கொண்டால் பசுமைப் புரட்சியின் விளைவினால் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களைக் குறைந்த நேரத்தில் அதிகளவில் உருவாக்க முடிகிறது. இதனால், மனிதர்களுடைய தேவைகளை உடனுக்குடன் நிறைவு செய்யக்கூடிய நிலைமை ஏற்படுகின்றது.

தொழில்நுட்ப வளர்ச்சியினால், மனிதன் பாரம்பரியத் தொழில்களிலிருந்து விடுபட்டு இயந்திரம் சார்ந்த தொழில்களில் ஈடுபடும் புதிய நிலை உருவாகியுள்ளது. இது மனித வாழ்வில் பல நன்மைகளை உருவாக்கியுள்ளது. இதனால், மக்களுக்கு உயர்ந்த ஊதியம் கிடைக்கின்றது. அதன்வழி, அவர்களது வாழ்க்கைத் தரம் உயர்வடைகின்றது. அத்துடன் நேரவிரயம் தொழில்நுட்ப வளர்ச்சியினால் குறைக்கப்பட்டுள்ளது. இவ்வாறான மாற்றங்கள் சமூகத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்த காரணமாகின்றன.

## குறைநீக்கல்

**கருத்துக்கு ஏற்ற சான்றுகளைப் பயன்படுத்தி விவரித்துக் கூறுக.**

**இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் இயந்திர மனிதன்தான் (ரோபோட்) இந்த உலகத்தை ஆளப்போகிறான்.**

**சிந்திக்கும் திறன் கொண்ட இயந்திர மனிதன்**

- நல்ல சிந்தனைத் திறன் கொண்டது.
- இது மனிதர்களுடன் 'ராக்-சிஸ்சர்-பேப்பர்' என்ற விளையாட்டை விளையாடும்.
- மனிதனின் சைகைகளைப் புரிந்து கொள்கிறது.
- விண்வெளி இயந்திர மனிதன்.
- தனது முதல் வார்த்தையை விண்வெளியில் பதிவு செய்துள்ளது.



# பாடம் 2 அறிவியல் பாதை

**வாசிக்கும் முன் சொற்களை உச்சரித்துப் பழகுக.**

| | |
|---|---|
| செவ்வாய் | செல்லும் |
| சுற்றுப்புறம் | பணி |
| மின்னடுப்பு | நுண்ணலை |

மே 6 – செவ்வாய்க் கோளத்திற்குச் செல்லும் விண்வெளி வீரர்கள், அங்கு நீண்ட நாள்கள் தங்கி ஆய்வு செய்யவும் அவர்களைச் சுற்றுப்புறக் காரணிகள் பாதிக்காமல் இருக்கவும் இருப்பிடம் உருவாக்க 'நாசா' பணிவீடுகள் அமைக்க முடிவு செய்துள்ளது.





ஜூன் 25 – கைப்பேசியின் பயன்பாடு உங்களின் கற்றல் ஆர்வத்தைத் தடை செய்வது உங்களுக்குத் தெரியுமா? எப்படி? அவை ஐந்து வகை: கைத்தொலைபேசியில், வீணே அரட்டை அடித்தல்; முகநூலில் நேரத்தைச் செலவிடல்; புலனத்தில் காலத்தை வீணடித்தல்; வலையொளியில் நேரத்தை விரயமாக்குதல் போன்றவைதாம் அவை.

மார்ச் 10 – மருத்துவ அறிவியலின் பாதையும் பயணமும் சரியான திசையில் செல்கின்றனவா? அதுதான், இன்றைய காலத்தின் கேள்வியாக நிற்கிறது. 'இதுதான் அறிவியல் பூர்வமானது' என்று சான்று தருவதற்கு உலகில் எந்த ஓர் அமைப்பிற்கும் அதிகாரம் கிடையாது. ஏனென்றால், அறிவியல் என்பதை அறிந்துகொள்ள, உரசிப்பார்க்கப் பொது அளவுகோல் ஒன்றை யாரும் காட்டிட இயலாது.



**கவனத்தில் கொள்க**

**முறையாக வாசித்தல்...!**

- வரிவடிவத்தை அடையாளம் காணுதல்.
- முறையான உச்சரிப்புடன் சொற்களை உச்சரித்தல்.
- பொருள் உணர்ந்து வாசித்தல்.

2.1.6 செய்தியைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக் குறிகளுக்கேற்ப வாசிப்பர்.

**இடுபணி 1**

**வாக்கியங்களைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக் குறிகளுக்கேற்ப வாசித்துக் காட்டுக.**

- நம் உலகில் அறிவியல் என்னவெல்லாம் செய்கிறது தெரியுமா? அணு முதல் ஆகாயம் வரை அதன் அரசாட்சிதான் ஓங்கி நிற்கிறது.
- அறிவியல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியோ, உடலின் மரபணுவரை சென்று நோய்களைக் குணப்படுத்துகிறது; நல்லதோர் எதிர்காலத்தை உருவாக்குகிறது; தொழில்நுட்பத்தை வளரச் செய்கிறது; நம் அன்றாடப் பணியை எளிமையாக்குகிறது.மேலும், நம் வாழ்வையே இனிமையாக்குகிறது.
- அறிவியல் தொழில்நுட்பத்தின் ஆராய்ச்சிகள், நம்மை ஆகா...! என்று புருவத்தை உயர்த்த வைக்கின்றன.

**இடுபணி 2**

**செய்தியைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக் குறிகளுக்கேற்ப வாசித்துக் காட்டுக.**




மருத்துவத் துறையில் ஏற்பட்ட தொழில்நுட்ப வளர்ச்சியின் பயனாக, தற்போது புதிதாக வந்துள்ள ஒரு கருவி, உயிரியலொட்டி (பயோ ஸ்டாம்ப்). இக்கருவியை அஞ்சல் தலையைக் கடிதத்தில் ஒட்டுவதுபோல், நமது உடலில் ஒட்டிக்கொள்ள வேண்டும். அதன் பின்னர், நம் உடல்நிலையைப் பற்றி இக்கருவி திரையில் காண்பிக்கும். கர்ப்பிணிகள், இதய நோயாளிகள், மூளை தொடர்பான நோயாளிகள் அனைவருக்கும் எளிய முறையில் மருத்துவம் பார்க்க இக்கருவி உதவும்.

**இடுபணி 3**

**செய்தியைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக் குறிகளுக்கேற்ப வாசித்திடுக.**

இனிமேல் வழி தெரியாத ஊருக்கும் இன்னுந்தில் எளிதாகச் செல்லலாம். ஏனெனில், தற்போது வந்துவிட்டது 'திறன் தலைகாப்பு' (ஸ்மார்ட் ஹெல்மெட்). ஒரு நிறுவனம், தடங்காட்டு முறைமை (ஜி.பி.எஸ்), நிழற்படக்கருவி (கேமரா) ஆகியவை பொருத்தப்பட்ட புதிய திறன் தலைகாப்பை அறிமுகம் செய்துள்ளது. இந்தத் திறன் தலைகாப்புக் கண்ணாடியில் உள்ள திரையில் செல்ல வேண்டிய இடத்தைப் பதிவு செய்துவிட்டால் போதும்; எவ்வளவு தொலைவு என்றாலும், அஃது எளிமையாக வழியைக் காட்டிவிடும்.



## வளப்படுத்துதல்

**பனுவலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக் குறிகளுக்கேற்ப வாசித்துக் காட்டுக.**



### இந்த உலகிற்கு ஆக்கம் ஏன்? அழிவு ஏன்?

இந்த மனித இனம் எப்படித் தோன்றியது? இந்த உலகம் என்று தோன்றியது? இந்தக் கதிரவன் எவ்வாறு தோன்றியது? இந்தக் கதிரவனைப் போன்ற விண்மீன்கள் இத்தனை இருப்பது ஏன்? இந்த விண்மீன்களையும் கோள்களையும் அடக்கிய பிரபஞ்சம் எத்தகையது?

இவை போன்ற கேள்விகளின் சத்தம், மனித மூளையைப் பெரிய தேடலை நோக்கி உந்தியுள்ளன. உயிரையும், உடலையும், உடைமைகளையும், உருக்கி உழைத்து அறிவியலாளர்கள் இதற்கு விடை தேடுகிறார்கள். இடைவிடா ஆய்வுகளில் மூழ்கி, சமூக எதிர்ப்புகளில் நீச்சலடித்து, ஓரளவு விடையையும் கண்டுள்ளார்கள். இடைவிடா ஆய்வில் அவர்கள் கண்ட பிரபஞ்சம் பற்றி அவர்கள் கண்ட உண்மைகள், அடேயப்பா! மலைப்புக்குரியவை!

மனித இனம் தோன்றி 30 இலட்சம் ஆண்டுகள் ஆகின்றன; இந்த உலகம் தோன்றி 460 கோடி ஆண்டுகள் முடிந்துள்ளன; இது எவ்வளவு பெரிய வியப்பான செய்தி!

- எடுத்தாளப்பட்டது:
மூலம். முனைவர் இ.ஜே.சுந்தர் (தமிழுக்கு இத்தனை சோதனைகள் ஏன்?)

## குறைநீக்கல்

**கீழ்க்காணும் செய்தியைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தக் குறிகளுக்கேற்ப வகுப்பில் உரக்க வாசித்துக் காட்டுக.**



பல வீடுகளின் சுவர்களில் விரிசல் விட்டுப் பார்த்திருக்கிறீர்களா? பல கட்டடங்களில் விரிசல் பெரிதாகி இடியும் நிலையில் உள்ளதைக் கவனித்திருக்கிறீர்களா? ஆனால், அதற்கெல்லாம் தீர்வு வந்துவிட்டது. ஏன் தெரியுமா? நுண்ணுயிர் தொழில்நுட்பத்தின் மூலம் கற்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட திண்காரைகளின் வழி (கான்கிரீட்) இவ்விரிசலைத் தடுக்கும் முறை தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனவே, சுவரில் விரிசல் விழுந்தால், இனி, நுண்ணுயிர்களின் பெருக்கத்தால் விழுந்த விரிசல் தானாகவே மூடிக்கொள்ளும். அடேயப்பா! எத்தகைய வியப்பான செய்தி இது. என்னே! அறிவியலின் அபார வளர்ச்சி!

# பாடம் 3 அறிவியல் முன்னேற்றம்

**வாசித்துக் கருத்தறிக.**

**தலைப்பு :** நாட்டு மருத்துவமும் நவீன மருத்துவமும்

**முன்னுரை:**
- மருத்துவத்தின் முக்கியத்துவம்
- நாட்டு மருத்துவமுறை மற்றும் நவீன மருத்துவமுறை விளக்கம்
- நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துதல் (எது சிறந்தது)

**கருத்து: 1**
- நவீன மருத்துவம் ஆய்வுகளின் அடிப்படையில் நடத்தப்படுவது; மக்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ளது.
- முறையான சிகிச்சை முறைகள் உள்ளன; புதிய ஆராய்ச்சிகள் மற்றும் கண்டுபிடிப்புகள் நம்பிக்கை தருகின்றன.
- நவீனக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. நாட்டு வைத்தியத்தில் இவை இல்லை.

**கருத்து: 2**
- மருந்து வகைகளும் நவீன சிகிச்சைகளும் உள்ளன.
- புதிய புதிய மருந்து வகைகள்; ஆய்வு முறைப்படி தயாரிக்கப்படும் மருந்துகள் உள்ளன. நாட்டு மருத்துவத்துவத்தில் இவ்வாறு இல்லை.
- பல நோய்கள் நவீன சிகிச்சையின்வழிதான் குணப்படுத்த இயலும். அது நவீன மருத்துவத்தில் மட்டுமே உண்டு; நாட்டு வைத்தியத்தில் இல்லை.

**கருத்து: 3**
- நவீன மருத்துவத்தில் முறையான பயிற்சிகளும் பயிற்சி பெற்ற மருத்துவர்களும் மிகுதி.
- பல்கலைக்கழகங்களில் குறிப்பிட்ட காலம் பயில வேண்டும்; பின்னர், செய்முறையில் தேர்ச்சி பெற வேண்டும்; மருத்துவ நிபுணர்களும் உண்டு. நவீன மருத்துவர்கள் மீது நம்பிக்கை மிகுதி.

**கருத்து: 4**
- முறையான மருத்துவமனைகள், அறுவை சிகிச்சை வசதிகள் நவீன மருத்துவத்தில் உண்டு. நாட்டு வைத்தியற்கு மிக மிக அரிது.
- வசதியாகத் தங்கி, நோய் தீர்த்து வரலாம்.

**முடிவுரை: நிலைப்பாட்டை உறுதி செய்தல்**
- மக்கள் உடல் நலத்தில் மிகுந்த அக்கறை கொள்கிறார்கள். சிகிச்சை முறையில் நிரந்தரத் தீர்வை எதிர்பார்க்கிறார்கள்.
- நவீன மருத்துவம் அதனை நிறைவு செய்வதால் அதுவே சிறந்தது.

**இடுபணி 1**

**சட்டகத்தின் துணை கொண்டு, 'நாட்டு மருத்துவ முறையைவிட நவீன மருத்துவமுறையே மிகச் சிறந்தது' என்ற தலைப்பில் 180 சொற்களில் வாதக்கட்டுரை ஒன்றை எழுதுக.**

3.4.19 | 180 சொற்களில் வாதக்கட்டுரை எழுதுவர்.

**இடுபணி 2**

**‘மனித வாழ்வின் இன்றைய முன்னேற்றத்திற்கு அறிவியலே காரணம்’ எனும் தலைப்பில் 180 சொற்களில் வாதக்கட்டுரை ஒன்றை எழுதுக.**

**இடுபணி 3**

**‘மனித வாழ்வின் இன்றைய முன்னேற்றத்திற்கு அறிவியலே காரணம்’ எனும் தலைப்பிலான வாதக்கட்டுரைக்கு முடிப்பினை எழுதுக.**

## வளப்படுத்துதல்

**‘அறிவியலின் துரித வளர்ச்சியே மனித வாழ்வை மேம்படுத்தி வருகிறது’ என்ற தலைப்பில் 180 சொற்களில் வாதக்கட்டுரை ஒன்றை எழுதுக.**

## குறைநீக்கல்

**‘அறிவியலின் வளர்ச்சியே மனிதனின் வாழ்வில் மிகப் பெரிய மாற்றங்களை உருவாக்கியுள்ளன’ என்ற தலைப்பில் 180 சொற்களில் வாதக்கட்டுரை ஒன்றை எழுதுக.**

### கட்டுரைச் சட்டகம்:

**முன்னுரை**

தலைப்பின் விளக்கம்:
- மனிதன் மிக நாகரிகம் பெற்றுவிட்டான்.
- அறிவும் ஆற்றலும் பெருகிவிட்டது.

நிலைப்பாடு – விளக்குதல்
- அறிவியல் வளர்ச்சிகள் (கண்டுபிடிப்புகள், தொழில் நுட்ப வளர்ச்சிகள், ஆராய்ச்சிகள்)
- உலகமும் மாறிவிட்டது: மனித வாழ்க்கை முறையும் மாறிவிட்டது.

**கருத்து**

எ.கா: முதன்மைக் கருத்து: மனிதனின் அன்றாட வாழ்க்கை நடவடிக்கைகள் முற்றிலும் மாறிவிட்டன.

சார்பு கருத்து: சமைக்கும் முறை, சமைக்கும் உணவு, உடுத்தல், ஓய்வினைக் கழிப்பது எல்லாம் மாறிவிட்டன.

விளக்கம் / எடுத்துக்காட்டு: மின்னடுப்புகளில் சமைக்கும் முறை, துணி துவைக்கும் முறை.

கருத்தின் முத்தாய்ப்பு: மனிதனின் அன்றாட வாழ்க்கை நடவடிக்கைகள் முற்றிலும் மாறிவிட்டன என்பது தெளிவாகிறது.

**முடிவுரை**

முடிவுரை:
கருத்தின் முத்தாய்ப்பு:
நிலைப்பாட்டின் வலியுறுத்தல்.

பாடம் 4 இலக்கணம்

வலிமிகா இடங்கள் அறிக.

## உயர்திணையின் பின் வலிமிகாது

**உயர்திணை என்றால் என்ன?**

- திணை என்பது பகுப்பு.
- திணைகள் இரண்டு வகைப்படும் . அவை:

அ. உயர்திணை ஆ. அஃறிணை

**அ உயர்திணை**

மனிதர்களையும் மனிதரில் உயர்ந்த தேவர்களையும் இறைவனையும் குறிக்கும்.

**ஆ அஃறிணை**

பகுத்தறிவற்ற உயிரினங்களையும் உயிரற்ற பொருள்களையும் குறிக்கும்.

| உயிரினம் | உயிரற்ற பொருள் |
|---|---|
| மரம் | நாற்காலி |
| ஆடு | மண் |
| புலி | கல் |
| பாம்பு | புத்தகம் |

- நிலைமொழியில் உயர்திணை இருந்து, வருமொழி 'க்,ச்,த்,ப்' ஆகிய வல்லெழுத்துகளில் தொடங்கினால் வலிமிகாது.

| | | |
|---|---|---|
| மகளிர் + கல்லூரி | = | மகளிர் கல்லூரி |
| தம்பி + சிறியவன் | = | தம்பி சிறியவன் |
| கண்ணகி + கை | = | கண்ணகி கை |
| தம்பி + சட்டை | = | தம்பி சட்டை |
| காளி + கோயில் | = | காளி கோயில் |
| பாண்டவர் + பூமி | = | பாண்டவர் பூமி |
| ஆசிரியர் + தடுத்தார் | = | ஆசிரியர் தடுத்தார் |

முன்னொரு காலத்தில் தமிழ்நாட்டில் ஒரு திருமணம்; மன்னரும் முனிவரும் பாவலரும் நாவலரும் குடிகளும் படைகளும் மணமாளிகையில் நிறைந்திருந்தார்கள். ஔவையாரும் அங்கே வந்திருந்தார். மன்னர் திருமகனே மணமகன். மணம் இனிது முடிந்தது. மங்கல வாழ்த்துத் தொடங்கியது. முனிவர் ஒருவர் எழுந்தார்; "மணமக்கள் பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க!" என்று வாழ்த்தினார். "இளவரசு வாழையடி வாழையென வையகத்தில் வாழ்க," என்று வாழ்த்தினார் மற்றொரு முனிவர். ஔவையார் எழுந்தார். "அரசே உன் நாட்டில் வரப்பு உயர்க! " என்று வாழ்த்தினார். அவ்வாழ்த்துரையின்



5.5.5 உயர்திணைப்பெயர், பொதுப்பெயர் ஆகியவற்றின்பின் வலிமிகாது என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

பொருத்தமும் பொருளும் அறியாத சபையார், ஒருவரை ஒருவர் வெறித்து நோக்கினர். அது கண்ட ஔவையார், தம் வாழ்த்துரையின் கருத்தை விரித்துரைத்தார்.

"சபையோரே! வரப்பு உயர்க! என்று இளவரசை வாழ்த்தினேன். விளைநிலத்தின் வரப்பு உயர, நீர் உயரும்; நீர் உயர, நெல் உயரும்; நெல் உயர, குடி உயரும்; குடி உயர கோன் உயர்வான்" என்று விளக்கம் கூறினார். உழவனே நாட்டின் உயிர்நாடி; அவன் ஊக்கமே அரசனது ஆக்கம்; அவன் கையால் நாற்று முடி தழைத்தால், மன்னன் மணிமுடி தழைக்கும்.

– சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை
(தமிழின்பம்)

**இடுபணி 1**

**வாசித்த பனுவலில் காணும் உயர்திணைச் சொற்களைப் பட்டியலிடுக.**

**இடுபணி 2**

**நிலைமொழியில் உயர்திணையாக இருந்து, வருமொழியில் 'க்','ச்','த்','ப்' ஆகிய வல்லெழுத்துகளில் தொடங்கினால் வலிமிகாது என்ற விதியை அறிந்து, சொற்களைச் சேர்த்து எழுதுக.**

| | |
|---|---|
| தாய் + கண்டாள் = | யாவர் + பேசினர் = |
| பாண்டியன் + சீறினாள் = | தங்கை + புத்தகம் = |
| தங்கை + சடை = | மாந்தர் + பெரியார் = |
| சிவன் + கோயில் = | அம்மா + பேசினார் = |
| அறவோர் + சிரிப்பு = | தலைவர் + கடிந்தார் = |
| ஆசிரியர் + தேடினார் = | பெரியவர் + கடை = |
| குயவர் + பிசைந்தார் = | கணபதி + கோயில் = |
| அவர் + கூறினார் = | இடையர் + தொழில் = |

**இடுபணி 3**

**வாக்கியங்களில் உள்ள உயர்திணைப் பெயர்களை அடையாளம் கண்டு, புணர்ச்சி விதிகளுக்கு ஏற்பத் திருத்தி எழுதுக.**

1. தங்கைக் கணக்குகளை முறையாகச் செய்தாள்.
2. கவிதைப் போட்டியைப் பாரதிக் கழகம் நடத்தியது.
3. பரணர்ப் புனைந்த பாடல்கள் காலத்தை வென்றவை.
4. புலவருக்கு மன்னர்ப் பரிசுகளை வாரி வழங்கினார்.
5. கோவிலில் வள்ளித் திருமணம் பக்தி நயத்தோடு நடைபெற்றது.
6. கம்பர்த் தமிழ்ப் புலவர்களுள் சிறந்தவர்.

## வளப்படுத்துதல்


**உயர்திணைப் பெயர்களைக் கண்டறிந்து எழுதுக.**

### சிலப்பதிகாரம்

கோவலன் காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்த பெரும் வணிகன் மாசாத்துவானின் மகனாகப் பிறந்தவன். தந்தையின் வழியில் திரைகடல் ஓடி திரவியம் தேடி பெரும் செல்வந்தன் ஆனான். கோவலன் கண்ணகியை மணம் முடித்தான். ஆண்டுகள் பல மகிழ்ச்சியாகக் கழிந்தன. பின்னர், கோவலன், கணிகையர் குலத்தில் பிறந்த மாதவியின் ஆடற்கலையில் மயங்கி, காதல் கொண்டான். ஆதலால், கண்ணகியை விட்டுப் பிரிந்தான். கண்ணகி வாடிய மலராய் ஆனாள்.

கோவலன் மாதவியோடு மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருந்தான். அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு மணிமேகலை எனப் பெயரிட்டு அன்புடன் வளர்த்து வந்தனர். வணிகத்தை முற்றிலும் மறந்தான் கோவலன். பெருஞ்செல்வம் மழையில் நனைந்த உப்பாய்க் கரைந்து போனது. இடையில், மாதவிக்கும் கோவலனுக்கும் மனவருத்தம் ஏற்பட்டு இருவரும் பிரிந்தனர்.

கண்ணகியிடம் திரும்பி வந்தான் கோவலன். கைப்பொருள் அனைத்தையும் இழந்து வெறுமையாய் வந்த கணவனைக் கண்டு அழுதாள் கண்ணகி. கோவலனுக்கு ஆறுதலும் தேறுதலும் தந்தாள். மதுரை மாநகருக்குச் சென்று, தன் ஒற்றைக் காற்சிலம்பை விற்று மீண்டும் வாழ்வைத் தொடங்கலாம் என்று நம்பிக்கையைத் தந்தாள் கண்ணகி. கண்ணகியின் அறிவுரையை ஏற்று இருவரும் மதுரைக்குப் புறப்பட்டனர். வழியில், கவுந்தி அடிகளாரின் துணை அவர்களுக்குக் கிடைத்தது.



## குறைநீக்கல்

**உயர்திணைப் பெயர்கள் மூன்றனைக் கண்டறிந்து எழுதுக.**

சுந்தரமூர்த்தி நாயனார் என்பவர் சைவசமயத்தில் போற்றப்படும் நால்வரில் ஒருவர். இவர் திருநாவலூர் என்னும் ஊரில் பிறந்தார். இவரின் தந்தை சடையனாரும் தாயார் இசை ஞானியாரும் இவருக்கு நம்பியாரூரர் எனப் பெயரிட்டனர். இவர் செல்வக் குடும்பத்தில் வாழ்ந்தார். திருமணப் பருவம் அடைந்த இவர் மணக்கோலத்தோடு கல்யாணப் பந்தலில் நிற்கும் போது, சிவபெருமான் எழுந்தருளி சுந்தரரைத் தடுத்தாட்கொண்டார்.





ஒன்றனை

# தொகுதி 21 நவீன வளர்ச்சி

## பாடம் 1 தகவல் தொழில்நுட்பச் சேவைகள்

விளம்பரத்தை ஆய்வுசெய்து தகவல் அறிக.




**எ.கா:**

**கருத்துரை:** இந்தத் திருமகள் கணினி மையம், கணினித் தொழில்நுட்பம் மற்றும் தொலைத் தொடர்பு சார்ந்த எல்லாச் சேவைகளையும் முழுமையாக வழங்கி வருவது தெளிவாகத் தெரிகிறது. குறிப்பாக, வன்பொருள் பதிவேற்றம், கணினி பழுது பார்த்தல், மென்பொருள் சிக்கல் களைதல், வன்பொருள் தரத்தை மேம்படுத்துதல், கணினி பாதுகாப்பை மேம்படுத்துதல், தரவுகள் மீளாக்கம் செய்தல் போன்ற சேவைகளை இம்மையம் வழங்குகிறது. இத்தகைய சேவைகள் பயனீட்டாளர்களுக்குப் பெரும் நன்மைகளைத் தரும் எனத் துணிந்து கூறலாம்.

**முடிவு:** இதனால், கணினி வாங்கிய பின்னரும் பயனீட்டாளருக்கு ஏற்படும் பயன்பாட்டுச் சிக்கல் குறித்துக் கவலைபடத் தேவையில்லை. எனவே, பயனீட்டாளர்கள், இம்மையத்தில் புதிய மற்றும் பழைய கணினிகளைத் தங்கள் தேவைக்கேற்பத் துணிந்து வாங்கலாம்.

1.5.3 விளம்பரத்திலுள்ள தகவல்களையொட்டிக் கருத்துரைப்பர்; முடிவு கூறுவர்.

**இடுபணி 1**

**விளம்பரத்தில் காணும் தகவல்களை நண்பருடன் கலந்துரையாடித் திரட்டுக.**

**இடுபணி 2**

**திரட்டிய தகவல்களின் அடிப்படையில் கருத்துரைத்து, கருத்துகளின் தொடர்பான உமது முடிவினை விளக்குக. அம்முடிவிற்கான காரணத்தைக் கூறுக.**

**தகவல்களையொட்டி, கருத்துரைக்கவும் முடிவு கூறவும் பின்வருனவற்றைத் துணையாகக் கொள்க.**

- கணினி மையத்தில் வழங்கப்படும் சேவைகள்
- பயனீட்டாளர்களுக்குத் தேவைப்படும் சேவைகள்
- விரிவுப்படுத்தத்தக்க சேவைகள்
- மேம்படுத்தத்தக்க புதிய சேவைகள்
- முடிவினை விளக்கி எழுதுக

**இடுபணி 3**

**புதிய திறன்பேசி ஒன்றனை வாங்க உள்ளீர்கள். கீழ்க்காணும் விளம்பரத்தில் உள்ள தகவல்களை ஆராய்ந்து, நீங்கள் தேர்ந்தெடுக்கும் திட்டத்தினை முடிவு செய்திடுக. உமது தெரிவையும் முடிவுக்கான காரண காரியங்களையும் வகுப்பில் விளக்கிக் கூறுக.**


## புதிய திறன்பேசி வேண்டுமா?

எங்களின் கவர்ச்சிகரமான திட்டங்களில் ஏதாவதொன்றில் இணையுங்கள்.
மலிவான விலையில், அழகான திறன்பேசி, உங்கள் கைகளில்...!

**திட்டம் 1** ஐபி148
**திறன்பேசி விலை:** RM2 230
- தரவுச் சேமிப்பு: 50 ஜீபி
- இலவச அழைப்பு: வரையரை இல்லை
- அழைப்புப் பகிர்வு: 4 பேர்

**திட்டம் 2** ஐபி148
**திறன்பேசி விலை:** RM1 860
- தரவுச் சேமிப்பு: 40 ஜீபி
- இலவச அழைப்பு: வரையரை இல்லை
- அழைப்புப் பகிர்வு: 4 பேர்

**திட்டம் 3** ஐபி148
**திறன்பேசி விலை:** RM1 760
- தரவுச் சேமிப்பு: 30 ஜீபி
- இலவச அழைப்பு: வரையரை இல்லை
- அழைப்புப் பகிர்வு: 4 பேர்



குறிப்பு: இந்தச் சலுகை மூன்று மாதங்களுக்கு மட்டுமே...!

## வளப்படுத்துதல்

**விளம்பரத்தில் காணும் தகவல்களைத் திரட்டி, கருத்துரைத்து முடிவு கூறுக.**

# தகவல் தொழில்நுட்பத் துறையில் புதிய பட்டதாரிகளுக்கு அரிய வேலை வாய்ப்பு!



தகவல் தொழில்நுட்பப் பொறியியலாளர்

மென்பொருள் பொறியியலாளர்

தொடர்பியல் பொறியியலாளர்

**உங்களுக்கு இருக்க வேண்டிய அடிப்படை தகுதிகள்**

- தகவல் தொழில்நுட்பத்தில் சிந்தனைத் திறனாற்றல்
- குழுவை வழிநடத்தும் திறன்
- சிந்தனைப் பரிமாற்றும் இயல்பு
- சவால்களை எதிர்கொள்ளும் திறன்

நேர்முகத் தேர்வுக்கு வருக..!

நாள்: 20 – 25 செப்டம்பர் 20□□
நேரம்: காலை மணி 10:00 முதல் மாலை மணி 4:00 வரை
இடம்: சினார் விடுதி
எண் 47, மெலோர் சாலை, பந்திங், சிலாங்கூர்.

**தகுதிகள்:**

- மலேசியர்களாக இருக்க வேண்டும்.
- 27 வயதிற்குள்ளாக இருக்க வேண்டும்.
- தகுதிச் சான்றிதழ் கொண்டிருத்தல் அவசியம்
- ஆங்கிலம் – மலாய் மொழியில் சரளமாக பேசவும் எழுதவும் தெரிந்திருக்க வேண்டும்

**நேர்முகத் தேர்வுக்குக் கொண்டு வர வேண்டிய ஆவணங்கள்**

- முழுமையான தன்குறிப்பு விவரம்
- மூலச்சான்றிதழ்
- அடையாள அட்டைப் படியெடுப்பு
- தேவையான சான்றிதழ்கள்



# பாடம் 2 தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி

**பனுவலை வாசித்துக் கருத்தறிக.**



தகவல் தொடர்பும் அதன் தொழில்நுட்பமும் இன்று உலகை **ஆளத் தொடங்கிவிட்டன.** தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் இல்லாமல் எந்தத் துறையும் இன்று இயங்க முடியாது எனும் நிலை உருவாகிவிட்டது. இந்த வளர்ச்சி உருவாகப் பல இலட்சம் ஆண்டுகள் **பின்புலமாய்** இருந்தன. உண்மையில், மனிதனிடம் பேச்சும் எழுத்தும் தொடங்குவதற்கு முன்பாகவே தகவல் பரிமாற்றம் தொடங்கிவிட்டது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். குகைகளில் வாழ்ந்த கற்கால மனிதன், என்று தன் கருத்தைப் பிறருக்குக் கூறுவதற்குக் குகை ஓவியங்களை வரைந்தானோ, அன்றே தகவல் பரிமாற்றம் உலகில் **தடம் கொண்டுவிட்டது**.

தகவல் பரிமாற்ற வளர்ச்சி, காலத்துக்குக் காலம் மாற்றமடைந்து வந்துள்ளது. ஒலி, தீ, சைகை என்பனவற்றினால்தான் தகவல் தொடர்புத்துறை தொடங்கியது. பின்னர், கல்வெட்டு, ஓலைச்சுவடி, செப்பேடுகள் என வளர்ந்தது. தொடர்ந்து, அச்சு ஊடகங்களில் **விரிந்தது.** இன்று அதன் வளர்ச்சி, தொலைபேசி, வானொலி, தொலைக்காட்சி, துணைக்கோள்கள் என்று தகவல் தொடர்பு ஊடகங்கள் விரிந்து வளர்ந்துள்ளன. இந்தத் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியினால் உலகம் இன்று ஒரு குடும்பம்போலச் சுருங்கிவிட்டது.

இன்று, கணினியின் உதவியுடன் புதிய தகவல் தொடர்பு நிலைகள் உருவாக்கப்பட்டு விட்டன. திறன்பேசி, இணையத் தொடர்பு, மின்னஞ்சல், மின்னிதழ்கள் என்று தகவல் தொடர்பு பரவலாக விரிவடைந்துள்ளது. கணினி ஒரு கருவியாக மட்டும் அமையாமல், தகவல் சேமிப்பு மையமாகவும், தகவலைப் பிறருக்கு வெளிப்படுத்துவதற்கு உரிய சிறந்த ஊடகமாகவும் அமைந்துள்ளது. உலக வலைப்பின்னல் எனப்படும் இணையத்தின் மூலம் எத்துறை சார்ந்த செய்திகளையும் விரைவில் அனுப்பவும் பெறவும் முடிகின்றது. இன்று, மின்னஞ்சல் மூலம் **துரித வேகத்தில்** தகவல் அனுப்புவதும் பெறுவதும் நடைபெறுகின்றது. மின்னஞ்சல்களை ஆங்கிலத்தில்தான் அனுப்பவேண்டும் என்று இல்லை. தமிழ் உட்பட பல்வேறு மொழிகளிலும் இதேபோன்று ஒருங்குறி (யுனிக்கோட்) முறையைப் பயன்படுத்தி அனுப்பக்கூடியதாகத் தகவல் தொழில்நுட்பம் வளர்ந்துள்ளது.

2.3.9 தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

**இடுபணி 1**

**வண்ணமிடப்பட்ட அருஞ்சொற்களுக்குச் சூழலுக்கு ஏற்ற பொருள் எழுதுக.**

**இடுபணி 2**

**வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. தகவல் பரிமாற்றம் வளர்ச்சி, காலத்துக்குக் காலம் மாற்றமடைந்து வந்துள்ளது என்பதை நீர் எவ்வாறு உணர்கிறீர்?
2. 'தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியினால் உலகம் இன்று ஒரு குடும்பம்போல சுருங்கி விட்டது.' இக்கருத்தை விளக்குக.
3. தகவல் பரிமாற்றத்தில் இணையம் ஆற்றும் பங்குகளில் முக்கியமான மூன்றனை விளக்குக.

**இடுபணி 3**

**வினாக்களுக்கு விடை எழுதுக.**

மனிதனின் முயற்சியால் விண்வெளியின் கோளப்பாதையில் இயங்கும் ஒரு பொருள்தான் செயற்கைக்கோள். தொடர்புத் துறைக்கென விண்வெளிக்கு அனுப்பப்பட்ட செயற்கைக்கோள்களே தொலைக்காட்சி ஒளிபரப்பிற்குப் பயன்படுகின்றன. தொலைக்காட்சி நிறுவனங்கள் தங்களது நிகழ்ச்சிகளை இயல்வுக்குறி அலையதர் (சிக்னல்கள்) வடிவில் உயரே உள்ள செயற்கைக்கோளுக்கு அனுப்புகின்றன. செயற்கைக்கோள் அவற்றை உள்வாங்கி, கீழ் நோக்கி அனுப்புகின்றன. இவற்றைக் கிண்ண வடிவ அலைவாங்கிகள் (ஆண்டெனாக்கள்) பெற்று, பிறகு வீடுகளுக்குக் கம்பிவடத்தின் மூலம் அனுப்புகின்றன. இவ்வாறு எல்லா இடங்களிலும் அந்த இயல்வுக்குறி அலையதர்கள் நிகழ்ச்சிகளாகக் கிடைக்கின்றன. தொலைக்காட்சி சேவை மட்டுமன்றி, தகவல் தொடர்பு, வானிலைத் தகவல் சேகரிப்பு, பங்கு வாணிகச் சந்தை, வணிகப் பரிமாற்றம் எனப் பல பணிகளுக்கும் செயற்கைக்கோள்கள்தாம் பெரும் பங்காற்றுகின்றன.

1. தொலைக்காட்சி ஒளிபரப்புக்கும் செயற்கைக்கோள்களுக்குமிடையே உள்ள தொடர்பினை விளக்குக.
2. 'செயற்கைக்கோள்கள் இல்லை என்றால் உலகத்தின் இயக்கமே நின்றுவிடும்' இக்கூற்றை விளக்குக.

**வளப்படுத்துதல்**

**தமிழில் ஒருங்குறியின் பயன்பாடு குறித்து இணையத்தளத்தில் வாசித்து, கருத்துணர்ந்ததைப் பயன்படுத்தி திரட்டேடு ஒன்றனை உருவாக்கிப் படைத்திடுக.**

**குறைநீக்கல்**

**கொடுக்கப்பட்ட சொற்களைப் பொருள் விளங்க வாக்கியத்தில் அமைத்து எழுதுக.**

1. விண்வெளி 2. செயற்கைக்கோள் 3. அலைவாங்கி

# பாடம் 3 வணிகத்தில் தொழில்நுட்பம்

**சட்டகத்தை வாசித்துக் கருத்தறிக.**



## தலைப்பு:
## வணிகத்தில் கணினித் தொழில்நுட்பத்தின் பங்கு.

**கட்டுரைச் சட்டகம்:**

- உலகமே இன்று கணினிமயமாகி வருகின்றது.
- வணிக நிறுவனங்கள் தொழில் நுட்பத்தோடு களமிறங்குகின்றன.

**முன்னுரை:**

- இன்றைய காலகட்டத்தில் கணினியின் வளர்ச்சிக்கு ஏற்றவாறு வணிகர்கள் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும்.
- போட்டியைச் சமாளிப்பது சிரமமாகிவிடும் .

**கருத்து: 1**

- முதன்மைக் கருத்து:
  நிதிச் சுமை குறைக்கப்படும்.
- கருத்து விவரிப்பு
- சான்று/எடுத்துக்காட்டு

**கருத்து: 2**

- முதன்மைக் கருத்து:
  உற்பத்திப் பெருக்கம்.
- கருத்து விவரிப்பு
- சான்று/எடுத்துக்காட்டு

**கருத்து: 3**

- முதன்மைக் கருத்து:
  கால விரயம் குறையும்.
- கருத்து விவரிப்பு
- சான்று/எடுத்துக்காட்டு

**கருத்து: 4**

- முதன்மைக் கருத்து:
  தொழில்நுட்பத் திறனால் தரமான உற்பத்தியைச் செய்ய இயலும்.
- கருத்து விவரிப்பு
- சான்று /எடுத்துக்காட்டு

**முடிவுரை:**

- கருத்துகளின் தொகுப்பு
- கருத்துரைப்பு

3.4.18 | 180 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுவர்.

**இடுபணி 1**

**சட்டகத்தைத் துணையாகக் கொண்டு ‘வணிகத்தில் கணினித் தொழில்நுட்பத்தின் பங்கு’ என்ற தலைப்பில் 180 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை ஒன்றனை எழுதுக.**

**இடுபணி 2**

**‘இன்றையத் தகவல் தொழில்நுட்பப் பயன்பாட்டினால் ஏற்படும் தீமைகள்’ எனும் தலைப்பில் 180 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை ஒன்றனை எழுதுக. வரிப்படக்கருவியில் காணும் குறிப்புகளைத் துணையாகக் கொள்க.**




முதன்மைக் கருத்துகளின் வரிப்படக்கருவி

## வளப்படுத்துதல்

**‘போக்குவரத்துத் துறையின் வளர்ச்சிக்கு தகவல் தொழில்நுட்பமானது மிகவும் பங்காற்றுகிறது’ எனும் தலைப்பில் 180 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை ஒன்றனை எழுதுக. கீழ்க்காணும் கருத்துகளைத் துணையாகக் கொள்க.**

- குறித்த சில மணிநேரத்திற்குள் நாட்டின் பல பகுதிகளுக்குச் செல்வதற்கான தொழில் நுட்பங்கள் வளர்ச்சியடைந்துள்ளன.
- தரை, நீர், வான் போக்குவரத்துகள் மூலமாக மிக எளிமையாகப் பயணிக்கக் கூடிய வாய்ப்புகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன.
- தொடர்வண்டி மற்றும் விமானப் போக்குவரத்துப் பயணச் சீட்டுகளைப் பதிவு செய்தல்.
- வாகனப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்துதல்.
- வான்வெளிப் பயணங்களின் போது கணினியானது பல்வேறு வழிகளில் உதவுகிறது.

## குறைநீக்கல்

**‘கல்வித்துறையின் வளர்ச்சிக்குத் தகவல் தொழில்நுட்பத்தின் பங்கு’ எனும் தலைப்பில் 10 வாக்கியங்கள் எழுதுக.**

## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

பழமொழிகளை அறிக.

**அற்ப அறிவு ஆபத்துக்கிடம்**

நமக்குப் போதிய அறிவு இருத்தல் அவசியம். குறைவான அறிவு ஆபத்துக்கு வழிவகுத்துவிடும்.

**பெத்த மனம் பித்து பிள்ளை மனம் கல்லு**

பிள்ளையின் மீது கொண்ட தீராத அன்பினால், தாய் தன் பிள்ளை செய்யும் எல்லாத் துன்பங்களையும் பொறுத்துக் கொண்டு அன்பு காட்டுவாள். ஆனால், பிள்ளைக்குத் தாயைப் போல இளகிய மனம் இருப்பதில்லை.




**சூழல் 1**

பழனிச்சாமி பந்திங் பட்டணத்திற்குப் புதியதாக மாற்றலாகி வந்தார். நல்ல சைவ உணவகம் அந்தப் பட்டணத்தில் இல்லாததைக் கண்டு, உணவகம் ஒன்றைத் திறக்க முடிவெடுத்தார். ஆனால், அவருக்கு உணவகத் துறையில் முழுமையான முன்னறிவோ பட்டறிவோ இல்லை. எனினும், பொருளகத்தில் துணிந்து கடன் பெற்று, உணவகத்தைத் திறந்தார். உணவகத்தைத் திறந்து மூன்று மாதங்கள் ஆகியும், வாடிக்கையாளர்கள் இல்லாமல், உணவகம் வெறிச்சோடியது. வாங்கிய கடனைக் கட்டமுடியாமல் தவித்துப் போனார். அற்ப அறிவு ஆபத்துக்கிடம் என்பதற்கேற்ப, சொற்ப அறிவோடு உணவகம் நடத்த எடுத்த முடிவு ஆபத்தாகிப் போனதை எண்ணி வருந்தினார்.

4.7.3 மூன்றாம் படிவத்திற்கான பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

**சூழல் 2**



தம் மகன் தம்மை எடுத்தெறிந்து பேசிவிட்டுப் போனதைக் கண்டு உள்ளம் உடைந்து போனார் காமாட்சி. தம் கணவனை இழந்த பின், தம் மகனை உருவாக்கத் தாம் பட்ட துன்பங்களும் சவால்களும் அவர் கண்முன் நிழலாடின. தம் மெல்லிய மனத்தைக் காயப்படுத்திவிட்டுப் போன மகனின் கல்மனத்தை எண்ணியபோது, அவருக்குக் கண்ணீர் பெருக்கெடுத்தது. பெத்த மனம் பித்து பிள்ளை மனம் கல்லு என்பதற்கேற்பத் தம்முடைய தியாகத்தைப் புரிந்து கொள்ளாத மகனின் போக்கினைக் கண்டு துயர்பட்டு வருந்தினார்.

**இடுபணி 1**

**சூழல்களில் வரும் பழமொழிகளை அறிந்து கூறுக; எழுதுக.**

**இடுபணி 2**

**பொருளுக்கு ஏற்ற பழமொழிகளை எழுதுக.**

1. பிள்ளையின் மீது கொண்ட தீராதா அன்பினால், தாய் தன் பிள்ளை செய்யும் எல்லாத் துன்பங்களையும் பொறுத்துக் கொண்டு அன்பு காட்டுவாள். ஆனால், பிள்ளைக்குத் தாயைப் போல இளகிய மனம் இருப்பதில்லை.

2. நமக்குப் போதிய அறிவு இருத்தல் அவசியம். அரைகுறைவான அறிவு ஆபத்துக்கு வழிவகுத்துவிடும்.

**இடுபணி 3**

**நண்பரோடு கலந்துரையாடி, உரைப் பகுதிக்குப் பொருத்தமான பழமொழியை அடையாளம் கண்டு எழுதுக.**

தோழர்களே...! தாய் கருணையின் திருவுருவம். நமக்காகத் துன்பங்களைச் சுமந்து, நாம் தரும் வேதனைகளைத் தம் மனத்தில் தாங்கும் ஈகத்தின் மறு வடிவம். எதையும் தாங்கும் அந்த இரும்பு மனத்தில், மலரைவிட மெல்லிய உணர்வு மட்டும்தான் குடிகொண்டிருக்கும். எதையும் எதிர்பார்க்காத அந்தக் கனிவுக்கு நாம் தரும் பரிசு என்ன? அந்தத் தாயின் தியாகத்தை உணர்ந்து போற்றுகிறோமா? நம் மனம் கல்லாகி போய்விட்டதே ஏன்?



## வளப்படுத்துதல்

**கீழ்க்காணும் பழமொழிகளில் ஏதேனும் ஒன்றனுக்கு ஏற்ற கதையை எழுதுக.**

| அற்ப அறிவு ஆபத்துக்கிடம் | பெத்த மனம் பித்து பிள்ளை மனம் கல்லு |
|---|---|

## குறைநீக்கல்

**வாக்கியங்களுக்கு ஏற்ற மிகச் சரியான பழமொழியைத் தெரிவு செய்க.**

- சொற்ப அறிவு ஆபத்துக்கிடம்
- ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு
- பெத்த மனம் பித்து பிள்ளை மனம் கல்லு
- அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது
- எறும்பு ஊரக் கல்லும் தேயும்



1. தேர்வில் எல்லாப் பாடங்களிலும் தேர்ச்சி பெறாததால், அழுது கொண்டிருந்த மலர்வாணியைக் கட்டியணைத்த பூரணி, "இப்பொழுது அழுது என்ன பயன்? __________ " என்று கூறித் தேற்றினாள்.
2. கல்வியின்பால் அக்கறை காட்டாமல் காற்பந்து விளையாட்டில் தன் முழுக்கவனத்தையும் செலுத்திவந்த அன்புமணியை ஆசிரியர், " __________ " என்று கூறிக் கண்டித்தார்.
3. புத்தக விற்பனைத் துறையைப் பற்றி முழுமையாக அறியாமல், அந்த வணிகத்தில் ஈடுபட்ட மதியழகன், நட்டமடைந்தபோதுதான் __________ என்பதை உணர்ந்தார்.
4. பூப்பந்து விளையாட்டில் தொடர்ந்து தோல்வியைத் தழுவிவந்த தமிழன்பன், மனம் தளராமல், __________ என்பதற்கேற்பக் கடினமான தொடர்பயிற்சிகளை மேற்கொண்டதால், திறனை வளர்த்துக் கொண்டு, வெற்றிகளைக் குவிக்கத் தொடங்கினான்.
5. பாசத்தையும் அன்பையும் ஊட்டி வளர்த்த தம் மகன், தம்மை எடுத்தெறிந்து பேசிவிட்டுப் போனதைக் கண்ட முத்தழகி, __________ என்று மனத்திற்குள் கூறி அழுதார்.

# அகர நிரல் குறிப்பு


**அ**
அணுவுலை 208, 209
அரவை இயந்திரம் 207
அருகலை 79,80,81
அலைவாங்கிகள் 223,225
அழைப்புப் பகிர்வு 220
அனைத்தெழுத்துரு தரப்பாடு 77

**இ**
இயல்வுக்குறி அலையதர் 223
இலக்கியல் தொழில்நுட்பம் 82

**உ**
உயிரியலொட்டி 212
எழுத்துரு அறிதல் 77

**ஒ**
ஒருங்குறி 79, 222, 223

**க**
கடன்பற்று அட்டை 160, 163, 166
கணினி மென்பொருள்கள் 80

**கா**
காலனித்துவம் 19

**கு**
குளிரூட்டி 207, 208

**ச**
சமூகவியல் 89

**சு**
சுவையூட்டி 163

**செ**
செயலி 78, 79, 129, 130,
செயற்கைக்கோள் 5, 223

**த**
தடங்காட்டு முறைமை 212
தரச்சான்று 162
தரவுச் சேமிப்பு 220
தரவுகள் மீளாக்கம் 219

**தா**
தானியங்கி 4

**தி**
திண்காரை 213
திறன் தலைகாப்பு 212
திறன்பேசி 4, 45, 79, 85, 127, 131, 220, 222

**தொ**
தொடர்பியல் 221

**ந**
நச்சுநிரல் நீக்க மென்பொருள் 219

**நி**
நிலைவட்டு 158
நினைவகம் 158

**நு**
நுண்கலை 89, 119, 123

**ப**
பணிக்குழு 78
பசுமை 82

**பி**
பிணையம் உருவாக்கம் 219

**மா**
மானுடவியல் 89

**மி**
மின்கடத்தி 81
மின்செருகி மறை 67
மின்பானை 207
மின்னச்சு இயந்திரங்கள் 80
மின்னஞ்சல் 86, 88, 131, 146, 159, 165, 222
மின்னடுப்பு 121, 207, 211, 215
மின்னிதழ்கள் 222
மின்னியல் வணிகம் 161

**மெ**
மென்பொருள் 77, 80, 219, 221

**வ**
வன்பொருள் பதிவேற்றம் 219

**வி**
விலைச் சிட்டை 159

**வே**
வேதிப் பொருள்கள் 163

# துணை நூல் பட்டியல்


1. அகத்தியலிங்கம், டாக்டர். (1976). உலக மொழிகள். பாரி நிலையம்.
2. அகத்தியலிங்கம், ச. (2003). குறள் ஒளி. மெய்யப்பன் பதிப்பகம்.
3. அக்னிபுத்ரன். (2009). செம்மொழி இலக்கியம். மணிவாசகர் பதிப்பகம்.
4. ஆரோக்கியநாதன், எஸ். (1986). மொழி இயல். மாணிவாசகர் பதிப்பகம்.
5. இராசகோபாலன், தி. (1966). கட்டுரை எழுதக் கற்போம்(முதல் பகுதி). வெற்றியரசி.
6. இராசகோபாலன், தி. (1994). கட்டுரைக் கலஞ்சியம். ஐந்திணைப் பதிப்பகம்.
7. இளம்பாரி. (1989). மலரும் மொட்டுகள். விழுப்புரம். சிவசக்தி நிலையம்.
8. இறையரசன். (1993). தமிழர் நாகரிகமும் வரலாறும். பூம்புகார் பதிப்பகம்.
9. இன்னாசிமுத்து, சா. (2004), வாழ்வில் வெற்றியும் மகிழ்ச்சியும். வானதி பதிப்பகம்
10. கணபதி. வி. (1993). நற்றமிழ் கற்பிக்கும் முறைகள். சாந்தா பதிப்பகம்.
11. கம்பார் கனிமொழி. (1994). அன்புக் கடிதங்கள். பேரா மாநில ம.இ.கா. தொடர்புக்குழு.
12. களைக்களஞ்சியம் (தொகுதி ஐந்து). தமிழ் வளர்ச்சிக் கழகம்
13. காதர் இப்ராஹிம், டாக்டர். (1997). ஆரோக்கிய வாழ்வின் இரகசியங்கள். குவித்திரு பிரிண்டஸ்.
14. காதர் இப்ராஹிம், டாக்டர். (1997). வெற்றி உங்கள் கையில். குவித்திரு பிரிண்டஸ்.
15. காமாட்சி சினிவாசன். (1975). குறள் கூறும் சமுதாயம். மதுரை பல்கலைக் கழகம்.
16. குழந்தைகள் கலைக்களஞ்சியம்.(1968). தமிழ் வளர்ச்சிக் கழகம்.
17. சிவம், சு.கி. (2001), நல்ல வண்ணம் வாழலாம். கற்பகம் புத்தகாலயம்.
18. சிவலிங்கனார். (1984). தொல்காப்பியம்-பெயரியல். உலக தமிழாராய்ச்சி நிறுவனம்.
19. சீனி நைனா முகமது, செ. (2014). தேன்கூடு. உங்கள்குரல் எண்டர்பிரைசு.
20. சீனி நைனா முகமது, செ. (2014). புதிய தமிழ்ப்புணர்ச்சி விதிகள். உங்கள்குரல் எண்டர்பிரைசு.
21. சீனி நைனா முகமது, செ. (2014). நல்ல தமிழ் இலக்கணம். உங்கள் குரல் எண்டர்பிரைசு.
22. சுந்திர சண்முகனார். (1964). தமிழர் கண்ட கல்வி. மணிவாசகர் நூலகம்.
23. தட்சணாமூர்த்தி. அ. (1994). தமிழர் நாகரிகமும் பண்பாடும். ஐந்திணைப் பதிப்பகம்.
24. தமிழண்ணல். (1989). வளர் தமிழ் 'உங்கள் தமிழைத் தெரிந்து கொள்ளுங்கள்'. சிந்தாமணி பதிப்பகம்.
25. நளினி. சு. (2002). வளரும் உலகம். தமிழ் புத்தகாலையம்.
26. பரந்தாமனார். அ.கி. (1984). நல்ல தமிழ் எழுத வேண்டுமா? மலர் நிலையம்.
27. பாலசுப்ரமணியம். பி. (1999). இலக்கியப் புதையல். பூம்புகார் பதிப்பகம்.
28. மாத்தலைசோமு. (2005). வியக்க வைக்கும் தமிழர் அறிவியல். உலக தமிழாய்வுக் கழகம்.
29. மீனாட்சி சபாபதி. (1999). நமது பண்பாட்டை அறிவோமா நாம்? லைட்னிங் பிரிண்டஸ்.
30. முரசு நெடுமாறன். (1997). மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம். அருள்மதியம் பதிப்பகம்.
31. ராதா. (2008). சுற்றுச்சூழல் கல்வி. பிரசன்னா பப்ளிஸர்.
32. வரதராசன், மு. (1994). திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம். பாரி நிலையம்.
33. விசுவநாதன், கி.ஆ.பெ. (2001). மாணவர்களுக்கு. பாரி நிலையம்.
34. வெங்கட சுப்ரமணியம். க. (1982) கல்வி சிந்தனை. வானதி பதிப்பகம்.